421



சபா.ஜெயராசா

# சமகாலக் கல்வி

சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 421

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

புத்தகத்தின் பெயர் : சமகாலக் கல்வி

நூலாசிரியர் : சபா. ஜெயராசா

அனுமதிப்பத்திரம் : EPAB/02/18604

*1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட* ...
*அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறு* ...
*ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்* ...
*பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்த* ...

*2017 செப்டெம்பர் மாதம் 20*
*கல்வி அமைச்சு,"இசுருபாய" பத்தரமுல்ல.*
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2022.09.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலக் கல்வி

## CONTEMPORARY EDUCATION

சபா.ஜெயராசா

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| | |
|---|---|
| Class No: | |
| Acc No | 421 |

சேமமடு
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு

நூற் தலைப்பு : **சமகாலக் கல்வி**
நூலாசிரியர் : சபா ஜெயராசா ©
பதிப்பாண்டு : 1ம் பதிப்பு 2016, 2ம் பதிப்பு 2018
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
எழுத்து : 10.5 புள்ளி
பக்கங்கள் : viii+172
படிகள் : 1000
விலை : ரூ. 540.00
அச்சிடல் : சேமமடு பதிப்பகம், கொழும்பு -11.
வெளியீடு : சேமமடு பொத்தகசாலை,
சர்தேச நியம
நூல் இலக்கம் : **ISBN 978-955-685-042-0**
கல்வி நூல்
வெளியீட்டு
ஆலோசனை சபை : **EPAB/02/18604**

Title : **SAMAKALAK KALVI**
Author : Saba Jeyarasa ©
Edition : 1st Edition 2016, 2nd Edition 2018
Price : Rs.540.00
Published by : Chemamadu Poththakasalai
UG.50, People's Park, Colombo -11.
Tel : 011-2472362, 2331475
Printed by : Chemamadu Pathippakam,
Colombo -11.
Tel : 0777 345 666.
mail : *chemamadu@yahoo.com*
web: chemamadu.com
வெளியீட்டு எண் : CBCN : 2016-07-01-143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

சமகாலக் கல்வியின் பலபரிமாணங்களையும் உள்ளடக்கிய ஓர் ஆக்கமே இந்நூல். பல்வேறு நூல்களையும் அறிக்கைகளையும் அடியொற்றி இந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

சமகாலக் கல்விச் செயல் முறையின் நவீன எழுகோலங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தெளிவான ஒரு கருத்தியல் நோக்கு கல்வி பற்றிய விளக்கத்துக்கு அடிப்படையானது. அந்நிலையில் உற்றறி கோட்பாடு இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அறிவை விபரணச் சிக்கலுக்குள் அடக்கிவிடும் ஓர் அவலமான நிலை காணப்படுகின்றது. திறனாய்வுடன் அறிவைத் தரிசிக்கும் அறிகைப் பரவல் முன்னெடுப்பை வலியுறுத்தும் தேவை எழுந்துள்ளது.

பாடக்குறிப்புக்களை உள்வாங்குதலும் மீள ஒப்புவிப்பதுமான கற்றல் முறையை விடுவிப்பதற்கு மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. அந்நிலையில் போதுமான நூல்களை உருவாக்குதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

இவ்வாறு பல்வேறு கருத்துக்களை உள்வாங்கி நூல் வெளியீடுகளை மேற்கொள்ளும் சேமமடு நிறுவனத்தினர் நன்றிக்குரியவர்கள்.

**-சபா.ஜெயராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமகாலத்தில் கல்வியின் செயற்பாடுகள் சமூக அசைவியக்கத் தொழிற்பாட்டில் புதிய சமூகப் பரிமாணங்களை ஏற்படுத்தி வருகின்றது. அதாவது அரசியல், பொருளியல், பண்பாட்டியல், சமூகவியல், உளவியல், மெய்யியல், தொழில்நுட்பவியல் முதலாம் துறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் புதிய விசைகளையும் உள்வாங்கி பல்வேறு பரிமாணங்களுடன் "சமகாலக்கல்வி" வளர்ச்சியடைந்து வருகின்றது.

உலகின் சமகாலக் கல்வி வளர்ச்சி பல புதிய பரிமாணங்களையும் புதிய எண்ணக்கருக்களையும் தோற்றுவித்துள்ளது. உலகமயமாக்கப் பட்ட உணர்வுகள் என்ற மேலோங்கிய பரந்த தளத்திலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய கல்வி நடவடிக்கைகள் உலகச் சந்தையின் அழுத்தங்களுக்கு ஏற்றவாறு இயங்கத் தொடங்கியுள்ளன.

சமகாலக் கல்விச் செயன்முறையின் நவீன செல்நெறிப் போக்குகளை தெளிவாக எடுத்துரைக்கவும் உலகமயமாக்கல் பின்புலத்தில் கல்விச்செயற்பாடுகளை விமரிசன ரீதியில் புரிந்து கொள்வதற்கும் பொருத்தமான மாற்றுச் சிந்தனைகளை முன்வைக்கும் நூலாகவும் "சமகாலக் கல்வி" ஆக்கம் பெற்றுள்ளது. கல்வி பற்றிய புரிதலுக்கும் விளக்கத்துக்கும் தெளிவான ஒரு கருத்துநிலை நோக்கு முக்கியம். இன்று உலகமயமாக்கல் கல்வித்துறையில் ஏற்படுத்தி வரும் விளைவுகளையும் நெருக்கடிகளையும் மாற்றங்களையும் ஆழமாகவும் நுட்பமாகவும் புரிந்துகொள்வதற்கு கருத்துநிலை நோக்கு அவசியமாகின்றது. இந்நிலையில் உற்றறிக் கோட்பாடு நமக்குப் பொருத்தமாகவும் பிரயோகத் தன்மையுடன் கூடிய பல்பரிமாண நோக்கு நிலைகளையும் தருகின்றது. இதனாலேயே உற்றறிக் கோட்பாடு இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் ஏனைய நாடுகளைப் போலவே இலங்கையிலும் கல்விக்கும் சமூக நகர்வுக்குமான தொடர்புகள் வெளிப்படையானவை. அனைத்து விதமான சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு மாற்றங்களின் பின்புலத்திலும் கல்விக்கு ஒரு பிரதான இடமுண்டு. கல்விசார்ந்த செயற்பாடுகள் மக்களின் அந்தஸ்து வேறுபாட்டிலும் தீர்க்கமான பங்கு வகிக்கின்றது. அதாவது சமூக வகுப்புக்களை இனங்காணலில் கல்வி நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரச துறையினரால் வழங்கப்பட்ட உயர்தொழில்களுக்கு கல்வித் தகைமையே முக்கியமாகக் கொள்ளப்பட்டு வந்தது. இந்த மரபு தொடர்ந்து சமூக மட்டத்திலும் சிந்தனைப்பாங்கிலும் நடத்தையிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணியாகவும் மாறி இருந்தது.

இன்று உலகலாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கல்வி மாற்றம் பெறவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். அதேநேரம் உலகம் தழுவிய நுகர்ச்சிப் பண்டமாகவும் கல்வி மாற்றப்பட்டு வருகின்றது. உலகச் சந்தை வேண்டி நிற்கும் திறன்களையும் ஆற்றல்களையும் வளர்த்தல் என்னும் உயரிய நோக்கத்தை கல்விச் செயன்முறை உள்வாங்கிச் செல்ல வேண்டும். இந்தப் போக்கு தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாகவும் மாற்றப்பட்டுள்ளது. இங்குதான் சமகாலக்கல்வியின் செல்நெறிகள் எவ்வாறு ஒழுங்கு படுத்தப்படுகிறது என்பதன் பின்னாலுள்ள கருத்தியலும் அரசியலும் நமது கவனத்தைப் பெறுகின்றன.

சமகாலத்தில் உலகச்சந்தை அல்லது பன்னாட்டுச்சந்தை என்ற கண்ணோட்டத்திலேயே கல்வி இயக்கப்படும் பாங்கு முதன்மை பெற்றுச் செல்கின்றது. இதன் தருக்க ரீதியாகவே சமகாலக் கல்விச் சிந்தனை விரிவாக்கம் பெறுகின்றது. உலகமயமாக்கல் என்ற தொடர் சங்கிலியின் இயக்க முறைமைக்குட்பட்டு அதன் வேகத்திற்கேற்ப கல்வி வளர்ந்து செல்ல வேண்டுமென்ற எண்ணம் ஒருசாராரால் திணிக்கப்படுகின்றது.

உலக வங்கியின் அறிவுரைகளின்படி உருவாக்கப்பட்டு வரும் கட்டமைப்புச் சீராக்க நடவடிக்கைகள் கல்வி மற்றும் நலன்புரிச் செயற்பாடுகள் மீது வழங்கப்படும் நிதியை படிப்படியாக வெட்டிக் குறைக்கின்றன. மேலும் கல்வியின் விழுமிய உள்ளடக்கம் எதார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை விட்டு விலகியும், நுகர்ச்சி விழுமியங்களை வலியுறுத்தியும் உருவாக்கப்படுவதற்குரிய மேலைப்புல நிபுணத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் உலகமயமாதலுக்குட்படும் விழுமியங்களையும் சிந்தனைகளையும் மனப்பாங்குகளையும் திணிக்கும் நடைமுறைகளும் மேலாதிக்கம் பெற்று வருகின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் "சமகாலக்கல்வி" எனும் நூல் வெளிவருகின்றது. சமகாலக் கல்வியின் பின்னாலுள்ள நலன்கள், ஆதிக்க சக்திகள் யாவர் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றது. மேலும் சமகாலக் கல்விச்சூழலை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கான விமரிசன நோக்கையும் முன்வைக்கின்றது. குறிப்பாக கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயற்முறையில் மேற்கொள்ள வேண்டிய புதிய மாற்றங்ளையும் நுணுக்கமாக உணர்த்துகின்றது.

புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொழில்நுட்ப வளர்ச்சி முதலியவை பாரம்பரியமான தொழில்முறை நோக்கிய கல்வியை கேள்விக்குறியாக்கியுள்ளன. இன்று பாரம்பரியமான கல்வித் தொழிற்பாடுகளை நவீனத்துவத்தை நோக்கி மாற்றியமைக்க வேண்டியுள்ளது. நவீனத்துவம் என்பது கணினி அறிவுடன் மட்டும் தொடர்புடையது அன்று. புதிய கணினி அறிவை மட்டும் பெற்றுவிடுவதால் அறிவாக்கம் முழுமையடைய மாட்டாது. நவீன உற்பத்தி முறைமையின் அழுத்தங்களையும் சுரண்டற் கோலங்களையும் தெளிவாக புலக்காட்சி கொள்வதற்குரிய உள்ளடக்கங்கள் கலைத்திட்டத்திலே கட்டமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளன. இதனையும் இந்நூல் தெளிவாக அடையளப்படுத்துகின்றது.

தமிழில் சமகாலக் கல்விச்சிந்தனை வளர்ச்சி பற்றிய சுயதேடல், சுயசிந்தனை, விமரிசன நோக்கு, சமூகமனப்பாங்கு நம்மிடையே வளர்க்கப்பட வேண்டுமென்பதனை இந்நூல் வலியுறுத்துகின்றது. இந்நூலை நாம் சமூகச் சிந்தனைக்கும் சமூகச் செயற்பாட்டுக்குமுரிய ஒரு கருவியாகவே கருத வேண்டும். கல்வியின் இயக்கம் சமூகமாற்றத்தின் உரைகல்லாக அமையும்.

**தெ.மதுசூதனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் கல்வியியல் தொடர்பான அதிகமான பல்வேறு நூல்களை வெளியிட்ட பெருமை நமக்குண்டு. அதைவிட பேராசிரியர் சபா.ஜெயராசாவின் எண்ணற்ற நூல்களை நாமே தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். அந்த வரிசையில் "சமகாலக் கல்வி" எனும் நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். சமகாலக் கல்வித்துறையில் ஏற்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சிப் பரிமாணங்களையும் சிந்தனைக் கூறுகளையும் விமரிசன ரீதியில் புரிந்துகொள்வதற்கான நோக்கு நிலையை முன்வைக்கும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

கல்வியியல் சார்ந்த நூல் வரிசையில் இந்நூல் தனித்துவமான சிறப்புத்தன்மைகளையும் சிந்தனைக்கோலங்களையும் கொண்டுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது. இந்நூலை ஆக்கித்தந்து எமது வெளியீட்டுக்கு பெருமை சேர்க்கும் பேராசிரியருக்கு நமது நன்றி.

**சதபூ.பத்மசீலன்**
சேமமடு பொத்தகசாலை

*113,* சேமமடு
பத்மகிரி
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1- சமகாலக்கல்வி | 01 |
| 2- விஞ்ஞானக் கல்வி | 22 |
| 3- அழகியற் கல்வி | 27 |
| 4- பல்கலைக்கழகக் கல்வியின் நவீன கோலங்கள் | 34 |
| 5- கல்வியின் தரஉறுதிப்பாடு | 40 |
| 6- சமகால வாசிப்புப் பண்பாடு | 45 |
| 7- கல்வியும் வேலை வாய்ப்பும் | 51 |
| 8- சமகாலக் கல்வியும் உற்றிக் கோட்பாடும் | 57 |
| 9- உற்றறி உளவியல் | 62 |
| 10- உற்றறி ஆசிரியம் | 67 |
| 11- எண்ணிமச் சமூகமும் கல்வியும் | 73 |
| 12- கல்வி நிலையங்களில் வேதனைத் திணிப்பு | 79 |
| 13- கல்வி நிலையங்களில் நகைப்பு வதை | 84 |
| 14- எதிர்ப்பை வெளியிடும் ஆடை அணிகலன்கள் | 89 |
| 15- விளையாட்டு உளவியல் | 93 |
| 16- கற்பித்தலில் நகைச்சுவை | 100 |
| 17- உளச்சமூகம் | 105 |
| 18- சமகாலத்து மாற்றுவகை இலக்கியம் | 109 |
| 19- நவீனகல்வியும் சிறுவர் இலக்கியமும் | 114 |
| 20- சிறார் கல்வியும் பின்கட்டமைப்பு இயலும் | 119 |
| 21- சமகால கல்வி வளர்ச்சி | 129 |
| 22- அறிகைப் பிரிகோடு என்ற புதிய கோட்பாடு | 166 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலக் கல்வி

பல்வேறு பரிமாணங்களில் சமகாலக் கல்வி வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. அரசியல், பொருளியல், பண்பாட்டியல், தொழில்நுட்பவியல், உளவியல் முதலாம் துறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் சமகாலக் கல்வியில் பல்வேறு எழுபொருட்களை முக்கியப்படுத்தத் தொடங்கியுள்ளன.

பகுப்பாய்வு நிலையில் முதற்கண் பின்வரும் நவீன வளர்ச்சிகளை நோக்கலாம்.

1. மாற்றுக் கணிப்பீட்டு முறைகள்
2. மூளையின் இயல்பு பற்றிய ஆய்வுகள்
3. ஒழுக்கக் கல்வியின் வற்புறுத்தல்
4. முரண்பாடுத் தீர்வுக்கான கல்வி
5. இனக்குழும அடையாளங்களை முன்னெடுக்கும் கல்வி
6. கட்டுமை உளவியலின் வளர்ச்சி
7. உற்றறிச் சிந்தனை
8. அனர்த்த நிலையை எதிர்கொள்வதற்கான கல்வி
9. தனியாள் வேறுபாட்டுக்கான கல்வி
10. இணைய வழிக்கல்வி
11. சமத்துவமும் சமகணிப்பும்
12. கல்விச் செயற்றிட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. உலகக் கல்வி *(Global Education)*

14. விசாரணையை அடிப்படையாகக் கொண்ட கற்றல்

15. உள்ளடங்கள் கல்வி

16. பல்பண்பாட்டுக் கல்வி

17. கற்றற் கோலங்கள்

18. ஊடக எழுத்தறிவு

19. பள்ளிக்கூட வன்செயல்கள்

20. ஒட்டுமை *(Hybird)* ஆசிரியர்

21. உளமொழியியல்

22. சமூகக் கற்றல் உளவியல்

23. ஆசிரியர் பொறுப்பியம்

24. தரமேம்பாட்டு இயக்கம்

25. ஆசிரியர் ஆய்வாளராதல்

26. கல்வியில் எண்ணிமத் தொழில்நுட்பம்

27. நெகிழ்நூல்கள் *(Flexi Books)*

28. குழுநிலைக் கூட்டுறவுக் கற்றல்

1. மாற்றுக் கணிப்பீட்டு முறையில் பல்வேறு செயற்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றன. அறிவை அறிபடமாக்கல், *(Knowledge Mapping)* ஆற்றுகையை அடிப்படையாகக் கொண்ட பலநிலைக் கணிப்பீடு, நீள்முக வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு, வெளிப்படையாகத் துலங்காது மறைபொருளாக நிற்பவற்றைக் கண்டறியும் கணிப்பீடு முதலியவை வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன.

புதிய கணிப்பீட்டு முறையில் முக்கியமானது "மாண்பு எழுகை" *(Rubric)*. பழைய கணிப்பீட்டு முறையில் தரப்பட்ட எண் பெறுமானங்களைக் கொண்டு மாணவர் மதிப்பீடு செய்யப்படுவர். ஆனால் மாண்பு எழுகையில் பல்வேறு அணுகுமுறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு மாணவர் கணிப்பீடு செய்யப்படுவர். மேலும் மேலும் மாணவர் தம்மைத் தாமே மதிப்பீடு செய்வதுடன் தாம் எப்படித் தமது ஆற்றுகையை மேம்படுத்தலாம் என்பதற்கான ஆக்கத் தெறிப்பு ஏற்பாட்டையும் அது கொண்டிருக்கும்.

அந்த முறையில் மதிப்பீட்டை எவ்வாறு வடிவமைக்கலாம் என்பது பற்றி மாணவரிடம் கலந்தாலோசிக்கப்படும். மாணவர் பாடங்களிலே ஆர்வம் செலுத்துவதற்கான வலுவூட்டலை அது வழங்கும். மாண்பு எழுகை மதிப்பீட்டு முறையைக் கையாளல் கல்வியில் தரமேம்பாட்டை அதிகரிப்பதற்கும் துணை செய்யும்.

மாணவரின் ஆற்றல்களை வளர்ப்பதற்கான பட்டியலையும் முன்னேற்றத்தை எட்டுவதற்கான வழிமுறைகளையும் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து உருவாக்குதலும் மாண்பு எழுகையில் இடம்பெறும்.

2. பரிசோதனை உளவியலாளர் மூளையின் செயற்பாடுகள் தொடர்பாக நிகழ்த்திவரும் ஆய்வுகள் நவீன கல்விச் செயல்முறையிலே செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றன.

மூளையிலே உருவாக்கப்படும் அறிபடங்கள் *(Mind Maps)* பற்றிய ஆய்வுகள் கற்றல் கற்பித்தலுக்குத் துணை செய்வதை நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. எவ்வாறு கற்றுக் கொள்ளல் வேண்டும் என்ற வழிகாட்டலை அறிபடங்கள் வழங்குகின்றன. மனத்தில் அறிபடங்களை உருவாக்குதல் தொடர்பான கற்பித்தலுக்கு இன்று முன்னுரிமை தரப்படுகின்றது.

வலமூளை இடமூளை தொடர்பான ஆய்வுகளும் கற்பித்தலிலே செல்வாக்குச் செலுத்துகின்றன. கற்பித்தல் நிகழ்ச்சிகள் இடமூளையையே பெருமளவில் வளம்படுத்தி வந்துள்ளன. வலமூளையைத் தூண்டிக் கற்பித்தலை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் சமகாலத்தில் வலுப்பெறத் தொடங்கியுள்ளன.

முரண்படும் சிந்தனைகளை எதிர்கொள்ளும் பொழுது அறிகை ஒவ்வாமை *(Dissonance)* ஏற்படுகின்றது. மனவெழுச்சியுடன் கூடிய அந்த நிலையை விளங்கிக்கொள்வதிலும், அவற்றுக்கு தீர்வு காண்பதற்குத் துணை செய்வதிலும் சமகாலத்து ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. மேலும், மூளையின் செயற்பாடுகளை வினைத்திறன்படுத்தலும் கற்பித்தலும் ஒன்றிணைக்கப்படுகின்றன.

3. ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம் அண்மைக்காலமாக அதிக அளவில் வலியுறுத்தப்படுகின்றது. பள்ளிக்கூடங்கள், பாடங்கள் உள்ளிட்டவை பாடங்களைக் கற்பித்தலில் கவனம் செலுத்தப்படு மளவுக்கு ஒழுக்க மேம்பாட்டில் கவனம் செலுத்துதல் இல்லை என்ற திறனாய்வு முன்வைக்கப்படுகின்றது.

சமகாலத்தைய போட்டி நிலைவரங்களும் வாழ்க்கையின் அழுத்தங்களும் மாணவர் ஒழுக்கங்களைப் பாதிப்படையச் செய்கின்றன. ஒழுக்கவியலை நேர்நிலை அனுபவங்கள் வாயிலாகவும், பயனுள்ள செயற்றிட்டங்கள் வாயிலாகவும் வழங்குவதற்குரிய செயல்நிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சூழலில் உள்ள பெருந்தொகையான துலங்கல்களோடு மாணவர்கள் இன்று வாழ நேரிடுகின்றது. அவற்றை இனங் காண்பதற்குரிய ஆற்றல் கருவிகளைக் கல்வி நிலையங்கள் வழங்க வேண்டியுள்ளது.

மாணவரின் தற்படிமத்தை வளர்த்துக் கொள்வதில் நல்ல ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை கல்வியினூடாக வலியுறுத்த வேண்டியுள்ளது. ஒழுக்கவியல் சார்ந்த சரியான தீர்மானங்களை மேற்கொள்வதில் கல்வியின் வகிபாகம் முன்வைக்கப்படுகின்றது. ஒழுக்க விருத்தியும் அறிவு விருத்தியும் ஒன்றிணைக்கப்படுகின்றன.

4. முரண்பாடு தீர்வுக்கான கல்வியில் முதற்கண் ஆசிரியரின் பங்கு முக்கியமானது. அத்துடன் சீர்மியரதும், ஆற்றுப்படுத்துனரதும் வகிபாகங்களுடன், நவீன கல்வி நிலையங்களில் "இணக்கம் செய்வோரும்" *(Mediators)* நியமிக்கப்படுகின்றனர்.

பேச்சு மொழியாலும் உடல்மொழியாலும் இணக்கம் செய்வோர் மாணவரை ஈர்க்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். மாணவரின் உணர்ச்சிகளோடு இழுபட்டுச் செல்லாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். செவிமடுக்கும் திறனுடனும் உரையாடும் திறனுடனும் மாணவரை அணுகுதல் இணக்கம் செய்பவர்களுக்குரிய சிறப்புப் பண்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவருக்குரிய சரியான செய்திகளைத் தெளிவான தொனியுடன் திட்டவட்டமாகக் கையளிக்கும் திறனுடன் முரண்படுவோருக்குக் கையளிக்க வேண்டும்.

எந்தத் தரப்பினருடனும் அவர் தனிப்பட்ட தொடர்புகளை வைத்திருக்கலாகாது. மோதல்கள் தொடர்ந்து நிகழாதிருப்பதற்குரிய உறுதியான செயற்பாடுகளை முன்னெடுத்தல் இணக்கம் செய்வோருக்குரிய சிறப்புப்பணி.

இருபக்கங்களையும் தனித்தனியாகக் கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால் பக்கம் சாரக் கூடாது. தீர்க்கமான முடிவுடன் இரு தரப்பினரையும் சந்திக்க விட வேண்டும். இணக்கம் செய்வோருக்கு சீர்மிய அறிவும் முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது.

5. பின்காலனியச் சூழலில் ***இனக்குழும அடையாளங்களை*** முன்னெழுத்தல் ஒரு முக்கிய செயற்பாடாகியுள்ளது. ஒடுக்குமுறைக்கும் நிராகரிப்புக்கும் உள்ளாக்கப்பட்ட இனக்குழுமங்கள், தமது அடையாளங்களை நிலை நிறுத்துவதற்கும் அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதற்கும் கல்விச் செயல்முறையைப் பயன்படுத்துகின்றன.

தாய் மொழிக்கல்வியை வலுப்படுத்துதல், பழைய பனுவல்களைத் தேடி மீளப் பதிப்பித்தல், தமக்குரிய இசை, ஆடல் நுண்கலைகள், சடங்குகள் முதலியவற்றைக் கலைத்திட்டத்தில் உள்ளடக்குதல் ஆகியவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பின் நவீனத்துவ சிந்தனைகள் பன்மை நிலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. பல பண்பாடுகள், பன்மை இனக்குழுக்கள், பல கருத்துக்கள் என்றவாறு ஒருமை நீங்கிய பன்மை நிலைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. ஒரு மொழி, ஒரு பண்பாடு என்பவை மேலாதிக்கத்தின் வடிவங்களாகின்றன.

மார்க்சிய மற்றும் நவமார்க்சிய கோட்பாடுகள் தேசிய இனங்களின் அடையாளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை சுரண்டலற்ற அரசியலடிப்படையில் வலியுறுத்துகின்றன.

பேரினவாதம் எழுச்சி கொண்ட வேளைகளிலே சிறுபான்மைத் தேசிய இனக்குழுமங்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்ட வரலாறு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நவீன கற்றல் கற்பித்தலில் **கட்டுமையியலின்** *(Constructivism)* பங்கு சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றது. ஆசிரியர் கையளிக்கும் அறிவை மாணவர் தமது இயல்புக்கு ஏற்றவாறே கட்டுமை செய்து கொள்கின்றனர்.

அந்நிலையில் ஆசிரியர் வளம் செய்பவராகச் *(Facilitator)* செயற்படுதல் முக்கியமானது. மாணவர்க்கு உரைப்பதைக் காட்டிலும் மாணவரிடமிருந்து கேட்பதற்கு முக்கியம் தருதல் வேண்டும். முடிவுகளை ஆசிரியரே கூறாது, மாணவரையே கூறும்படி கேட்டல் வேண்டும். முதல் நிலையான தரவுகளுடன் மாணவரை இடைகொள்ளச் செய்தல் முக்கியமானது.

புறூனர், வைகோட்சி, பியாசே ஆகியோரின் கோட்பாடுகளைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துதல் வேண்டும். பொதுவான அணுகுமுறைகளைக் காட்டிலும் மாணவர் ஒவ்வொருவருக்குமுரிய சிறப்பான அணுகுமுறைகளைக் கையாளலே சிறந்தது. மாணவர் ஆற்றல் பின்புலத்தை மட்டுமன்றி பண்பாட்டுப் பின்புலத்தையும் கருத்திலே கொண்டு செயற்பாடுகளை முன்னெடுத்தல் முக்கியமானது.

கட்டுமை இயலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நவீன கல்வித் தொழில்நுட்பம் பற்றிய அறிவும் பிரயோகங்களும் ஆசிரியரின் செயற்பாடுகளுக்குக் கைகொடுக்கும்.

7. நவீன கல்வியில் வலியுறுத்தப்படும் ஒரு முக்கியமான அறிபொருள் ***"உற்றறி சிந்தனை"***. கல்வியின் இலக்குகளை வென்றெடுக்க உற்றறி சிந்தனைச் செயற்பாடு அடிப்படையானது. அதனை வளர்த்துக்கொள்வதற்கு பின்வரும் செயற்பாடுகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

1. ஆழ்ந்து பகுத்தாராய்தல் - எவற்றையும் மேலோட்டமாக நோக்காது ஆழ்ந்து, ஊடுருவி நோக்குதல்.

2. ஒப்புமை காணலும், வேறுபாடுகளை நோக்குதலும்

3. மாணவர் தமக்குரிய தனித்துவங்களை வெளிப்படுத்தும் வகையில் திறந்த வினாக்களை வழங்குதல்

4. நியாயங்களின் அடிப்படையில் மதிப்பீடுகளைச் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கிரகித்தலின் அடிப்படையில் தகவல்களைத் தொகுத்தல்

6. பலயீனமான கருத்துக்களைத் திறனாய்வுடன் நோக்குதல்

7. தமது சொற்களிலே முடிவுகளை எடுத்துக்கூறுமாறு செய்தல்

8. நேர் மற்றும் எதிர்க்கருத்துக்களை அடியொற்றிய விவாதங்களை நடத்துதல்

9. பிரயோக நிலையிலே கருத்துக்களைப் பயன்படுத்துதல்

10. உயர்நிலை ஒப்பீடுகளை மேற்கொள்ளுதல்

மாணவர் உயர்நிலையான தேர்ச்சிகளைப் பெறுவதற்கு உற்றறி சிந்தனைச் செயற்பாடு அவசியமாகும்.

8. ***அனர்த்த நிலைகளில் மாணவர் தம்மைப் பாதுகாப்பதற்கான*** அறிவூட்டல் நவீன கல்விச் செயற்பாடுகளிலே இடம்பெற்று வருகின்றன. அனர்த்தங்கள் சிறிய அளவிலும் நிகழலாம். பூகம்பம், சுனாமி, போர்கள் என்ற பெரிய அளவிலும் நிகழலாம்.

பாதுகாப்புப் பற்றிய அறிவுறுத்தல்களை ஏட்டுக் கல்வியுடன் செயல்வழியாகவும் கற்பிக்க வேண்டும். மாதம் ஒருமுறை பாதுகாப்பு ஒத்திகைகளை நடத்தலாம். பாதுகாப்பான இடங்கள், ஓடிச்செல்லும் வழிகள், உடனடியாக எடுத்துச் செல்லப்படக்கூடியவை தொடர்பில் மாணவர்க்கு அறிவுறுத்தல் தரப்படல் வேண்டும்.

இயற்கை இடர்களை முன்கூட்டியே அறிந்துகொள்ளக்கூடிய தொழில்நுட்பம் இன்று வளர்ச்சியடைந்துள்ளது. அந்நிலையில் செய்திகளோடு உறவாடும் திறன்களை மாணவர்க்குக் கற்பித்தலே சிறந்தது.

அனர்த்த நிலைகளிலே எத்தகைய தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பான "அனர்த்த தொடர்பாடல்" முறைபற்றியும் மாணவர்க்குக் கற்பித்தல் வேண்டும். "அனர்த்த முதலுதவி" என்ற செயற்பாட்டிலும் மாணவர்க்கும் பயிற்சி வழங்கல் முக்கியமானது.

ஆபத்து நேரங்களில் எழும் மனவெழுச்சிகள் பற்றியும் அவற்றை முகாமை செய்தல் பற்றியும் மாணவர்க்கு அறிவு வழங்கப்படுதல் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9- ***தனியாள் வேறுபாடுகளைக்*** குவியப்படுத்திக் கல்வி வழங்கலை மேற்கொள்ளல் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றது. வகுப்பறையில் பல்வேறு திறன்களும் ஆற்றலும் விருப்புக்களும் கொண்டவர்கள் இருக்கின்றனர். அவர்களது தனித்துவங்களைக் கண்டறிந்து கற்பித்தலை மேற்கொள்ளும் பொழுதுதான் கல்வி வினைத்திறன் கொண்டதாக அமையும்.

தனிமனிதரைக் குவியப்படுத்திக் கற்பிக்கையில் அவருக்குரிய சமூகப் பொறுப்புக்களையும் இணைத்தல் வேண்டும்.

சுரண்டலும் சுயநல மேம்பாடும் கொண்ட சமூகத்தளத்தில் தனிமனிதருக்குரிய தனித்துவமான ஆற்றல்களை வளர்க்கும் வேளை சமூகப் பொறுப்புள்ளவர்களாக அவர்களை வளர்த்தெடுத்தலும் முக்கியமானது.

"தற்கற்றல்" என்பது தனியாள் கல்வியை வளர்ப்பதற்குரிய பிறிதொரு செயற்பாடு. சுயமாகக் கற்பதற்குரிய செயற்பாடுகளை வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு ஒருவரின் கற்றல் வேகமும் வேறுபடும். தனிநபரைக் குவியப்படுத்தியே கற்றல் வேகத்தை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். நவீன கல்வியில் "கற்றல் வேகம்" ஒரு சிறப்பான எழுபொருளாகவுள்ளது.

10- உளநெருக்கீடுகள் மிக்க சமகாலச் சமூகச் சூழலில் ***இணைய வழியாக அறிவைத் திரட்டிக் கொள்ளல்*** ஒருவித மனச்சுகத்தை வழங்குவதாகக் குறிப்பிடுகின்றது.

மாணவர் தமக்குரிய மேலதிகத் தகவல்களை இணைய வழியாகப் பெற்றுக் கொள்ளலாம். அவற்றுடன் "இணையப் பள்ளிக்கூடங்கள்" *(Online Schools)* என்ற ஒழுங்கமைப்புக்களும் தோற்றம் பெற்றுள்ளன.

எதுவித தடைகளுமின்றி நேரடியாகக் கற்கக் கூடிய வாய்ப்பை இணைய வழியான கல்வி ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இணைய வழிப் பாடசாலைகளில் விரும்பிய நேரங்களிலே கற்கக் கூடியதாகவுள்ளது. செலவுச் சிக்கனமாகவும் உள்ளது. தமக்கு விரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இடத்திலிருந்து கற்கக் கூடிய மனநிறைவையும் அது வழங்குகின்றது. "வகுப்பறைக் கட்டுப்பாடு" என்ற அழுத்தத்திலிருந்து மாணவருக்கு அது விடுதலை தருகின்றது.

"எலத்திரனியல் சாதனவழியாகக் கற்றல்" *(E Learning)* "நேரிணைப்புக் கற்றல்", "இணையவழிக் கற்றல்" முதலாம் தொடர்கள் இத்துறையில் பயன்படுத்தப்படுகின்றன. அவை வறியவர்களுக்கு எட்டாதவையாக உள்ளன. அதேவேளை அச்சாதனங்களைப் பயன்படுத்துவோரின் "நேருக்கு நேர் உறவாடும்" சமூகத்திறன்களும் பாதிக்கப்படுகின்றன.

11- பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், சுரண்டற் கோலங்களும் மிகையாகக் காணப்படும் நாடுகளிலே கல்வியிலே ***சமத்துவமும் சமகணிப்பும்*** எட்டப்பட முடியாதவையாக உள்ளன.

அனைவருக்கும் பொதுவான பொதுக்கல்வி என்பது சட்டவரைபில் இருப்பினும், பள்ளிக்கூடம் செல்லாமை, இடைவிலகல், ஒரே வகுப்பில் மீளக்கற்றல் முதலியவை வளர்முக நாடுகளிலே பரவலாகக் காணப்படுகின்றன.

அனைவருக்கும் பொதுவான கலைத்திட்டம் என்பது நடைமுறைப் படுத்தப்பட்டாலும், பள்ளிக்கூட வளப்பகிர்விலே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ச்சியான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

அனுகூலம் மிக்க கல்வி நிலையங்கள், அனுகூலம் குன்றியவை என்ற பாகுபாடு நடைமுறையில் நீடித்த வண்ணமேயுள்ளது.

கல்வியிலே பின்தங்கிய மாவட்டங்களுக்குச் சலுகைகள் வழங்குவதால் சமத்துவத்தை எட்ட முடியும் என்பது கேள்விக்குரிய தாகின்றது. அந்த மாவட்டங்களில் வாழும் வசதி படைத்தோரே அதன் நன்மைகளை அனுபவித்துக் கொள்கின்றனர்.

பக்கச் சார்பற்ற முறையில் கல்வியை வழங்குதல் சமகணிப்பின் முக்கிய பரிமாணம். பாட ஏற்பாட்டில் பெண்கள் புறக்கணிக்கப் படுதலும், சிறுபான்மை இனங்கள் புறந்தள்ளப்படுதலும் சமகணிப்பைப் பாதிப்படையச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12-** இன்றைய கல்வி முறைமை மாணவரின் உளநெருக்கீட்டு அளவை அதிகரிக்கச் செய்த வண்ணமுள்ளது. அதனைத் தணிப்பதற்குரிய வழிமுறைகளுள் ஒன்றாகக் கல்விச் ***செயற்றிட்ட*** செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

சுயமாகச் சிந்தித்தல், சுயமாகத் தொழிற்படுதல், ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துதல், உற்றறி சிந்தனையுடன் தொழிற்பாடுகளை முகாமை செய்தல் முதலியவற்றுக்கு கல்விச் செயற்றிட்டங்கள் துணை செய்கின்றன.

பாடத்திட்டத்தை அடியொற்றி கல்விச் செயற்றிட்டங்களை உருவாக்கலாம் என்பது தொடர்பான பயிற்சிகள் ஆசிரியர் கல்வியில் வழங்கப்படுகின்றன.

செயற்றிட்டங்கள் காண்பிய விளக்கத்தினை *(Visual Understanding)* மாணவர்க்குக் கொடுக்கின்றன. வடிவமைப்புக்கள், உருவாக்கங்கள், நிழற்படங்கள், வரைபடங்கள், அறிபடங்கள் முதலியவற்றுடன் செயற்றிட்டங்கள் இணைந்திருக்கும் பொழுது அவ்வகை விளக்கம் கற்றலை விசைப்படுத்துகின்றது.

கல்விச் செயற்றிட்டங்கள் வழியாக மேலதிகத் தகவல்களையும் மேலதிக விளக்கங்களையும் மாணவர் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இணையவழியான செயற்றிட்டங்களும் நவீன கல்வியில் முன்னெடுக்கப்படுகின்றன.

**13-** மாணவரின் உலக நோக்கை வளர்ப்பதற்கும், நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும், உலகின் சமகால நிலைவரங்களைப் புரிந்துகொள்வதற்கும் ***உலகக்கல்வி*** வாய்ப்பளிக்கின்றது.

புவி வெப்பமடைதல், ஓசோன் படலத்தில் ஏற்படும் துவாரங்கள், இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு அழிக்கப்படுதல் முதலியவை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மட்டும் உலகக் கல்வியாகாது. அவற்றின் பின்னால் இயங்கிக் கொண்டிருக்கும் உலக முதலாளியத்தின் இயல்பையும் மாணவர் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

உலகக் கல்வியின் ஒரு முக்கிய பரிமாணம் உலக மயமாக்கலின் விளைவுகளை அறிந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் பல பாகங்களில் நிகழ்ந்துவரும் போர்களையும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் ஒரு காட்சிப் பொருளாக இருக்கும் ஐ.நா. சபையின் உள்ளார்ந்த இயல்புகளையும் மாணவர்க்குத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

உலகில் இயங்கிக் கொண்டிருக்கும் முற்போக்கான இயக்கங்களுக்கும், பிற்போக்குச் செயற்பாடுகளைக் கொண்ட இயக்கங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை மாணவர்க்குப் புரிய வைக்க வேண்டும்.

14. விசாரணையை அடிப்படையாகக் கொண்ட கற்றலில் கற்கும் போது தகவல்களை உள்வாங்கும் நிலையில் வினாக்களை எழுப்புதலும் எழுவினாக்களை *(Issues)* முன்வைத்தலும் இடம்பெறும்.

மரபுவழியான கற்றலில் வினா எழுப்புதற்கு அதிக முக்கியத்துவம் தரப்படவில்லை. விசாரணைக் கற்றலில் பல்வேறு மட்டங்களில் வினா எழுப்புதல், வினாக்களை குவியப்படுத்துதல், வினாவுக்கான கட்டமைப்புக்களை உருவாக்குதல், வினாவுக்கான சூழமைவை உருவாக்குதல் முதலிய உபாயங்கள் முன்னெடுக்கப்படும்.

வினாக்கள் வழியாக விசாரணையை ஆரம்பித்தல், அதன் வழியாக அறிவைக் கட்டமைப்புச் செய்தல், அவ்வாறு கட்டமைப்புச் செய்யப்பட்ட அறிவைப் பிரயோகித்தல், தேவைப்படும் புதிய சூழலில் அதனை மீட்டெடுத்தல் என்றவாறு செயற்பாடுகள் விரிவடைந்து செல்லும். அவற்றுக்கு ஏற்றவாறு ஆசிரியர் பாடத்தைத் திட்டமிட வேண்டும்.

அறிவை ஆழமாக்குதல், மேலதிகத் தகவல்களைத் திரட்டிக் கொள்ளல், வினாத் தொடர்ச்சிகள், தகவலின் வளர்ச்சியோடு தொடர்ந்து செல்லல், புதிய எண்ணக்கருவாக்கங்களை உருவாக்கிக் கொள்ளல் முதலிய வளர்ச்சி நிலைகளை ஆசிரியரும் மாணவரும் கூட்டாக மேற்கொள்ள வேண்டும்.

15. "உள்ளடக்கல்" என்பது நவீன கல்விச் செயல் முறைகளில் சிறப்பிடம் பெற்று வருகிறது. சிறப்புத் தேவைகளுக்குரிய மாணவர்களை சாதாரண வகுப்பறையில் வைத்துக் கற்பித்தலை அந்தச் செயற்பாடு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பில் குறைபாடுடையவர்கள் மட்டுமன்றி, விபத்துக்கு உள்ளானவர்கள், பெரும் சத்திர சிகிச்சைக்கு உட்படுவோர், விருத்திப் பிரச்சினை உடையோர் முதலியோரும் இப்பிரிவில் உள்ளடக்கப்படு கின்றனர்.

இதன் பொருட்டு ஆசிரியருக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுதல் முக்கியமானது. சிறப்புத் தேவை உடைய மாணவரை ஏனைய மாணவர் மதித்துப் பழகுவதற்குரிய மனப்பக்குவத்தையும் ஏற்படுத்தல் வேண்டும்.

இவ்வகைக் கற்பித்தல் வெற்றியடைந்துள்ளது என்றும் தோல்வி அடைந்துள்ளது என்பதுமான மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

தனிநபர் செயற்பாடுகளைக் கூடுதலாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இவ்வகைக் கற்பித்தலிற் சிறப்பிடம் பெறுகின்றது. தனிநபர் ஒவ்வொருவரும் கொண்டுள்ள சிறப்பு ஆற்றல்களையும் மாற்றுத்திறன்களையும் கண்டறிந்து அவற்றுக்கு ஏற்றவாறு பொருத்தமான ஒப்படைகளை ஆசிரியர் வழங்குதல் வேண்டும்.

குறைபாடுகள் கொண்டோரான தாங்கள் வகுப்பில் இருக்கின்றோம் என்ற உணர்வை கற்பித்தல் வழியாக இழக்கச் செய்தலே சிறந்தது என்று குறிப்பிடப்படுகின்றது.

16. வளர்ச்சியுற்று வரும் உலகமயமாக்கற் சூழலில் **"பல பண்பாட்டுக் கல்வி"** *(Multi Cultural Education)* அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. பல பண்பாட்டினர், பல சமயங்களைப் பின்பற்றுவோர், பல்வேறு நாட்டினர், பல்வேறு சமூக அடுக்குகளில் வாழ்வோர், ஒரே வகுப்பிலிருத்திக் கற்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

அத்தகைய ஒருநிலையில் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாதலும் கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையிலும் அதே நிலைவரம் ஏற்படுதல் உண்டு. உதாரணமாக., பௌத்த கல்லூரிகளிலே கற்கும் தமிழ் மற்றும் இஸ்லாமிய மாணவர் சில சமயங்களிலே பிரதிகூலங்களை அனுபவிக்கின்றனர்.

பல பண்பாட்டினர் பயிலும் வகுப்பறைகளில் முதலில் மாணவரிடத்துக் காணப்படும் தவறான முற்சாய்வுக் கற்பிதங்களை நீக்குதற்கு ஆசிரியர்கள் முயல வேண்டும். மானிட வளர்ச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பண்பாட்டினரும் வழங்கிவரும் சீரிய பங்களிப்பைக் கற்பித்தலில் உள்ளடக்குதலும் சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு பண்பாட்டினரும் தத்தமக்குரிய இசையை, ஆடலை, தனித்துவமான கலைமரபுகளை, உணவுவகைகளைக் கொண்டுள்ளனர். கலைத்திட்டம் அவற்றை ஓரளவுக்கேனும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

17. வகுப்பறையில் மாணவர் அனைவரும் ஒரே விதமாகக் கற்றுக் கொள்வதில்லை. ஒவ்வொரு மாணவரும் கற்றுக் கொள்வதற்கு அடிப்படையான அறிகை அமைப்பு அவரவர் பெற்றுக் கொண்ட அனுபவத் திரட்டுடன் தொடர்புடையது.

கண்வழித் தொடர்புகளைக் கற்றலில் அதிகம் பயன்படுத்துவோர் உள்ளனர். செவிவழித் தொடர்புகளை மிகையாகப் பயன்படுத்துவோர் உள்ளனர். செயற்பாடுகள் வாயிலாக விரைந்து கற்றுக்கொள்வோர் உள்ளனர். இவ்வாறாகக் ***கற்றல் கோலங்கள்*** வேறுபடுகின்றன.

நவீன கற்பித்தல் கற்றற் கோலங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு மாணவருக்குமுரிய கற்றல் கோலத்தை அறிந்து கற்பித்தலை முன்னெடுக்கும் பொழுது, கற்றல் கற்பித்தல் மேம்பாடு கொண்டதாக அமைகின்றது.

ஏழு விதமான கற்றல் கோலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவை:

1. மொழியியல் சார்ந்தது
2. தருக்க வழிப்பட்டது
3. வெளிசார்ந்தது
4. இசை வழிப்பட்டது
5. உடல் சார்ந்தது
6. ஆளிடைத் தொடர்புடையது
7. ஆள்உள் தொடர்புடையது

பல்வேறு விதமான கற்றல் கோலங்களையும் மாணவர் அறிந்திருத்தல் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்படுத்தல் மற்றும் சீர்மியம் செய்வோரும் இன்று கற்றல்கோலங்களிலே கவனம் செலுத்துகின்றனர்.

**18. ஊடக எழுத்தறிவு** என்பது ஊடகங்கள் வழங்கும் செய்திகளைக் கிரகித்துக் கொள்ளக்கூடிய ஆற்றலைக் குறித்து நிற்கின்றது. செய்திகளை விளங்கிக் கொள்ளல் மட்டுமன்றி செய்திகளை உருவாக்குதலும் ஊடக எழுத்தறிவில் உள்ளடக்கப்படுகின்றது.

நவீன வாழ்க்கை ஊடகங்களுடன் இணைந்த வாழ்க்கையாக இருப்பதனால், கல்விச் செயற்பாடுகளில் ஊடகங்களும் உள்ளடக்கப்படுகின்றது. ஊடகம் என்பது ஒரு தனித்த பாட நெறியாகவும் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு வருகின்றது.

தொலைக்காட்சி ஊடகத்துடன் சமகால மாணவர்கள் அதிக அளவு ஈடுபட்டு வரும் நிலையில், அந்த ஊடகம் பற்றிய திறனாய்வை அவர்களிடத்து மேம்படுத்த வேண்டியுள்ளது.

ஊடகங்கள் வழியாக முன்னெடுக்கப்பட்டு வரும் பிரசாரங்களையும். கருத்தேற்றங்களையும் மேலாதிக்க நிலை நிறுத்தல்களையும், உய்த்தறியும் திறனை மாணவரிடத்து வளர்த்தல் நவீன கல்வியிலே வலியுறுத்தப்படுகின்றது.

"மசாலா" சினிமாவின் மோகம் எவ்வாறு மாணவரின் கல்வியையும் ஒழுக்கத்தையும் சீரழிக்கின்றது என்பது தொடர்பாக மேற்கொள்ளப் பட்டுவரும் ஆய்வுகளையும் கலைத்திட்டத்தினூடாகக் கையளிக்க வேண்டியுள்ளது.

19. பள்ளிக்கூட வன்செயல்கள் நவீன கல்விச் செயற்பாடுகளில் முக்கியமான பிரச்சினையாகவுள்ளன. வன்செயல்களாலும் வேதனைத் திணிப்பினாலும் *(Bullying)* மாணவரின் கல்வி பாதிக்கப்படுகின்றது. அவற்றால் கல்விநிலையங்களை விட்டு இடைவிலகுவோரும் உளர்.

ஆயுதங்களைக் கல்வி நிலையங்களுக்கு எடுத்துச்செல்லும் ஆபத்தான செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. கல்வி நிலையங்களின் வன்செயல்கள் வெளியிடங்களிலும் நீட்சி கொள்வதைக் காண முடியும்.

கல்வி நிலையங்களில் இடம்பெற்று வரும் புதிய மாணவருக்கான கேலிவதையுடன் *(Ragging)* தொடர்புடைய வன்செயல்களும் வளர்ச்சியடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்களைத் தடுக்கும் முறைகள் மூன்று நிலைகளிலே முன்னெடுக்கப்படுகின்றன. அவை:

1. முகாமை செய்தலை அடிப்படையாகக் கொண்டவை.

2. சூழலை மாற்றியமைத்தலுடன் தொடர்புடையவை.

3. கல்வி, ஒழுக்கவிழுமியம், சமூகநீதி முதலாம் கருத்தியல் சார்ந்தவை.

வன்செயலைக் கண்டறிவதற்கும் தடுப்பதற்கும் கல்வி நிலையங்களிலே ஒளிப்படக் கருவிகள், ஆயுதங்களைக் கண்டறியும் கருவிகள் ஆகியனவும் இயக்கப்படுகின்றன.

20. நவீன கல்வியில் ***ஒட்டுமைப்பண்பு கொண்ட ஆசிரியர்*** உருவாக்கப்படுகின்றனர். மரபு வழியான கற்பித்தல் செயல்முறைகளில் இருந்துவிடுபட்டு புதிய பண்புகளுடன் ஒட்டிக் கொள்ளும் ஆசிரியரின் உருவாக்கம் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாணவரின் அறிகைச் செயல்முறைக்கும் உணர்ச்சிச் செயல்முறைக்குமிடையேயுள்ள தொடர்புகளை உணர்ந்து கற்பித்தல், ஒவ்வொரு மாணவரும் தத்தமக்குரிய இயல்புகளின் அடிப்படையில் கற்கின்றனர் என்பதை அறிந்து தொழிற்படல், முதல்நிலையிலே கற்போரையும் இரண்டாம் நிலையிலே கலைத்திட்டத்தையும் நோக்குதல் முதலியவை ஒட்டுமை ஆசிரியரிடத்தே வலியுறுத்தப்படுகின்றன.

நவீன தொடர்பாடற் சாதனங்களுடன் இணைந்து தொழிற்படல், ஒட்டுமை ஆசிரியத்தின் பிறிதொரு சிறப்புப் பண்பு. கற்பித்தற் சாதனங்களை வகுப்பறைக்குப் பொதுவாகப் பயன்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது, மாணவரின் தனியாள் இயல்புகளுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு மாணவரையும் குவியப்படுத்தி வழங்குதலும் குறிப்பிடப்படுகின்றது.

ஒட்டுமை ஆசிரியத்துவத்திலே கற்பித்தல் என்பது "வழியைக் கண்டறிதலாகின்றது" தமது மட்டுப்பாடுகளை ஆசிரியர் விளங்கிக் கொண்டு அதிலிருந்து மீண்டெழுவதற்குரிய சாதனங்களுடன் ஒட்டிக் கொள்ளல் வேண்டும். ஒட்டுமைக் கற்பித்தலானது பலவற்றுடன் இணைந்த செழுங்கலவையாக்கப்பட்ட *(Blended)* செயற்பாடு என்றும் குறிப்பிடப்படும்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No:
Acc No 421



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. உளமொழியியல் *(Psycholingustics)* பற்றிய அறிவு நவீன ஆசிரியர்களுக்கு அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

எண்ணக்கருக்கள், அலல்து கருத்துக்களை மட்டும் சொற்கள் கொண்டிருப்பதில்லை. மாணவரின் அனுபவங்களும், உணர்ச்சிகளும் மனவெழுச்சிகளும் அவற்றுடன் தொடர்புபட்டு நிற்கும்.

மாணவருக்கும் அவர்களது சொற்களஞ்சியத்துக்கும், உளமொழியியலுக்கும் உள்ள தொடர்புகளை ஆசிரியர் அறிந்திருப்பின் கற்பித்தலை வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியும்.

மாணவரின் உளச் செயற்பாடு மொழியுடன் தொடர்புபட்டுள்ளது. மொழிவளத்தை மாணவரிடத்து மேம்படுத்துவதன் வாயிலாகக் கற்றற் செயற்பாடுகளை மேம்படுத்தலாம்.

கிரகித்தல். கற்பனைத்திறன், பிரச்சினை விடுவிக்கும்திறன், தொடர்பாடல் திறன் என்ற அனைத்தும் மூளையின் உள மொழிசார்ந்த தொடர்புகளுடன் இணைந்தவை.

நவீன கல்வியில் கட்டுமானக் குலைப்பு *(Deconstruction)* அல்லது தகர்ப்பு தொடர்பாக விரிவாகப் பேசப்படுகின்றது. ஒரு பனுவலுக்கு ஒவ்வொருவரும் தமக்கு ஏற்றவாறு பொருள் கொடுக்கின்றனர். அவ்வாறு பலநிலை வாசிப்பு ஏன் நிகழ்கின்றது என்பதை விளங்கிக் கொள்ளவும் உளமொழியியல் கைகொடுக்கும்.

22. கல்விச் செயற்பாட்டில் ***சமூகக் கற்றல்*** ஒரு சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. சமூகக் கற்றல் கோட்பாட்டை உருவாக்கியவர்களுள் யூலியன் ரெட்டர், அல்பேட் பன்டுரா ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

பிறரின் நடத்தைகளைப் பார்த்தே மாணவர் கற்றுக்கொள்ள முற்படுகின்றனர். இக்கருத்தின்படி கற்றலில் கவனம் அல்லது உற்றுநோக்கல் என்பதே அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆய்வுகளின்படி நேர் நடத்தைகளைக் காட்டிலும் எதிர் நடத்தைகளே இளைஞர்களிடத்துக் கூடிய கவன ஈர்ப்பைப் பெறுகின்றது. மேலும் மீள வலியுறுத்தல் இன்றியே கற்றற் செயற்பாடு நிகழும் என இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. இக்கோட்பாட்டின் முக்கிய பண்புகள் வருமாறு:

Class No:
Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கற்றல் என்பது சமூகச் சூழமைவில் நிகழும் ஓர் அறிகைச் செயல்முறை

2. உற்றுநோக்கலாலும், அதன் விளைவுகளை அறிந்து கொள்வதாலும் கற்றல் நிகழ்கின்றது.

3. நடத்தை மாற்றங்களை வெளிப்படையாகக் கண்டறியமுடியாத நிலையிலும் கற்றல் நிகழும்.

4. அறிகை, சூழமைவு, நடத்தை ஆகியவற்றின் ஒன்றிணைந்த தொடர்புகளால் கற்றல் நிகழ்கின்றது.

கற்றல் கற்பித்தலிலும், சீர்மிய நடவடிக்கைகளிலும் இக்கோட்பாட்டின் பயன்பாடு வலியுறுத்தப்படுகின்றது.

23. பல்வேறு நெருக்குவாரங்களுக்கிடையே தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் **பொறுப்புக்கூறலுக்கும்** உட்படுத்தப்படுகின்றனர்.

ஆசிரிய வாண்மைக்குரிய திறனுடனும் உளச்சார்புடனும் பணி செய்ய வந்தவர்கள் இருக்கிறார்கள், தொழிலுக்காக ஆசிரியர் பணியில் உள்நுழைந்தவர்களும் இருக்கின்றனர். அந்த முரண்பாடான நிலையில் பொறுப்பியம் வலியுறுத்தப்படுகின்றது.

வளப்பற்றாக்குறை, அதிக அளவு எண்ணிக்கையினைக் கொண்ட மாணவர்கள், போர்வடு, வறுமையால் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது கற்கவந்திருக்கும் மாணவர்கள் என்ற சூழலில் மாணவரின் தேர்ச்சிகள் எட்டப்படாத நிலையில் பொறுப்புக்கூற வேண்டிய தேவை ஆசிரியர் மீது சுமத்தப்படுகின்றது.

அந்நிலையில் ஆசிரியர் மீது குற்றம் சுமத்தப்படுகின்ற வேளை ஏனைய காரணிகளையும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளலே நீதியானது. சமகாலக் கல்வி, பரீட்சைக்குக் கற்பிக்கும் கல்வியாக *(Teaching to the test)* மாறிவருகின்றது. அந்நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கே ஆசிரியர் பொறுப்புக்கூறும் நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பொறுப்பியம் கூறல் நேர்முகமான நிலையில் முன்னெடுக்கும் பொழுது, கல்வி நிலையில் பயனுடையதாக இருக்கும். பெற்றோரும், கல்வித் திணைக்களமும், அரசும் சமூகமும் தமக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துவிட்டு அனைத்துக் குற்றங்களையும் ஆசிரியர் மீது சுமத்துதல் தவறாகும்.

24. ***தரமேம்பாட்டு இயக்கம்*** ஒவ்வொரு மாணவரிடத்தும் கற்றல் தரத்தை பராமரித்தல் ஆகிய இரண்டும் நவீன கல்வியில் முக்கியமான முன்னெடுப்புக்களாகவுள்ளன.

கல்வியின் தரத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல் நவீன போட்டிச் சமூகத்தின் அடிப்படை நிபந்தனையாகவுள்ளது. தரவீழ்ச்சியானது நீடித்து நிற்க முடியாத நிலையைக் கல்வி நிலையங்களுக்கு ஏற்படுத்தகின்றது.

கல்வித்தர மேம்பாடு பொருள் உற்பத்தியிலும் அதிக செல்வாக்கைச் செலுத்துவதால் அதன் முக்கியத்துவம் மேலும் உயர்ச்சி பெறுகின்றது. கல்வித் தர மேம்பாடு வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கும் இட்டுச் செல்கின்றது.

"எந்த மாணவரும் கல்வித் தரநிலையில் பின்தங்கி நிற்பதற்கு இடமளிக்கப்படலாகாது" என்ற கருத்து அண்மைக் காலமாக வலுப்பெறத் தொடங்கியுள்ளது.

கல்வி நிலையில் தேசிய தரமட்டங்களும் சர்வதேச தரமட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை நோக்கிக் கற்றல் கற்பித்தலை முன்னெடுத்தல் வலியுறுத்தப்படுகின்றது.

தரத்தைப் பராமரித்து முன்னெடுக்கும் செயற்பாடுகள் கணிக்கப்பட்டு கல்வி நிலையங்க்ள் தரவரிசைப் பட்டியலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

25. ***ஆசிரியர் ஆய்வாளராகத்*** தொழிற்படல் நவீன கல்வியின் ஒரு சிறப்பு அம்சமாகின்றது. மாணவரும் ஆசிரியரும் ஒன்றிணைந்து அறிவைத் தேடும் நிலை, நவீன கல்விச் செயல்முறையிலே வலியுறுத்தப்படுகின்றது.

ஆசிரியர் தமக்குரிய கற்றற் செயற்பாட்டினை ஆய்வுகளை அடியொற்றி முன்னெடுக்க வேண்டியுள்ளது. அந்நிலையில் ஆசிரியருக்குச் செயல்நிலை ஆய்வு பெருமளவிலே துணை செய்கின்றது. அந்த ஆய்வின் முடிவுகள் கற்றலை வளப்படுத்திச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறையில் நிகழ்த்தப்படும் செயல்நிலை ஆய்வு *'Car' (Class Room Action Research)* என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றது.

மாணவரின் கற்றல் ஈடுபாடு கற்பிக்கும் பாட உள்ளடக்கத்தின் கனதி, பயன்படுத்தப்படும் துணைச்சாதனங்களின் இயல்பு, கணிப்பீட்டு முறைகளின் பொருத்தப்பாடு முதலியவற்றை அடியொற்றிச் செயல்நிலை ஆய்வுகளை முன்னெடுக்கலாம்.

ஆசிரியரும் மாணவரும் இணைந்த வகையில் ஆய்வுகளைச் செயற்படுத்தல் முக்கியமானது. ஆசிரியர் ஆய்வாளராகத் தொழிற்படும் பொழுது கற்றல் கற்பித்தல் துறைகளில் நிகழ்ந்த பிற ஆய்வு முடிவுகள் பற்றியும் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

ஆசிரியர் தொடர்ந்து கற்றுக் கொண்டிருத்தல் போன்று, தொடர்ந்து ஆய்வுகளையும் செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

26. ***எண்ணிமத் தொழில்நுட்பத்தை*** அடிப்படையாகக் கொண்ட கற்பித்தற் சாதனங்களைப் பயன்படுத்துதல் நவீன கற்பித்தலியலின் தவிர்க்க முடியாத பகுதியாகிவிட்டது.

கணினியின் பயன்பாடு பாலர் வகுப்பிலிருந்தே ஆரம்பித்து விடுகின்றது. கற்பித்தலுக்குரிய பெருந்தொகையான கணினி மென்பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கற்பித்தலோடு இணைந்த காட்சிகளை வழங்குவதற்கு மட்டுமன்றி, மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கணினிகளின் பயன்பாடு துணை செய்கின்றது.

சமூக ஊடகங்களைப் பார்ப்பதற்கும் சில சமயங்களிலே மாணவருக்கு இடமளிக்கின்றது. ரொபோக்கள், மடிகணினிகள், எலத்திரன் எழுது பலகைகள், எலத்திரன் நூல்கள் முதலியவை வகுப்பறைகளிலே பயன்படுத்தப்படுகின்றன. மாணவர் தாமே இடைவினை கொண்டு தற்கற்றலை மேற்கொள்வதற்கு வாய்ப்புத் தரப்படுகின்றது.

நவீன எண்ணிம சாதனங்களின் வகுப்பறைப் பயன்பாட்டைப் பொறுத்தவரை உலகளாவிய ஒரு பெரும் இடைவெளி தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. அத்தகைய சாதனங்களைப் பயன்படுத்த முடியாத வறிய நிலையில் கோடிக்கணக்கான மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கின்றனர்.

கல்வி வழங்கலில் அனுகூலமான நிலையும், பிரதிகூலமான நிலையும் உலக வெளியில் நீடித்து வருகின்றன.

27- பாடநூல்களின் உபயோகத்துக்குப் பதிலாக **நெகிழ்நூல்களின்** பயன்பாடு சமகாலத்தில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

பாடநூல்கள் "இறுகிய பண்புகளை"க் கொண்டன. அதாவது, ஒரு வகுப்பறையில் பல்வேறு ஆற்றல்களும், திறன்களும் கொண்ட மாணவர் இருக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் பொதுவான உள்ளடக்கத்தையும் பயிற்சிகளையுமே பாடநூல்கள் கொண்டிருக்கும்.

ஆனால் எலத்திரன் நெகிழ்நூல்கள் நெகிழ்ச்சித்தன்மை கொண்டவை. வேறு வேறுபட்ட ஆற்றல்களைக் கொண்ட மாணவர்கள் இடைவினை கொண்டு கற்பதற்கு ஏற்றவாறு நெகிழ்நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

அமைப்புநிலை, உள்ளடக்கநிலை, பயிற்சிகளின் வடிவமைப்பு நிலை, இடைவினை கொள்ளக்கூடிய வெளி என்ற அனைத்திலும் நெகிழ்ச்சித் தன்மைகளை நெகிழ்நூல்கள் கொண்டிருக்கும்.

கல்வித் தொழில்நுட்பத்திலே தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் மாற்றங்கள் புதிய புதிய கண்டுபிடிப்புக்களுக்கு இட்டுச் செல்கின்றன. அந்த வகையில் இடம்பெற்ற ஒரு புதிய சாதனமே நெகிழ்நூல்.

28- குழுநிலையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளல் கூட்டுறவுக் கல்விச் செயற்பாட்டிலே முக்கியத்துவம் பெறுகின்றது.

இத்துறையில் ஆய்வு செய்தவர்களுள் ஜோன்சன் மற்றும் ஜோன்சன் முக்கியமானவர்கள். குழுநிலைக் கற்றலில் பின்வரும் நன்மைகளை அவர்கள் கண்டறிந்தார்கள்.

அ. தனியாளுக்குரிய பொறுப்பியம்

ஆ. நேர்முகமான சுயாதீனம்

இ. நேருக்கு நேரான இடைவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. குழுச் செயல்முறையில் நிகழும் இணக்கம்

உ. குழு ஊடாட்டமும் திறன்மேம்பாடும்.

இத்துறையில் ஆய்வு செய்தவர்களுள் கலாநிதி ரொபேட் சிலவினும் முக்கியமானவர். மாற்றுத் திறன் உடையோர் மற்றும் மெல்லக் கற்போர் ஆகியோரிடத்தும் இந்த முறை அதிக வெற்றியளித்துள்ளது. "குழுவில் உள்ள அனைவருக்கும் வெற்றி" என்பது கற்றலைத் தொடர்ந்து உற்சாகப்படுத்திய வண்ணம் இருக்கும்.

கலாநிதி ஸ்பென்சர்ககனும் இத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். தற்கணிப்பு, சமூகத்திறன், கற்றல் ஆகிய மூன்று இக்கற்றல் வழியாக ஒன்று சேர்ந்த வகையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிநபரை முக்கியத்துவப்படுத்தும் சமகாலக் கல்விச் செயற்பாட்டில் கூட்டுறவு முறை வெற்றியளிக்குமா என்பது கேள்விக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானக் கல்வி

சமகால விஞ்ஞானக் கல்வியில் விஞ்ஞான உள்ளடக்கம், விஞ்ஞான முறை, விஞ்ஞானம் கற்பித்தலியல் முதலியவற்றுடன் சமூக விஞ்ஞானங்களும் உள்ளடக்கப்படுகின்றன. மரபுவழி விஞ்ஞானக் கல்வியில் பௌதிக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம் முதலியவற்றை அடியொற்றிய துறைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. நவீன விஞ்ஞானக் கல்வியில் சமூக விஞ்ஞானம், தொடர்பாடல் விஞ்ஞானம் முதலியவை ஒன்றிணைக்கப்பட்டு வருகின்றன.

வசதி வாய்ப்புமிக்க ஒரு சிலருக்கு மட்டுமே உரியதாக அமைந்திருந்த விஞ்ஞானக் கல்வியைத் தொழிலாளர் மற்றும் ஒடுக்கப்பட்டோருக்குரிய கல்வியாக மார்க்சியம் முன்னெடுத்தது. சமூகத்தின் விளிம்பு நிலையினருக்கு விஞ்ஞானக் கல்வியை விரிவாக்கம் செய்தமை மார்க்சியத்தின் உலகளாவிய பங்களிப்பு. ரூசியாவின் ஒக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து "அனைவருக்கும் விஞ்ஞானக் கல்வி" என்ற கருத்தாக்கம் நடைமுறையை எட்டத் தொடங்கியது.

1957ஆம் ஆண்டில் சோவியத் தனது "ஸ்புட்னிக்" எனப்படும் செய்மதியை விண்வெளிக்கு ஏவியது. அந்த நிகழ்ச்சி ஐ.அமெரிக்காவின் விஞ்ஞானக் கலைத்திட்டத்தின் மறுபரிசீலனையைத் தூண்டியது. அது ஐ.அமெரிக்காவில் மட்டுமல்ல உலகளாவிய முறையில் விஞ்ஞானக் கல்வியின் தரத்தை உயர்த்தும் முயற்சிகளுக்கு வலுவூட்டியது.

விஞ்ஞானக் கல்வியைப் பன்முக நிலைகளில் உலகெங்கும் வளர்க்கும் முயற்சிகள் தோற்றம் பெற்றன. பன்முக நிலைகளும் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விஞ்ஞானக் கல்வியைப் பரவலாக்குதல்.

2. ஆழப்படுத்துதல்.

3. தரநிலை மேம்பாட்டை ஏற்படுத்துதல்.

4. பள்ளிக்கூட ஆரம்பநிலைகளில் இருந்தே விஞ்ஞானக் கல்வியை வளர்த்தெடுத்தல்.

5. பரிசோதனைகளை அடியொற்றி கற்றல் - கற்பித்தலை மேற்கொள்ளல்.

6. விஞ்ஞானத்தை இடைநிலைகளில் கட்டாய பாடமாக்குதல்.

7. விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டுக்கு ஊடகங்களைப் பயன்படுத்துதல்.

8. விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றைத் தொடர்புபடுத்திக் கற்பித்தல்.

9. விஞ்ஞான அருங்காட்சியகங்களையும், கண்காட்சிகளையும் நிறுவுதல்.

10. விஞ்ஞான ஆசிரியர் கழகங்களை நிறுவி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல்.

11. போட்டிகளை நடத்துதல்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பள்ளிக்கூடங்களின் தேசிய கலைத்திட்டத்தில் விஞ்ஞானம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 1972ஆம் ஆண்டுக் கலைத்திட்டத்தைத் தொடர்ந்து அனைத்து மாணவரும் விஞ்ஞானம் கற்கும் ஏற்பாடு உருவாக்கம் பெற்றது.

விஞ்ஞானக் கல்வியில் கட்டுமையியல் *(Constructivism)* என்பது சமகாலத்தில் விதந்து பேசப்படுகின்றது. அறிகை உளவியலில் கட்டுமையியல் உருவாக்கத்துக்கு பியாசே, ஒஸ்பெல், காக்னெ, பூரூனர் முதலியோர் பங்களிப்பு செய்துள்ளனர். ஜேர்ச்கெலி "தனிநபர் கட்டுமை கோட்பாட்டை" *(Personal Construct Theory)* உருவாக்கினார். கட்டுமை உளவியலின் உருவாக்கத்தில் வைகோட்சியின் பங்களிப்பும் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலுடனும் பொருட்களுடனும் கருத்துக்களுடனும் அனுபவங்களுடனும் இடைவினை கொண்டு ஒவ்வொருவரும் அறிவைத் தமது மூளையிலே கட்டுமை செய்து கொள்கின்றனர் என்பதைக் கட்டுமை உளவியல் விளக்குகின்றது. விஞ்ஞானத்தைக் கற்பதற்கும் கற்பிப்பதற்குமான ஆட்சி நிரலை *(Paradigm)* உருவாக்கிக் கொள்வதற்கு கட்டுமை உளவியல் துணை செய்கின்றது.

விஞ்ஞான விளக்கங்களை மாணவர் எவ்வாறு பெற்றுக்கொள்கின்றனர் என்பதைத் தொடர்ச்சியாக தாமே மதிப்பீடு செய்து முன்னேற்றம் பெறும் வகுப்பறையை உருவாக்கிக் கொள்வதற்கும் கட்டுமையியல் துணை செய்கின்றது. கட்டுமை வகுப்பறை "மேதாவி நிலைக் கற்போரை"க் *(Expert Learners)* கொண்ட வகுப்பறையாக இயக்கப்படும்.

கட்டுமைக் கற்றலில் பின்வரும் செயற்பாடுகள் விஞ்ஞானக் கல்வி வகுப்பறைகளிலே மேற்கொள்ளப்படுகின்றன.

1. குறிப்புக்களை வழங்கும் ஒரு வழிக் கற்பித்தல் நிராகரிக்கப்படுகிறது.
2. கற்போர் கல்விச் செயற்பாட்டில் வினையாற்றலுடன் ஒன்றிணைக்கப்படுகின்றனர்.
3. கற்கும் சூழல் மக்களாட்சிப் பண்புடையதாக இருக்கும்.
4. கற்றல் மாணவரை நடுநாயகப்படுத்திக் கட்டமைக்கப்பட்டிருக்கும்.
5. இடைவினை மேற்கொண்டு கற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.
6. ஆசிரியரின் செயற்பாடு உறுவளம் *(Facilitation)* செய்தலாக அமையும்.

ஆசிரியர் மேற்கொள்ளும் செயற்பாட்டில் மூன்றுவிதமான வகிபாகங்களை டேவிட் ஜொனாஸ்ஸென் குறிப்பிட்டுள்ளார்.

1. நடத்தை நிலையிலும் அறிகை நிலையிலம் ஆசிரியர் மாதிரிகை வடிவினராகச் செயற்படல். கற்றல் தொழிற்பாட்டில் ஆக்கத் தெறிப்புள்ளோராய் மாணவரை மாற்றுதற்கு அது துணை செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பயில் எழுகையை (*Coaching*) மேற்கொள்ளல். அதாவது மாணவர் என்ன செய்கின்றனர் என்பதைக் கண்டறிவதற்குத் தூண்டுதல் தமது ஆற்றுகையைப் பகுப்பாய்வு செய்வதற்கு உற்சாகப் படுத்துதல், ஊக்கல் வழங்குதல் முதலியவற்றை மேற்கொள்ளல்.

3. தாவல் கட்டல் (*Scaffolding*) தமது ஆற்றலுக்கும் மேலாக நகர்ந்து செல்வதற்கு உதவிகளையும் அனுசரணைகளையும் கட்டமைப்புக்களையும் உருவாக்குதல் தாவல் கட்டலில் இடம்பெறும்.

கற்பிக்கும் பொழுது முன்னைய அறிவுத் திரட்சியைக் கருத்திலே கொண்டு பாடங்களை வடிவமைத்தலைக் கட்டுமை இயல் வலியுறுத்துகின்றது. ஏனெனில் புதிய அறிவு முன்னைய அறிவுத் தளத்தை அடியொற்றியே கட்டுமை செய்யப்படும்.

சமகாலத்தைய விஞ்ஞானக் கல்வியில் "மீயறிகை" நுட்பங்களின் பயன்பாடு வலியுறுத்தப்படுகின்றது. தாம் எவ்வாறு கற்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளலும் அதனை அடியொற்றிய விசாரணைகளை வளர்த்தலும் மீயறிகை நுட்பத்திலே சிறப்பிடம் பெறுகின்றன. மீயறிகை நுட்பம் பின்வரும் பரிமாணங்களைக் கொண்டது.

அ. கற்றல் ஈடுபாட்டுடன் இணைந்த அறிகைச் செயல்முறையின் மீது செயலூக்கம் மிக்க கட்டுப்பாட்டை மாணவர் கொண்டிருத்தல்.

ஆ. கற்றல் செயற்பணியை எவ்வாறு அணுகுதல் என்பதைப் பிரக்ஞை பூர்வமாகத் திட்டமிடல்.

இ. செயற்பணியை நிறைவேற்றுவதற்குரிய கிரகித்தலை நெறிப்படுத்துதலும் முன்னேற்றத்தைத் தாமே மதிப்பீடு செய்து கற்றலை முன்னெடுத்தலும்.

விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவை நாளாந்த வாழ்வில் மேலும் முன்னேற்றகரமாக இணையத் தொடங்கியுள்ளன. "எண்ணிமயுகம்" (*Digitalera*) தோற்றம் பெற்றுள்ளது. அந்நிலையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பாடங்களாக மட்டும் கற்காது வாழ்க்கையோடு நீக்கமற நிறைந்த ஒன்றிணைப்பாக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானமும் கணிதமும் வேறுபிரிக்க முடியாதவை. கணிதம் "விஞ்ஞானத்தின் அரசி" என்று குறிப்பிடப்படும்.

கணிதம் இன்றி விஞ்ஞானம் இல்லை. விஞ்ஞானக் கல்வியை நவீனப்படுத்தும் வேளை, கணிதக் கல்வியையும் சமாந்தரமாக நவீனப்படுத்தும் முயற்சிகள் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"சுவையூட்டுதல்", "வியப்பூட்டுதல்", "எதிர்ப்பார்ப்பைத் தூண்டுதல்" முதலாம் செயற்பாடுகள் நவீன விஞ்ஞானம் கற்பித்தலில் உள்ளடக்கப்படுகின்றன. பொறிமுறையாக கற்பிக்கும் சலிப்பூட்டும் பழைய முறைகள் கைவிடப்படுகின்றன. அறிகை உளவியலை உள்வாங்கி, எண்ணிமத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாடநூல்களும் இதவடிவங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

"அடுத்த தலைமுறையினருக்கான விஞ்ஞானக் கல்வி" என்ற தலைப்பில் மேலும் முன்னேற்றகரமான கற்றல் கற்பித்தல் முறைகள் உருவாக்கப்படுகின்றன.

அத்தகைய வளர்ச்சிகளினூடே உயர் நிலையான விஞ்ஞானக் கல்வியின் அனுகூலங்களளை சமூக அடுக்கமைவின் உயர்நிலையினரே தொடர்ந்தும் அனுபவித்து வருதல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியற் கல்வி

ஒரு செயலை அல்லது காட்சியைப் புதிய வழியிலும் மாற்று வழியிலும் காண்பதற்குரிய ஏற்பாடுகளைக் கையாளச் செய்தலே அழகியற் கல்வியின் முன்னெடுப்பு. புதியதைக் காண்பதற்கும் கற்பதற்கும், அழகியலை அனுபவிப்பதற்குமுரிய செயற்பாடுகள் அழகியற் கல்வியில் அமைக்கப்படுகின்றன. அவற்றை அடியொற்றி அழகையும், அழகுணர்வையும், பங்குபற்றலையும் தூண்டும் பாடங்கள் கலைத்திட்டத்தில் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

அழகியற் கல்வி உருவாக்கித் தரும் அனுபவங்கள் பின்வருமாறு குறித்துரைக்கப்படுகின்றன.

அ. கலைகளின் வலிமை நேர்நிலையான உளமாற்றத்துக்கு இட்டுச் செல்லும்.

ஆ. அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் பங்குதாரர்களாக மாணவரும் ஆசிரியரும் வளர்ச்சியடைவர்.

இ. புதிய வழிகளிலே சிந்தனைகளையும் அனுபவங்களையும் வெளியீடு செய்யும் ஆற்றல் முகிழ்த்தெழும்.

ஈ. திறந்த வினாக்களை விருப்புடன் எதிர்கொள்ளும் ஆற்றல் வலுவடையும்.

உ. தற்கணிப்பு வளர்ச்சியடைவதுடன் பிறரின் ஆற்றல்களுக்கு மதிப்பளிக்கும் பக்குவம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

ஊ. மனிதத் தொடர்புகளின் அகன்ற வீச்சுக்களை தேடுதலும், கண்டறிதலும் நிகழ வாய்ப்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. அக உணர்வுகளையும் புறஅனுபவங்களையும் மனவெழுச்சி களையும் செழுங்கலவையாக்கும் திறன் வளர்ச்சியுடையும்.

ஏ. அழகுச் சுவையோடு உலக நோக்கும் சமூக நீதியும் ஒன்றிணைந்த தேடல் வலுவடையும்.

அழகியற் கலைகளைக் கற்றலும், அவை தொடர்பான விசாரணைகளை எழுப்புதலும் கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுதலும் சுவைத்தலும் அழகியற் கல்வியில் இடம்பெறுகின்றன. அழகியற் கற்பனைச் செயற்பாடுகள் வழியாக வளர்த்தல் அழகியற் கல்வியின் பிறிதொரு பரிமாணம்.

கற்பனை தழுவிய கற்றலுக்குரிய கொள்ளளவுகள் *(Capacities for Imaginative Learning)* பற்றிய முன்மொழிவுகள் அண்மைக் காலத்தைய அழகியற் கல்விச் செயற்பாடுகளில் விதந்துரைக்கப்படுகின்றன. அக்கொள்ளளவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் வருமாறு:

1. ஆழ்ந்து உற்றுநோக்கல் முன்னெடுப்பு. அதாவது கலையாக்கத்தின் ஒவ்வோர் அடுக்குகளுடனும் இடைவினை கொள்ளல்.

2. புலன்கள் வழியாகவும் மனவெழுச்சிக் கலப்புடனும் திரட்டப்பட்ட அனுபவங்களை பௌதிக நிலையில் பிரதிநிதித்துவப்படுத்தல்.

3. வினாக்கள் வழியாகக் கற்றல் வெளியை அகலப்படுத்துதல்.

4. முன்னைய அனுபவங்களுடன் புதியவற்றை ஒன்றிணைப்புச் செய்தல்.

5. குறித்த கலை வடிவின் கோலங்களை இனங்காணுதலும் அவற்றை வகைப்படுத்துதலும்.

6. பிறரின் பன்முக ஆளுமைக் கோலங்களை விளங்கிக் கொள்ளலும் ஒத்துணர்வை வெளிப்படுத்தலும்.

7. அனுபவத் திரட்டலின் வழியாகக் கருத்தை உருவாக்குதலும், தமது குரலில் அதனை வெளிப்படுத்துதலும்.

8. குறித்த ஒரு செயற்றிட்டத்தை உருவாக்கி மாணவர் தமது அழகியல் ஆளுமைக்கு வடிவம் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தொடர்ச்சியாக மதிப்பீடுகளை மேற்கொள்ளலும் அவற்றிலிருந்து மேலும் எழுபாய்ச்சலை வெளிப்படுத்தலும்.

கலைகளை மேலோட்டமாகக் காண்பதல்ல, அவற்றின் ஆழ்ந்த பண்புகளைக் காணச் செய்தல் அழகியற் கல்வியின் சிறப்பு நோக்கமாகின்றது. மலினமான சுவைத்தலில் இருந்து தரமான சுவைத்தலை நோக்கிய மேம்பாட்டை வளர்த்தெடுத்தல் நவீன வெகுசனப் பண்பாட்டை முறியடிப்பதற்குரிய தேவையாக மேலெழுந்துள்ளது.

கலைகளை மேலோட்டமாகக் காண்பதல்ல, அவற்றின் ஆழ்ந்த பண்புகளைக் காணச் செய்தல் அழகியற் கல்வியின் சிறப்பு நோக்கமாகின்றது. மலினமான சுவைத்தலில் இருந்து தரமான சுவைத்தலை நோக்கிய மேம்பாட்டை வளர்த்தெடுத்தல் நவீன வெகுசனப் பண்பாட்டை முறியடிப்பதற்குரிய தேவையாக மேலெழுந்துள்ளது.

கலை விபரங்களை இறுக்கமானதாக்கி கற்றலைப் பொறி முறையாக்கும் பொழுது, கலை அனுபவம் தூரமாக்கப்படுகின்றது. பரதநாட்டியக் கலை அத்தகைய நிலைக்குச் செல்கின்றதா என்ற கனதியான வினா எழுப்பப்படுகின்றது.

பொறிமுறைக் கற்பித்தல் முறைகளும் பரீட்சைகளும் அழகியல் அனுபவத்தைத் தூரப்படுத்தி வருகின்றன. பொறிமுறையாகக் கற்று பொறிமுறையாக ஒப்புவிக்கும் நிலை, சுவைத்தலை மேலும் தூரப்படுத்துகின்றது. கர்நாடக இசையில் ஒருவர் மேற்கொண்ட கற்பனா சுரஅளிக்கையை அதே வடிவில் இன்னொருவர் பின்பற்றும் பொழுது அது கலையாக அன்றி "உருச் செய்யும் வினையாக" *(Craft)* மாற்றமடைகின்றது. பரதநாட்டியத்தில் எல்லாக்கலைஞரும் ஒரே சஞ்சாரி பாவத்தையே (கற்பனை ஆடலையே) மேற்கொள்ளும் பொழுது அது கலையாக அன்றி உருச் செய்யும் வினையாக மாற்றம் பெறுகின்றது.

அழகியற் கல்வியில் ஏற்படுத்தப்படும் ஒரு முக்கியமான தவறும், அழகை எண்பெறுமானங்களுக்குள் சுருக்க முனைதலாகும். சுவைத்தல் ஒருவரின் அகவயப் பாங்குடனும், மனநிலையுடனும் மனவெழுச்சிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது. அதனை புறவய அளவீட்டுக்குரிய எண்களுக்குள் கொண்டுவருதல் பொருத்தமற்றதாகி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியல் பற்றிய உரையாடலில் முன்வைக்கப்படும் ஒரு முக்கியமான கருத்து வடிவம் "அழகியல் தூரம்" *(Aesthetic Distance)* என்பதாகும். பார்வையாளரின் உணர்வு நிலைக்கும் கலைப் படைப்பின் புனைவு நடப்பியலுக்குமிடையேயுள்ள இடைவெளி அழகியல் தூரம் எனப்படும். பார்ப்போரின் உளநிலை தனித்துவமான நடப்பியலைக் கொண்டது. அதேவேளை கலைப்படைப்பினது புனைவின் நடப்பியலும் தனித்துவமானது. இக்கருத்துவடிவத்தை வில்லியம் பலோ (1912) முன்வைத்தார். ஒருவரின் தன்னிலையில் *(Self)* இருந்து கலைப்படைப்பு வேறுபடுத்திப் பார்க்கும் பொழுது, தூரம் தோற்றம் பெறுகின்றது. ஒருவருக்குரிய நடைமுறைத் தேவைகளும் தனித்துவமான விருப்பங்களும் அந்த இடைவெளியை ஏற்படுத்துகின்றன. இடைவெளியையும் தூரத்தையும் குறைப்பதற்கு எழுத்தாளர்களும் கலைஞர்களும் பல்வேறு நுட்பங்களைக் கையாளுகின்றனர்.

கலைப்படைப்பின் நடப்பியலில் இருந்து பார்வையாளரை மீட்டெடுக்கும் எந்தச் செயற்பாடும் தூரத்தை நீட்டலாகும். நாடகத்தில் கதைப்போக்கினை நிறுத்தி நடிகர்கள் பார்வையாளருடன் பேசும்பொழுது அழகியல் இடைவெளி தூரப்படுகின்றது. நாடக அளிக்கையில் இதனை அடியொற்றிய "தூரப்படுத்தும் விளைவு" *(Distancing Effect)* என்ற கருத்தாக்கத்தை பிரெச்ற் முன்வைத்தார்.

உணர்ச்சி நிலையிலும், ஆழ்மனத் தொடர்பாடல் நிலையிலும் இருந்து பார்வையாளரை விடுவித்து உற்றுணர்வு நிலையில் கலைப்படைப்பை ஏற்றல் அல்லது நிராகரித்தல் அல்லது சிந்திக்கப் பண்ணுதல் முதலாம் செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்லல் தூரப்படுத்தும் விளைவாகின்றது. பிரெச்ற் தமது நாடகங்களில் அந்த நுட்பத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தினார்.

மீ நிலையான புனையம் *(Metafiction)* அல்லது அதீத புனையத்திலும் அழகியல் இடைத்தூரத்தின் நீட்சி மேற்கொள்ளப்படுகின்றது. புனைகதை வாசிப்பினூடே வாசிப்பவர் தாம் யார்? தமது நிலை என்ன? முதலாம் நினைவுகளைத் தூண்டுதல் மீநிலைப் புனையத்தின் இயல்பு. அதாவது கதை உருவாக்கம் கனவுலகத்திலே முற்றுமுழுதாக மூழ்கிவிடச் செய்யாது தடுக்கும் உபாயங்கள் அவ்வகைப் புனையங்களில் இடம்பெறும். ஆங்கிலத்தில் அவ்வகைப் புனைவுகளை எழுதியவர்களுள் வில்லியம் கோல்டன் குறிப்பிடத்தக்கவர். தமிழில் செ.கணேசலிங்கனின் புனைகதைகளில் அந்த இயல்பினைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியலாக்கத்தில் முன்வைக்கப்படும் பிறிதொரு கருத்து "பழக்கமின்மைப்படுத்தல்" *(Defami Liarixation)* சோவியத் திறனாய்வாளர் விக்டர் சிக்லோஸ்கி அந்தக் கருத்தாக்கத்தை முன்வைத்தார். கவிதையின் மொழியானது சாதாரண பேச்சு மொழியிலிருந்து வேறுபடுகின்றது. அத்தகைய மொழி அன்னியமயப்பாட்டினூடாக அழகின் உருவாக்கம் முன்னெடுக்கப்படுகின்றது.

கவின் கலைகள் அழகின் வெளிப்பாடாக மட்டுமன்றி, அறிவின் தூண்டலாகவும் அமையும். அழகும் கருத்தும் சுவைத்தலில் ஒன்றிணைகின்றன. அழகை வெளிப்படுத்தும் வடிவங்களே கவின் கலைகள். மரபுவழியான கவின் கலைகளாக கவிதை, சிற்பம், ஓவியம், இசை, நடனம், கட்டடக்கலை, கூத்து முதலியவை அமைந்திருந்தன. தொழில்நுட்ப வளர்ச்சியும், மனித முயற்சிகளும் புதிய கவின் கலை வடிவங்களைத் தோற்றுவித்துள்ளன. நிழற்படக்கலை, திரைப்படக்கலை, கணினி வரைகலை முதலாம் புதிய வடிவங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

சமூக வளர்ச்சியினூடே நிகழ்ந்த வர்க்க வேறுபாடுகள் கவின் கலை வடிவங்களிலும் செல்வாக்குச் செலுத்தின. கட்டடக்கலை அரசர்களினதும், மேட்டுக்குடியினரதும் தேவைகளையும் சுவைகளையும் அடியொற்றி வளர்ச்சியடையத் தொடங்கின. ஆடல் பாடல் முதலாம் வடிவங்களிலும் அரசர்களையும் மேட்டுக் குடியினரரையும் மகிழ்விக்கும் ஏற்பாடுகளைக் கொண்ட ஆக்கங்கள் ஒருபுறமும், அடிநிலை மாந்தரின் உணர்வுகள் கலந்த ஆக்கங்கள் எதிர்ப்புறமுமாக வளர்ச்சியடையத் தொடங்கின. கவின் கலைகளில் ஏற்பட்ட வர்க்க முரண்பாடு சுவையிலும் நீட்சி கொண்டது.

அரசர் கடவுளரின் வம்சத்தினராகக் கருதப்படுதலும் அவர்களுக்குரிய கலைகள் தெய்விகக் கலைகளாகக் கருதப்படுதலும் இந்திய மரபில் ஆழவேரூன்றத் தொடங்கியது. நாடகம் "ஐந்தாம் வேதமாக"க் கருதப்படுதல் அந்தத் தொடர்பை தெளிவுபடுத்துகின்றது. இந்திய அழகியலில் சிறப்பாக வலியுறுத்தப்படும் ரஸம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்வங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. ரஸங்கள் பாவங்களால் உருவாக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ரஸ உருவாக்கல் தொடர்பான ஆற்றுகை வேறுவேறுபட்ட பாணிகளால் வெளிப்படுத்தப்படுதல் முக்கியமான அவதானிப்புக்குரியது. அதாவது, பிரதேச மற்றும் சமூக அடுக்கமைவு வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு வெளிப்பாட்டு வடிவங்களும் வேறுபடுதல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியல் கல்வியில் ஒரு முக்கிய எழுபொருளாக அமைவது மார்க்சிய அழகியல். அது நீண்ட கருத்தாடல்களுடன் விரிவு பெற்று வருகின்றது. லனர் சார்க்கி, மொரிஸ், அடோர்னோ, பிரெச்ற், மார்கியுஸ், பென்ஜமின், கிராம்சி, லுகஸ், எக்லிடன், ஜேம்சன், அல்துஸ்ஸர், மேர்லியோ பொன்டி, வில்லியம்ஸ், பார்த். கொவெல் முதலாம் பல சிந்தனையாளர்கள் மார்க்சிய அழகியற் கருத்து வளர்ச்சியிலே பங்கு கொண்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ்ச் சூழலில் பேராசிரியர் நா.வானமாமலை, பேராசிரியர் க.கைலாசபதி பேராசிரியர் கா.சிவத்தம்பி முதலியோரின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுப் பொருண்மிய தருக்கத்தை பண்பாடு, கலைகள், அழகியல் முதலானவற்றுக்குப் பிரயோகித்தல் மார்க்சிய அணுகுமுறையில் முன்னெடுக்கப்படுகின்றது. சமூக பொருளாதார நிலைவரங்கள் மனித உணர்வுகளைத் தீர்மானிப்பதிலே வலுவான விசைகளாகவுள்ளன. அவற்றை அடியொற்றியே மனித அழகியல் ஆக்கங்கள் முகிழ்த்தெழுகின்றன.

சமூக பொருளாதாரத் தளத்துக்கும் இலக்கியத்துக்குமுள்ள தொடர்பு வாய்பாடு போன்றதல்ல. ஆழ்ந்து நுணுகி நோக்குதல் வாயிலாகவே அந்தத் தொடர்புகள் புலப்படும்.

சமூக மாற்றம் அழகு பற்றிய நோக்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. நிலமானிய சமூகப் பின்புலத்தில் நிறைவு, பூரணத்துவம், சமச்சீர்மை, செம்மை, அலங்கார இணைப்புக்கள் அழகை உருவாக்கும் சேர்மானங்களாகக் கருதப்பட்டன.

பொருளாதார உறவு முறைகளில் ஏற்பட்ட மனித அன்னிய மயப்பாடு சமநிலைத் தளம்பல், உடைவு, சிதைவு, அலங்கார நிராகரிப்பு முதலியவற்றிலும் அழகைக் காணலை உருவாக்கியது. சிற்றியல் வாசிகள் *(Minimalist)* அலங்காரங்களைத் தவிர்த்தல் வாயிலாக அழகின் எழுகையைக் காண்கின்றனர். ஆடம்பரம் வேண்டாம் "சிற்றளவே அழகு" என்பது அவர்களின் நோக்கு.

கலைகள், அழகு, சுவைத்தல் முதலியவை தொடர்பான முன்னைய கருத்துக்களுக்கு எதிரானவையும் மாறுபாடானவையுமான முன்மொழிவுகளும் அணுகுமுறைகளும் எழுச்சிகொள்ளத் தொடங்கின. முதலாம் உலகப் போரின் கொடூரங்களுக்கு எதிரான தீவிர இடதுசாரிக் குரலாகவும் கலைமுன்னெடுப்பாகவும் அழகியல் ஆக்கமாகவும் "டாடா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இயக்கத் தோற்றம் பெற்றுள்ளது. எதிர்கலைப் பண்பாட்டு இயக்கமாக அது மேலெழுந்தது.

மார்ஸல் டக்காம் 1917 ஆம் ஆண்டில் உருவாக்கிய "நீரூற்று" *(Fountain)* என்ற சிறுநீர்க்கழிப்புக் கோப்பையை முதன்மைப்படுத்தும் ஆக்கம் எதிர்க்கலைப்பண்பை அடியொற்றிய அழகியலை வெளிப்படுத்தியது. அந்த ஆக்கத்தில் அவர் பதித்த *R.Mutt* என்ற கையெழுத்து பலபொருள் கொண்டது. அவற்றுள் ஒரு முக்கியமான பொருள் "வறுமை" என்பதாகும்.

பின்னைய நவீனத்துவம் உனவுகள், சிதைவுகள், துண்டங்களின் ஒட்டுதல் என்ற வகையான அழகியலை முன்வைக்கின்றது. மாற்றுவகை அழகியல், எதிர் அழகியல் முதலாம் கருத்துக்கள் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. கலை வடிவம் ஒன்றுக்கு நிரந்தரமான கருத்தோ பொருளோ இல்லை என்பது அவர்களின் முன்மொழிவு. உயர்கலை மற்றும் வெகுசனக் கலை என்ற வேறுபாட்டினையும் அவர்கள் நிராகரிக்கின்றனர்.

அழகியற் சிந்தனை வளர்ச்சியினூடே நுண்கலைப் பாடங்களை ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைகளிலே கற்பிப்பதற்குரிய ஏற்பாடுகளும், கற்பித்தல் முறைகளும் முன்னேற்றம் பெறத் தொடங்கியுள்ளன. முன்பள்ளிகளில் இருந்தே அழகியற் பாடங்களை ஒன்றிணைந்த முறையிலே கற்பிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அழகியற் பாடம் இன்றி, பள்ளிக்கூடங்களிலே சமநிலைக் கலைத்திட்டத்தை உருவாக்க முடியாது. சமநிலை ஆளுமை உருவாக்கத்திலும் அழகியற் பாடங்கள் பங்கு கொள்கின்றன. சமகாலச் சூழலில் மாணவருக்கு ஏற்படும் பதகளிப்பு மற்றும் உளநெருக்கீடுகளைத் தணித்துக் கொள்வதற்கும் அழகியல் அனுபவங்கள் துணை செய்யும்.

அழகியற் பாடங்களை அடியொற்றிய வேலை வாய்ப்புக்கள் அருகிக் காணப்படும் நிலையில் அவை வேண்டப்படாத பாடங்களாகக் காணப்படும் நிலை வளர்முக நாடுகளிலே காணப்படுகின்றது. மாணவர் பாடத் தெரிவுகளில் பொருண்மியக் காரணிகளே அதீத செல்வாக்குச் செலுத்துதல் மீண்டும் மார்க்சியத்தையே நோக்கச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகக் கல்வியின் நவீன கோலங்கள்

விரைந்து தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் உலகமயமாதலும், பொருண்மிய நடவடிக்கைகள் அனைத்திலும் ஊடுருவி நிற்கும் பல்தேசிய நிறவனங்களின் கோரிக்கைகளும் உயர் கல்விச் செயற்பாடுகளிலே நேரடியான தாக்க விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. அவற்றின் விளைவாக மரபு வழியான பட்டப் படிப்பும் பாடநெறிகளும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இளைஞரின் அமைதியின்மையும் எதிர்த்துலங்கலும் கல்விச் செயற்பாடுகளுடன் தொடர்பு படுத்திப் பார்க்கப்படும் நிலையில் உயர்கல்விச் சீர்திருத்தங்கள் முன்னுரிமை பெறத் தொடங்கியுள்ளன.

உயர்கல்விப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை வளர்முக நாடுகள் தனித்துவமான நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளன. அவை:

1. உயர்கல்வியிலே பங்குபற்றும் மாணவரின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் கட்டமைப்பு வசதிகள் வளர்ச்சியடையவில்லை.

2. பெருக்கெடுத்துவரும் பட்டதாரிகளுக்கு தொழில் நிலையில் ஈடுகொடுக்கும் வண்ணம் பொதுத் துறைகளும் தனியார் துறைகளும் வளர்ச்சியடையவில்லை.

3. உலகத் தரத்துக்கு ஈடுகொடுக்கக் கூடியவாறு அதிநவீன ஆய்வு கூடங்களையும் தரநிலையில் உன்னதங்களை எட்டிய ஆசிரிய வளங்களையும் பெறமுடியாதுள்ளது.

4. பணம் கொடுத்துக் கற்கும் கற்கை நெறிகளின் உருவாக்கம், சமூகத்தில் வாய்ப்பு வசதி கொண்டவர்களுக்கே மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுகூலம் வழங்குகின்றன. பொருளாதார விளிம்பு நிலையினர் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

5. பல்கலைக்கழகத்தின் உள்ளமைந்த கற்கை நெறிகளுக்கிடையே அதிக வேறுபாடுகள் தோற்றம் பெற்றிருத்தல். அதாவது உலகநிலைவரங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் தரநிலையில் உச்சங்களை நோக்கி நகரும் துறைகளும் இருக்கின்றன. அதேவேளையில் தரநிலையில் பின்தங்கியவாறு தளர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் துறைகளும் உள்ளன. இத்தகைய துறைகளால் உருவாக்கப்படும் பட்டதாரிகளே நவீன தொழிற்சந்தைகளுக்கும் சமூகச் சவால்களுக்கும் ஈடுகொடுக்க முடியாதுள்ளனர்.

6. அறிவு நிலையிலும் ஆய்வு நிலையிலும் தரநிலையிலும் தொடர்ந்து முன்னேற்றங்களை எட்ட முடியாது தேங்கி நிற்கும் விரிவுரையாளர்கள் நிரந்தரமாகத் தொழில் புரியக் கூடிய வாய்ப்புக்கள் மூன்றாம் உலக நாடுகளிலே காணப்படுகின்றன. நிரந்தர நிலைக்குள் நுழைந்து விட்டால் ஆய்வின் உன்னதங்க ளையோ கற்பித்தலில் உன்னதங்களையோ எட்டாது தொடர்ந்து அவர்கள் பதவியில் நீடித்துக் கொண்டிருக்கலாம்.

7. கற்றல் கற்பித்தலில், நெட்டுருச் செய்து ஒப்புவிக்கும் "வங்கி முறைமை"யே *(Banking System)* தொடர்ந்த வண்ணமுள்ளது. உற்றறி சிந்தனை *(Critical Thinking)* கூட்டாக இணைந்து தொழிற்படல், புத்தாக்கச் சிந்தனை, பட்டுத் தெறிக்கும் சிந்தனை முதலியவை வளர்க்கப்படாத புலமை வறுமையும், புலமைச் சோம்பலும் தொடரும் நிலையே காணப்படுகின்றது.

8. ஆய்வுகள் ஒரே வகையானவையாக ஒன்றைப் பின்பற்றிச் செயற்படுத்தும் நிலையே பெருமளவிற் காணப்படுகின்றன. புதிய துறைகள், புதிய தேடல்கள், புத்தாக்கங்களை நோக்கிய நகர்ச்சிகள் மிகமிக அரிதாகவே இடம்பெறுகின்றன.

9. உலக மயமாக்கல், தாய்மொழிக் கல்விச் செயற்பாடுகள் மீது தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. தாய்மொழியிலே கற்பிக்கத்தக்க வளங்கொண்ட பாடங்களைக்கூட ஆங்கிலத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன் அப்பாடங்களில் ஆய்வுகளை ஆங்கில மொழியிலே செய்யுமாறும் மாணவர் வலியுறுத்தப்படுகின்றனர்.

10. பல்கலைக்கழக நிர்வாகத்திலே நிகழும் குறுநோக்கு அரசியலின் தலையீடுகளால், தகுதி மிக்கோர் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுதலும், அதனால் கல்வியின் பண்புநிலை ஏற்றமும் தரமும் பாதிக்கப்படுதல் தவிர்க்க முடியாதவையாய் உள்ளன.

மூன்றாம் உலகநாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் பல்கலைக்கழக முறைமை மேலைத்தேய மாதிரிகையை அடியொற்றியது. சமூகத்தின் உயர் வகுப்பினருக்கு ஏற்ற வகையிலேதான் மேலைத்தேயப் பல்கலைக்கழக மாதிரிகை உருவாக்கம் பெற்றிருந்தது. அந்த மாதிரிகையை மூன்றாம் உலக நாடுகள் எதுவித மாற்றங்களுமின்றி அப்படியே பின்பற்றத் தொடங்கின. அந்நிலையானது மூன்றாம் உலகின் மேட்டுக்குடியி னருக்கே சாதகமாக அமைந்தது. இன்றுவரை மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் முதலாம் பாடத் துறைகளில் சமூகத்தில் அனுகூலம் மிக்கோரே ஒப்பீட்டளவிலே கூடுதலாகக் கற்பதுடன் அவற்றின் நன்மைகளையும் அனுபவிக்கின்றனர். அதாவது, சமூக ஏற்றத் தாழ்வுகளை மீளாக்கம் செய்வதில் பல்கலைக்கழகங்கள் கணிசமான பங்களிப்பைச் செலுத்துகின்றன.

சமகாலத்தைய பல்கலைக்கழக முன்னுரிமைகளாகப் பின்வருவன இடம்பெறத் தொடங்கியுள்ளன.

அ. அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்கப்படக்கூடிய அணுகு வழிகளை *(Access)* இயன்ற அளவு முன்னெடுத்தல்.

ஆ. தொழில் உலகுக்கும் பொருண்மிய வளப்பயன்பாட்டுக்கும் பொருத்தப்பாடு *(Relevance)* கொண்டதாக கற்கை நெறிகளை வடிவமைத்தல்.

இ. அனைத்துலக தொழிற்சந்தைக்கு முகம் கொடுக்கக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குதல். வேற்றுநாட்டு மாணவரை ஈர்க்கும் முயற்சிகளை முன்னெடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. உயர்நிலையான பல்கலைக்கழகங்களுடன் கூட்டிணைப்புக்களை ஏற்படுத்துதல்.

உ. உயர்கல்வியில் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்துதலும், உயர்கல்வியைத் தனியார் மயப்படுத்துதலும்.

அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்கக்கூடிய வகையில் நேரிணைப்புடன் கூடிய இணைய வழியான கற்கைநெறிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் செயல்முறைகளை அதிக அளவிலே கொண்ட கற்கை நெறிகள் அந்த முறையில் உள்ளடக்கப்படவில்லை.

தொழில்களோடு இணைந்த கற்கை நெறிகளை உருவாக்குதலும், தொழில் வழங்குவோரை ஈடுபடுத்துதலும் *(Employer Engagement)* என்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் அவற்றின் அனுகூலங்கள் விரிவடையவில்லை. ஒரு சிலரே அவற்றின் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

பல்கலைக்கழகங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் தரமேம்பாட்டு நடவடிக்கைகள் எதிர்பார்த்த இலக்குகளை எட்டியுள்ளனவா என்பது கேள்விக்குரியது. தனித்துப் பாடத்திட்டங்களையும், மதிப்பீட்டு முறைகளையும் மாற்றியமைப்பதால் மட்டும் தர உச்சங்களை எட்ட முடியாது. பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய முழு நிறுவனத்துடனும் இணைந்த செயற்பாடே தரமேம்பாட்டு நடவடிக்கையாகும்.

"தரவளச் செழுமை தருதல்" *(Quality Enhancement)* என்று சொல்லாடலும் பயன்படுத்தப்படுகின்றது. நிறுவனம் ஆளணியினரின் வினைத்திறன், புலமையாளர் தரம், கற்றல் கற்பித்தல் தரம், வளங்களின் தரம், மதிப்பீடுகளின் தரம், பின்னூட்டல்களின் பண்பு நிலை ஏற்றம் என்றவாறு பல்வேறு கூறுகளின் ஒன்றிணைப்பால் தரச் சிறப்பு முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. தரத்தை முகாமை செய்தல் மூன்று முக்கியமான பரிமாணங்களைக் கொண்டது. அவை:

அ. தரக் கட்டுப்பாடு: கல்விச் செயல்முறையின் அனைத்துக் காரணிகளையும் மீளாய்வுக்கு உட்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. தரவழங்கலின் உறுதிப்பாடு: தரவழங்கல் எட்டப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடுகளுக்கு உட்படுத்தி உறுதிப்படுத்திக் கொள்ளல்.

இ. தரமுன்னேற்றம்: மேலும் முன்னேற்றங்களை வருவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

மூன்றாம் உலகப் பல்கலைக்கழகங்களின் தர முன்னேற்றத்தைப் பொறுத்தவரை கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்குமிடையே தொடர்ந்தும் இடைவெளி விரிசல்கள் காணப்படுகின்றன.

தரநிலையில் அரச பல்கலைக்கழகங்களைக் காட்டிலும் தனியார் பல்கலைக்கழகங்கள் மேம்பட்ட நிலையில் செயற்படுவதாலும், அவை தொழில் நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டித்தலினாலும் அங்கு பயில்வோர் உடனடி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்கின்றனர். அதனால் அரச பல்கலைக்கழகங்களிலே பயிலும் மாணவர் தனியார் பல்கழலைக்கழகங்கள் தொழிற்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். வெளிநாடுகளின் தரம்மிக்க பல்கலைக்கழகங்களின் கிளைகள் திறக்கப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து இயக்கங்களில் ஈடுபடுகின்றனர்.

புலமைச் சூழல் நிலைவரம் பல்கலைக்கழகங்கள் மாணவரிடையே உளநெருக்கீடுகளையும் கொந்தளிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றன. கவர்ச்சியற்ற கற்பித்தல் முறைகளும், புலமை நிர்வாகக் குறைபாடுகளும், பக்கச் சார்புகளும் மாணவரிடையே மனமுறிவுகளை ஏற்படுத்துகின்றன.

சமூகத்தின் இயல்பைப் பிரதிபலிக்கும் ஒரு நிலையமாக இருப்பது பல்கலைக்கழகம். சமூக ஏற்றத் தாழ்வுகள், முரண்பாடுகள், சமூகப் போராட்டங்கள் முதலியவை இயல்பாகவே மாணவரின் செயற்பாடுகளிலே நீட்சிகொள்ளும். பல்கலைக்கழகப் போராட்டங்கள் அதிகாரத்தினால் அடக்கி ஒடுக்கப்படும் பொழுது, சமூகத்தின் விளிம்புநிலை மாணவரே அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

எதிர்காலத் தொழில்கள் பற்றிய நம்பிக்கையைத் தராத கற்கை நெறிகளைப் பயிலும் மாணவரிடத்து நடத்தைக் குழப்பங்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது. தொழில் சார்ந்த கற்கை நெறிகள் மற்றும் தொழில்சாராத கற்கை நெறிகள் என்ற இருமை நிலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகக் கல்வியில் வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளன. தொன்மையான பல்கலைக்கழகங்கள் அறிவுக்கான தேடலையே முதன்மைப்படுத்தின. அப்பல்கலைக்கழகங்களிலே பயின்றோர் சமூக உயர்மட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருந்த நிலையில் தொழில் பெறல் முதன்மை பெற்றிருக்கவில்லை. தொழிற் புரட்சியின் பின்னர் அந்த நிலை மாற்றம்பெறத் தொடங்கியது.

இன்றைய நிலையில் பல்கலைக்கழகங்கள் தொழில் பெறுவதற்கு வழியமைக்கும் நிறுவனங்களாக மாறிவிட்டன. தொழிற்சந்தையிலே காணப்படும் உறுதி குன்றிய குழப்பங்களும், தளம்பல்களும் மாணவரின் உளநிலையைப் பாதிப்படையச் செய்கின்றன.

அனைத்து நாடுகளில் உயர்கல்வி பெறுவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. அதனோடு இணைந்த புதிய பிரச்சினைகளும் இளைஞரிடையே தோற்றம் பெற்று வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் தர உறுதிப்பாடு

கல்வித் தரத்தை உறுதிப்பாடு செய்தல் *(Quality Assurance)* என்பது சமகாலத்தில் அதிக அளவில் எடுத்துரைப்புக்கு உள்ளாகும் பொருளாகவுள்ளது. தரம் பற்றிய சிந்தனை மனித வரலாற்றில் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது. தரமான கருவிகளின் உருவாக்கமும் அவற்றின் வழியாகச் செயற்பாடுகளின் முன்னேற்றமும் அனுபவ வழியாகக் கண்டறியப்பட்டன.

தமிழர் மரபில் "சங்கப்பலகை" என்ற எண்ணக்கரு இலக்கியங்களின் தர உறுதிப்பாட்டைக் குறித்து நின்றது. சொல்வழு அல்லது பொருள்வழு ஆகியவை இடம்பெறாதிருக்கும் நிலையில் இலக்கியம் தரமுடையதாகக் கணிக்கப்பட்டது.

தவறுகளைக் கண்டறிதல், தவறுவராது தடுத்தல் ஆகிய இரண்டு செயற்பாடுகளும் தர உறுதிப்பாட்டை நோக்கிய நகர்வாக மனித அனுபவங்களில் இருந்து தோற்றம் பெற்றன.

தொழிற்புரட்சியுடன் தொழிற்பிரிவும் பொறிகளின் பயன்பாடும் அதிகரிக்கத் தொடங்கின. குறித்த பொருள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இணைக்கும் முறை தோற்றம் பெற்றது. அதாவது ஒரு பொருளின் உருவாக்கம் பலரின் செயற்பாடுகளிலே தங்க வைக்கப்பட்டது. அந்நிலையில் தர உறுதிப்பாட்டில் "மேற்பார்வை" என்பது முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. தொடர்ந்து மேற்பார்வையின் முக்கியத்துவம் கல்வி நிலையங்களிலும் உணரப்படலாயிற்று.

தரநிர்ணயத்துக்கு புள்ளியியலைப் பயன்படுத்தல் அறிவு வளர்ச்சியோடு மேற்கிளம்பலுற்றது. அகவய மற்றும் புறவய தரவுகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் முன்னேற்றங்களை நோக்கி நகர்வதற்குரிய "புள்ளியியல் கட்டுப்பாடு" *(Statistocal Control)* வளர்ச்சி பெறத் தொடங்கியது.

ஒன்றினுடைய தரம் அதனை உருவாக்குதலோடு தொடர்புடைய அனைத்து உறுப்புக்களுடனும் தொடர்புபட்டிருத்தலால், அனைத்தையும் உள்ளடக்கிய தரமுகாமைத்துவம் *(Total Quality Management)* பற்றிய செயற்பாடுகள் வளர்ச்சியடையத் தொடங்கின.

வெகுசனக் கல்வி வளர்ச்சியோடு பள்ளிக்கூடங்களின் செயற்பாட்டுத் தரத்தைக் கண்காணிப்பதற்கு பாடசாலை உள்நோக்குனரை *(Inspector)* நியமிக்கும் முறைமை தோற்றம் பெற்றது.

கல்வியின் தர முன்னேற்றம் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இன்று வலியுறுத்தப்படுகின்றது.

அ. கற்போரின் தரம் அதாவது, அவர்களின் உடல், உள மற்றும் மனவெழுச்சி மேம்பாடு

ஆ. கற்றல் சூழலின் தரம் அதாவது, மாணவர் இடைவினை கொள்ளும் பௌதிக சூழல் ஏற்புடையதாக இருக்கும் நிலையானது கற்றல் மேம்பாட்டை வலுவுடையதாக்கும். வகுப்பறையின் அளவு, பாதுகாப்பான சூழல், ஆசிரியரின் இங்கிதமான நடத்தை, வேதனைத் திணிப்பு அற்றநிலை முதலியவை இப்பிரிவில் அடங்கும்.

இ. தரமான உள்ளடக்கம்: இது கலைத்திட்ட ஏற்பாட்டைக் குறிக்கும். தரத்தை முதன்மையாகக் கொண்ட கலைத்திட்டம், மாணவரை நடுநாயகப் படுத்தும் செயற்பாடுகள் முதலியவை இப்பிரிவில் இடம்பெறும்.

ஈ. தரச் செயல்முறை: ஆசிரியர் வினையாற்றல், தரமேம்பாட்டை உள்ளடக்கிய கற்றல் கற்பித்தற் செயற்பாடு, ஆசிரியருக்குரிய பின்னூட்டல் பொறிமுறைகள், ஆசிரியரின் வேலை நிலைவரம், ஆசிரியருக்குரிய நிர்வாக ஆதரவு, பன்முக நிலைகளிலே மாணவரை அணுகுதல் முதலியவை இப்பிரிவில் இடம்பெறும்.

உ. தரவெளிப்பாடுகள் *(Quality Outcomes)* பாட அடைவுகள், கணிப்பீட்டு முறைகள் தேசிய தரநிர்ணயங்களை எட்டியுள்ளனவா என்பதைக் கண்டறிதல், தரவெளிப்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக மாணவரிடத்தும் பெற்றோரிடத்தும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் முதலியவை இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது.

ஊ. அனைத்தையும் ஒருங்கிணைத்தல். கல்வியின் தரஉறுதிப்பாடு பல காரணிகளிலே தங்கியுள்ளமையால் அவை அனைத்தையும் ஒருங்கிணைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஒரு கல்வி நிறுவனத்துக்குரிய பெறுமானமும் மதிப்பும், கௌரவமும், அந்த நிறுவனம் மேற்கொள்ளும் தரமேம்பாட்டு நடவடிக்கைகளில் தங்கியுள்ளது. மாணவரின் அறிகை வளர்ச்சி, ஆக்கத்திறன் மற்றும் சமூகத்திறன் மேம்பாடு, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் முதலியவை தரமேம்பாட்டு இலக்குகளில் முக்கியமானவை.

சிறந்த கற்றல் கற்பித்தலிலே நாட்டின் வாழ்க்கைத் தரம் மட்டுமல்ல நாட்டின் எதிர்காலமே தங்கியுள்ளது. பாடங்களை உயிர்ப்பு நிலையில் இயக்குதல் வேண்டும். அந்தச் செயற்பாடு அனைத்து மாணவரையும் தழுவிச் செல்லல் வேண்டும். எந்த மாணவரும் பின்தங்க இடமளிக்கப்படலாகாது.

உயர்கல்வியைப் பொறுத்தவரை "தரஉறுதிப்பாட்டு முகவர்" *(The Quality Assurance Agency)* என்பது உருவாக்கப்பட்டுள்ளது. அது ஒரு சுயாதீனமான நிறுவனம். உயர்கல்வியில் தரத்தை நெறிகை செய்யும் பொருட்டு ஐக்கிய ராச்சியத்தில் அது உருவாக்கப்பட்டுள்ளது.

அந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தரக் கோடலில் *(Quality code)* பின்வருவன உள்ளடக்கப்பட்டுள்ளது.

1. பொருத்தமான வழிகாட்டலை மேற்கொள்ளலும் பாடங்களின் அடைவை எட்டும் தளக்குறியை *(Bench Mark)* நிர்ணயித்தலும்.
2. கற்கை நெறிகள் பற்றிய நம்பிக்கையான தகவல்களைத் தருதல்.
3. தரம் தொடர்பான மாணவர் அனுபவங்களை அறிதலும் தரச் செயற்பாடுகளை வளம்படுத்துதலும்.
4. கற்கை நெறிகளைத் திட்டமிடுதலும் அனுமதி நிபந்தனைகளை வகுத்தலும்.
5. வினைத்திறன் மிக்க கற்பித்தலும் கற்றல் ஆதரவும்.
6. உரிய நேர மதிப்பீடும் பின்னூட்டலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நம்பத்தகு புறநிலைப் பரீட்சைகள்

8. பிறஉயர் கல்வி நிலையங்களுடன் தர மேம்பாட்டு நிலையில் இணைவு கொள்ளல்

9. மாணவர் கருத்துக்களை அறிதலும் உடனடி ஆக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்

உலகமயமாதலும், தொழில்முறைகளில் நிகழும் மாற்றங்களும் சமூக நெருக்கீடுகளும் கல்வியிலே தரம் பற்றிய உறுத்தல்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. அந்நிலையில் கல்வி நிறுவனங்களின் பொறுப்பியம் *(Fashion)* வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளது.

கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவோர் ஒவ்வொருவரதும் வகிபாகங்கள் தரமுன்னெடுப்பில் வலியுறுத்தப்படுகின்றன. அதனூடே பொறுப்புக்களும் வலியுறுத்தப்படுகின்றன. அவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. தரம் என்பது அனைத்து மட்டங்களிலும் அனைத்துச் செயல்முறைகளிலும் வலியுறுத்தப்படுகின்றது. அவற்றினூடே தொடர்ச்சியான மதிப்பீடுகளும் பின்னூட்டல்களும் உருவாக்கப்படுகின்றன.

கல்வியின் தர உறுதிப்பாடு தொடர்பான விவாதங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விவாதங்களில் இருந்து மேற்கிளம்பும் ஒரு முக்கியமான கருத்து, தரம் பற்றிய திட்டவட்டமான வரைவிலக்கணத்தைத் தரமுடியாது என்பதாகும்.

தரம் என்பது கட்டுமானக் குலைப்புக்கும் *(Deconstruction)* மீள் வாசிப்புக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளது. மேற்பார்வை என்ற பொறிக்குள் தரம் சிக்கவைக்கப்பட்டுள்ளது. அதேவேளை சமகாலக்கல்வியில் அதிகம் பதிலளிக்கப்படாத எண்ணக்கருவாக தரம் அமைந்துள்ளது. செயற்படுவோருக்கும் மேற்பார்வை செய்வோருக்குமிடையே இடைவெளிகள் தோன்றியுள்ளன. தரம் என்பது **சுமையாக** மாற்றப்பட்டுள்ளது.

தொழில் வழங்கும் நிறுவனங்கள் குறிப்பிடும் தரத்துக்கும், புலமையாளர் குறிப்பிடும் தரத்துக்குமிடையே வேறுபாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. தரம் என்பது தனிமனித விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டது. தொழில் நிறுவனங்களின் விருப்பமும் தேவையும் மட்டும் தரமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறையில் "தரப்புரட்சி" என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. தரப்புரட்சி என்பது உளவியல் தழுவாத செயற்பாடாகவும் மாற்றம் பெற்று வருகின்றது. அறிவு வளர்ச்சிக்கு அனுசரணையற்ற வேண்டத்தகாத அழுத்தங்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

தர அடிப்படையில் கல்வி நிலையங்களை வரிசைப்படுத்தும் செயற்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. தரப்படுத்தற் செயற்பாட்டின் வழியே வர்க்க இயல்பும் வெளிப்பட்டுள்ளது. அதாவது, சமூகத்தில் மேல்தட்டு வகுப்பினர் பயிலும் கல்வி நிலையங்கள் தர வரிசையில் முன்னணியில் இருத்தல், தரத்துக்கும் வர்க்கத்துக்குமுள்ள தொடர்பைக் காட்டுகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தை நிர்ணயிப்பதில் ஆய்வுகள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. "பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆய்வு" என்ற நிலை பல்கலைக்கழகங்களிலே வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது பொறிமுறையான செயற்பாடுகளே அங்கு பெருமளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆக்க மலர்ச்சியுடன் கூடிய புதிய கண்டுபிடிப்புக்களோ, தேடலில் எழுபாய்ச்சல் *(Leap)* களோ அத்தகைய ஆய்வுகளிலே பெருமளவிலே காணப்படுதல் இல்லை. இருப்பவற்றைத் துல்லியமாக விளக்குவதோடு ஆய்வுகள் நிறைவடைந்து விடுகின்றன. பட்டத்தை ஈட்டிக் கொள்வதற்கு அதுவே போதுமானது.

தரம் பற்றிய கருத்தாடல்கள் தரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அடிப்படையானவை. கல்வியின் உள்ளீட்டுக்குரிய பெறுமதியானதும், உயர்நிலையானதுமான வெளியீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் மனித ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கும் தரமுன்னெடுப்பு அடிப்படையானது.

கல்வித் தரம் வீழ்ச்சியடையும் போது அது சமூக முன்னேற்றத்தின் வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லும். கல்வித் தரம் என்பது தனித்து கல்வி நிலையங்களின் செயலாற்றுகையில் மட்டும் தங்கியிருப்பதில்லை. நூல்கள், சஞ்சிகைகள், நாளேடுகள், உரையரங்குகள், கருத்தாடல்கள், சமூக நிறுவனங்கள் என்ற அனைத்தும் தர உருவாக்கத்தில் பங்கு கொள்வதை வலியுறுத்த வேண்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமகால வாசிப்புப் பண்பாடு

எழுத்து உலகத்திலே விருப்புடன் உறவாடுதல் "வாசிப்புப் பண்பாடு" என்பதில் அடங்கும். நூல்களும், சஞ்சிகைகளும், நாள் ஏடுகளும் வாசிப்புப் பண்பாட்டின் ஆதாரங்களாகவுள்ளன. அறிவைப் பெருக்குதல், தகவலோடு உறவாடுதல், மகிழ்ச்சியான பொழுதுபோக்கு, பயனுள்ள கருத்தாடல்கள் முதலியவை வாசிப்புப் பண்பாட்டின் பெறுபேறுகள்.

வாசிப்புப் பண்பாட்டில் இணைந்து கொள்ளாதோர், நவீன உலகிலே காலாவதியான நிலையை அடைந்தோராகின்றனர். வாசிப்பு மட்டத்தின் உயர்ச்சி, சமூக பொருளாதார மேம்பாட்டை வெளிப்படுத்தும் குறிகாட்டியாகக் கொள்ளப்படுகின்றது.

வாசிப்பு ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்குரிய வழிமுறைகள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றன.

அ. விருப்பமானவற்றை வாசிக்க வேண்டும். அதிக வாசிப்பு ஒன்றிணைந்த மேம்பாட்டுக்கு இட்டுச் செல்லும்.

ஆ. ஒருவர் தமது அறிகை மட்டத்துக்குரிய வாசிப்பைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். வாசிப்புத் தொடர்ச்சியின் போது அறிகை மட்டமும் வாசிப்பு மட்டமும் தொடர்ச்சியான அதிகரிப்பை வெளிப்படுத்தும்.

இ. வாசிப்புத் தொடர்ச்சியின் போது, கனதியான, ஆழமான விடயங்களை வாசிக்கும் செயற்பாட்டை நோக்கி நகர்தல் ஏற்படும். அந்த நிலை மாற்றம் ஆழ்ந்த அறிவுப் புலத்துக்கு இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. வாசிப்புப் பொருளோடு இணைந்த கற்பனையை வளர்த்தலும் வினாக்களை எழுப்புதலும் அறிவு நிலையிலே எழுபாய்ச்சலாக அமையும்.

உ. வாசிக்கும் பொழுத விளங்காத கலைச் சொற்களை எதிர்கொள்ள நேரிட்டால், அவற்றை அறைகூவலாக ஏற்று பொருள்தேடும் புலமைச் செயற்பாட்டை முன்னெடுத்தல் வேண்டும்.

ஊ. ஒருவர் உயர்நிலை வாசகராக நிலை மாற்றம் பெறும்பொழுது, அவரது ஆளுமை வளர்ச்சியடைவதுடன் சமூகப் பங்களிப்பின் தரமும் உயர்ச்சியடையும்.

வாழ்க்கை முழுவதும் ஒருவர் கற்பவராகத் தொழிற்படுவதற்குத் தளமிடுவது வாசிப்பு. அந்நிலையில் ஒருவருக்குரிய சமூகத்திறன்கள் *(Social Skills)* வளர்ச்சியடைந்த வண்ணமிருக்கும். அத்தகைய ஒரு சமூகம் விழிப்புணர்ச்சி மிக்க சமூகமாக அமையும்.

"தரமான நல்ல வாசிப்பில் ஈடுபடுவோர் குற்றச் செயல்களில் ஈடுபடமாட்டார்கள்" என்று சொல்லப்படுகின்றது. அவர்கள் வினையாற்றல் மிக்க சமூக உறுப்பினராகத் தொழிற்பட்ட வண்ணம் இருப்பர். அத்துடன் அவர்களின் சமூக அரசியல் பங்களிப்பு மேம்பட்டதாக இருக்கும். வாசிப்பதால் ஒருவர் "வலுவூட்டப்படும்" மனிதராகின்றார்.

வாசிப்புத் தொடர்பான ஆய்வுகளில் இருந்த பெறப்பட்ட முடிவுகள் வருமாறு:

அ. வாசிப்பில் ஈடுபடும் மாணவர், வாசிப்பில் ஈடுபடாதவர்களோடு ஒப்பிடுகையில் கூடிய கல்வி அடைவுகளைப் பெறுகின்றனர்.

ஆ. வாசிப்பில் ஈடுபடுவோரிடத்து மொழியாற்றல் மேம்படுகின்றது. அதனுடன் கணித ஆற்றலும் உயர்ந்து செல்லல் கண்டறியப்பட்டுள்ளது.

இ. வாசிப்புச் சுவையில் ஈடுபடுவோர் போதைவஸ்துக்களில் நாட்டங் கொள்ளாதிருப்பதும் அறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. பெற்றோர் உயர்கல்வியறிவு இல்லாதவர்களாக இருப்பினும், வாசிப்பில் ஈடுபடும் ஏனைய மாணவர் உயர்கல்வியறிவு பெற்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கு ஒப்பான நிலையில் கல்வி முன்னேற்றங்களை எட்டுகின்றனர்.

உ. வாசிப்பில் ஈடுபடும் மாணவரிடத்து கிரகித்தல், புரிதல், விளங்கிக்கொள்ளல் முதலாம் ஆற்றல்கள் வளர்ச்சியடைவதைக் கண்டுகொள்ள முடிகிறது. ஒருவிடயத்தை திரும்பத் திரும்ப விளக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படுவதில்லை.

ஊ. பிரச்சினை விடுவிக்கும் ஆற்றல் ஆழ்ந்து வாசிப்பவர்களிடத்துத் திறனுடன் செயற்படுகின்றது.

உளவளத் துணை செய்யும் உபாயங்களுள் ஒன்றாக மகிழ்ச்சியான வாசிப்புச் செயற்பாடு பயன்படுத்தப்படுகின்றது. அறிகைச் சிகிச்சையில் *(Cogniti vetherapy)* வாசிப்பை ஊக்கப்படுத்தியவேளை நேர்நிலையான மாற்றங்கள் கண்டறியப்பட்டன. சரியான காரணங்காணலை வளர்த்தெடுத்தலும் தமது பிரச்சினைகளைத் தாமே பகுத்தறிந்து தீர்வுகளை நோக்கி நகரச் செய்தலும் அறிகைச் சிகிச்சை முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

"வாசிப்புப் பண்பாட்டை உருவாக்குதல்" என்ற செயற்பாட்டில் கல்வியியலாளர் ஊன்றிய கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இத்துறையில் பாம் அல்யன் *(Pam Allyn)* முக்கியமானவர். எழுத்தறிவை வளர்க்கும் வல்லுனரான அவரது செயற்பாடுகள் அறுபதுக்கு மேற்பட்ட நாடுகளில் நீட்சி கொண்டுள்ளன. வாசிப்புத் தொடர்பான நூல்களும் அவரால் எழுதப்பட்டுள்ளன.

ஆற்றலும், வலிமையும் மிக்க வாசகராக ஒருவரை எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பது பற்றியும் வாசிப்புப் பண்பாட்டை உருவாக்குதல் தொடர்பாகவும் அவர் முன்வைத்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை. அவற்றுள் சில வருமாறு:

1. ஒருவரிடத்து வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட வேண்டுமேயன்றி, அவரது வாசிப்பு எந்த நிலையில் உள்ளது என்று மதிப்பீடு செய்யக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வாசிப்புக்குப் பலவகையான சாதனங்களை வழங்குதல் வேண்டும்.

3. வாசிப்பவர்களிடையே கலந்துரையாடல்களையும், கருத்தாடல்களையும் வளர்க்கும் பொழுது பின்தங்கிய நிலையில் உள்ள வாசகர் உயர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

4. இடர்ப்படும் வாசகர் முன்னேற்றம் பெறுவதற்குரிய, எழுத்து, சொல், வாக்கிய அமைப்பு முதலியவற்றை வளம்படுத்தும் சாதனங்களை வழங்குதல் முக்கியமானது.

5. விருப்பமான வாசிப்புப் பொருட்களைத் தெரிந்தெடுப்பதற்கும், விருப்பமான இடத்திலும், விருப்பமான நிலையிலும் இருந்து வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

இத்துறையில் "வாசிப்பு வீரியம்" *(Reading Stamina)* என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. வாசிப்பதற்குரிய ஆர்வமும் உடல் மற்றும் உள்ளம் சார்ந்த வலிமையும் வாசிப்பு வீரியத்தை உருவாக்கும். வளர்ச்சி அடைந்த நாடுகளில் வாசிப்பு வீரியம் மிக்கோரின் எண்ணிக்கை கூடுதலாகவே காணப்படுகின்றது.

ரபின் (2002) என்பவரின் ஆய்வுகளின்படி நடத்தைப் பிரச்சினை உள்ளவர்களும், எதிர்ச் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும், நெறிபிறழ்வுக்கு உட்பட்டோரும் பெருமளவிலே வாசிப்புத்திறன் குன்றியோராய் இருத்தல் கண்டறியப்பட்டுள்ளது.

வாசிப்பு வீரியம் குன்றியவர்கள் இலகுவிலே மனமுறிவு அடைபவர்களாகவும், விரக்திக்கு உள்ளாதலும் அவதானிக்கப்பட்டுள்ளது. போசுடோ (2010) அவரது ஆய்வுகள் பிறிதொரு கருத்தை வெளிப்படுத்துகின்றது. அதாவது வாசிப்பில் ஈடுபடுவதால் ஒருவர் தம்மீது கொள்ளும் தற்கணிப்பு *(Self esteem)* வளம்பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. வாசிப்புத் திறன் குன்றியோர் தர்கணிப்புப் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.

உலகில் வாசிப்பு வளர்ச்சியும் வாசிப்புப் பண்பாட்டிலே பின்தங்கி நிற்றலும் கொண்ட நாடுகளுள் ஒன்றாக நைஜீரியா விளங்குகின்றது. வாசிப்புப் பண்பாட்டின் வீழ்ச்சி அந்நாட்டில் ஏற்படுத்தியுள்ள சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத் தாக்கங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர். வாசிப்புப் பண்பாட்டை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதற்கான முயற்சிகளும் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

உற்பத்தித் தறையில் பின்னடைவு, மனித ஆற்றல் பிரயோகத்தில் பின்னடைவு, இலஞ்சம் ஊழல் முதலியவற்றின் வளர்ச்சி, கல்வி ஏற்பாடுகளைக் கைவிட்டு நீக்குதல் முதலியவற்றுக்கும் வாசிப்புப் பண்பாட்டின் வளர்ச்சியின்மைக்கும் தொடர்புகள் இருத்தல் புலப்பாடு கொள்கின்றது. இலஞ்சம் வாழல் முதலியவற்றில் ஈடுபட்டு முன்னேறலாம் என்று எண்ணுபவர்கள் வாசிப்பை ஒரு தேவையற்ற செயலாகவே கருதுகின்றனர்.

மனிதகுலம் திரட்டிய ஆற்றலையும் அனுபவங்களையும் அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கும் செயற்பாட்டில் வாசிப்பு சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. வாசிப்பு அற்றநிலையில் மனிதர், அறிவு வளர்ச்சியின் பின்புலம் அறியாத, வேரறுந்த நிலையில் வாழவேண்டி நேரிடும்.

வாசிப்பை ஊக்குவிக்கும் சூழல் வாசிப்புப் பண்பாடாகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் வாசிப்புப் பண்பாட்டு வளம்மிக்க நாடுகளாகின்றன. வாசிப்பு எந்தத்துறையிலும் "நேர்ப்பாய்ச்சலை" ஏற்படுத்தும். உதாரணமாக குறித்த தொழிலை மேற்கொள்வோர் அந்தத்துறையில் உள்ள நூல்களை வாசிக்கும் பொழுது குறிப்பிட்ட தொழிலில் முன்னேற்றங்களை நோக்கி நகரும் வாய்ப்பு ஏற்படும். நேர்ப்பாய்ச்சலுக்குத் துறை சார்ந்த வாசிப்புடன் பொது வாசிப்பும் துணைசெய்யும்.

வாசிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு மலேசிய அரசாங்கம் 2012ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மூன்றாம் நிலைக்கல்வி பயில்வோருக்கு நூல்களை வாங்கும் வவுச்சர்களை இலவசமாக வழங்கியது. ஆனால் ஒரு சில மாணவரே அவற்றைப் பயன்படுத்தியதாகவும் ஏனையோர் வேறு பொருட்களை வாங்கித் துஷ்பிரயோகம் செய்துவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

வாசிப்பு என்பது பொருள் விளக்கத்தோடு மட்டும் நின்றுவிடுதல் இல்லை. அதனால் கிடைக்கப்பெறும் அறிகைச் செறிவு தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது இடம்மாற்றம் செய்வதற்குப் பிரயோகப்படுத்தலுக்கும் உரியது.

நாள் இதழ்களின் வாசிப்புச் செயற்பாடு வளர்ச்சியடைந்த அளவுக்கு நூல் வாசிப்பு வளர்ச்சியடையாத நிலை காணப்படுதல் ஒரு பொதுவான தோற்றப்பாடு. உலகின் பெரும்பாலான நாடுகளில் இதுவே பொதுவான நிலைவரம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் காணொளி விளையாட்டுக்கள் ஆகியவற்றைப் பார்த்துக்கிரகித்தலிலும் பார்க்க வாசிப்புச் செயற்பாட்டில் கூடுதலான உளவலுவைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. ஆயின் அதனால் கிடைக்கப் பெறும் விளைவுகள் கூடுதலாக இருக்கும்.

வாசிப்பை இளைஞர் புறக்கணிக்கும் பொழுது, நாட்டின் பொதுவான கல்வித்தரம் வீழ்ச்சியடையும். அந்நிலையில் புலமை நிராகரிப்பு நிகழத் தொடங்கும். புலமை வழியான கண்டுபிடிப்புக்களில் பின்னடைவுகள் ஏற்படத் தொடங்கும். வாசிப்பில் பின்னடைவு ஏற்படுகையில் குறிப்பிட்ட சமூகத்தில் தரங்குன்றிய கருத்தாடல்களே நிகழத் தொடங்கும். அத்துடன் சமூக நுண்மதியில் சரிவு ஏற்படும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக காரணங்காணும் குத்தறிவியலிலும் *(Rationalism)* பின்னடைவுகளைச் சந்திக்கும். காரணங்காணல் வழியான பகுத்தறிவின் வளர்ச்சி பெரும் கண்டுபிடிப்புக்களை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

மனிதரிடத்திலும் சமுதாயத்திலும் பலநிலை வளர்ச்சிகளை ஏற்படுத்துவதில் வாசிப்பின் பங்கு முக்கியமானது. வாசிப்பு என்பது அறிவுசார்ந்த செயற்பாடு மட்டுமல்ல, சமூகம் சார்ந்த செயற்பாடாகவும் உளவியல் சார்ந்த செயற்பாடாகவும் நீட்சி கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் வேலை வாய்ப்பும்

உலகமயமாதலின் எழுச்சியில் கல்வியும் வேலையும் *(Edication and Work)* மேலும் முக்கியத்துவம் பெறும் கருத்தாடலாகவுள்ளது. பொதுவாக 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட காலம் கல்விச் செயல்முறையிலிருந்து தொழிலுக்கு நிலைமாறும் நெருக்குவாரம் மிக்க காலமாகக் கொள்ளப்படுகின்றது. வரன்முறையான கல்விச் செயல்முறை, ஒருவரை விளைதிறன் மிக்க சமூக உறுப்பினராக மாற்றியமைப்பதுடன் வேலை செய்யும் ஆற்றலுடையவராகவும் உருவாகுகின்றது.

தொழிலுக்கான ஆற்றல்களை உருவாக்குதல், தொழில் இன்மை நிலை, தொழில்தேடல், தொழிற் சந்தை நுழைவு, தொழிலின் பொருத்தப்பாடு, உறுதியான தொழில், போதுமான சம்பளம், தொழிலும் சமூக அந்தஸ்தும் தொடர்பான எழுவினாக்கள் சமகாலத்திலே தோற்றம் பெறுகின்றன.

"பள்ளிக்கூடத்திலிருந்து வேலைக்கு நிலைமாற்றம்" *(School to work Transition)* என்பது விரிவான கருத்தாடலுக்குரிய எழுபொருளாக மாற்றம் பெற்று வருகின்றது. அதன் தொடர்ச்சியாக வாழ்க்கை நிட்சி முழுவதும் கற்றல் மேலழுகின்றது.

குறித்த விளைவுகளை எட்டக் கூடியவாறு மாணவரை நகர்த்திச் செல்லும் "விளைவுப் போன்ற அடிப்படையாகக் கொண்ட கல்வி" *(Out come based Education)* இத்துறையில் திட்டமிடப்படுகின்றது.

கல்விச் செயற்பாடுகளில் இருந்து தொழிலுக்கு நிலைமாறுதல் பல்வேறு காரணிகளுடன் தொடர்புடைய சிக்கலான செயல்முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து தொழில்நுட்பக் கல்வி ஏற்பாடுகளால் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. சமூக பொருளாதாரக் கட்டமைப்பு, அரசியல் நடவடிக்கைகள், பொருண்மிய முன்னெடுப்புக்கள், தொழிற்சந்தை நிலைவரங்கள் முதலாம் காரணிகளின் தொடர்பினால் ஆக்கம் பெறும் சிக்கலான செயல்முறைகளுடன் அது தொடர்பு கொண்டது. அந்தச் சிக்கலான தொடர்புகளைக் கருத்திற் கொள்ளாது, கல்வி மிது முற்றுமுழுதான பொறுப்பை கையளித்தல் தவறான அணுகுமுறை.

கல்வியும் தொழிலும் தொடர்பான முதலாளியக் கருத்துக்கம், மார்க்சியக் கருத்துக்குமிடையே வேறுபாடு உண்டு.

***முதலாளியக் கருத்து:*** கல்வி என்பது தொழிலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதுடன், பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்குரிய திறன்களை வளர்ப்பதற்குரிய செயற்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

***மார்க்சியக் கருத்து:*** கல்விச் செயற்பாடு மனிதரை அனைத்துத் தளைகளில் இருந்தும் விடுவிப்பதுடன், மனிதருக்குரிய பன்முகப் பரிமாணங்களையும் வளர்ப்பதற்குத் துணை செய்தல் வேண்டும். அத்தகைய ஒரு செயற்பாட்டின் வழியாகவே அனைத்து இயற்கை வளங்களோடும், அவற்றோடு இணைந்த தொழில்களோடும் மனித வளத்தை ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

கல்வியும் வேலையும் தொடர்பான ஆய்வில் ***"கல்விசார் பெருவீக்கம்"*** *(Educational Inflation)* அல்லது "புலமைசார் பெருவீக்கம்" என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

அதாவது குறித்த வேலைகளுக்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட கல்வித் தகுதிகளைக் காட்டிலும் இப்போ மிகக் கூடுதலான கல்வித் தகைமைகள் கேட்கப்படும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. காலப்போக்கில் அனைத்து வேலைகளுக்கும் கலாநிதிப் பட்டம் அவசியம் என்று கேட்டாலும் வியப்பில்லை.

இத்துறையில் முன்வைக்கப்படும் ஒரு முக்கியமான கருத்து ***"சிறப்பெழுகை வாதம்"*** *(Credentialism)* என்பதாகும். ஒருவரின் கல்வித் தகைமை அல்லது ஆற்றலின் உறுதிப்பாட்டை விளக்குவதே சிறப்பெழுகை அதனை உச்சமாக வலியுறுத்துதல் சிறப்பெழுகை வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சிறப்பெழுகையை வைத்திருப்போரின் எண்ணிக்கையும் அவற்றை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. அவை சமூக பொருளாதார நிலைகளிலும், உளவியல் நிலைவரங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. ஒருவரின் சமூக அந்தஸ்தைத் தீர்மானிப்பதில் "சிறப்பெழுகை" மிகையாக வலியுறுத்தப்படும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. கல்விசார்ந்த சிறப்பெழுகையை வைத்தே வேலை வழங்கும் செயற்பாட்டை வேலை வழங்கும் நிறுவனங்கள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

வளர்முக நாடுகளில் அரச நிறுவனங்கள் வேலை வழங்குவதற்கு ஏற்படுத்தியுள்ள தகுதிகளை தனியார் நிறுவனங்கள் நிராகரித்து, அதே வேலைகளுக்கு வேறு தகுதிகளை ஏற்படுத்துதலும் நிகழ்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது.

இத்துறையில் வகுப்புத் தரப்பெருவீக்கம் *(Grade Inflation)* என்ற கருத்தாக்கமும் முன்வைக்கப்படுகின்றது. முன்பு வழங்கப்பட்ட வகுப்புத் தரச்சான்றிதழுக்குப் பதிலாக இப்போ அதே நிலைக்கு கூடிய தரச் சான்றிதழ் வழங்கப்படுதலை அந்தப் பெருவீக்கக் கருத்தாக்கம் குறிப்பிடுகின்றது. அதன் அடிப்படையாக எழும் முக்கிய பிரச்சினைகள் வருமாறு:

1. வகுப்புச் சான்றிதழ்கள் உண்மையான திறனையும் ஆற்றலையும் திறன்களையும் சுட்டிக்காட்டுவதாக அமைவதில்லை. அதாவது, ஆற்றல் குன்றியோரும் ஏதோ காரணங்களால் உயர்சித்தி பெறுகின்றனர்.

2. அச்சான்றிதழ்களை வைத்துக்கொண்டு மாணவர் மட்டுமல்ல வேலை வழங்குவோரும் அதிக நம்பிக்கை கொள்கின்றனர்.

3. வெவ்வேறு கல்வி நிலையங்கள் ஒரே பட்டத்துக்கென வழங்கும் சான்றிதழ்கள் ஒரே தரநிலைச் சிறப்பதில்லை. உதாரணமாக இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் வழங்கும் இளமாணிப் பட்டம் ஒரே தரத்தைக் கொண்டிருப்பதில்லை.

4. தரநிலை வேறுபாடுகள் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கின்றன. உதாரணமாக முதலாம் வகுப்பில் சித்தியடைந்தவர்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிலும் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தவர்கள் தொழில் நிலையங்களில் அதிக ஆற்றலுடனும் திறன்களுடனும் தொழிற்படுதல் கண்டறியப்பட்டுள்ளது.

5. ஒரு பல்கலைக்கழகம் குறித்த ஒரு வருடத்திலே வழங்கிய சான்றிதழுக்கும் இன்னொரு வருடத்தில் வழங்கிய அதே பட்டத்துக்கான தரச் சான்றிதழுக்குமிடையே வேறுபாடுகள் உண்டு.

மேற்கூறிய பிரச்சினைகள் வேலை வழங்குதலுக்கும் சான்றிதழ்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளைச் சிக்கலாக்குகின்றன.

அண்மைக் காலமாக இத்துறையில் ***சமிக்ஞை தருதல்*** *(Signalling)* என்ற கோட்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. கல்வி நிலையங்கள் தகவல் சமிக்ஞைகளை தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்குகின்றன. அவ்வாறே தொழில் வழங்கும் நிறுவனங்கள், தமது தேவைகளைக் கல்விநிலையங்களுக்குச் சமிக்ஞைப்படுத்துகின்றன. இரண்டுக்கு மிடையே இணக்கம் அல்லது சமநிலை நிகழ்கையில் கல்வியும் வேலையும் உராய்வின்றி இணைந்து கொள்கின்றன.

வேலை வழங்கும் நிறுவனங்களின் தேவைக்கேற்றவாறு கல்வி நிலையங்கள் தொழிற்படும் பொழுது ஒருவர் பெறும் ஊதிய அதிகரிப்பைக் காட்டிலும் வேலை வழங்கும் நிறுவனங்களே கூடுதலான நன்மைகளையும் இலாபத்தையும் சம்பாதித்துக் கொள்கின்றன.

கல்வி ஒருவரிடத்து "வேலை பெறக் கூடிய ஆற்றலை" *(Exployability)* வளர்த்தெடுக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். பின்வருவன அந்த ஆற்றலில் உள்ளடக்கப்படுகின்றன.

- தன்விபரங்களை ஒழுங்குறத் தயாரிக்கும் ஆற்றல்.
- தொழிலுக்கு ஒழுங்குற விண்ணப்பிக்கும் திறன்.
- நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளும் ஆளுமை ஆற்றல்.
- அளிக்கை *(Presentation)* ஆற்றல்.
- தொழில்கள் தொடர்பான பிரக்ஞை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொடர்பாடல் திறன்கள்.
- பன்மொழித்திறன்.
- ஆற்றல்களை இடமாற்றம் செய்யும் வல்லமை.
- புதிய மாற்றங்களுடன் இசைவுபடும் திறன்.
- புதிய அறிவு வளர்ச்சியோடு இணைந்து செல்லல்.
- அடிப்படை முகாமைத்துவத் திறன்களையும் உளவியல் திறன்களையும் அறிந்திருத்தல்.
- இசைந்து தொழில் புரியும் குழு ஆற்றலைக் கொண்டிருத்தல்.
- நவீன எண்ணிம சாதனங்களைக் கையாளும் திறன்களைத் தெரிந்திருத்தல்.
- பலவகையான நுண்மதித் தேர்வுகளையும் கையாளக் கூடிய திறன்.

கல்விச் சமூகவியலாளர் கல்வியும் வேலையும் தொடர்பில் சமூகவியற் காரணிகளைத் தொடர்புபடுத்துகின்றனர். வேலையைப் பெற்றுக்கொள்வதில் ஒருவரது சமூக அடுக்கமைவு நிலை, சமூக அந்தஸ்து, அரசியல் சமூக நிலைகளில் அவர்களுக்குரிய செல்வாக்கு முதலிய காரணிகள் முதன்மை பெறுதல் நடைமுறையிலே காணப்படுகின்றன.

தொழில்கள் தொடர்பான தகவல்களையும், அவற்றைப் பெறுவதற்குரிய தகைமைகளையும், பிற தகவல்களையும் வழங்கும் தொழில் ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் ஆற்றுப்படுத்தல் என்பது வழிகாட்டலாக இருக்குமேயன்றி, தொழில் இன்மைப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையமாட்டாது. தொழிற்பெருக்கம் பரவலாக ஏற்படும் பொழுதுதான் வேலையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும்.

வேலையின்மைப் பிரச்சினைக்கு சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் திட்டம் நெருக்கடியைக் குறைக்குமேயன்றி தீர்வாக அமையமாட்டாது. பெரும் நிறுவனங்கள் சிறிய சிறிய நுகர்ச்சிப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியிருத்தலும், சில்லறைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளைத் திறந்து வருதலும், சிறிய உணவு விடுதிகளைப் பரவலாகத் திறத்தலும், சுயமுயற்சியை மேற்கொள்வோருக்குச் சவாலாக அமைந்து வருகின்றன.

சிறிய நுகர்ச்சிப் பொருள் உற்பத்தியில் சீனா பரவலாக ஈடுபடத் தொடங்கியிருத்தலாலும் திறந்த பொருளாதார முறைமையாலும் வளர்முக நாடுகள் உள்ள சுயமுயற்சியாளரும், குடிசைக் கைத்தொழிலாளரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். குடிசைக் கைத்தொழில்கள் பல அழிந்தும் வருகின்றன.

"கல்வியம் வேலையும்" என்பது மேலும் மேலும் சிக்கலடைந்துவரும் தொடர்புகளுடன் வினைப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலக் கல்வியும் உற்றறிக் கோட்பாடும்

கலை இலக்கியத் திறனாய்வு, கல்வியியல், சமூகவியல், உளவியல் முதலாம் துறைகளில் உற்றறி கோட்பாடு ஒரு முக்கியமான எழுபொருளாகி வருகின்றது. மக்ஸ் கோர்கெய்மரின் கருத்துப்படி, இக்கோட்பாடு மனிதரை மூடியிருக்கும் அடிமைத்தளைகளிலிருந்து விடுதலைக்கு இட்டுச் செல்லும் கருத்தியல் வடிவம் என்பதாகும்.

மார்க்சியக் கருத்தியலைத் தழுவிய நவமார்க்சியர்கள் இக்கோட்பாட்டாக்கத்திலே பல நிலைகளிலே பங்கு கொண்டனர். மேலாதிக்கத்தின் அனைத்து வடிவங்களையும் இனங்காணுவதற்குரிய அறிவுக் கருவியாகவும், அவற்றைத் தகர்ப்பதற்குரிய முன்னெடுப்பாகவும் உற்றறி கோட்பாடு *(critical Theory)* வளர்த்துச் செல்லப்படுகின்றது.

மரபுவழியான இலக்கியக் கோட்பாடுகளும் செயற்பாடுகளும் நிலைவரங்களை விளக்குகின்றனவேயன்றி சமூக மாற்றத்துக்கான கருத்தியல் விசைகளை முன்வைக்கவோ, முன்னெடுக்கவோ முனையவில்லை. அடிப்படையான சமூக மாற்றமே பிரச்சினை களுக்குரிய தீர்வாக உற்றறி கோட்பாட்டினால் முன்மொழியப்படுகின்றது.

பல்வேறு அறிவுப் புலங்களிலும் இருந்து அறிவு ஊட்டல்களை உற்றறிக் கோட்பாடு உள்வாங்கிக் கொள்கின்றது. அவற்றால் அக்கோட்பாடு தனக்கு வலுவேற்றிக் கொள்கின்றது.

தேசிய சோசலிசம், அரச முதலாளியம், வெகுசனப் பண்பாடு, உலகமயமாதல் முதலியவை புதிய மேலாதிக்க வடிவங்கள் நவீன உலகிலே தோற்றம் பெற்றுள்ளன. கார்ல் மார்க்சினுடைய காலத்தில் **(1818-1883)** அத்தகைய வடிவங்கள் தோற்றம் பெறவில்லை. அந்நிலையில் புதிய மேலாதிக்க வளர்ச்சிகளை விளங்கிக்கொள்வதற்கும், அவற்றைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்ப்பதற்கும் மார்க்சியத் தளத்திலே நின்று, புதிய அறிவு ஊட்டங்களை நவமார்க்சியர்கள் உள்வாங்கி, புதிய கோட்பாட்டை வலுவாக்கினர்.

பொருளாதாரத்தில் அரசின் தலையீடுகள் முன்னைய உற்பத்தி உறவுகளை மாற்றியமைக்கத் தொடங்கியுள்ளன. புதிய உற்பத்தி முறைகள் சுரண்டலின் கூரிய வடிவத்தை வெளித்தெரியா வண்ணம் மறைமுகப்படுத்தி வருகின்றன. அந்நிலையில் புதிய வளர்ச்சிகளை இனங்காண்பதற்குரிய கருத்து வடிவமாக உற்றறி கோட்பாடு உருவாக்கம் பெறுகின்றது.

நடப்பு நிலைவரங்களை விளங்கிக் கொள்ளல், மாற்றத்தை ஏற்படுத்துவோரை இனங்கண்டு கொள்ளல், சரியானதும் தெளிவானதுமான கருத்து விளக்கங்களை அவர்களுக்கு வழங்குதல் என்ற மூன்று பரிமாணங்களை உற்றறிக் கோட்பாடு கொண்டுள்ளதாக கோர்க் கெய்மர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதர் தமக்குரிய வரலாற்றுப் பாத்திரத்தை உருவாக்கிக்கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள். சமூகம் பற்றிய சரியான கண்ணோட்டம் அந்த ஆற்றலைக் கண்டறிவதற்கு அடிப்படையானது. சமகால முதலாளியத்தை உண்மையான மக்களாட்சிப்படுத்தலுக்கான நிலைக்கு மாற்றியமைத்தல் பற்றியே உற்றறி கோட்பாடு வலியுறுத்திச் செல்கின்றது. அந்த வகையில் உற்றறிக் கோட்பாட்டுக்கும் அமெரிக்கப் பயன்கொள்வாதத்துக்குமிடையே ஒப்புமைகளும் காணப்படுகின்றன.

மெய்யியலை செயற்பாட்டுக்குரிய அறிவாக மாற்றிய மார்க்சின் அணுகுமுறையை உற்றறிக் கோட்பாட்டாளர் ஏற்றுக்கொள்கின்றனர். மெய்யியல் தெளிவான அளவை முறையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

நடப்பியல் சார்ந்த மக்களாட்சி *(Real Democracy)* என்பதே உற்றறிக் கோட்பாட்டின் சமூக இலக்காக அமைகின்றது. சமூகச் செயல்முறையின் மீது உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டை மக்கள் கொண்டிருத்தல் அங்கே வலியுறுத்தப்படுகின்றது. மக்கள் சமூக வாழ்க்கையை முழு நிலையில் உற்பத்தி செய்யும் திறன் அதனுடன் தொடர்புபடுத்தப்படு கின்றது. இன்றைய நிலையில் "பொய்ம்மையான முழுநிறைவே" *(False Totality)* என்பதே நடைமுறையில் உள்ளதாக கோர்கேய்ம்மர் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருமட்டாக 1930 ஆம் ஆண்டிலிருந்து பாசிசமும் மக்களாட்சியும் இணைந்து செயற்படத் தொடங்கியுள்ளன. அதன் விளைவாக மக்கள் நம்பிக்கை அற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரசுடன் இணைந்த நவீன உற்பத்திச் செயற்பாடுகள், மனித சுதந்திரத்துக்கான வெளியை இல்லாது ஒழித்து வருகின்றன.

அந்நிலையில் பொது மக்கள் தளத்தில் அமைப்பியல் சார்ந்த நிலைமாற்றம் *(The Structural Transformation of the public sphere)* பற்றிய கருத்துக்களை ஹார்பமஸ் முன்வைத்தார். புதிய வடிவிலான மக்களின் ஊடாட்டங்கள் பற்றியும் அதன் நீட்சி நாடாளுமன்றம் வரை சென்று மாற்றங்கள் விளைவிப்பது பற்றியுமான ஒருவித இலட்சியப் போக்கு அவரின் எழுத்தாக்கங்களிலே காணப்படுகின்றது.

மக்களாட்சியின் அடிப்படைக் கட்டமைப்புப் பற்றிய உற்றறி கோட்பாட்டின் திறனாய்வுகள் முக்கியமானவை. மக்களாட்சிச் செயல்முறையின் நிராகரிப்புக்கு உள்ளானவர்களின் குரலை உற்றறி கோட்பாடு வெளிப்படுத்தியுள்ளது. விளிம்புநிலையினர் பெண்கள், தேசிய சிறுபான்மை இனங்கள் பழங்குடியினர், மாற்றுத்திறனுடையோர் வறுமையில் வாழ்ந்து கொண்டிருப்போர் முதலியவர்களைப் பொறுத்தவரை மக்களாட்சியின் பலவீனமான அடிப்படைக் கட்டமைப்பை உற்றறிக் கோட்பாடு பட்டுத் தெறிக்கும் சிந்தனை வழியாகவும் தருக்க வழியாகவும் வெளிக்கொண்டு வந்துள்ளது. பிரச்சினைகளுக்கு மரபு வழி மக்களாட்சிக் கட்டமைப்பு தீர்வு தராது என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

உற்றறி கோட்பாட்டை உருவாக்கியவர்களுள் பின்வரும் நவமார்க்சியர்கள் முக்கியமானவர்கள்.

1. மக்ஸ் கொர்கெய்மர் *(1895-1973)*

2. தியொடர் அடோர்னோ *(1903-1969)*

3. ஹேர்பட் மார்க்கியுஸ் *(1898-1979)*

4. வால்டர் பென்ஜமின் *(1892-1940)*

5. பிரெட்ரிச் பொல்லொக் *(1894-1970)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. லியோ லொவென்தல் *(1900-1993)*

7. எரிக் புரோம் *(1900-1980)*

மேற்குறித்தவர்கள் முதலாம் தலைமுறையினர் என்று குறிப்பிடப்படுகின்றனர். 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் இத்துறையில் பங்களிப்புச் செய்தவர்கள் "இரண்டாம் தலைமுறையினர்" என அழைக்கப்படுகின்றனர். ஹேர்பமஸ் *(J.Habermas)* அவர்களின் எழுத்தாக்கங்களுடன் இரண்டாம் தலைமுறை உருவாக்கம் பெறுகின்றது. ஏ.ஹொன்னெத் *(Axel Honneth)* அவர்களுடன் மூன்றாம் தலைமுறை வளர்ச்சி மேற்கிளம்புகின்றது.

மனிதர் எவ்வாறு அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை, ஹேர்பமஸ் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தினார். அவர் உருவாக்கிய முக்கியமான கருத்து வடிவங்கள் வருமாறு:

அ. தொடர்பாடல் பகுத்தறிகையும், வினைப்பாடும்

ஆ. கருத்து வினைப்பாட்டு ஒழுக்கம்

இ. முனைப்புள்ள மக்களாட்சி

ஈ. அகிலப் பண்புடைய பயன்கொள்வாதம்

உ. பொதுமக்கள் தளத்தின் கட்டமைப்பை அடிப்படையான நிலைமாற்றத்துக்கு உட்படுத்துதல்.

ஹென்னெத் அவர்களின் "அதிகாரம்" பற்றிய ஆய்வுகள் முக்கியமானவை. அதிகாரம் பற்றிய திறனாய்வு, அதிகாரத்தைப் பெறுவதற்கான போராட்டம் முதலிய துறைகளில் அவரது ஆய்வுகள் விரிவடைந்தன.

உற்றறி கோட்பாட்டாளர் உளப்பகுப்பு உளவியலின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொண்டனர். முன்னைய மார்க்சியர்களால் அதன் முக்கியத்துவம் அறியப்படவில்லை. அத்துறையில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் எரிக்புரோம் முக்கியமானவர். சமூக அடிக்கட்டுமானத்துக்கும் மேலமைந்த கருத்தியல் வடிவத்துக்குமிடையே தவறவிடப்பட்ட இணைப்பை உளப்பகுப்பியல் தொடர்புபடுத்துகின்றது என்பதே எரிக்புரோமின் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றறி கோட்பாடு மேலாதிக்கத்தால் நிறுவப்பட்ட அறிவை அறைகூவலுக்கு உட்படுத்துகின்றது. ஏனெனில் அறிவு ஒரு தலைப்பட்சமான வகையில் உருவாக்கம் பெற்றுவிட்டது. புறவயமான அறிவு என்பத ஒரு வகை மாயைத் தோற்றமே.

சமூகத் தொடர்புகளினூடே அதிகாரத்தின் வகிபாகத்தை உற்றறி கோட்பாடு ஆழ்ந்து நோக்குகின்றது. அறிவும் அதிகாரமும் தொடர்பாடலும் ஒன்றிணைந்த வகையில் இயங்குகின்றன. அந்நிலையில் ஊடகங்கள் பற்றியும் நவீன பண்பாடு பற்றியும் ஆழ்ந்து நோக்கப்படுகின்றன.

உற்றறி கோட்பாடு மார்க்சிய தளத்தில் உருவாக்கம் பெற்றாலும், தளத்தை விட்டு விலகிச் செல்லும் போக்குகளும் காணப்படுகின்றன. மக்களாட்சியின் அடிப்படைகளை மாற்றியமைப்பதன் வாயிலாக சமூகப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் எட்டப்படும் என உற்றறி கோட்பாடு வலியுறுத்துகின்றது. ஆனால் மார்க்சியம் வர்க்கப் புரட்சியை வலியுறுத்துகின்றது.

மக்களாட்சிக் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்ய முயன்ற மூன்றாம் உலக நாடுகளில், மேலாதிக்கம் என்பது வலுவடைந்து வருதலும் சிறுபான்மைத் தேசிய இனங்களும், விளிம்பு நிலையினரும் பெண்களும், ஒடுக்கு முறைகளில் இருந்து மீண்டெழ முடியாதிருத்தலும் நடப்பியற் காட்சிகளாகவுள்ளன.

நவீன உலகின் ஒடுக்கு முறைகளையும், மேலாதிக்கத்தையும், சமூகக் கட்டுமான நிலவரங்களை அடியொற்றி விளக்குவதோடு மட்டுமன்றி மாற்றியமைக்கும் வழிமுறையும் முன்வைத்தல் உற்றறி கோட்பாட்டின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றறி உளவியல்

மரபுவழி உளவியலில் இருந்து விலகிய மாற்றுக் கோட்பாடாக "உற்றறி உளவியல்" *(Critical Psychology)* மேற்கிளம்பியுள்ளது. அத்துடன் மரபுவழி உளவியலுக்கு அறைகூவல் விடுக்கும் வகையிலும் அதன் சிந்தனை வீச்சுக்கள் அமைந்துள்ளன.

சமூக மாற்றத்தின் வழியாகவே உளநோய்கள் தீர்க்கப்படலாம் என்பது உற்றறி உளவியலின் முடிபு. ஆழ்ந்து நோக்கினால், மார்க்சிய உளவியல் வழித் தடத்தில் உற்றறி உளவியல் எழுகோலம் பெறுவதைக் காணமுடியும்.

மரபுவழி உளவியல் தனிமனிதரை மட்டுமே குவியப்படுத்தி வளர்ச்சி கொண்டுள்ளது. சமூக நோக்கையும் சமூக இயங்கியலையும் உளப்பகுப்பியல், நடத்தையியல், மானிடவியல் முதலாம் உளவியலை உருவாக்கியோர் தரிசிக்கத் தவறிவிட்டனர்.

மார்க்சியமே உளவியலைச் சமூகத் தளத்துக்கு இட்டுச் சென்றது. அதன் அடிச்சுவட்டில் உற்றறி உளவியல் தொடர்ந்து வருகின்றது.

சமூகத்தில் நிலவும் அதிகார வேறுபாடுகளும், அவற்றின் அழுத்தங்களுமே உளநெருக்குவாரங்ளையும் உளநோய்களையும் உருவாக்குகின்றன. அந்நிலையில் ஒடுக்குமுறைகளையும் சுரண்டல்களையும் வேரோடு பிடுங்கியெறியும் சமூக மாற்றத்தின் வழியாகவே அனைவருக்கும் உளச்சுகத்தை வழங்க முடியும்.

மார்க்சியம் தவிர்ந்த ஏனைய உளவியற் கோட்பாடுகள் சமூக ஒடுக்குமுறைகளையும் மேலாதிக்கத்தின் வழியாக நிகழ்த்தப்படும் மனஉடைவுகளையும் கண்டறியத் தவறிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றிய உளவியல் உருவாக்கத்தின் முன்னோடிகளாக பவ்லோவ் மற்றும் வைக்கோட்சி ஆகியோர் விளங்குகின்றனர். பவ்லோவ் என்பவர் உளவியலுக்கு நவீன பரிசோதனை வலுவைக் கொடுத்தார். வைக்கோட்சி என்பவர் கற்றல் என்பது சமூக விசைகளினூடாக நிகழ்த்தப்படும் செயல்முறை என்பதை ஆதாரப்படுத்தினார்.

மார்க்சியத் தடத்தில் அலெக்சி வியொன்யெவ் பண்பாட்டு வரலாற்று உளவியலையும் வினைப்பாட்டுக் கோட்பாட்டையும் *(Activity Theory)* உருவாக்கினார். அக்கோட்பாட்டின் ஆக்கத்தில் பிறிதொரு மார்க்சியச் சிந்தனையாளராகிய அலெக்சாண்டர் லரியாவும் பங்கு கொண்டார்.

அத்தகைய மார்க்சிய உளவியற் சிந்தனைகளின் தொடர்ச்சியும் நீட்சியுமாக 1970ஆம் ஆண்டளவில் உற்றறி உளவியல் உருவாக்கம் பெற்றது. பேர்னிலில் உள்ள பிறியி பல்கலைக்கழகத்தில் அது கால்கோள் கொண்டது. ஆனால் 2007ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் அந்த உளவியல் தொடர்பான ஜேர்மன் எழுத்தாக்கங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படலாயின.

ஜேர்மனியில் வளர்ச்சி பெற்ற இளைஞர் இயக்கங்கள் மார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றியே எழுகோலம் பெற்றன. பேர்லின் நகரமே இளைஞர் எழுச்சியின்மையமாக அமைந்தது. இளைஞர் எழுச்சியின் கருத்தியல் வேராக மார்க்சியம் அமைந்தது. பிரச்சினைகளை விஞ்ஞான பூர்வமாக விளங்கிக் கொள்வதற்கு மார்க்சியத் தருக்கம் வழியமைத்தது. அத்தகைய பின்னணியில் உற்றறி உளவியல் தோற்றம் பெற்றது.

அதன் முன்னோடி எழுத்தாளராக விளங்குபவர் கிலஸ் ஹோல்ஸ்காம். நடத்தைவாத உளவியலை அவர் முதற்கண் திறனாய்வுக்கு உட்படுத்தினார். மனித நடத்தைகள் தூண்டி - துலங்கல் என்ற பொறிமுறைக்குள் மட்டும் கட்டுப்பட்டவையன்று என்பதைச் சுட்டிக்காட்டினார். மனித நடத்தைகளை உருவாக்கும் பண்பாட்டு விசைகளையும் சமூக இயங்கியலையும், நடத்தைகளின் உள்ளமைந்த செயல் முனைப்புக்களையும் நடத்தை உளவியல் கட்டறியத் தவறி விட்டதை விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான முறைமை பற்றிய ஆய்வுகளில் அவர் ஊன்றிய கவனம் செலுத்தினார். விஞ்ஞான மெய்யியலாளர் தோமஸ் சாமுவேல் உருவாக்கிய "ஆட்சி நிரலின் பெயர்ச்சி" *(Pradigmshift)* என்ற கருத்தாக்கமும் அவர் மீது செல்வாக்குச் செலுத்தியது.

வரலாற்றுத் தொடர்ச்சியில் சமூக மேலாதிக்கமானது, பொருண்மியக் கட்டமைப்பை தக்கவைத்துக் கொள்வதற்குரிய, மீளமீள ஆக்கும் செயல்முறையினை உருவாக்கி வந்துள்ளது. பண்பாடு என்பது செயற்பாடுகளை மீள மீளச் செய்யும் வடிவம். "சமூக மீளாக்கல்" *(Social Reproduction)* பற்றிய மார்க்சின் கருத்துக்களை உள்வாங்கிய ஹோல்ஸ் காம் மனித நடத்தைகளை உருவாக்குதலில் பொருண்மியப் பண்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

வகுப்பறை உளவியல் பற்றியும் அவர் விரிவாக ஆராய்ந்தார். வகுப்பறைக் கற்பித்தலும், அதன் அமைப்பும் வரலாற்று வளர்ச்சியுடன் தொடர்புடையவை. மார்க்சியக் கண்ணோட்டத்தில் கூறுவதானால் அதுவும் பண்பாடு போன்று அதிகாரத்தைத் தக்க வைப்பதற்குரிய செயற்பாடுகளை மீளமீளப் பிறப்பிக்கும் வடிவம்.

வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பான அவரது சிந்தனைகளில் மிசேல் பூக்கோவின் எழுத்தாக்களின் செல்வாக்கும் இடம்பெற்றுள்ள மையைக் காணலாம். வகுப்பறை உள்ளிட்ட அனைத்துப் பண்பாட்டு நிறுவனங்களும் அதிகாரத்தைச் செயற்படுத்தும் வடிவங்களாக இயங்குதலை பூக்கோ சுட்டிக்காட்டினார்.

வகுப்பறைகள் மாணவரின் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்ப்பதில்லை. கற்பித்தல் உபாயங்கள் அனைத்தும் மாணவரின் ஆற்றல்களை முழுமையாக வளர்க்க முடியாத செயற்பாடுகளையே மேற்கொள்கின்றன. அதற்குப் பதிலாக "விரிவாக்கற் கற்றல்" *(Expansive Learning)* என்ற கருத்தாக்கத்தையும் அதனைச் செயற்படுத்தும் வழிமுறைகளையும் முன்வைத்தார். சூழமைவுகளிற் கற்றல் *(Learning in Contexts)* என்பதே அவரின் மாற்று எடுத்துரைப்பு.

உற்றறி உளவியலைக் கட்டியெழுப்பும் பல்வேறு எழுத்தாக்கங்கள் இருபத்தோராம் நூற்றாண்டிலிருந்து அதிக அளவில் வெளிவரத் தொடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்செஸ்டர் மெற்றபோலிட்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இயன் பார்க்கர் மற்றும் எரிக்கா பர்மன் ஆகியோர் ஒன்றிணைந்து "உற்றறி உளவியலின் ஆண்டு மீள்நோக்கு" அறிக்கைகளை வெளியிட்டனர்.

உற்றறி உளவியலில் இடம்பெறவேண்டிய நான்கு முக்கியமான கூறுகள் அந்த அறிக்கையிலே வலியுறுத்தப்பட்டுள்ளது. அவையாவன:

1. மரபுவழி உளவியலானது, அதிகாரத்தில் உள்ளவர்களையும், அவர்களின் கருத்தியலையும் நிலைநிறுத்துவதற்கு எவ்வாறு செயற்பட்டு வருகின்றது என்பதைப் பரிசீலனைக்கு உட்படுத்துதல்.

2. வரலாற்று வளர்ச்சியில் உருவாக்கம் பெற்ற பிரதான உளவியல் வகைகள் வரலாற்று நியமங்களாலும் பண்பாட்டுக் காரணிகளாலும் கட்டுமை *(Construct)* செய்யப்பட்டுள்ள விதத்தை ஆராய்தல். அத்துடன் மாற்றுவகையான உளவியல் எவ்வாறு எதிர்த்துத் தர்க்குப்பிடிக்கின்றது என்பதைக் கண்டுகொள்ளல்.

3. புலமைநிலை மற்றும் வாண்மை நிலைக் கோட்பாடுகளையும் நியமங்களையும் நடைமுறைகளையும் மீறிய வகையில் நாளாந்த வாழ்க்கையில் உளவியல் செயற்படும் விதங்களையும் மனிதர் உருவாக்கும் தற்கட்டுப்பாட்டு வடிவங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துதல்.

4. உளவியற் புலமையாளரும் வாண்மையினரும் நாளாந்தம் எந்த வகையிலே தொழிற்படுகின்றனர் என்பதைக் கண்டறிதலும் அவற்றிலிருந்து அவர்களின் ஒரு தலைப்பட்சமான செயற்பாடுகளை மறுதலிப்பதற்குரிய ஏற்பாடுகளை உருவாக்கித் தருதலும்.

அறிகை நிலையிலே மாற்றுக் கருத்துக்களைத் தாங்கியுள்ள உற்றறி உளவியல், அதனோடிணைந்த ஏனைய துறைகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றது. விடுதலை உளவியல், நலஉளவியல், உளமருத்துவம், சூழலியல் உளவியல், சீர்மிய உளவியல் முதலாம் துறைகளிலும் அதன் கருத்தியற் செல்வாக்கு நீட்சி கொண்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலத்தைய நேர்நிலை உளவியல் *(Positive Psychology)* துறையிலும் அதன் செல்வாக்கு விரவியுள்ளது. உளநோய்க்குச் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் திருப்தியான வாழ்வுக்குரிய வழிவகைகளை அமைத்தலும் விஞ்ஞான விளக்கங்களைத் தேடுதலும், ஊடுதலையீடுகளை மேற்கொள்ளலும் நேர்நிலை உளவியலில் முன்னெடுக்கப்படுகின்றன.

உளமருத்துவச் செயற்பாடுகளை நிராகரிக்கும் எதிர் உளமருத்துவமும் *(Anti Psychiarty)* உற்றறி உளவியலின் செல்வாக்கை உட்கொண்டுள்ளது. உளநோய்க்குக் கொடுக்கப்படும் மருந்துகளால் ஏற்படும் பாதிப்புக்களும், மினஅதிர்ச்சி முறையால் நிகழும் எதிர்விளைவுகளும், திறனாய்வுடன் நோக்கப்படுகின்றன. மாற்று வழிகளிலே மனச்சுகம் தேடல் பற்றிய நடவடிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. உற்றறி உளவியல் தோற்றம் பெறுவதற்கு முன்னரே மார்க்சிய சிந்தனைகளின் செல்வாக்கு எதிர் உளமருத்துவச் சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது. 1967ஆம் ஆண்டிலே டேவிட் கூப்பர் "எதிர் உளமருத்துவம்" என்ற சொல்லாட்சியை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

மார்க்சியத்தின் செல்வாக்கினுக்கு உட்பட்ட பிறிதோர் ஆய்வாளராகிய மிசேல் பூக்கோ மனநோய் என்பது மேலாதிக்கத்தினால் கட்டுமை செய்யப்பட்ட வடிவம் என்று விளக்கியதுடன் அந்தக் கருத்தாக்கத்தை வினாவுக்கு உட்படுத்தினார்.

மார்க்சியத்தின் உள்வாங்கலோடு உருவாக்கம் பெற்ற உளவியற் கோட்பாடாக விடுதலை உளவியல் *(Liberation Psycholy)* அல்லது விடுதலைச் சமூக உளவியல் அமைந்து வருகின்றது. தென் அமெரிக்கச் சூழலில் வளர்ச்சிபெற்ற அந்த உளவியல் ஒடுக்குமுறைச் சமூகத்தை மாற்றியமைக்கும் உளவியல் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

மார்க்சியமும், உற்றறி உளவியலும் அவற்றோடு இணைந்து வளர்ந்துவரும் உளவியற் சிந்தனைகளும், ஏற்றத் தாழ்வும் ஒடுக்கு முறையும், மேலாதிக்கமும் மிக்க சமூகத்தையும் அவற்றால் அவலமுறும் மனித மனங்களையும் ஊடுருவி நோக்குகின்றன. மாற்று அணுகுமுறைகளை முன்வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றறி ஆசிரியம்

உற்றறி ஆசிரியம் *(Critical Pedagogy)* என்பது மரபுவழியான ஆசிரியத்திலிருந்து விடுபடும் விடுதலைக்கான கல்வி நடைமுறைகளைக் கொண்டது. மார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றி போலோ பிரேரி, ஹென்ரி கிரொக்ஸ், மைகல் அப்பிள், பெல் கூக்ஸ் பீட்டர் மக்லாரென், பட்டிலத்தர், ஜோகின்செலோ ஆகியோரால் வளர்க்கப்பட்டது.

உற்றறி ஆசிரியம் "உற்றறி செயல்முறை"யுடன் *(Praxis)* இணைந்தது. அரசியல், சமூகம், கல்வி, சார்ந்த உயர் நிலையான சிந்தனைகளை பிரயோகித்தல், நடைமுறைப்படுத்தல், உணர்வை ஏற்படுத்தல் முதலாம் பண்புகளை உள்ளடக்கிய கருத்து வடிவமே" உற்றறி செயல்முறை"

மாணவரிடத்து விடுதலை உணர்வை வளர்த்தல், மேலாதிக்க நீட்சிகளை விளங்கிக் கொள்ளல், ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலே அறிவையும் ஆற்றல்களையும் பிரயோகித்தல் ஆகியவை உற்றறி ஆசிரியத்தில் உள்ளடங்குகின்றன.

உற்றறி ஆசிரியம் பற்றிய விளக்கம் தந்தவர்களுள் இரா சொர் முக்கியமானவர்.

அ. ஆட்சி நடைமுறைகளும் ஆதிக்கமும் தொடர்பான மேலோட்டமான விளங்கங்களைப் பெறாது ஊடுருவி ஆழ்ந்த விளக்கத்தைப் பெறுதல்.

ஆ. பிரச்சினைகளின் அடிப்படைக் காரணிகளைக் கண்டறிதல்.

இ. சமூகச் சூழமைவின் பின்புலத்திலே கல்விச் செயற்பாடுகளை விளங்கிக்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. செயற்பாடுகளின் உள்ளீடாக அமைந்த கருத்தியலைப் புரிந்து கொள்ளல்.

உ. கல்விச் செயற்பாடுகளினால் தனிநபருக்கு ஏற்படும் தாக்கங்களை அறிந்துகொள்ளல்.

என்றவாறு உற்றறி ஆசிரியத்தின் பண்புகளை அவர் விளக்கியுள்ளார். கற்றலுக்கும் கற்பித்தலுக்குமிடையேயுள்ள நேர் மற்றும் எதிர்த் தொடர்புகள் விரிவாக ஆராயப்படுகின்றன.

கற்றல், கற்றலின்மை *(Unlearning)* மீளக்கற்றல், ஆக்கத்தெறிப்பை உருவாக்குதல், மதிப்பீடு செய்தல் ஆகிய ஒவ்வொரு செயற்பாடுகளும் மாணவர் மீது செலுத்தும் செல்வாக்குகள் விரிவாக நோக்கப்பட வேண்டியுள்ளன.

மரபுவழியான பள்ளிக்கூடப் பண்புகளின் எதிர்மறைத் தாக்கங்களிலிருந்து மாணவரை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. தனிநபருக்குரிய பிரச்சினைகளைத் தனித்து நோக்காது சமூகச் சூழமைவிலும், சமூக இருப்பிலும் தொடர்புபடுத்தி நோக்குதலே முக்கியமானது.

உற்றறி ஆசிரியத்துக்குரிய படிவத்தை வழங்கியவர் போலோ பிரேரி *(1921-1997)*. அவர் எழுதிய "ஒடுக்கப்பட்டோருக்கான ஆசிரியம்" என்ற நூலில் உள்ளடங்கிய கருத்துக்கள் உற்றறி ஆசிரியத்தை உருவாக்குவதற்குரிய ஆதார நூலாயிற்று. அந்நூலாக்கத்துக்குக் கருத்தியல் நிலையில் மார்க்சியம் வலுவூட்டியது.

இளமைப் பருவத்தில் அவரது குடும்பம் அனுபவித்த வறுமையும் அதன்வழி எழுந்த துயரங்களும் அவரிடத்தே மாற்றுச் சிந்தனைகளைத் தோற்றுவித்தன. ரெசிவி பல்கலைக்கழகத்தில் அவர் பெற்ற கல்வி ஆழ்ந்த திறனாய்வு நோக்கைத் தோற்றுவித்தது.

காலனித்துவத்தின் அழுத்தங்களையும் ஒடுக்குவோரதும் ஒடுக்கப்படுவோரதும் இயல்புகளையும் கல்வித் தளத்திலே அவர் விபரித்தார். ஹாவர்வட் பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியராக இருந்த காலத்தில் "ஒடுக்கப்பட்டோருக்கான ஆசிரியம்" *(Pedagogy of the Oppressed)* என்ற நூலை எழுதினார். ஆங்கிலம் மற்றும் ஸ்பானிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளில் அந்த நூல் 1970ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 1967ஆம் ஆண்டில் போர்த்துக்கீச மொழியில் முதலில் அதனை எழுதினார்.

ஒடுக்குவோர் தமக்குச் சாதகமான முறையிலே வங்கி *(Banking)* முறைமைக் கல்வியை உருவாக்கி வைத்துள்ளனர். அதாவது வங்கியின் செயற்பாடு போன்றே அறிவுக் கையளிப்புச் செயற்பாடும் நிகழ்த்தப்படுகின்றது. ஒடுக்குவோர் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்குரிய அறிவை மாணவரிடத்து வைப்புச் செய்கின்றனர். மாணவரின் இருப்பைப் பற்றியும், அதனை மாற்றியமைத்தல் பற்றியதுமான தனித்துவச் சிந்தனை எழுச்சிகளை அது கட்டுப்படுத்தி விடுகின்றது. ஆக்கத் தெறிப்பு அற்ற நிலையில் மாணவர் உருவாக்கப்படுகின்றனர்.

ஒடுக்குமுறைக்கும், அனுபவத்துக்கும், கல்வி முறைக்கும் உள்ள தொடர்புகளை அவர் விரிவாக நோக்கினார். வறுமையில் உள்ள ஒரு மாணவர் பாடங்களை விளங்கிக் கொள்ள முடியாதிருந்திருந்தால் அவர் ஆற்றல் குறைந்தவரென்றோ விளக்கக்குறை உள்ளவரென்றோ கூற முடியாது.

ஒடுக்கு முறையானது அமைதிப் பண்பாட்டையும் பேசி வெளிப்படுத்தாதிருக்கும் வாய்மூடி மௌனப் பண்பாட்டையும் *(Culture of Silence)* உருவாக்கியுள்ளது. மேலாதிக்கத்துக்குக் கட்டுப்படுவோராய் அவர்களை மாற்றியமைப்பதற்கு கல்வி கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. மார்க்சிய வர்க்க அணுகுமுறையினை அவர் தமது ஆய்வுகளிலே பயன்படுத்தியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

ஒடுக்குமுறைக்கல்வி மாணவரிடத்தே எதிர்மானிடப்படுத்தலை *(Dehumanisation)* உருவாக்குகின்றது. மாணவரின் மனச்சான்று ஒடுக்குமுறைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படுகின்றது. நிஜங்களை அறியமுடியாத மானிடராக அவர்கள் உருவாக்கப்படுகின்றனர். தனிமனித இயல்புகளின் இழப்பை உருவாக்கிப் பொறிமுறையாகச் செயற்படுவோராய் உருவாக்கப்படுகின்றனர்.

காலனித்துவமும் ஒடுக்குமுறையும் ஒடுக்குமுறைக்குச் சாதகமான சுலோகங்களையும் அறிதலைப்புக்களையும் உருவாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமுள்ளன. எடுத்துக்காட்டாக, "மக்களால் ஆளப்படும் ஆட்சியே மக்களாட்சி" என்ற தலைப்பு கவர்ச்சி மிக்கதாக இருப்பினும், நடைமுறையில் அது நிகழ்வதில்லை பணவலிமையும், ஆதிக்கவலும் கொண்டோரே நடைமுறையில் மக்களாட்சியில் ஆள்வோராக உள்ளனர்.

ஒடுக்குமுறைக் கல்வியின் பிறிதொரு பரிமாணம் அது எடுத்துரைப்பு நோய்க்கு *(Narration Sickness)* உட்பட்டுவிட்டது. ஆசிரியரின் எடுத்துரைப்புச் சிக்கலுக்கு உட்பட்டு மனப்பாடம் செய்து ஒப்புவிப்போராய் மாணவர் மாற்றப்படுகின்றனர்.

மேற்கூறிய அவலமான செயற்பாடுகளை மாற்றியமைக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டதுதான் உற்றறி ஆசிரியம்.

போலோ பிரேரியைத் தொடர்ந்து உற்றறி ஆசிரியத்தையும் கல்வியையும் வளர்த்த சிந்தனையாளர்களுள் ஹென்ரி கிரொக்ஸ் முக்கியமானவர். பேராசிரியரான அவர் உற்றறிகல்வி, பண்பாட்டுக் கற்கைகள், இளைஞர் கற்கைகள், தொடர்பாடற் கற்கைகள் முதலிய துறைகளில் புலமைப் பங்களிப்பைத் தந்துள்ளார். மார்க்சியக் கருத்தியலை அடியொற்றி அவரின் சிந்தனைகள் மேற்கிளம்பின.

நவகாலனித்துவம், உலகமயமாதல், நவதாராண்மைவாதம், இராணுவவாதம், சமய அடிப்படைவாதம் முதலியவற்றுக்கு எதிரான செயற்பாடாக உற்றறி கல்வியை அவர் விரிவுபடுத்தினார். வெகுசன ஆசிரியம் *(Public pedagogy)* என்ற கருத்தாடலையும் உருவாக்கினார். மேலாதிக்கப் பண்புமிக்க அரசியலையும் சமூகத்தையும் மாற்றியமைப்பதற்குக் கல்வியைப் பலம்மிக்க கருவியாகப் பயன்படுத்துதலை கிரொக்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

வர்க்கநிலைப்பாட்டுடன் மட்டும் நின்றுவிடாது சமயம், இனத்துவம், பால்நிலை, இனக்குழுமநிலை. முதலாம் துறைகளை அடியொற்றிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான வகையில் உற்றறி கல்வியும் ஆசிரியமும் சமகாலத்தில் வளர்ச்சியடையத் தொடங்கியது.

நிஜமான மக்களாட்சியை வலுப்படுத்துதல், நீதியான சமூகத்தை உருவாக்குதல். அவற்றை அடைவதற்கான சமூக மாற்றத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கும் கல்வியை வழங்குதல் முதலியவை வலியுறுத்தப்படுகின்றன.

அதிகாரமற்றவர்களுக்கு வலுவூட்டுதல் சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றது. மரபுவழிக் கல்வி நடுநிலையானதும், அரசியல் சார்பற்றதும் என்று கூறுதல் தவறாகும். சமூக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய கல்வியில் சுரண்டலை நிராகரிக்கும் கருத்தியலுடன் கல்விச் செயற்பாடுகள் ஒன்றிணைக்கப்படும்.

உற்றறி சிந்தனைகள் கல்விச் செயற்பாட்டில் பல நிலைகளிலே செல்வாக்குச் செலுத்தி வருகின்றன.

கலைத்திட்டமானது ஒருதலைப்பட்சமாக ஒருசாராருக்கே நன்மை பயக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது என்ற கருத்துக்கள் மேலெழுந்துள்ளன. கலைத்திட்டத்தில் அமைந்துள்ள ஒருதலைப்பட்சமான பதிவுகள் சில வருமாறு:

1. ஐரோப்பாவுக்கு வெளியில் சிறப்பாக ஆசிய நாடுகளில் முன்னேற்றகரமாக வளர்ச்சி பெற்றிருந்த கணித அறிவும், கணிப்பு முறைகளும் கணித பாடத்தில் இடம்பெறவில்லை. அதனால் வளர்முக நாடுகளைச் சேர்ந்த மாணவர் தமது முன்னோர்கள் அறிவிலே பின்தங்கியவர் என எண்ணுகின்றனர்.

2. பாட ஏற்பாடும் கற்பித்தல் முறைகளும் எடுத்துக்காட்டுக்களும், மொழியாட்சியும் கல்விநிலையப் பண்பாடும் உயர் மத்தியதர மாணவர்க்கு அனுகூலமான முறையிலேதான் அமைக்கப்பட்டுள்ளன.

3. இலங்கையின் கலைத்திட்டத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் வரலாறு திரிபுபடுத்திக் கூறப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கலைத்திட்டத்திலே காணப்படும் மேலாதிக்கப் பண்பை எதிர்த்து உருவாக்கப்பட்ட சமூக வினைப்பாட்டு இயக்கமாக "ஒருதலைப் பட்சமான கலைத்திட்டத்துக்கு எதிர்ப்பு" *(Antibiascurriculum)* தோற்றம் பெற்றது. இனத்துவ மேலாதிக்கம், பால்நிலை மேலாதிக்கம், பண்பாட்டு மேலாதிக்கம் முதலியவை கலைத்திட்டத்தில் இடம்பெறலாகாது என்பதை அந்த இயக்கம் வலியுறுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் உற்றறி சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்த ஒரு வினைப்பாட்டு ஆசிரியர் ஐ.அமெரிக்காவைச் சேர்ந்த ஜொனதன் கோசொல்.

தான் ஆசிரியராகி முதல் ஓராண்டு பெற்ற அனுபவத்தை அடியொற்றி 'Death atanearly Age" என்ற புனைகதை சாரா நூலை அவர் எழுதினார். போஸ்டன் பொதுப் பள்ளிக்கூடத்தில் கருமை இன மாணவர் ஒருவரின் மனம் எவ்வாறு சிதறடிக்கப்படுகிறது என்பதை அந்த நூல் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளது. இருபது இலட்சம் பிரதிகளுக்கு மேல் அத விற்பனையாகியுள்ளமை, கல்விச் செயற்பாட்டை உற்றறிவுடன் நோக்கும் வாசகர் எண்ணிக்கைப் பெருக்கைச் சுட்டிக்காட்டுகின்றது.

கல்வியில் நிகழ்த்தப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆசிரியர், பெற்றோர், மாணவர் ஆகியோரை ஒன்றிணைக்கும் இலாப நோக்கம் கருதாத இயக்கமாக *"Education Action"* என்பதைத் தோற்றுவித்தார்.

கணிதம், விஞ்ஞானம் ஆகிய அறிவுப் புலங்களில் நிகழ்த்தப்பட்ட மேலைத்தேய மேலாதிக்கத்தை ஆராய்ந்து விளக்கியவர்களுள் இந்திய ஆய்வாளராகிய கலாநிதி சந்திர காந்ராஜா என்பவர் முக்கியமானவர். கணித அறிவு இந்தியாவில் இருந்து மேற்கு உலகுக்கு எவ்வாறு கடத்தப்பட்டுள்ளது என்பதை ஆதாரங்களுடன் அவர் நிறுவியுள்ளார். இந்தியாவின் மீநிலைக் கணினியாகிய "பரம்" *(Param)* என்பதை உருவாக்குவதிலும் அவரது பங்களிப்பு முக்கியமானது.

அல்பேட் ஐயன்ஸ்டின் சார்புக் கோட்பாட்டை உருவாக்க அடிப்படையாக பிரான்சு நாட்டவராகிய ஹென்ரி பொனிக்கெயரின் எழுத்துக்கள் அமைந்தமையை ராஜு விரிவாக விளக்கியுள்ளார்.

இவ்வாறாகக் கல்வியில் உற்றறி சிந்தனை பலகோணங்களிலே செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணிமச் சமூகமும் கல்வியும்

எண்ணிம (Digital) தொழில்நுட்பம், கல்வியின் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவத் தொடங்கியுள்ளது. சமூகமே எண்ணிம சமூகமாக வளர்ந்து வரும் நிலையில் கல்வியும் அதனுடன் இணைந்து கொள்கின்றது.

தொழில்நுட்ப வளர்ச்சி மிகையானதும், சமநிலை பிறழ்வுற்றதுமான வளர்ச்சியாகின்றது. மிகையான இலாபநோக்கை அடைவதற்கும், சுரண்டலைப் பரந்த அளவில் மேற்கொள்வதற்கும் தொழில்நுட்ப அறிவு தீவிரமாகப் பயன்படுத்தப்படுகின்றது. பன்னாட்டுப் பெரும் நிறுவனங்களின் இலக்குகளை எட்டுவதற்கு விஞ்ஞானிகள் பயன்படுத்தப்படுகின்றனர்.

கல்விநிலையில் 2001ஆம் ஆண்டில் அறிமுகமாகிய "விக்கிப்பீடியா" பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது. அறிவைக் கூட்டாகத் திரட்டிக் கொள்வதற்கும், பகிர்ந்துகொள்வதற்கும் அது வழிவகுத்தது. தொடர்ந்து வளர்ச்சி பெறத் தொடங்கிய பல இணைய வடிவங்கள் நேர்நிலையில் மட்டுமன்றி எதிர்நிலையிலும் கல்விச் செயற்பாடுகளிலே தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

2010ஆம் ஆண்டில் அறிமுகமாகிய "அப்பிள் ஐபாட்" (மடிகை) என்பது எடுத்துச் செல்லப்படக்கூடிய வகையில் இணைய வசதிகளைப் பயன்படுத்தும் செயற்பாட்டை ஏற்படுத்தியது. கைப்பேசிகளுக்கும் அந்தத் தொழில்நுட்பம் நீட்சி கொண்டது.

நேர்நிலையில் இணையம் என்பது ஒரு கல்விக் கண்ணாடியாக வளர்ச்சி கொண்டு வருகின்றது. அறிவை மக்களாட்சிப்படுத்துவதற்கு அது அனுகூலமாக இருக்கின்றதாயினும் அதன் நன்மைகள் சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளத்தினருக்கும் விளிம்பு நிலையினருக்கும் சென்றடையவில்லை. மத்தியதர வகுப்பினரே கல்வி நிலையில் அதன் நன்மைகளைக் கூடுதலாக அனுபவிக்கின்றனர்.

நீண்ட நேர விரயத்துடன் தேடப்பட்ட தகவல்களும் அறிவும் மிக விரைவாகக் கைகளுக்குள் வந்துவிடும் செயற்பாட்டை இணையம் தந்துள்ளது. மிகப் பெரிய நூலகம் கைகளுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. திரையோடு உறவாடும் புதிய கற்றல் முறையொன்று உருவாக்கம் பெற்றுள்ளது. முன்னர் நிலவிய கற்றல் பற்றிய சிந்தனைகளும் எடுகோள்களும் மாற்றமுறத் தொடங்கியுள்ளன.

கற்றலிலே "தற்றுணிவு" *(Assertative)* தொழில்நுட்பம், இணைய வழியாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. கற்றலுக்கு பிறர் மீது ஆளிடைத் தொடர்பாக முற்றுமுழுதாகத் தங்கியிருக்கும் நிலையிலிருந்து கற்போர் விடுவிக்கப்படுகின்றனர். அதேவேளை அளவுக்கு அதிகமான தகவல்களும் அறிவும் இணையத்தளம் வழியாக வரும்பொழுது அவற்றை முகாமை செய்யும் திறனை வளர்க்கும் ஆற்றலைக் கற்பித்தலில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. "புதிய ஆசிரியத்துவம்" இத்துறையில் ஊன்றிய கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

எண்ணிமச் சூழல், எண்ணிம நூலகம், எலத்திரன் நூல்கள், *(e-Books)* எலத்திரன் சஞ்சிகைகள் என்பவற்றினூடே நவீன கற்றலும் கற்பித்தலும் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வகைப் புதிய உளவியற் சூழலுடன் இசைந்து கற்பதற்குரிய மனக்கட்டமைப்பை ஏற்படுத்துதலும் வலுவூட்டுதலும் புதிய கல்விச் செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மாதிரி வடிவமைப்பை *(Simulation)* உருவாக்கிக்கற்றல் முன்னேற்றகரமான செயற்பாடாகக் கருதப்படுகின்றது. அத்தகைய ஒரு செயற்பாட்டை முன்னெடுப்பதற்கும் கணினி வழிக்கல்வி துணை நிற்கின்றது. நிஜமான ஒரு சூழலை மாதிரிகை வடிவில் உருவாக்கிக் கற்றலே மாதிரி வடிவமைப்புக் க்றலாகும்.

புதிய எண்ணிமச் சூழல் மூளையின் செயற்பாடுகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்துவதாக ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். கற்கும் ஊடகங்கள் மூளையின் தொழிற்பாடுகள் மீதும் நடத்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் செல்வாக்குகளை ஏற்படுத்துதல் மனித அனுபவங்கள் வாயிலாக அறியப்பட்டதொன்றாகும்.

வாய்மொழிக் கற்கும் மரபை எழுத்துவழிக் கற்றல் மரபு மாற்றியமைத்தது. அந்நிலையில் மனிதரின் மனனம் செய்யும்திறன் வீழ்ச்சியடைந்து விடும் என்ற பயம் அக்காலத்து ஆசிரியர்களிடத்து நிலவியது. அச்சுப் பொறி கண்டுபிடிக்கப்பட்டு நூல்கள் பெருமளவில் வரத் தொடங்கிய சூழலில் பெருந்தொகுதியான அறிவுத் தொகுதியை மாணவர் எவ்வாறு கையாளப் போகின்றனர் என்ற கேள்வி எழுந்தது.

புகழ்பெற்ற இருத்தல் வாத மெய்யியலாளராக விளங்குபவர் நித்சே அவர்கள் அவருக்குக் கண் சுகயீனம் ஏற்பட்ட வேளை, கையால் எழுதுவதைவிட்டு, தட்டச்சு வழியாகத் தமது எழுத்தாக்கங்களை மேற்கொண்டார். அந்த அமைப்பியல் மாற்றம் அவரின் எழுத்து நடையில் மாற்றங்களை ஏற்படுத்தியதென ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். அதனை அடியொற்றி மாற்றமுறும் மூளையின் செயற்பாடும் அளிக்கை முறையும் தொடர்பான உளவியற் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

நவீன எண்ணிமச் சூழலில் பேனாவும் கடதாசியும் கைவிடப்பட்டு, விசைப்பலகையுடன் தொழிற்படும் நிலைதோற்றம் பெற்று வருகின்றது. அந்தச் செயற்பாடு ஆக்கமலர்ச்சி வெளிப்பாட்டிலும் ஒருவருக்குரிய எழுத்து நடையிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. புதிய எண்ணிமச் சூழல் படைப்பு மலர்ச்சிச் செயற்பாட்டுக்கு வலுவூட்டியுள்ளதா? அல்லது வலுவிழக்கச் செய்துள்ளதா? என்ற வினாவும் எழுப்பப்பட்டு வருகின்றது. அதன் தொடர்பாக "எண்ணிமத் தலைமுறை" "கூகுள் தலைமுறை" முதலாம் புதிய சொல்லாடல்களும் தோற்றம் பெற்றுள்ளன.

கற்றல் தொடர்பாக முன்வைக்கப்படும் ஒரு முக்கிய கருத்து ஆழ்ந்த *(Deep)* கற்றலாகும். தனித்த ஒரு துறையில் ஆழ்ந்து கவனம் செலுத்த முடியாத குறுக்கீடுகளும் தடைகளும் ஏற்படும் வாய்ப்புக்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. அவற்றை மீறி உற்றறி சிந்தனையும் கருத்துத் தெறிப்பும் கலந்த சிந்தனையும் ஆழ்கற்றலிலே விளைத்திறனுடன் செயற்பட்ட வண்ணமிருக்கும். புதிய அறிவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய அறிவுடன் ஒன்றிணைத்து இயக்குதலும் ஆழ்ந்த கற்றலாகின்றது. எண்ணிமத் தொழில்நுட்பத்தின் துணையோடு ஆழ்ந்த கற்றலை வலுப்படுத்தலும் வளப்படுத்தலும் சாத்தியமானவை.

உரைய *(Narrative)* ப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பழைய கற்றல் - கற்பித்தல் முறைமை இன்று எண்ணிமப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தலுக்கு நிலைபெயர்ந்துள்ளது. அந்நிலையில் பழைய செயற்பாடுகளிலும் பெறுமானங்களிலும் இருந்து விடுபட வேண்டியுள்ளது.

அந்நிலையில் மாற்றங்களை முகாமை செய்தலை ஆசிரியரும் மாணவரும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பெற்றோரும் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

பல்வேறு முகவர்களுக்கிடையேயான அறிவும் தகவல்களும் விரைந்து பகிர்ந்து கொள்ளப்படத்தக்கதாக இருக்கும் நிலையில், பிரதிகூலமடைந்தோரும் விளிம்பு நிலை பெறமுடியாதிருக்கின்றனர். அறிவின் மக்களாட்சி மயப்பாடு சமூக அடிநிலையினருக்குச் சென்றடையாதிருத்தலைக் காண முடிகிறது.

பரந்துபட்ட இணையத் தள அறிவினூடே தனிமாணவர் ஒருவித திணறல் நிலையையும், **"இணையப் பதகளிப்பையும்"** அனுபவிக்கத் தொடங்குகின்றனர். அவற்றின் பின்னணியில் "எண்ணிம எழுத்தறிவு" *(Digital Literacy)* என்பது விரிந்த கருத்தாடல்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. எழுத வாசிக்கத் தெரிந்திருக்கும் நிலை "எழுத்தறிவு" எனப்படும். குறிப்பிட்ட பாடத்துறையில் அறிவிருத்தலைக் குறிப்பிடுவதற்கும் பாடத்துடன் இணைத்து "எழுத்தறிவு" என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படுதல் உண்டு. "தகவல் எழுத்தறிவு", "மனவெழுச்சி எழுத்தறிவு" முதலாம் தொடர்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இருபத்தோராம் நூற்றாண்டின் அறிவுப் பெருக்கத்தோடு முழுமையாக இணையும் ஆற்றலும் ஆற்றல்களை வெளிப்படுத்தும் திறன்களும், எண்ணிமத் தொழில்நுட்பங்களோடு தொடர்புபடுத்தப் பட்டு "எண்ணிம எழுத்தறிவு" விளக்கப்படுகின்றது. அதனூடே ஒருவர் தமக்குரிய அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளலும் வலியுறுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுடன் தொடர்புடையதான "முக்கோணத் தேர்ச்சிகள்" என்ற கருத்தாக்கமும் முன்வைக்கப்பட்டுள்ளது. முக்கோணத் தேர்ச்சிகளுள்

(அ) உற்றறி சிந்தனைப் பற்றிய கோட்பாடுகள்

(ஆ) தெறித்துச் செயற்படும் ஆற்றல்

(இ) அவற்றை எண்ணிம வளங்கள் மீது பிரயோகித்தல் முதலியவை உள்ளடக்கப்படுகின்றன.

எண்ணிமச் சூழலில் தனிநபரின் கற்றற் கோலங்களும் வாழ்க்கைக் கோலங்களும் மாற்றமடைந்த வண்ணமுள்ளன. இணையம் சமூகத்தின் கண்ணாடியாகின்றது. சிறப்புத் தேவைகளைக் கொண்ட கற்போருக்கு இணைய வசதிகள் ஈடுகொடுக்கத்தக்க வகையில் இன்னமும் முழுமை பெறவில்லை என்ற கருத்து ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது.

இலண்டன் பொருளியற் பள்ளிக் கூடத்தைச் சேர்ந்த எல்லின் கெல்ஸ்பர் எண்ணிமச் சூழல் தொடர்பான ஒரு புதிய கருத்தை முன்வைத்துள்ளார். "எண்ணிம கீழ்வகுப்பு" *(Digital Underclass)* என்ற சமூக வகுப்பின் தோற்றத்தை அது குறிப்பிடுகின்றது. எண்ணிம நிலைகளால் ஒதுக்கி வைக்கப்பட்டோர் அவ்வாறு சுட்டப்படுகின்றனர். அது விவாதத்துக்குரிய ஒரு கருத்தாகவுமுள்ளது.

அதேவேளை இணையவழியான பிறிதொரு பயனுள்ள செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இணைய வழியான சீர்மியம் செய்யும் நடவடிக்கைகளும், தீர்வுகளை நோக்கி நகரும் ஆற்றுப்படுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றன. "ஒவ்வொரு சிறுவரையும் கருத்திற் கொள்ளல்" என்ற செயற்றிட்டம் உடல்நலம், பாதுகாப்பு, உற்றடைதல், நேர்முகப்பங்களிப்பை மேற்கொள்ளல், பொருண்மிய நல்லேற்பாட்டை நோக்கி நகர்ந்து கொள்ளல் முதலியவை அவற்றினூடாக ஈட்டப்படுகின்றன.

உடல் நலம், உளநலம், மனவெழுச்சிநலம், சமூகநலம் போன்ற அனைத்தையும் இயக்கக்கூடிய இணைய அமைப்புச் சூழலில் மனித ஆக்கம் ஒரு புறம் நிகழ எதிர்மானிடப்படுத்தலும் இன்னொருபுறம் நிகழ்ந்த வண்ணமுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக இயக்கம், சமூக முரண்பாடு, சுரண்டற் கோலங்கள், வர்க்க நிலைவரம், மாற்றத்துக்குரிய விசைகள் முதலியவற்றின் பின்புலத்திலே தான் "எண்ணிம சமூகம்" என்பதை நோக்க வேண்டும். சமூகத்தின் பிறநிலைவரங்களை மறந்து "எண்ணிம சமூகம்" என்பதை மட்டும் தனித்து நோக்குதல் மேலோட்டமான அணுகுமுறையாகவே இருக்கும்.

சமூக மாற்றத்தை இயங்கியல் தருக்கத்தின் வழியாகத் தரிசிக்க வேண்டிய தேவையை உலகமயமாக்கலும், எண்ணிமச் சூழலும் உருவாக்கி வருகின்றன. பல்வேறு கற்றல் வசதிகளை உருவாக்கி வரும் எண்ணிமச் சமூகத்தை பல்தேசிய நிறுவனங்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் நவீன காலனித்துவத்தைக் கட்டமைப்புச் செய்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி நிலையங்களில் வேதனைத் திணிப்பு

"வேதனைத்திணிப்பு" *(Bullying)* என்பது ஒரு மேலாதிக்கச் செயற்பாடு. கல்வி நிலையங்களிலும், வேலைத்தலங்களிலும் பலம் மிக்கோரால் இது பலங்குன்றியோர் மீது மேற்கொள்ளப்படுகின்றது. இதனைத் திரும்பத் திரும்ப மேற்கொள்ளும் பொழுது பாதிக்கப்படுவோர் உடல் சார்ந்ததும், உளம் சார்ந்ததுமான நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். தீராத கவலைக்கு உட்பட்டு கல்வி நிலையங்களை விட்டு வெளியேறியும் விடுகின்றனர். தாங்க முடியாத கவலையால் தம்மை அழித்துக் கொள்வோரும் உளர்.

மேலும் "இணைய வழியாக வேதனைத் திணிப்பு" என்ற தோற்றப்பாடு அண்மைக்காலமாக விரைந்து வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது. மூன்று முக்கியமான வழிகளில் வேதனைத் திணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

1. சொல்சார்ந்த வழி
2. சமூக வழி
3. உடல் சார்ந்த வழி/ பௌதிகவழி

1. ஒருவர் மீது இழிவுப் பெயர்களைச் சூட்டுதல், செய்யாத குற்றத்தைச் செய்ததாகக் கூறுதல், பாலியல் சார்ந்த பெயர்களைச் சூட்டுதல், ஆபத்து விளைவிக்கப்படும் எச்சரிக்கை விடுதல் முதலியவற்றை மீளமீளச் செய்யும்பொழுது செய்கையை மேற்கொள்பவருக்கு ஒருவித மகிழ்ச்சியும், தாக்கத்துக்கு உள்ளாக்கப்படுபவருக்குத் துன்பமும் கவலையும் தோற்றம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பலர் முன்னிலையில் ஒருவரைத் தொடர்ந்து அவமானப்படுத்துதல், அவரைப் பற்றிய வதந்திகளைப் பரப்புதல், அவரது சமூக நடத்தைகளிலே தொடர்ந்து தலையீடுகளை மேற்கொள்ளல் முதலியவை சமூகம் சார்ந்தவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

3. தள்ளிவிடுதல், விழுத்திவிடுதல், உடல் ஆபத்துக்களை ஏற்படுத்துதல், குறிப்புப் புத்தகங்களையும் கல்லூரி ஆவணங்களையும் எடுத்து ஒழித்து வைத்தல், திருடுதல் குறிப்பிட்ட நபரின் சொத்துக்களுக்குத் தீங்கு விளைவித்தல் முதலியவை இப்பிரிவில் இடம்பெறுகின்றன.

வேதனைத் திணிப்புத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாக அமைதல் குறிப்பிடத்தக்கது. பலம் மிக்கோரால் அது மேற்கொள்ளப்படும் பொழுது வலிமை குன்றியோர் தாக்குப் பிடிக்க முடியாதுள்ளனர்.

கல்லூரிக்குப் போகும் வழியிலும் வரும் வழியிலும், விளையாட்டிடத்திலும், இடைவேளையிலும், ஆசிரியர் வராத வேளைகளிலும் வேதனைத் திணிப்புச் செயற்பாடு பெரும்பாலும் நிகழ்த்தப்படுகின்றது.

ஆறாம் வகுப்புக்கும் பதின்மூன்றாம் வகுப்புக்கும் இடைப்பட்ட மாணவர்களில் 25% அளவிலானோர் அச்செயற்பாட்டுக்கு உட்பட்டு வருவதாகச் சொல்லப்படுகின்றது. உயர்கல்வி நிலையங்களிலும் வேலை நிலையங்களிலும் பெண்கள் மீதான வேதனைத் திணிப்பு மிகையாக இடம்பெற்று வருகின்றது. இச்செயற்பாடு தனிநபராலும் மேற்கொள்ளப்படுகின்றது. குழுக்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒருவரின் இனம், சாதி, சமயம், பண்பாடு, வதிவிடம், உடல்தோற்றம், உடல்மொழி, பேச்சுமொழி, பால்நிலை, சேர்ந்துள்ள குழு முதலியவற்றை அடியொற்றி வேதனைத் திணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

மன உடைவு கொண்டோர், ஆளுமைக் குழப்பம் கொண்டோர், மனவெழுச்சிக் குழப்பம் கொண்டோர், வேதனைத் திணிப்புச் செயற்பாடுகளிலே பொதுவாக ஈடுபடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பாதிக்கப்படும் மாணவர் கவலையுடன் தனிமைப்படுகின்றனர். மன அழுத்தங்களுக்கு உட்படுகின்றனர். அவர்களின் தற்படிமம் பாதிப்புக்கு உள்ளாகின்றது. கவலையால், கற்கும் திறன் வீழ்ச்சியடைகின்றது. தொடர்ச்சியான வேதனைத் திணிப்புக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொண்ட பள்ளிக்கூட மாணவரும் பல்கலைக்கழக மாணவரும் இருக்கின்றனர்.

மனவெழுச்சி நுண்மதி கூடியவர்கள் வேதனைத் திணிப்பைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களாயிருத்தல் கண்டறியப்பட்டுள்ளது. சமூக நிரலில் மேல் அடுக்குகளில் உள்ள மேட்டுக்குடியினர் மீது வேதனைத் திணிப்பு பொதுவாக நிகழ்த்தப்படுதல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. நலிந்தவர்களும் சமூக நிலையில் பலம் குன்றியோருமே வேதனைத் திணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

16ஆம் நூற்றாண்டிலே ஆங்கில மரபில் *Bully* என்ற சொல் இங்கிதமான எடுத்தியம்பலுக்குப் பயன்படுத்தப்பட்டது. 17ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இந்தச் சொல் இன்றைய கருத்து வடிவத்தைத் தாங்கி மாற்றம் பெற்றது.

மரபு வழியான கல்வி நிறுவனங்களில் தனிமாணவரைக் குறிவைத்து வேதனைச் திணிப்புச் செயற்பாடுகள் நிகழ்த்தப்படவில்லை. ஏனெனில் தொன்மையான வரன்முறைக் கல்வி உயர்வகுப்பினருக்கு மட்டுமே உரியதாயிற்று. ஒரே வர்க்கத்தினர் கல்வி கற்கையில் முரண்பாடுகள் பெரிதும் எழவில்லை.

அனைவருக்கும் கல்வி என்ற செயற்பாடு வளர்ச்சி பெறத் தொடங்க, கல்வி நிலையங்கள் பல அடுக்கினரைக் கொண்ட நிறுவனங்களாக மாற்றம் பெறத் தொடங்கின. கருத்துநிலையிலும் செயல்நிலையிலும் முரண்பாடுகள் வளர்ச்சியடைந்தது. அவற்றின் வெளிப்பாடுகளுள் ஒன்றாக வேதனைத் திணிப்புச் செயற்பாடு இடம்பெறத் தொடங்கியது.

பெண்கள் மீதான வேதனைத் திணிப்புக்களில் பாலியல் துன்புறுத்தல்களும் பொதுவாக இணைந்திருக்கும். மனவெழுச்சி வாயிலான துன்புறுத்தல்களே பெண்கள் மீது அதிகமாக விடுக்கப்படுகின்றன. பெண்களிடத்து சமூகம் சார்ந்த தொடர்புறு பயத்தையும் *(Social Phobia)* அது ஏற்படுத்துகின்றது. சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழ்ச்சிகளையும் மக்கள் கூட்டத்தையும் காணும் பொழுது, இனம் தெரியாத பயம் அவர்களிடத்தே தோன்றுகின்றது.

வேதனைத் திணிப்பை எதிர்ப்பவர்கள் மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதீத பருமனைக் கொண்வர்களே கூடுதலான வேதனைத் திணிப்புக்கு உள்ளாதலும் கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வேதனைத் திணிப்புக்கு உள்ளாகும் மாணவர்கள் ஆயுதங்களை தங்களுடன் மறைத்து எடுத்துச் செல்லலும் கண்டறியப்பட்டுள்ளது. கல்வி நிலையங்களிலே துப்பாக்கிப் பிரயோகங்களும் அதனால் ஏற்பட்டுள்ளது.

வேலைத் தலங்களிலே நிகழும் வேதனைத் திணிப்புச் செயற்பாடுகள் ஒருவரின் தொழிற்பாட்டுக்கு சவால்களாகவுள்ளன. தொழில்நிலையங்களிலே காணப்படும் பதவிகள், போட்டிகள், குழுச் செயற்பாடுகள் முதலியவற்றை அடியொற்றி வேதனைத் திணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது. தொழில் மேற்பார்வையாளரும் வேதனைத் திணிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் கண்றியப்பட்டுள்ளது. பெரும்பாலும் பெண்களே அத்தகைய தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

திருமணமாகாத பெண்களும் விவாகரத்துப் பெற்ற பெண்களுமே ஒப்பீட்டளவிற் கூடுதலான தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுதலும் கண்டறியப்பட்டுள்ளது.

வேலை நிலையங்களின் இயல்புக்கும் வேதனைத் திணிப்புச் செயற்பாடுகளுக்குமிடையே தொடர்புகள் இருத்தலையும் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. வாண்மை சார்ந்ததும் விஞ்ஞானம் மற்றம் தொழில் நுட்பம் சார்ந்த ஆய்வு நிறுவனங்களிலும் வேதனைத் திணிப்பு ஒப்பீட்டளவிற் குறைவாகவே காணப்படுகின்றது.

தொழில் நிறுவனங்களுக்குரிய பண்பாட்டுக்கோலமும் வேதனைத் திணிப்புச் செயற்பாட்டிலே செல்வாக்குச் செலுத்துகின்றது. அந்தச் செயற்பாடு நிறுவனங்களின் விளைதிறனைப் பொதுவாகப் பாதிப்படையச் செய்தலும் கண்டறியப்பட்டுள்ளது.

தொழில் நிலையங்களில் இடம்பெறும் வேதனைத் திணிப்பின் ஒருவகை, குறித்த நபர் மீது கூடுதலான வேலைச் சுமையைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணித்துக் கொண்டிருத்தலாகும். அதனால் வேலையை விட்டு விலகுவோரும் உளர்.

வேதனைத் திணிப்பு இன்று இணைய வழியாகப் பெருமளவிலே மேற்கொள்ளப்படுகின்றது. இணைய இணைப்புள்ள கைப்பேசிகள் கல்லூரி மாணவர்களிடத்து பரவலாக இருப்பதனால் எதுவித சிரமமுமின்றி வேதனைத் திணிப்பு பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. இதுவும் பெண்களுக்கு எதிராகவே பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பாலியலோடு தொடர்புடைய விகாரமான செய்திகள், பயமுறுத்தல்கள் முதலியவற்றின் அடிப்படையான வேதனைத் திணிப்புகள் பெருமளவிலே நிகழ்த்தப்படுகின்றன. சமூக வலைத்தளங்கள், எலத்திரனியல் அஞ்சல், குறுஞ்செய்திகள், கைப்பேசி அழைப்புக்கள், இணைய இணைப்புகள் என்றவாறு பலநிலைகளிலே அவை முன்னெடுக்கப்படுகின்றன. அந்நிலையில் அவற்றிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகள் இன்று மாணவர்க்குச் சொல்லிக் கொடுக்கப்டுகின்றன.

வேதனைத் திணிப்பு என்பது உலகளாவிய ஒரு பிரச்சினையாக மேலெழுந்துள்ளது. அதற்கு முகம் கொடுப்பதற்கான சட்டவாக்கங்கள் இடம்பெற்று வந்தாலும் அந்தச் செயற்பாடு தொடர்ந்தும் அதிகரித்த வண்ணமுள்ளது. நவீன பொருண்மியக் கோலங்களும், உலக மயமாக்கலை அடியொற்றிய பண்பாட்டுத் தளமும் அந்த அதிகரிப்புக்குப் பின்புலமாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிலையங்களில் நகைப்பு வதை

"நகைப்புவதை" என்பது "பகிடி வதை" என்றும் குறிப்பிடப்படும். தாக்கப்படுபவருக்குத் துன்பத்தையும், தாக்குபவருக்கு விகாரமான மகிழ்ச்சியையும் இது கொடுக்கின்றது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் முதலாம் நாடுகளின் உயர்கல்வி நிறுவனங்களிலே நகைப்புவதை *(Ragging)* என்ற சொல்லாடல் இடம்பெற்று வருகின்றது.

கல்வி நிலையங்களுக்குப் புதிதாக வருவோர் மீது உடலியல் மற்றும் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துமாறு இது நிகழ்த்தப்படுகின்றது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இச்செயற்பாடு "வதைச் சடங்கு" *(Hazing)* என அழைக்கப்படுகின்றது.

நகைப்பு வதைக்கு ஆதரவு தருவோர் அது புரிந்துணர்வையும், குழு இணக்கத்தையும், எதையும் தாங்கும் ஆற்றலையும் வளர்க்கும் என்று அலங்காரமாகக் கூறுவர். ஆனால் நடைமுறையில் அது உயிர்க் கொலைகளாக மாறிய சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மனவெழுச்சிக் குழப்பங்களுக்கும் உளநெருக்கீடுகளுக்கும் அவர்கள் உள்ளாக்கப்படுகின்றனர்.

தொன்மையான கல்வி நிறுவனங்களில் இந்தச் செயற்பாடு இடம்பெற்றிருக்கவில்லை. பிரித்தானிய காலனித்துவக் கல்வி முறையோடுதான் இது வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. உலக அரங்கில் இது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே வளர்ச்சி கொண்டது.

அதற்கு முன்னதாக இது இராணுவ நிலையங்களிலும் இராணுவக் கல்லூரிகளிலும் இடம்பெற்று வந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் போரில் ஈடுபட்டவர்கள் கல்லூரிகளுக்குப் படிப்பதற்கு வரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்க, நகைப்பு வதை அங்கே இடம்பெறத் தொடங்கியது. அவர்களைப் புதிய சூழலுக்கு இசைய வைப்பதே ஆரம்பகால நோக்கம்.

பின்னர் நகைப்புவதை என்பது கல்வி நிலையங்களிலே புகுவோர்க்கான வதையாயிற்று. புதிதாக வரும் மாணவரை இசையவும், பொருந்தவும் வைப்பதற்கு இதனைத் தவிர வேறுவழிகள் இல்லையா என்ற வினா எழுப்பப்படுகின்றது.

மாணவரை இசைய வைத்துப் பொருந்தச் செய்வது என்ற உளப்பாங்கு ஒரு மேலாதிக்க நோக்கு. நகைப்பு வதையை மேற்கொண்டு புதிய மாணவரிடத்துத் தோன்றும் அவலங்களில் இன்பம் காணும் முதுமாணவரின் விகார உளநிலை, உளவியலாளரால் அவ்வப்போது ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. நகைப்புவதையால் பாதிக்கப்படும் மாணவரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்த வண்ணமுள்ளது.

அண்மைக்காலத்தைய புள்ளிவிபரங்களின்படி நாற்பது இலட்சம் மாணவர் வரை அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளிலே பாதிப்புக்கு உள்ளாகின்றனர். அதில் ஒரு பகுதியினர் கல்விநிலையங்களை விட்டு வெளிநீங்கிவிடுகின்றனர்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற நகைப்ப வதையின் முக்கியமான அவலங்களின் பதிவுகள் சில வருமாறு:

1. பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட மாணவியான ரூப ரட்ன சீலி என்பவர் உடலியல் சார்ந்த வதைக்கு உட்பட்டு, இராமநாதன் மண்டப மேல் நாடியிலிருந்து கீழ் நோக்கிப் பாய்ந்தார். இந்த நிகழ்ச்சி 1975ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

2. 1993 ஆம் ஆண்டில் ருகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமிந்த புஞ்சிகேவா என்ற மாணவர் வதைக் கொடுமையால் உயிர் துறந்தார்.

3. 1997 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடத்தைச் சேர்ந்த எஸ்.வரப்பிரகாஸ் என்ற மாணவர் கொல்லப்பட்டார்.

4. 2002 ஆம் ஆண்டில் சிறீஜயவர்த்தன பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமந்த விதானகே என்ற மாணவர் நகைப்பு வதைக்கு எதிரான இயக்கத்தை முன்னெடுத்தமையால் கொல்லப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. *2011* ஆம் ஆண்டு ருகுணுப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு பெண் மாணவி வதையின் கொடுமையால் உடற்செயற்பாட்டின் ஒரு பகுதியை இழந்தார்.

மேற்கூறியவை வகை மாதிரிக்குச் சில பதிவுகள். இன்னும் வெளிவராதவை ஏராளம். நீடித்த உளத்தாக்கங்கள் ஏற்படுத்தியவையும் உள்ளன. பின்னர் கல்வியை இழந்த உளக் குழப்பத்துக்கு உள்ளானவர்களும் இருக்கின்றனர். வதையை மேற்கொள்ளும் கால எல்லையை நீட்டிச் செல்வதனால் ஏற்படும் அவலங்களையும் புதிய மாணவர் அனுபவிக்கின்றனர்.

புதிய மாணவருக்குரிய ஆடை இயல்புகளும் வற்புறுத்தப்படுகின்றன. அந்த அடையாளத்தைக் கொண்டு புதிய மாணவர் எந்த மூலை முடுக்கிலும் இனங்காணப்பட்டு வதைக்கு உட்படுத்தப்படக் கூடியதாக இருக்கும்.

வாய்மொழி வாயிலான வதையில் தூஷண வார்த்தைகளே பெருமளவிலே பயன்படுத்தப்படுகின்றன. அது ஒருவித உளவியல் நிறைவை வதை செய்வோருக்குக் கொடுக்கின்றது. தூஷண வார்த்தை களைக் கொண்ட பாடல்களும் உருவாக்கிப் பாடுவிக்கப்படுகின்றன.

உடல்வதை மிகவும் குரூரமாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழக விடுதிகளிலே தங்கியிருக்கும் புதிய மாணவர்களே இதனால் கூடிய அளவில் பாதிக்கப்படுகின்றனர். பெண்கள் விடுதிகளிலும் உடல்வதை இடம்பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது. உடல் வதைகளில் ஒரு வகையானது பாலியல் உறுப்புக்களுடன் தொடர்புபட்டிருத்தலும் கவனத்துக்குரியது.

முதுமாணவர் எல்லாரும் நகைப்பு வதைச் செயற்பாட்டில் ஈடுபடுதல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. வதைக்கு எதிரான இயக்கங்களையும் முது மாணவர் சிலர் ஒன்றிணைந்து உருவாக்கி வருகின்றனர். ஆனால் நடைமுறையில் அது வெற்றியைக் கொடுக்கவில்லை.

*1998*ஆம் ஆண்டின் *20*ஆம் இலக்கச் சட்டம் நகைப்பு வதைக்கு எதிராக இலங்கையில் உருவாக்கப்பட்டது. அகப்படுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிக்கப்படக்கூடிய சட்ட ஏற்பாடு இருக்கின்றதாயினும், வதை தொடரும் செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

முதுமாணவர்கள் துணைவேந்தரின் கட்டளையை ஏற்கமறுத்து நகைப்பு வதையில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சமிந்த விஜய பண்டார தமது பதவியை இராஜினாமாச் செய்தமை இலங்கையில் நிகழ்ந்த ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சி 2006ஆம் ஆண்டிலே இடம்பெற்றத.

நகைப்பு வதையில் ஈடுபடுவோருக்கும் அதன் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபடுவோருக்கும் இடையே முரண்பாடுகளும் மோதல்களும் பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

பல்கலைக்கழக அரசியலுக்கும் வெளிஅரசியலுக்குமிடையேயுள்ள தொடர்புகள் கடந்த கால் நூற்றாண்டுகளாக இலங்கையிலே மேலோங்கி வருகின்றன. துணை வேந்தர் நியமனம் பேரவை உறுப்பினர் நியமனம் முதலியவை முற்றிலும் அரசியல் மயப்பட்டுவிட்டன. பிறநியமங்களிலும் ஆற்றலைக் காட்டிலும் அரசியல் தலையீடுகளே மேலோங்கி நிற்பதாகச் சொல்லப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர் அவைகளும் வெளியில் உள்ள அரசியற் கட்சிகளுடன் தொடர்புபட்டு இயங்கும் நிலை காணப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர் அரசியற் கட்சிகளின் இளைஞர் இயக்கங்களினது உறுப்பினராகவும் உள்ளனர்.

பல்கலைக்கழக மாணவரதும், நிர்வாகத்தினரதும் செயற்பாடுகளை மேற்கூறிய விரிவான அரசியற் பின்புலத்திலேதான் நோக்குதல் வேண்டும். அதேவேளை பதவிகளை எட்டிப் பிடித்தல், மாணவரிடையே புகழ் தேடிக் கொள்ளல் என்ற பிறிதொரு வகையான அரசியலும் செயற்பட்ட வண்ணமுள்ளது.

அத்தகைய பின்புலத்திலேதான் மாணவரின் நடத்தைகளை விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்துதல் வேண்டும். சமூக நீதியை நிலை நிறுத்தும் முற்போக்குக் கருத்தியல் தெளிவுடைய மாணவர் இயக்கங்களும் பல்கலைக்கழகங்களிலே செயற்படுதலை விதந்து குறிப்பிட வேண்டியுள்ளது. கருத்தியல் தெளிவுடையோரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வியில் நிகழ்த்தப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டி அண்மையில் போராட்டங்களை மேற்கொண்டனர்.

அதேவேளை தீவிர பிற்போக்குச் சிந்தனை கொண்டோரின் செயற்பாடுகளும் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வருகின்றன. அதாவது, நாட்டின் இயல்பு பல்கலைக்கழகங்களிலும் எறிவு செய்து காணப்படுகின்றது.

இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் மூவின மாணவரும் பயிலும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. பிரச்சினைகள் தோன்றும் பொழுது பெரும்பான்மை இனமாணவர் சாதகமான நிலையில் உள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

சமூக ஏற்றத்தாழ்வுகளும் வர்க்க நிலைப்பட்ட ஏற்ற இறக்கங்களும் பல்கலைக்கழக மாணவரின் நடத்தைகளிலே செல்வாக்குச் செலுத்துகின்றன. இது இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய நிலையிலே காணப்படும் ஒரு பொதுவான தோற்றப்பாடு. இதனை விளக்கும் ஒரு நகைச்சுவைக் கதையும் பல்கலைக்கழக மாணவரிடத்து நிலவி வருகின்றது. அந்தக் கதை வருமாறு:

உலகப் பெரும் பணக்காரர் ஒருவரின் மகன் இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றுக்குப் படிக்க வந்தான். ஆடம்பர வீடு ஒன்றிலிருந்து அவன் பல்கலைக்கழகத்துக்குச் சென்றுவர மிக விலையுயர்ந்த கார் ஒன்றை தந்தையார் வாங்கிக் கொடுத்தார். சேர்ந்து ஓரிரு நாட்களுக்குப் பின் அவன் தந்தையாருடன் தொடர்பு கொண்டான்... தன்னுடன் படிக்கும் மாணவர் அனைவரும் புகைவண்டியிலேதான் பல்கலைக்கழகத்துக்கு வந்து போகிறார்கள். தான் மட்டும் காரில் சென்று வருவதாகக் கவலையுடன் கூறினான். தந்தையார் சொன்னார் "கவலைப்படாதே, நான் உனக்கு ஒரு புகைவண்டியை வாங்கித் தந்து விடுகிறேன்"

சமூக இயல்பைப் பிரதிபலித்துக் காட்டுவதுதான் கல்வி நிலையங்கள். பல்கலைக்கழகங்கள் இன்னமும் சமூகத்தின் அடிமட்ட இளைஞர்களின் கோட்டைகளாக வளர்ச்சியடையவில்லை. மத்தியதர வகுப்பினரின் கோட்டைகளாகவே பெருமளவில் வளர்ச்சியுற்றுள்ளன. அவர்களின் குணவியல்புகளையும் நடத்தைகளையுமே அவை பிரதிபலிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்ப்பை வெளியிடும் ஆடை அணிகலன்கள்

இளைஞரின் எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஒரு முக்கிய வடிவமாக இருப்பது ***"எதிர் முகிழ்கோலம்"*** *(Anti Fashion)* ஆடம்பரமான ஆடை அணிகலன்களை அணிவதற்குரிய ஓர் எதிர்குரலாகவும் நியமங்களுக்கு எதிர் நடவடிக்கையாகவும் அச்செயற்பாடு மேலெழுந்துள்ளது.

"சிற்றியல்" *(Minimalism)* என்ற கலைக்கோட்பாடு ஓவியம், சிற்பம், கட்டடக் கலை, இசை, ஆடல் என்ற அனைத்துக் கலைகளிலும் ஆடம்பரமற்ற எளிமையை வலியுறுத்தியது. 1960ஆம் ஆண்டிலிருந்து அதன் வளர்ச்சி மேலெழத் தொடங்கியது. ***"குறைந்த அளவே நிறைந்த அளவு"*** *(Less is more)* என்பது அக்கோட்பாட்டாளர்களின் முன்மொழிவு.

சுருக்கமான எடுத்தியம்பல் வாயிலாகப் பெரும் வீச்சுக்களை ஏற்படுத்துதல் ஜப்பானிய "சென்" *(Zen)* மரபிலே காணப்பட்டது. இலக்கிய நிலையில் அந்தச் செயற்பாடு தமிழ் மரபில் "குறள்" எனப்பட்டது. பொருண்மிய நிலையில் அது "சிக்கனம்" எனப்பட்டது.

ஆடம்பர வாழ்வு, ஆடம்பர ஆடை அணிகலன், பணச்செருக்கு மேலாதிக்கம் ஆகியவற்றை நிராகரித்து இளைஞர் எதிர் முகிழ் கோலத்தை உருவாக்கத் தொடங்கினர்.

நிலை நிறுத்தப்பட்ட ஆடை அலங்கார நியமங்களை மீறும் பொழுது ஒருவித உளநிறைவை ஆண் மற்றும் பெண் இளைஞர் அனுபவித்தனர். அடக்குமுறைகளுக்கு உள்ளாகிய நிலையில் எதிர்ப்பும், நிராகரிப்பும் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன.

பெண்ணியச் சிந்தனைகளின் வளர்ச்சியும் எதிர்முகிழ் கோலச் செயற்பாடுகளுக்கு இட்டுச் சென்றது. ஆடைகளின் அடிப்படையில் பெண்கள் ஆண்களோடு ஒப்பிடுகையில் ஆற்றல் குறைந்தவர்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஏற்பாட்டை பெண்ணியலாளர் நிராகரித்தனர். ஆடைகளைப் புனைவதன் வாயிலாகப் பெண்களை அழகுப் பொருட்களாகவும் நுகர்ச்சிப் பொருட்களாகவும் ஆக்கப்படுதலை ஒடுக்கு முறையின் வடிவமாக அவர்கள் கருதினர். அத்தகைய எழுச்சியும் வரன்முறையான ஆடை அணிகலன்களுக்கு எதிரான இயக்கத்துக்கு வலுவூட்டின. அதன் தொடர்ச்சியாக ஆண்கள் அணியும் உடைகளைப் பெண்கள் அணியத் தொடங்கினர். உதாரணமாக பெண்கள் ரீசேர்ட் அணியும் மரபு வளர்ச்சியடைந்தது.

பெண் இளைஞர்கள் நீச்சலாடத் தொடங்கவும், மிதிவண்டி ஓடத் தொடங்கவும் முன்னைய ஆடைக்கோலங்களை நிராகரித்தனர். அந்நிலையில் எதிர் ஆடைக்கோலங்கள் எழுச்சி கொள்ளத் தொடங்கின.

ஆடை அணிகலன்கள் சமூக அந்தஸ்தை வெளிப்படுத்தும் சின்னங்களாக அமைந்தன. இந்திய மரபில் அவற்றால் சாதிய இருப்பும் வெளிப்படுத்தப்பட்டது. தொழிற்புரட்சியும், நவீனத்துவத்தின் வளர்ச்சியும் தையற்பொறியின் கண்டுபிடிப்பும், பரும்படியாக்க உற்பத்தி முறைகளும், சமூக மாற்றத்துக்கான செயற்பாடுகளும், எதிர்முகிழ் கோலங்களுக்கு விசையூட்டத் தொடங்கின. விடுதலைச் சிந்தனை ஆடை அணிகலன்களிலும் வெளிப்பட்டது.

சூழலியல் சிந்தனைகளின் வளர்ச்சியும் எதிர் ஆடை புனைவுகளுக்கு இட்டுச் சென்றது. இயற்கை நார்களில் இருந்து செய்யப்படும் ஆடைகளை அணிவதால் சூழல் மாசுபடாது தடுக்கப்படக் கூடியதாக இருக்கும். செயற்பாட்டாளர்களான இளைஞர்கள் இயற்கை நாரிலிருந்து செய்யப்பட்ட உடைகளை அணிந்து சிறப்புப்படுத்தினர்.

ஐரோப்பாவில் வளர்ச்சி கொள்ளத் தொடங்கிய நவீனத்துவ சிந்தனைகள் "புதிதாகச் செய்யுங்கள்" *(Make it new)* என்ற அறிதலைப்பை முன்வைத்தது. அச்சிந்தனை இளைஞர்களிடத்துப் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது. இசை, நடனம், ஓவியம், சிற்பம், இலக்கியம், ஆடை அணிகலன், கட்டடக்கலை என்ற அனைத்திலும் புதுமைகள் எழுச்சி கொண்டன.

எதிர்முகிழ் கோல ஆக்கங்களிலே செல்வாக்குச் செலுத்திய பிறிதொரு விசையாக அமைந்தது "அபத்த அரங்கு" *(Absurd Theatre).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அபத்தவியல்" என்ற கருத்து வடிவத்தின் செல்வாக்கு கலைஇலக்கிய வடிவங்களிலும், திரைப்படங்களிலும் மட்டுமன்றி மனித செயற்பாடுகளிலும் செல்வாக்கை ஏற்படுத்தியது. அபத்த நாடகங்களில் இடம்பெற்ற ஆடை அணிகலன்கள் நியமங்களின் அர்த்தமற்ற தன்மையைப் புலப்படுத்தியதுடன் எதிர் ஆடை புனைவுக்கும் இட்டுச்சென்றது.

இளவயதினர் எதிர்கொள்ளும் நெருக்குவாரங்கள் அவர்களின் சிந்தனையில் "நியாய மறுப்பு" *(Irrationality)* செயற்பாட்டை வளர்தல் உண்டு. மனவெழுச்சி நெருக்கீடு நிலைவரம் அத்தகைய செயற்பாட்டை ஏற்படுத்தும் வழமைக்கு மாறான பேச்சு, நடத்தை, நடை, உடை பாவனை முதலியவற்றை அந்நிலையில் அவர்கள் முன்னெடுத்துச் செல்வர்.

நியாயித்தலும் அதிகாரமும் ஒன்றிணைந்தவை. அதனை வேறுவிதமாகக் குறிப்பிடுவதானால் அறிவும் அதிகாரமும் ஒன்றிணைந்து நிற்றல் வரலாற்று வளர்ச்சியிலே கண்டறியப்பட்டுள்ளது. மேலாதிக்கம் தனது நிலையைப் பலப்படுத்துமாறு அறிவைக் கட்டமைப்புச் செய்த வண்ணமிருக்கும். அறிவுக் கட்டமைப்பு நியாயித்தலுடன் தொடர்புபட்டு நிற்கும். இத்துறையில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட பென் பிளைப்ஜேர்க் "நியாய நிலையும் அதிகாரமும்" *(Rationality and Power)* என்ற நூலை வெளியிட்டார்.

அதிகாரமே நடத்தைகளைக் கட்டுப்படுத்துகின்றது. அந்நிலையில் அதிகார எதிர்ப்பு, நடத்தைகளுக்குக் கட்டுப்படாத நிலையை உருவாக்குகின்றது. இளைஞரின் எதிர்முகிழ்கோலம் வரன்முறையான நடத்தைக் கட்டுக் கோப்பை மீறலாக்கின்றது.

ஆடை அணிகலன்களின் அதீத அக்கறையும், விருப்பும், அதிக பணச்செலவை மேற்கொள்ளலும் ஆடம்பரமும் மேலாதிக்கத்தினரது நடத்தையாகின்றது. ஆடை அணிகலன்களில் எதிர்க்கோலங்களை வெளியிடல் அவர்களின் நடத்தைகளை நிராகரித்தலுமாகின்றது.

பிரித்தானியாவில் வளர்ச்சிபெற்ற "செக்ஸ் பிஸ்டல்ஸ்" என்ற இசைக் குழுவினர் மேலாதிக்க நியதிகளை நிராகரிக்கும் கருத்துக்களை இசைவடிவிலே பரவவிட்டனர். அவர்களது ரொக்இசைவடிவம், மரபுகளையும் நிறுவன ஆதிக்கத்தையும் நிராகரித்து மேலெழுந்தது. "பங்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற எதிர்ப்பண்பாட்டுச் சமூகம் இளைஞரின் ரொக் இசைக்குழுக்களை அடியொற்றித் தோற்றம் பெற்றது. பிரச்சினைக்குரிய கருத்துக்களையும் சொற்களையும் அவர்கள் தமது "பலத்த இசை" வழியாக முன்வைத்தனர். இளைஞரின் எதிர்முகிழ்கோலச் செயற்பாடுகளக்கு அது வலுவூட்டியது.

புகழ்பெற்ற பெரும் வடிவமைப்பாளர்களும் இத்துறையில் கவனம் செலுத்தலாயினர். கபிரியெலிசனல் என்ற பிரெஞ்சுநாட்டு வடிவமைப்பாளர் மரபுகளை மீறும் ஆடை அணிகலன் மற்றும் கைப்பொதிகளைத் தயாரிக்கலானார். இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரும் செல்வாக்கு மிக்கோருள் ஒருவராக "ரைம்" இதழ் அவரை அடையாளப்படுத்தியது. எதிர்வடிவமைப்புக்களை உருவாக்கிய அவரது செயற்பாடுகள் உலக அரங்கில் விதந்து குறிப்பிடப்படுகின்றன. "வறிய பெண்" என்ற தலைப்பில் அவர் உருவாக்கிய வடிவமைப்புப் பெரும் புகழீட்டியது.

இளைஞர் முன்னெடுக்கும் எதிர் முகிழ்கோலச் செயற்பாடுகள் பலவிதப்படும். விகாரமான வடிவங்கள், கிழிந்த வடிவங்களைக் கொண்ட ஆடைகள், பழுப்பேறிய ஆடைகள், நைந்துபோன ஆடை உருக்கள், பொத்தல்தைக்கப்பட்டிருத்தல், சமநிலைப்பிறழ்வுகள் என்றவாறு ஆடைக் கோலங்கள் பலநிலைகளிலே அமைக்கப்படுகின்றன.

தலையலங்காரங்களும் பல்வேறு வடிவங்களில் மேலெழுந்து வருகின்றன. விதம் விதமான வண்ணப் பூச்சுக்கள், சமநிலைப் பிறழ்வுகள், அரைமுடி, சாய்வுமுடி, நீள்முடி வேறுபட்ட வடிவங்களைக் கொண்ட முகச்சவரம் என்றவாறு ஆண்கள் அலங்காரங்கள் எழுந்தன.

எதிர்முகிழ் கோலங்கள் அணிகலன்களிலும் வெளிப்பாடு கொண்டன. கத்தி, கோடரி, அரிவாள் போன்ற மரபுவழி ஆயுதங்கள் வடிவில் அணிகலன்கள் உருவாக்கம் பெற்றன.

இளைஞரின் எதிர்ப்பு உணர்வுகளின் வழியாகத் தோற்றம் பெற்ற வடிவங்கள் பின்னர் அனைவரதும் அங்கீகரிப்புக்கும் உள்ளான வடிவங்களாகி வளர்ச்சியடைந்துள்ளன. அதாவது, முன்னர் வளர்ந்தோரால் அங்கீகரிக்கப்படாதவை பின்னர் அங்கீகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. எதிர்ப்புவடிவம் ஏற்றுக்கொள்ளப்படும் நியமவடிவமாக மாற்றம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு உளவியல்

கல்வி உளவியலின் வளர்ச்சியோடு நிகழ்ந்த ஒரு முக்கியமான துறையாக விளையாட்டு உளவியல் எழுகோலம் பெற்றது. விளையாட்டை ஒரு பாடமாகக் கற்பித்தலுக்கு உளவியலைப் பயன்படுத்துதல், ஆற்றுகைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உளவியலைப் பயன்படுத்துதல், கூட்டாகச் செயற்படுதல், தொடர்பாடலை மேம்படுத்துதல், விபத்துக்களின் தாக்கங்களில் இருந்து மீழெழுச்சி பெறுதல் முதலிய பல்வேறு பரிமாணங்களை விளையாட்டு உளவியல் கொண்டுள்ளது.

போட்டிகளில் ஈடுபடுவோர் தமது இலக்குகளை அடைவதற்கு விளையாட்டு உளவியல் பிரயோக நிலையில் துணை செய்கின்றது. விளையாட்டுக் களத்தின் உள்ளேயும் வெளியேயும் விளையாடுவோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் விளையாட்டு உளவியலில் உள்ளடக்கப்படுகின்றன.

உடல் ஆற்றல்களையும் உள ஆற்றல்களையும் ஒருங்கு சேர முன்னேற்றம் பெறச் செய்தல் தொன்மையான கல்விச் செயற்பாடுகளில் இடம்பெற்றிருந்தன. தொன்மையான கிரேக்கரும் ரோமரும் தமது கல்விச் செயற்பாடுகளில் விளையாட்டுக் கல்வியை உள்ளடக்கினர். இந்திய மரபில் வளர்ச்சி பெற்றிருந்த யோக சாஸ்திரம் உடலும் உள்ளமும் ஒன்றிணைக்கப்பட்ட கல்வியை வலியுறுத்தியது. தொன்மையான தமிழகத்தில் ஐந்து வகையன நிலப்பாகுபாட்டுக்கும் ஏற்றவகையில் உடலும் உள்ளமும் இணைந்த கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. வாழ்க்கைக் கோலங்களும் விளையாட்டுக்களும் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அறிவு வரலாற்றில் "விளையாட்டு உளவியல்" என்ற புலமைப்புலம் பத்தொன்பதாம் நூற்றாண்டளவிலே தான் தோற்றம் பெற்றது. பரிசோதனை உளவியலும், கல்வி உளவியலும் ஒன்றிணைந்த வகையில் விளையாட்டு உளவியலின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிற்று.

1920ஆம் ஆண்டில் பேர்லின் நகரில் கார்ல் டியிம் என்பவர் உளவியல் ஆய்வுகூடம் ஒன்றை நிறுவினார். தொடர்ந்து பரிசோதனை உளவியலை விளையாட்டுக்குப் பயன்படுத்தும் செயற்பாடுகள் வளர்ச்சியடையத் தொடங்கின.

ரூசிய உளவியலாளராகிய பீட்டர் அன்டனோவிச் ரடிக் இத்துறையில் மேற்கொண்ட ஆய்வுகள் முக்கியமானவை. புலக்காட்சி, ஞாபகம், கற்பனை, கவனம் ஆகியவை விளையாட்டுப் பயிற்சிகளிலும், விளையாட்டுக்களிலும் எத்தகைய செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன என்பவற்றை அவர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார்.

மனஅழுத்தங்கள், பதகளிப்பு, நெருக்கிடு முதலியவற்றின் தாக்கங்களில் இருந்து விடுபடுவதற்கு விளையாட்டுக்கள் துணை செய்வதைக் கல்வி உளவியலாளர் கண்டறிந்தனர். மேலும் கற்பித்தலில் விளையாட்டு நுட்பங்களைப் பயன்படுத்தப்படும் பொழுது, கற்றற் செயற்பாடு வினைத்திறன் பெறுதலையும் கல்வி உளவியலாளர் பரிசோதனைகள் வழியாக வெளிப்படுத்தினர்.

- சிறைக்கைதிகளும் பரிசோதனை உளவியலுக்கு உட்படுத்தப் பட்டனர். அவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தப்பட்ட வேளை அவர்களின் உளப்பாங்குகளிலே முன்னேற்றங்கள் கண்டறியப்பட்டன.
- பொருத்தமானதும் வேகம் மிக்கதுமான எதிர்வினை நேரத்துக்கு *(Reactiontime)* ப் பின்னர் விளையாட்டு ஆற்றல் மிகுந்து செயற்படலைப் பரிசோதனைகள் வெளிப்படுத்தின.
- கல்வி உளவியலில் கற்றற் இடம்மாற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் போன்று விளையாட்டு உளவியலிலும் மேற்கொள்ளப்பட்டன. ஒரு கையினைப் பலப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள் மற்றக் கைக்குப் பயிற்சிகள் கொடுக்கப்படாமலே பலம் பெற்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறியப்பட்டது. மேலும் ஒரு கையின் செயற்பாட்டு நுட்பங்களை அவர்கள் மற்றக் கையிலும் இயல்பாக இடமாற்றம் செய்தல் வெளிப்பாடு கொண்டது.

- ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட விளையாட்டுப் பயிற்சி அதனைப் பார்த்துக் கொண்டிருப்பவர் மீதும் செல்வாக்குகளை ஏற்படுத்தியமை நேர்மன்ரிப்லெட் என்ற விளையாட்டு உளவியலாளரின் ஆய்வுகளில் வெளிப்பட்டது. ஒருவரின் ஆற்றுகை அவரைக் கூர்ந்து பார்ப்போரின் ஆற்றுகையிலும் செல்வாக்கை ஏற்படுத்துகின்றது.
- கடினமான விளையாட்டுக்களில் ஈடுபடுவோர் செயற்பணிகளில் கடினமாக ஈடுபடலும் கண்டறியப்பட்டது.

விளையாட்டு உளவியல் வளர்ச்சியில் கல்வி உளவியலாளரின் பங்களிப்பு முக்கியமானது. இலினோய் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வி உளவியற் பேராசிரியர் கோல்மன் கிறீபித் பிரயோக விளையாட்டு உளவியல் என்ற ஆய்வுப் புலத்தை உருவாக்கினார். விளையாட்டு ஆற்றுகைகளிலே செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆய்வு செய்வதற்குரிய ஆய்வு கூடத்தையும் அவர் உருவாக்கினார். அவர் மேற்கொண்ட ஆய்வுகள் விளையாட்டு வீரர்களை மட்டுமன்றி பயிற்றுவிப்போரையும் உள்ளடக்கியதாக அமைந்தது. பயிற்றுவிப்பாளர்களுக்கு உளவியல் கற்பிக்கப்பட்ட வேளை அவர்களின் செயற்றிறன் மேலோங்கியமை புலனாயிற்று.

"விளையாட்டு உளவியலின் தந்தை" என்று அடையாளப்படுத்தப்பட்ட கோல்மன் கிறிபித் அத்துறைக்கு வழங்கிய முக்கியமான பங்களிப்புக்கள் வருமாறு:

1. விளையாட்டு உளவியல் ஆய்வுகளில் கவனம், புலக்காட்சி, தூண்டிகளுக்கு எதிர்வினைப்படும் நேரம், தசைநார் விறைப்பேற்றமும் ஓய்வும், மனத்தின் விழிப்புணர்வு முதலியவற்றை அடியொற்றிய பரிசோதனைகளை முன்னெடுத்தமை.
2. மெய்வல்லுனர் போட்டிகளில் உளவியலின் முக்கியத்துவத்தை தொடர்புபடுத்தியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விளையாட்டு உளவியலில் ஆய்வுகளின் விஞ்ஞான ஆய்வு முறையை முக்கியப்படுத்தியமை.

4. விளையாட்டு ஆற்றுகைக்கும் ஒருவரது ஆளுமைக்கும், தலைமைத்துவப் பண்புக்கும், கற்கும் ஆற்றலுக்குமுள்ள தொடர்புகளை விளக்கியமை.

5. உளவியற் கல்வி விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமன்றி, பயிற்றுவிப்பவர், மேலாண்மை செய்பவர், திறனாய்வு செய்பவர் அனைவருக்கும் முக்கியம் என்பதை வலியுறுத்தியமை.

6. பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டு உளவியற் கற்கை நெறியை உருவாக்கியமை.

7. விளையாட்டு உளவியலிலே பயன்மிக்க ஆய்வு நூல்களை வெளியிட்டமை.

விளையாட்டு உளவியலின் வளர்ச்சியில் பங்கெடுத்து மேலும் ஆய்வுகளை முன்னெடுத்தவர்களுள் ஹரிசரன் என்பாரும் முக்கியமானவர். விளையாட்டு வீரர்களின் இயக்கத் திறன்கள், *(Motorskills)* மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அவர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார்.

இத்துறையில் நிகழ்ந்த பன்முக வளர்ச்சிகளைத் தொடர்ந்து 1965ஆம் ஆண்டில் உலகின் முதலாவது விளையாட்டு உளவியல் மாநாடு ரோம் நகரிலே கூட்டப்பெற்றது. அதன் தொடர்ச்சியாக அனைத்துலக விளையாட்டு உளவியற் கழகம் உருவாக்கப் பெற்றது.

விளையாட்டு உளவியல் அறிவானது, விளையாடும் பொழுது மேலெழும் அதீத கோப எழுச்சியை உரிய முறையிலே மேலாண்மை செய்து கொள்வதற்குத் துணை செய்தலும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் விளையாட்டுக்களிலும் விளையாட்டு உளவியலின் முக்கியத்துவம் அறியப்பட்டது. வீரர்களுக்கு உளவியல் அறிவைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரகின்றன.

ஆளுமையின் உறுபண்புகள் *(Traits)* விளையாட்டு ஆற்றுகையில் ஏற்படுத்தும் செல்வாக்குகள் நவீன விளையாட்டு உளவியலில் விரிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இத்துறையில் "உளச் செயலுறுதி" *(Mental Toughness)* என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. போட்டியும் கடின நிலைவரங்களும் அழுத்தங்களும் மிக்க விளையாட்டுச் சூழலில் ஒருவர் நம்பிக்கை இழக்காது உளவுறுதியுடன் தொடாந்து செயற்படுதலை அந்தக் கருத்தாக்கம் விளக்குகின்றது.

உறுதிமிக்க தன்னம்பிக்கை உருவாக்கம் நன்றாக ஆற்றுகையை மேற்கொள்ள முடியும் என்ற மனத்திடம், வெற்றிக்கு இட்டுச் செல்லும் உள்ளார்ந்த ஊக்கல், கவனக் கலைப்பாண்களால் சிதைவுபடாத உள்ளம், அழுத்தங்களுக்கு உட்படாத எழுச்சி முதலியவை உளச் செயலுறுதியில் உள்ளடங்கும்.

விளையாட்டு உளவியலில் முன்வைக்கப்படும் பிறிதொரு முக்கியமான கருத்தாக்கம் "வாழ்க்கைத் திறன்கள்" என்பதாகும். விளையாட்டிலே பங்குபற்றுதல் வாயிலாக வாழ்க்கைத் திறன்கள் வளர்க்கப்படும். நடத்தை, உள்ளம், மனவெழுச்சி, சமூகம் சார்ந்த ஆற்றல்கள் சமூகத்திறன்களில் அடங்கும்.

பயிற்சியாளர் உளவியலும் விளையாட்டு உளவியலில் ஒரு முக்கியமான பிரிவாக வளர்ச்சியடைந்து வருகின்றது. பயிற்றுவிக்கும் திறன்களை மேம்படுத்தவும், ஆற்றுகையின் தரத்தை உயர்த்திச் செல்லவும் பயிற்றுவிப்பாளருக்கு உளவியல் அறிவு துணை செய்கின்றது. வீரர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் பகுத்தறிதல், திறன்மிக்க கற்பித்தலை முன்னெடுத்தல், பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்ளல், வெகுமதிகள் வாயிலாக ஆற்றல் மிக்க நடத்தைகளை மீளவலியுறுத்தல், ஆற்றல் மிக்க தொடர்பாடலை மேற்கொள்ளல், வீரர்களின் சுயநல மேலோங்கலைத் தகர்த்தல் முதலியவற்றை பயிற்றவிப்பாளர் முன்னெடுப்பதற்கு உளவியலறிவு துணைசெய்யும்.

மரபுவழியான பயிற்றுவிப்பில் எதிர் மீளவலியுறுத்தலே மேலோங்கியிருந்தது. நவீன உளவியல், நேர் மீளவலியுறுத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. அதாவது சரியானவற்றை மேற்கொள்ளும் பொழுது அவற்றைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தலே நேர் மீளவலியுறுத்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு உளவியலில் வலியுறுத்தப்படும் ஒரு முக்கியமான கருத்தாக்கம் "இயக்கப்படிமம்" *(Motor Imagery)* என்பதாகும். விளையாட்டில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை மனத்தினால் நிகழ்த்திப் பார்த்தலை இது குறிப்பிடுகின்றது. அறிகை உளவியலில் இது ஒரு சிறப்பான செயற்பாடாக வலியுறுத்தப்படுகின்றது. வினைப்படலின் உளப்பயிற்சி அளிக்கையை வினைத்திறன்படுத்துவதற்குரிய முன்னேற்பாடாகும். இயக்கப்படிமத்தைச் செம்மைப்படுத்துதல் வாயிலாக ஆற்றுகையை செம்மைப்படுத்தலாம்.

அளிக்கையை வினைத்திறன்படுத்த தனக்குள் தான் பேசிக்கொள்ளல் *(Self Talk)* என்பதன் முக்கியத்துவத்தை உளவியல் வலியுறுத்துகின்றது. அந்தச் செயற்பாட்டை விளையாட்டுடன் இணைந்த திட்ப நுட்பங்களுடன் மேற்கொள்ளல் வேண்டும். வீரர்கள் தமது ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளும் ஓர் உளவியல் நுட்பமாக இது கருதப்படுகின்றது.

உடல் மற்றும் உள ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்கு ஆற்றுகை சார்ந்த நித்தச் செயல்கள் *(Routines)* துணை செய்கின்றன. ஆற்றுகையை மேம்படுத்த முன்னர் நிகழ்த்தும் நாளாந்தப் பயிற்சிகள் உடல் உறுதியையும், மனவுறுதியையும் மேம்படுத்த வல்லவை.

விளையாட்டு உளவியலோடு இணைந்த ஒரு துறையாக "பயிற்சி உளவியல்" வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது. பயிற்சிகளுக்கும் உளநலத்துக்குமிடையேயுள்ள தொடர்புகள் மிக நீண்ட காலமாகவே வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. இந்திய மரபில் யோகநெறி பயிற்சிக்கும் உளநலத்துக்குமுள்ள தொடர்புகளை வலியுறுத்தி வருகின்றது.

மனஅழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்குப் பயிற்சிகள் துணை செய்கின்றன. உளவியல், உடற்றொழிலியல், நரம்பியல் விஞ்ஞானம், கல்வியியல் ஆகிய அறிவுப் புலங்களை ஒன்றிணைத்து நவீன பயிற்சி உளவியல் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

ஆய்வுகளை அடியொற்றி ஒவ்வொரு வயதுத் தொகுதியினருக்கு முரிய தனித்துவமான பயிற்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. விபத்துக்களுக்கு உள்ளானவர்கள், உணவை உண்ணலில் ஒழுங்குக்குலைவு உள்ளவர்கள், மது மற்றும் போதைப் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்ச்சிக்கு அடிமைப்பட்டோர் முதலியோருக்கு உதவும் வகையிலே சிறப்புப் பயிற்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

விளையாட்டுப் பயிற்சிகளால் அறிகை ஆற்றல், கற்கும் ஆற்றல், தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் வளர்ச்சியடையும் என்பதை அண்மைக்காலத்தைய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இத்துறையில் மிக முக்கியமாக நோக்கப்பட வேண்டிய ஒரு விடயம் "சமநிலை முன்னெடுப்பு". அதாவது விளையாட்டுக்களில் அதீத ஈடுபாடு கொண்டு கல்வி நிலையக் கற்றலைக் கைவிட்டுவிடக் கூடாது. அவ்வாறே கற்றலில் முழுதாக ஈடுபட்டு விளையாட்டை முற்றாக நிராகரித்துவிடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தலில் நகைச்சுவை

கற்பித்தலிலே நகைச்சுவை பயன்படுத்தும் பொழுது நேர்விளைவுகள் கண்டறியப்பட்டுள்ளன. பாலர்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை நகைச்சுவையின் பயன்பாடு நீட்சி கொண்டுள்ளது.

அண்மைக்காலத்தைய வகுப்பறைகள் மாணவருக்கு அதீத பதகளிப்பையும் நெருக்குவாரங்களையும் உருவாக்கி வருகின்றன. அவற்றிலிருந்து மாணவரை விடுவித்துக் கற்றலைச் சுவைப்படுத்துவதற்கு நகைச்சுவைப் பயன்பாடு முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

வகுப்பறையில் நகைச்சுவை பற்றி பல ஆண்டுகள் நீட்சியில் ஆய்வுகளை மேற்கொண்ட விடயங்களை எம்.வெய்மர் தந்துள்ளார். பயன்படுத்தப்படக் கூடிய பல்வேறுபட்ட நகைச்சுவைகள் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் விளக்கியுள்ளார்.

வகுப்பறையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், மாணவரின் உளநெருக்குவாரங்களைத் தணிக்கவும், நகைச்சுவை பயன்படுதல் கண்டறியப்பட்டுள்ளது. அதேவேளை நகைச்சுவை தவறாகப் பயன்படுத்தப்படுகையில் எதிர்விளைவுகள் தோன்றுதலும் அறியப்பட்டுள்ளது. தமது அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கும், தனி மாணவரைக் குறிவைத்தும், நகைச்சுவையைப் பயன்படுத்துதல் எதிர்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

வகுப்பறையில் பயன்படுத்தப்படும் நகைச்சுவை வகைகள் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாடங்களுடன் இணைந்தவை

2. பாடங்களைத் தொடர்புபடுத்துபவை

3. இணைந்த கலைத்திட்டத்துடன் தொடர்புடையவை

4. கற்றல் பொருட்களுடன் தொடர்புடையவை.

5. திட்டமிடப்படாது தன்னிச்சையாக எழுபவை

6. சிலேடைச் சொல்லாடல் சார்ந்தவை

7. வெற்றியீட்டியவர்களின் அனுபவங்களுடன் தொடர்புடையவை

8. மதிப்பீடுகள், கணிப்பீடுகளுடன் தொடர்புடையவை

9. காண்பிய வடிவானவை

10. உடல் மொழிசார்ந்தவை.

தனிநபரைத் தாக்குவதாயும் பாலியல் சார்ந்தவையாயும் அமைந்த நகைச்சுவைகள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியிருத்தல் ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

பாடங்களுடனான விளக்கத்தை மேம்படுத்துதல், மாணவரின் கவனத்தைத் தொடர்ந்து ஈர்த்தல், வகுப்பறையின் குழப்ப நடத்தைகளை முகாமை செய்தல், கற்றவற்றை மீளவலியுறுத்துதல் முதலியவற்றுக்கு நகைச்சுவை பயன்படுதல் உயர்கல்வி நிலையங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது.

கற்பித்தலிலும், உரையாடல்களிலும் நகைச்சுவையைப் பயன்படுத்திய வேளை மூளையின் பன்முகப்பகுதிகளினதும் செயற்பாடுகள் விரைவுற்றமை ஆய்வுகளில் வெளிப்பாடு கொண்டது. மூளையின் பன்முகத் தொழிற்பாடுகளை அறியும் கருவிகளுடன் மேரிகே மொரிசன் அந்த ஆய்வை மேற்கொண்டார். கற்றலை உச்ச நிலைக்கு அழைத்துச் செல்வதற்கு நகைச்சுவை துணை செய்வதும் கண்டறியப்பட்டது.

வகுப்பறையில் மாணவர் வழங்கும் தவறான விடைகளும் நகைச்சுவையாக மாற்றம் பெற்று மாணவரின் மந்த நிலையைத் தகர்த்து விடும். பின்வரும் கேள்விக்கு மாணவர் வழங்கிய பதில் வகுப்பிலே சிரிப்பைத் தோற்றுவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: பசும்பால் கெடாமல் இருப்பதற்கு என்ன செய்தல் வேண்டும்?

மாணவன்: அதனைப் பசுவில் வைக்க வேண்டும்.

அந்த நகைச்சுவையோடு வகுப்பறையில் உற்சாகம் பிறந்தது. அதனைப் பயன்படுத்தி ஆசிரியர் பாடத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கினார். அன்றைய பாடம் மாணவர் மனங்களில் ஆழ்ந்த பதிவுகளாயின.

வகுப்பறையில் நகைச்சுவையைப் பயன்படுத்தும் பொழுது எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். பின்வருவனவற்றை ஆசிரியர் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

1. பழகிப் பழகித் தேய்ந்து போன நகைச்சுவைகளைப் பயன்படுத்துதல்

2. தேவைக்கு அதிகமான நகைச்சுவையைப் பயன்படுத்துதல்

3. பாடத்துடன் சம்பந்தப்படாத நகைச்சுவையைப் பயன்படுத்துதல்

4. நகைச்சுவையை வலிந்து கையாளல்

5. குறித்த நபருக்குத் துன்பம் விளைவிக்கும் நகைச்சுவையைக் கையாளல்

ஆசிரியர்கள் தருணத்துக்கு ஏற்றவாறு நகைச்சுவையை உருவாக்குதலில் வல்லவர்களாயிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஓர் ஆசிரியர் தருணத்துக்கு ஏற்றவாறு நகைச்சுவையை எவ்வாறு உருவாக்கினார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு.

அன்றைய முதலாவது பாடம் நாளிதழ் வாசிப்பின் முக்கியத்துவத்தை விளக்குவதாயிற்று. மணி அடித்துவிட்டது. பாடம் தொடங்கிவிட்டது. பள்ளிக்கூடப் பணியாளர் இன்னமும் நாள்இதழைக் கொண்டுவரவில்லை. உடனே ஆசிரியர் தருணத்துக்கு ஏற்ற நகைச்சுவையை உருவாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீதியோரம் ஒருவன் நாளிதழை விற்றுக் கொண்டிருந்தான். அன்றைய முக்கிய செய்தியை உரத்துக் கூறிக் கத்தியபடி அவன் செய்தி இதழ்களை விற்பவன்.

"ஐம்பது பேர் ஏமாற்றப்பட்டுவிட்டனர் பத்திரிகையை வாங்கிப் படியுங்கள்" என்று உரக்கக் கத்திக் கொண்டிருந்தான்.

"முக்கிய செய்தியாய் இருக்கிறதே" என்று சொல்லிக் கொண்டு ஒருவர் ஓர் இதழை வாங்கினார். ஆவலுடன் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தார். அந்தச் செய்தியைக் காணவில்லை.

உடனே பத்திரிகை விற்பவனிடம் ஓடிச் சென்றார். "அந்தச் செய்தியைக் காணவில்லையே" என்றார்.

செய்தி இதழ் விற்பவன் "இது நேற்றைய பத்திரிகை" என்று சொல்லிக்கொண்டு மீண்டும் கத்தத் தொடங்கினான் "ஐம்பதுக்கு ஒரு பேர் ஏமாற்றப்பட்டனர்" பத்திரிகையை வாங்கிப் படியுங்கள்"

ஆசிரியர் நகைச்சுவையைச் சொல்லி முடிக்கும் நேரத்தில் பணியாளர் அன்றைய பத்திரிகையைக் கொண்டு வந்துவிட்டார்.

இன்னொரு சமயம் உயிரியல் ஆசிரியர் மீன்கள் பற்றிக் கற்பிப்பதற்கு வகுப்புக்கு வந்தார். அது இறுதிப் பாட நேரம் மாணவர் களைத்திருந்தனர். ஒரு நகைச்சுவையை வழங்கி மாணவரை உற்சாகப்படுத்திக் கற்பிக்க வேண்டுமென எண்ணினார்.

'Fish" என்று வெண்பலகையில் எழுதினார். எழுதி முடிந்ததும் மாணவரிடத்து ஒரு வினா எழுப்பினார். ஐ(கண்) இல்லாத மீனை எப்படி எழுதுவது என்ற வினாவை முன்வைத்தார்.

அந்த விநோதமான வினாவைக் கேட்டதும் மாணவரிடத்து உற்சாகம் பிறந்தது. "கண்ணில்லாத மீன்" என்று ஆங்கிலத்தில் மாணவர் எழுதினர். அதனை நகைச்சுவையாக இப்படியும் எழுதலாம் என்று ஆசிரியர் 'FSH' என்று எழுதினார். அதாவது "ஐ" என்பதை நீக்கிவிட்டு எழுதினார்.

வகுப்பறையில் கற்றலோடு இணைந்த நகைச்சுவையையும் விருப்பையும் உருவாக்குவதிலே "பலகைமாய வித்தை" *(Board Magic)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. யாழ்ப்பாம், கொழும்பு கிழக்குப் பல்கலைக்கழக கல்வியியல் மாணவருக்கு இந்நூலாசிரியர் இவ்வகை மாயவித்தையினைக் கற்பித்தார். தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் வாயிலாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அளிக்கை செய்தும் காண்பித்தார்.

புத்தாக்கச் சிந்தனை மற்றும் மாயவித்தைச் சிந்தனை ஆகியவற்றின் இணைப்பால் சொற்களையும் எழுத்துக்களையும் கையாளல் அந்த நுட்பத்திலே முன்னெடுக்கப்படுகின்றது.

வகுப்பறையில் நகைச்சுவையைப் பயன்படுத்துதல் என்பது மிகவும் நிதானமான செயல். மிகைப்படுத்தாது பார்த்துக்கொள்ளல் வேண்டும். பாட நோக்கத்துக்கு எவ்வகையிலும் ஊறுவிளைவிப்பதாய் அமையலாகாது. பாடத்தைவிட்டு நகைச்சுவையில் மட்டும் மாணவரை அமிழ்த்தி விடவும் கூடாது.

பாடத்துடன் இணைந்த உட்கவிப்புச் சிந்தனையையும், படைப்பு மலர்ச்சியையும் வளர்த்தலே நல்ல நகைச்சுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளச் சமூகம்

பேரிடர், போர் முதலியவற்றைச் சந்தித்த சமூகங்களுக்கு உளச்சமூக *(Psychosocial)* உருவாக்கம் ஓர் அடிப்படைத் தேவையாகின்றது. ஒருவரைச் சமூகத்தோடு உறவாட வைத்து உளவளர்ச்சிக் குறைவும், பின்னடைவுகளுமின்றி மேம்படச் செய்தலே உளச்சமூக உருவாக்கம்.

சமூகச் சூழலே ஒருவரின் சீரான வளர்ச்சிக்கும், இசைவாக்கத்துக்கும் தன்னெழுகை *(EGO)* வளர்ச்சிக்கும், தனக்குரிய அடையாள *(Self Identity)* உருவாக்கத்துக்கும் அடிப்படையாகின்றது.

சமூகத்தில் மேலாதிக்கமும், ஒடுக்கு முறையும், சுரண்டலும் ஊடுருவி இருக்கும் நிலையில் தனிமனிதர் தமக்குரிய அடையாள நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். யுத்தம் மற்றும் பேரிடர் சூழலில் சமூகம் தனது இயல்புநிலையிலிருந்து குழம்பியிருக்கும் நிலையில், தனிமனித அடையாளங்கள் சிதைவடைய நேரிடுகின்றது. அதேவேளை அழிவுகளில் இருந்து மீண்டெழக்கூடிய ஆற்றல் மனிதருக்கு உண்டு என்பதை உலக வரலாறு நிரூபித்தும் வந்துள்ளது.

"ஊர் நலம் உளநலம்" என்பது தமிழில் இடம்பெறும் ஒரு முதுமொழி. சூழல் நலமாக இருந்தால் உளநலம் ஊறுபடாதிருக்கும் என்பது பட்டறிவின் வாயிலாகக் கண்டறியப்பட்டுள்ளது.

"உளச்சமூகம்" என்ற கருத்தாக்கத்தை உளவியலாளர் எரிக் எரிக்சன் **(1902-1994)** முதலில் முன்வைத்தார். விருத்தி உளவியல் மற்றும் உளப்பகுப்பு உளவியல் ஆகிய சிந்தனை மரபுகளை அடியொற்றி அக்கருத்தை முன்வைத்தார்.

அவர் உருவாக்கிய "அடையாள நெருக்கடி" *(Identity Crisis)* என்ற கருத்தாக்கம் அதிக முக்கியத்துவம் பெற்றதொன்றாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரின் சமூக உளவியல் சார்ந்த வளர்ச்சிப் படிகளை எட்டுநிலைகளாக வகுத்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு படிநிலைகளிலும் சமூதாயத்தினால் ஏற்படுத்தப்படும் தாக்கங்களையும் விளைவுகளையும் ஆராய்ந்துள்ளார்.

மனிதரின் உள்ளே நிகழும் சமூகக் கோலங்கள் பற்றிய ஆய்வுகளே அவரிடத்து மேலோங்கியிருந்தன. சமூக மாற்றங்கள் மீது அவரது கவனம் ஆழ்ந்து செல்லவில்லை.

உளச்சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரும் உளவியல் "ஊடுதலையீடுகளினால்" தீர்வுகளை வழங்க முயல்கின்றார்களேயன்றி சமூகத்தை மீள் கட்டுமானம் செய்வதில் ஊன்றிய கவனம் செலுத்துதல் இல்லை. சமூகக் கட்டமைப்பை மாற்றியமைக்காது தனிமனிதர் எதிர்கொண்ட தாக்கங்களுக்குத் தீர்வுகாண முற்படுதல் ஒருதலைப்பட்சமான ஒற்றைப்பரிமாண அணுகுமுறையாகின்றது.

கல்வி நடவடிக்கைகள், இசை, நடனம், சிற்பம் ஓவியம் முதலியவற்றில் உளப்பாதிப்புக்கு உள்ளானவர்களை ஈடுபடுத்துதல், அரசாங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் முதலியவற்றால் உளச் சமூக முன்னெடுப்புக்கள் பொதுவாக மேற்கொள்ளப்படுகின்றன.

சமூக இயல்பை மாற்றியமைக்காது, ஊறுபட்ட சமூகச் சூழலில் மேற்கொள்ளப்படும் உளவியல் நடவடிக்கைகளால் எதிர்பார்க்கப்படும் இலட்சியங்களை எட்ட முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதற்கு விடை தரும் வகையில் உருவாக்கம் பெற்றதுதான் "உற்றறி சமூக வேலை" *(Critical Social Work)* அல்லது உற்றறி சமூப் பணி. சமூக அநீதிகளுக்குத் தீர்வு காணல் உற்றறி சமூகப் பணியின் இலக்காக அமைகின்றது. ஒடுக்கு முறைகளாலும், உலகளாவிவரும் முதலாளிய விரிவாக்கத்தினாலும், மேலாதிக்க அழுத்தங்களினாலும், சமூகத்தினதும், தனிமனிதரதும் உளநலம் பாதிக்கப்படுதலை உற்றறி சமூகப் பணி விபரிக்கின்றது.

அந்நிலையில் சமூகப் பணி என்பது சமூக ஏற்றத் தாழ்வுகள் ஒடுக்குமுறை முதலியவற்றுக்கு எதிரான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டிய தேவையுடன் மேலெழுதலை உற்றறி நோக்கு வலியுறுத்துகின்றது. மார்க்சியம் உளப்பகுப்பு உளவியல் முதலிய கோட்பாடு களை உள்வாங்கி "உற்றறி சமூகப் பணி" வடிவமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஏற்றத் தாழ்வுகளும் சமூக ஒடுக்கு முறைகளும் முதலிலே இல்லாது ஒழிக்கப்படல் வேண்டும். சமூக மாற்றமே உளநல மேம்பாட்டுக்கு இட்டுச்செல்லவல்லது. வர்க்க நிலைச் சமூகம், இனத்துவ மேலாதிக்கச் சமூகம் முதலியவை தகர்க்கப்படல் வண்டும். எவ்விதத்திலும் ஒடுக்குமுறையற்ற சமூகத்தை அமைப்பதே உளநல உருவாக்கத்துக்கு அடிப்படையாகின்றது.

சமூக ஏற்றத் தாழ்வும் ஒடுக்குமுறையுமுள்ள சமூகங்களில் நிகழ்த்தப்படும் சமூகப் பணிகளிற் பெரும்பாலானவை அத்தகைய ஏற்றத்தாழ்வுகளை தக்கவைத்துப் பராமரிக்கும் பணியைத் தான் முன்னெடுக்கின்றன. பெரும் உற்பத்தி நிறுவனங்கள் அவற்றுக்குப் பின்புலமாக நின்று நிதி வழங்கலையும் மேற்கொள்கின்றன. அத்துடன் நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்குகின்றன. அத்தகைய நிறுவனங்களுக்கு அரச ஆதரவும் கிடைக்கப் பெறுகின்றது. ஏற்றத் தாழ்வுள்ள சமூகம் பாதுகாக்கப்படுகின்றது.

உற்றறி சமூகப் பணி, சமூக நலனுக்கும் மேம்பாட்டுக்கும் துணை செய்வதுடன் சமூக மாற்றத்துக்கான அரசியற் கருத்தியலையும் மக்களுக்குப் புரிய வைக்கின்றது. பிரச்சினைகளின் மூலங்களைப் புரிய வைக்கின்றது. பிரச்சினைகளைத் தனிமனிதப்படுத்தாது சமூகப்படுத்து கின்றது. கூட்டு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தைப் புரிய வைக்கின்றது.

உற்றறி உளவியலும், உற்றறி சமூகப் பணியும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. மரபுவழியான உளவியற் கோட்பாடுகள் பலவற்றை உற்றறி உளவியல் அறைகூவலுக்கு உட்படுத்துகின்றது. உளநோய்களை யும் உளத்தாக்கங்களையும் நீக்குவதற்கும், வராமல் தடுப்பதற்கும், சமூக மாற்றமே வழிமுறையென உற்றறி உளவியல் வலியுறுத்துகின்றது. அதாவது, மார்க்சிய உளவியலின் நீட்சியாகவே உற்றறி உளவியல் அமைகின்றது.

பிரச்சினைகளைச் சமூக நிலையில் தீர்க்கும் செயற்பாடுகளையே உற்றறி உளவியலும் உற்றறி சமூகப் பணியும் வலியுறுத்துகின்றன. உற்றறி சமூகப்பணி, தீவிர சமூகப்பணி, தளமாற்று சமூகப்பணி, அமைப்பு மாற்றச் சமூகப் பணி ஆகியவை கருத்து நிலையில் ஒன்றிணைந்த தொடர்புகளைக் கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றறி சமூகப்பணி சமூகம் தழுவிய பல பரிமாணங்களைக் கொண்டது. வாழ்க்கைப் பண்பு மேம்பாட்டை உருவாக்குதல், சமூகப் பாதுகாப்பு, நடவடிக்கைகளைக் கூட்டாக மேற்கொள்ளல் முதலியவை முன்னெடுக்கப்படுகின்றன.

நெருக்கடி ஊடுதலையீடுகள் *(Crisis Interventions)* தனிமனிதத் தளத்திலன்றி, சமூகத் தளத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. சமூக உறுதிப்பாடு நிகழ்த்தப்படும் பொழுது தனிமனித உறுதிப்பாடு மேலெழத் தொடங்கும் சமூகத் தளமே பயநீக்கத்தை ஏற்படுத்தும்

ஒடுக்குமுறை நிலவும் சமூகங்களில் "மௌனப்பண்பாடு" மேலோங்கி நிற்கும் "மௌனப் பண்பாடு" *(Culture of Silence)* என்ற கருத்தை ஒடுக்குமுறைச் சமூகத்தின் அவலங்களை அனுபவித்த போலோ பிரேரி முன்வைத்தார்.

ஒடுக்குமுறையின் ஒரு முக்கிய பரிமாணம் மக்களைப் பயமுறுத்திப் பேசா நிலைக்குத் தள்ளி விடுதலாகும். பேசுவோர் தண்டனை அவலங்களுக்கு உள்ளாக்கப்படுவர். அந்நிலையில் ஒடுக்கப்படுவோர் அவலங்களை வெளிப்படுத்தாது உள்ளத்தில் அடக்கி ஒடுக்கி அழுத்தி வைக்கப் பழக்கப்படுவர். அத்தகைய மனஅழுத்தத்தைத் தனிமனித முயற்சியினால் அன்றி சமூக முயற்சியினாலும் முன்னெடுப்பினாலுமே மாற்றியமைக்க முடியும். உளச் சமூகச் செயற்பாட்டில் ஈடுபடும் வேளை அந்த நடப்பியலைப் புரிந்துகொள்ளல் வேண்டும்.

தனிமனிதரைக் குவியப்படுத்திய உளவளத் துணைச் செயற்பாடுகளும் சீர்மிய முன்னெடுப்புக்களும் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாத தங்கல் நிலையிலே தான் பெருமளவிற் காணப்படுகின்றன. மேலும் சுரண்டலும் ஒடுக்குமுறையும் நிகழும் நாடுகளிலே, உளநலப் பாதிப்புக்கு உள்ளாவோர் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்த வண்ணமுள்ளது.

உளச் சமூகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் சமகாலச் சூழலில், கருத்தியல் தெளிவை முன்னெடுக்கும் கருத்தாடல்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியுள்ளன. ஒடுக்குமுறையும், பேரிடர்ப் பாதிப்புக்களும் நிலவும் வேளை, பாதிப்புக்கு உள்ளானவர்களிடத்து திறனாய்வுச் சிந்தனையை வளர்த்தெடுத்தல் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்து மாற்றுவகை இலக்கியம்

அண்மைக் காலத்தைய இலக்கிய வரலாற்றில் "மாற்றுவகை இலக்கியம்" என்பது சிறப்பான எழுபொருளாகியுள்ளது. ஆங்கிலம் மரபில் இவ்வகை இலக்கியம் *'Alt.Lit"* என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. இணையப் பண்பாடு தோற்றுவித்த இலக்கிய வகை என்றும் அது குறிப்பிடப்படுகின்றது. இளைஞரிடத்து மிகுந்த செல்வாக்கையும் அவ்வகை இலக்கியம் ஏற்படுத்தி வருகின்றது.

இணைய வழியாகத் தொடர்புபடுத்தப்பட்டோர், அவ்வகை இலக்கியத்தின் பங்காளிகளாகின்றனர். அவர்களே இலக்கிய வடிவங்களை ஆக்குபவர்களாயும், வெளியீட்டாளர்களாயும், வாசகராயும் செயற்படுகின்றனர். பல்வேறு வகையான உரைநடை வடிவங்களும், கவிதைகளும், புதிய ஊடகமும் மாற்றுவகை இலக்கியத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

இணைய வழியாக மேற்கொள்ளப்படும் "சொல்லூட்டலும்" *(Gossip)* இவ்வகை இலக்கியத்தில் இடம்பெறும். சில சமயங்களில் இலக்கண வழுக்களைக் கொண்ட ஆக்கங்களாகவும் அமைந்திருக்கும். நேரடியான எடுத்தியம்பல், மனத்தில் உள்ள இச்சைகளை வெளியிடல் முதலியனவும் இடம்பெறும்.

சமகாலத் திறனாய்வுகளில் "புதிய நேர்ம்மை" *(New Sincerity)* என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. இசை, அழகியல், மெய்யியல், கவிதை, திறனாய்வு முதலாம் துறைகளில் இந்தக் கருத்தாக்கம் எடுத்தாளப்படுகின்றது. மாற்றுவகை இலக்கியங்களைத் திறனாய்வு செய்கையில் இந்தக் கருத்தாக்கம் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது. சிலவகையான எழுத்தாளர்கள் நேர்ம்மையுடன் தொழிற்படுவதாகவும் அவர்களின் எழுத்துக்கள் இணைய வழியாக நேர்ம்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தி நிற்பனவாகவும் குறிப்பிடப்படுகின்றது. தன்னிலையை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துதல் அங்கே சிறப்பிடம் பெறுகின்றது.

மாற்றுவகை இலக்கியம் இணையத்திலேதான் உயிர்வாழ்கின்றது. புதிதாக எழுதத் தொடங்குவோருக்குரிய களமாக அது அமைகின்றது. கட்டற்ற சுய வெளிப்பாடுகள் அவற்றில் இடம்பெறுகின்றன. தாமே வெளியிடல் தாமே தம்மை மேம்படுத்திக் கொள்ளல், சமூக ஊடகங்களில் ஏற்றிக் கொள்ளல் முதலியவை இடம்பெறுகின்றன.

இணையப் பண்பாட்டின் கலைவடிவ வெளிப்பாடாக மாற்று இலக்கியம் தோற்றம் பெற்றுள்ளது. இணையப்பண்பாடு, கணினிப் பண்பாடு சைபர் *(Cyber)* பண்பாடு முதலாம் தொடர்புகளும் இத்துறையிலே பயன்படுத்தப்படுகின்றன. இணைய வழியான தொடர்பாடலை நிகழ்த்துதல் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பொழுது போக்குச் செயற்பாடுகளில் ஈடுபடல், ஆக்கத் திறன்களை முன்னெடுத்தல் முதலியவை அப்பண்பாட்டில் நிகழ்த்தப்படுகின்றன. இணையப் பண்பாடு அத்தகைய செயற்பாடுகள் அனைத்தினதும் தொகுப்பாக அமைகின்றது.

இணையப் பண்பாடு ஓரினப் பாங்கு கொண்டதன்று. அது பன்மை நிலையின் தொகுப்பு. வெவ்வேறு விதமான பண்புகளையும், இயல்புகளையும் கொண்டோர் அதில் உள்ளடக்கப்படுகின்றனர். வேறுவேறுபட்ட இடநிலையங்களிலும் நாடுகளிலும் வாழ்வோர் அதில் உள்ளடக்கப்படுகின்றனர். அவர்கள் தகவல் தொடர்பாடல் நுட்பத்தால் ஒன்றிணைக்கப்படுகின்றனர். நேருக்கு நேர்த் தொடர்புடன் மேற்கொள்ளும் ஊடாட்டங்களுக்கு அங்கே இடமில்லை. கணினித் திரை வழியான ஊடாட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

அத்தகைய வளர்ச்சியினூடே "தொழில்நுட்ப முற்போக்கு வாதம்" *(Techno Progressivism)* என்ற கருத்து வடிவம் முன்வைக்கப்படுகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி மனிதருக்கு வலுவூட்டும் என்றும், அரசியல் சமூக நிலைகளில் மக்கள் விழிப்படைந்து வினைப்படுவோராய் மாற்றம் பெறுவதற்குத் துணை செய்யும் என்றும் சமூக மாற்றத்துக்கு இட்டுச் செல்லும் என்றும் குறிப்பிடப்படுகின்றது. அவற்றின் பின்புலத்திலே தான் மாற்றுவகைக் கலை இலக்கியங்களை நோக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித அடிப்படை உரிமைகளில் இன்று எண்ணிம உரிமைகளும் *(Digital Rights)* உள்ளடக்கப்படுகின்றன. எண்ணிம ஊடகங்களைப் பெற்றுக் கொள்ளல், பயன்படுத்துதல், உருவாக்குதல் ஆகியவற்றுக்கு மனிதருக்கு உரிமை இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. பல நாடுகளில் அவை சட்ட பூர்வமான உரிமைகளாக்கப்பட்டுள்ளன.

இணையம் தொடர்பான கருத்துக்கணிப்பை பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட வேளை, சில முக்கியமான கருத்துக்கள் எழுகோலம் பெற்றன. அவற்றுற் சிலவருமாறு:

அ. இணையம் பெருமளவிலான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைத் தந்துள்ளது.

ஆ. இணையச் செயற்பாட்டில் அரச தலையீடுகளும் கட்டுப்பாடுகளும் ஏற்புடையதல்ல.

இ. இணையம், கருத்து வெளிப்பாட்டுக்குரிய பாதுகாப்பான தளம் அன்று.

இணைய வழியாக மேற்கொள்ளப்படும் மாற்று வகையான இலக்கியங்கள் மேற்குறித்த நேர் மற்றும் எதிர்முரண்பாடுகள் வழியாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்துறையில் "தொழில்நுட்ப நடப்பியல்" அல்லது "தொழில்நுட்ப யதார்த்த வாதம்" *(Techno Realism)* முன்வைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்டோர் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், சமூக அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பதற்குரிய தொடர்புகளை அக்கோட்பாடு விளக்குகின்றது.

மார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றி "தொழில் நுட்பம் சார்ந்த திறனாய்வு" *(Techno Criticism)* என்ற துறையும் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை உற்றறி கோட்பாட்டின் ஒரு கிளையாகவும் குறிப்பிட்டுள்ளனர். வரலாற்றில் தொழில்நுட்பம் வகிக்கும் பங்கினையும், செல்வக் குவிப்பு, ஒடுக்குமுறைகள் முதலியவற்றில் தொழில்நுட்பத்தின் பங்கினையும் அவற்றை அடியொற்றிய கருத்து வினைப்பாடுகளையும் தொழில்நுட்பம் சார்ந்த திறனாய்வு முன்னெடுக்கின்றது. திறனாய்வற்ற ஒருதலைப்பட்சமான வளர்ச்சியையும் அது சாடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எலத்திரன் இலக்கியம்" என்ற தொடரும் மாற்றுவகை இலக்கியங்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. விரிவாக்கப்பட்ட வகையில் பின்வரும் ஆக்கங்கள் அத்துறையில் உள்ளடக்கப்படுகின்றன.

1. எலத்திரன் நூல்கள்

2. இணைய வழி உருவாக்கப்படும் புனைகதைகளும், கவிதைகளும் கட்டுரைகளும்

3. வரைபடகலையை அடியொற்றிய உயிர்ப்பூட்டலைக் கொண்ட கவிதைகள் *(Animated Poetry)*

4. இடைவினை மேற்கொள்ளப்பட கதைகளும், கவிதைகளும்

5. வாசகர் பங்கெடுக்கும் கூட்டிணைப்பினால் உருவாக்கப்படும் ஆக்கங்கள்

6. நேரிணைப்பு வழியாக உருவாக்கப்படும் இலக்கிய நிகழ்த்துகை *(Performance)*

7. இலக்கிய தரத்தை எட்டும் காணொளி விளையாட்டுக்கள்.

எலத்திரன் ஊடகம் "நீர்ம்மை" *(Fluid)* பண்பு கொண்டது. அந்நிலையில் அதன் வழியாக உருவாக்கப்படும் ஆக்கங்களைப் பாதுகாத்தல், களஞ்சியப்படுத்துதல் முதலியவை தொடர்பான பிரச்சினைகளும் எழுகின்றன.

மாற்றுவகை இலக்கியத்தின் சிறப்பியல்பு ஒலிவடிவவையும் காட்சிவடிவையும் ஒன்றிணைத்து இயக்கப்படுதலாகும். அவற்றின் தரம் உள்ளடக்கத்துடன், ஒலி ஒளிக்காட்சி இயல்பினோடும் தயாரிப்பு மற்றும் உயிர்ப்பூட்டல் நுட்பங்களுடனும் தொடர்புடையது.

மீ இணைப்புக்களால் *(Hyperlinks)* உருவாக்கப்படுபவை, மீயிணைப்புக் கவிதைகள் என்றும், மீயிணைப்புப் புனையங்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. "மீ" என்பது எல்லை கடந்து நிற்கும் தொழிற்பாட்டைக் குறிப்பிடும்.

இவ்வகை இலக்கியங்களைப் படைப்போர் உள்ளடக்கம் சார்ந்த கற்பனையுடன் கணினி நுட்பங்கள் சார்ந்த கற்பனையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைத்து ஆக்கத்தை வடிவமைக்க வேண்டியுள்ளது. அதனடிப்படையிலும் அது "மாற்று வகை இலக்கியம்" என்று குறிப்பிடப்படுகின்றது.

எலத்திரன் இலக்கியத்தைக் குறிப்பிடுவதற்கு ஆங்கில மரபில் "லிற்றறோனிக்க" என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகின்றது. கணினி விஞ்ஞானத்தின் வளர்ச்சியையும் அதன் வழியாக எழும் கலைப்படைப்புகளையும் கருத்திலே கொண்டு கணிதவியலாளரான யுவான் குட்டீர்ஸ் அந்தச் சொல்லை 2002ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்.

மாற்றுவகை இலக்கிய வளர்ச்சியுடன் இணைந்த அறிவுத் துறையாக, "எண்ணிம மானிடவியல்" *(Digital Humanism)* வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது. மானிடவியல் அறிவுத் துறைகளும் கணினியிலும் ஒன்றிணைக்கப்பட்ட வகையில் அது உருவாக்கப் பட்டுள்ளது. மானிடவியல் அறிவுத்துறைகளை கணினிக்கருவிகளின் துணையுடன் ஆய்வுநிலையில் மேம்படச் செய்தல் எண்ணிம மானிடவியலின் இலக்காக அமைகின்றது. பெருந்தொகையான தகவல்களைத் திரட்டிக் கொள்ளல், களஞ்சியப்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல், திட்பநுட்பமாக அணுகுதல் பணிகளை மேற்கொள்வதற்கு எண்ணிம கருவிகளும், நுட்பங்களும் துணை செய்கின்றன. அந்த வளர்ச்சி கலை இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் துணை செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன கல்வியும் சிறுவர் இலக்கியங்களும்

சிறுவர் கல்வியில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி அவர்களுக்குரிய இலக்கிய ஆக்கங்களிலே நேரடியான செல்வாக்கை ஏற்படுத்தி வருகின்றது. "அறிகை" *(Cognitive)* உளவியல் சிந்தனைகள் நவீன சிறுவருக்குரிய கற்றல், கற்பித்தல், கணினி மென்பொருளாக்கம், விளையாட்டுப் பொருட்கள், இலக்கிய ஆக்கம் என்ற அனைத்துத் துறைகளிலும் செல்வாக்கை ஏற்படுத்துகின்றன.

சிறுவரின் உடல், உள, சமூக வளர்ச்சிப் படிநிலைகள் ஒவ்வொன்றிலும் நிகழும் கற்றற் செயற்பாடுகளை அறிகை உளவியலாளர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தி வருகின்றனர். அந்த ஆய்வின் முடிவுகள் நவீன சிறுவர் இலக்கிய ஆக்கங்களை மேற்கொள்வதற்கு உசாத்துணையாக அமைந்து வருகின்றன.

அவற்றோடு இணைந்ததாக "நூலாக்கம்" என்ற துறை மேலெழுந்து வளரத் தொடங்கியுள்ளது. அச்சு நூல்கள் மற்றும் எலத்திரனியல் நூல்கள் ஆகியவற்றின் வெளியீட்டு அதிகரிப்பினூடே தரநிலையில் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலை நாட்டுக் கல்வி முறையில் ஆரம்ப வகுப்பிலிருந்தே சிறுவரிடத்து வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவரின் வாசிப்பை முன்னெடுப்பதிலே பெற்றோரும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

சிறுவர் இலக்கியத் தர மேம்பாட்டில் ஓவியங்களை மிக நுட்பமாகப் பயன்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர் இலக்கியச் சிறப்பு ஓவியர்கள் என்ற துறையினரின் வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa

ஏற்பட்டுள்ளது. உள்ளடக்கத்துடன் மட்டும் தொடர்புபட்டிருந்த கதை ஓவியமரபு, பல புதிய பரிமாணங்களை எடுக்கத் தொடங்கியுள்ளது.

வளர்ந்தோர் அறிகைத் தளத்தில் நின்று ஓவியம் வரையப்படாது, சிறுவரின் அறிகை வளர்ச்சி மட்டங்களை அடியொற்றி ஓவியங்கள் வரையப்படுகின்றன. சிறுவரின் வளர்ச்சி மட்டத்தை அடியொற்றி கோடுகளும், வண்ணங்களும், உருவங்களும் வடிவமைக்கப்படுகின்றன. ஓவியக் கற்பனையோடு கதைசொல்லல் இணைந்த வகையிலும் கிளைவிட்டு வளரும் நிலையிலும் வரையப்படுகின்றன.

வாசிப்பு நிலையில் சிறுவர் இலக்கியங்களை வளர்ந்தோரும் விரும்பி வாசிக்கும் நிலைதோற்றம் பெற்று வருகின்றது. சிறுவர் இலக்கிய நூல்கள் அதிக அளவிலே வெளிவருவதற்கு அதுவும் ஒரு முக்கியமான காரணம்

வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்விச் செயற்பாட்டில் சிறுவர்கள் "தாமாகக் கற்றுக் கொள்ளல்" வலியுறுத்தப்படுகின்றது. அதாவது, ஆசிரியரின் துணையின்றி நிகழ்த்தப்படும் தற்கற்றற் செயற்பாட்டுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. அந்நிலையில் கணினிகளின் பயன்பாடும் இணையம் வாயிலாகக் கற்றலும் வாசிப்பும் ஆரம்பப் பள்ளிக்கூட நடவடிக்கைகளாக்கப்பட்டுள்ளன.

இணைய வழியான தகவல்களைப் பெற்று தமக்கு வழங்கப்பட்ட ஒப்படைகளைச் செய்யுமாறு மாணவர் ஊக்குவிக்கப்படுகின்றனர். தாமாகச் செயற்பட்டுக் கற்கும் பொழுது, ஒருவித மகிழ்ச்சியையும் சிறுவர் பெற்றுக்கொள்கின்றனர். கல்விச் செயல்முறையில் நிகழ்ந்து வரும் அந்த வளர்ச்சி, வாசிப்புச் செயல்முறையை நேரடியாகவும் மறைமுகமாகவும் உற்சாகமூட்டி வருதல் குறிப்பிடத்தக்கது.

அந்நிலையில் புனைகதை சாரா வாசிப்புச் செயல்முறை வளர்ச்சியடைந்த நாடுகளில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்ச் சூழலில் சிறுவர் பாடல், சிறுவர் கதைகள் ஆகியவற்றின் ஆக்கங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அண்மைக்காலமாகத்தான் புனைகதை சாரா ஆக்கங்கள் மீதான கவனம் திரும்பியுள்ளது.

Class No:
Acc No 421



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council

ஆங்கில இலக்கியப் பரப்பில் சிறுவருக்கான புனைகதைசாரா எழுத்தாக்கங்கள் பெருமளவில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றை அடியொற்றிய உலக மாநாடுகளும் கூட்டப்பட்டு, எழுத்தாளர்களின் அனுபவங்கள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

சிறுவர் இலக்கிய மாநாடுகள் ஒவ்வோராண்டும் நிகழ்த்தப்படுதல் போன்று சிறுவர் புனைகதை சாரா எழுத்தாக்க மாநாடுகளும் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றன.

சிறுவர் இல்ககிய மாநாடுகளில் அண்மைக்காலமாக கருத்தாடல்கள், செய்யப்பட்ட விடயங்கள் சில வருமாறு:

1. வரலாறும் கலைகளும் (ஐ.இராச்சியம்)
2. சிறுவர் இலக்கியமும் வெகுசனப் பண்பாடும் (நெதர்லாந்து)
3. பயமும் பாதுகாப்பும் (அவுஸ்திரேலியா)
4. சிறுவர் இலக்கியமும் பண்பாட்டுப் பன்முகப்பாடும் (ஜேர்மனி)
5. அதிகாரமும் சிறுவர் இலக்கியமும் (ஜப்பான்)
6. உலகு ஒன்றினைச் சொல்லுதலும் உலகு ஒன்றினை உருவாக்குதலும் (நோர்வே)

சிறுவர் இலக்கியங்களைப் பன்முகத் தளங்களிலே ஆராய்தலும், ஆய்வு முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளலும் உலகளாவிய வளர்ச்சி பெற்று வருதலை மேற்குறிப்பிட்ட தகவல்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இலக்கியங்கள் பெருக்கெடுக்கத் தொடங்க அவற்றுக்குச் சமாந்தரமாக சிறுவர் இலக்கியத் திறனாய்வும் ஆய்வுகளும், ஆய்வு மாநாடுகளும் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

சிறுவர் கல்வியின் தொடக்க நிலை என்பது முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வரை அமையும். அதனைத் தொடர்ந்து நிகழ்வது இடைநிலைக் கல்வி. இடைநிலை மாணவருக்குரிய எழுத்தாக்கங்களும் சிறுவர் இலக்கியம் என்ற பிரிவில் உள்ளடங்கும்.

உளவியல் நிலையில் பியாசே உருவாக்கிய கிறுவர் வளர்ச்சிப் படிநிலைகள் சிறுவர் இலக்கிங்களை எழுதுவோருக்கு வழிகாட்டியாகவுள்ளன. ஒவ்வொரு வகுப்பு மட்டங்களுக்குமுரிய

Class No
Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநூல்கள் எழுதப்படும் பொழுது பியாசே மற்றும் வைகோட்சி ஆகியோர் முன்வைத்த உளவியற் கருத்துக்கள் தேவைக்கேற்றபடி பின்பற்றப்படுகின்றன.

ஒவ்வொரு வகுப்புக்குமுரிய சிறுவர் பாடநூல்களுக்கும் சிறுவர் இலக்கியங்களுக்குமிடையேயுள்ள தொடர்புகள் வலுப்பெறத் தொடங்கியுள்ளன. சிறுவருக்கான புனைகதை சாரா எழுத்தாக்கங்கள் இந்தத் தொடர்பை மேலும் கட்டியெழுப்புகின்றன. அந்தத் தொடர்புகளினால் சிறுவரின் வாசிப்புக் கவர்ச்சியை மேலும் தூண்டிவிட முடியும் என்று கருதப்படுகின்றது.

இடைநிலை வகுப்பு மாணவருக்குரிய புனைகதைகள் பின்வருவனவற்றை அடியொற்றி இருக்கும் வேளை மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

1. வேதனைத் திணிப்பு *(Bullying)*

2. பிரச்சினைகளிலிருந்து தப்புதல் *(Survival)*

3. எவ்வகை மேலாதிக்கத்துக்கும் எதிரானவை

4. விஞ்ஞானக் கற்பனை சார்ந்தவை

5. பெண்ணியம் சார்ந்தவை

6. வீரதீரச் செயல்களை உள்ளடக்கியவை

வேதனைத் திணிப்பு என்பது பள்ளிக்கூடங்களிலே பரவலாக இடம்பெற்று வருகின்றது. இது உலகளாவிய ஒரு பிரச்சினை. குறித்த மாணவரைத் தொடர்ச்சியான கிண்டலுக்கும் கேலிக்கும் உள்ளாக்குதல், பிறர் முன் இழிவுபடுத்தலை மேற்கொள்ளல், அவதூறாகப் பட்டம் சூட்டுதல், உடல் உபாதைகளுக்குட்படுத்துதல் முதலியவை வேதனைத் திணிப்பில் இடம்பெறுகின்றன. தொடர்ச்சியாக இதனை மேற்கொள்ளும் பொழுது மாணவர் பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்திக் கொள்கின்றனர். சமகாலப் பள்ளிக்கூடங்களில் இது ஒரு முக்கிய பிரச்சினையாகவுள்ளது. அமெரிக்காவில் கருமை இன மாணவர்களே வேதனைத் திணிப்புக்குக் கூடுதலாக உள்ளாக்கப்படுகின்றனர் என்ற தகவலும் உண்டு.

வேதனைத் திணிப்பால் பெண் மாணவிகளும்அதிக அளவிலே பாதிக்கப்படுகின்றனர். மாணவரின் கல்வியை இந்தச் செயற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவிலே பாதிப்புக்கு உட்படுத்துகின்றது. இந்த விடயம் தொடர்பான புனைவுகள் மாணவரால் விரும்பி வாசிக்கப்படுகின்றன.

சமகாலத்தைய சமூக அரசியற் சூழலும், தீவிர போட்டி முறைமையைக் கொண்ட கல்வியும், வாழ்வியல் அழுத்தங்களும் பள்ளிக்கூட மாணவரிடத்து உளநெருக்கீடுகளை உருவாக்குகின்றன. அந்நிலையில் பிரச்சினைகளை எதிர்கொள்ளலும், அவற்றை முறியடித்தலும், பாதுகாப்பாக வாழ்தலும் தொடர்பான கதைகளை மாணவர் விரும்பிப் படிக்கும் நிலை தோன்றியுள்ளது.

அண்மைக்காலத்தைய சிறுவர் வாசிப்பில் அதிக செல்வாக்குச் செலுத்தும் துறையாக "கொமிக்" நாவல்கள் அமைந்து வருகின்றன. "கொமிக்" நாவல்களில் ஒருவகை பழைய புராணக் கதைகளையும், உலகப் புகழ்பெற்ற கதைகளையும் மீளச் சொல்லல், சிறுவரின் உளவளர்ச்சி, மொழிவளர்ச்சி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு "மீளச் சொல்லிமுடிக்கப்பட்டவை" *(Retold)* என்ற செயற்பாடு, தனிச்சிறப்புள்ள சிறுவர் இலக்கிய வடிவமாக எழுகோலம் கொண்டுள்ளது.

ஒரு பனுவல் பலநிலைகளிலே மீளச் சொல்லப்படுகின்றது. உதாரணமாக இராமாயணக் கதை குழந்தைகளுக்காகவும் மீளச் சொல்லப்பட்டுள்ளது. இடைநிலைப் பள்ளிக் கூட மாணவருக்காகவும் மீளச் சொல்லப்பட்டுள்ளது. இரண்டுக்குமிடையே மொழிநிலை வேறுபாடுகள் உள்ளன.

நவீன சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள ஒரு முக்கியமான பதிவு, இனக்குழும அடையாளம் சார்ந்தது. பின்காலனியச் சூழலிலும், உலக மயமாக்கல் விசைகளின் மத்தியிலும் இது ஒரு முக்கியமான தேவையாக எழுந்துள்ளது. அதாவது, ஒவ்வொரு இனக்குழுமத்தினரும், தமது மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களை அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதற்கு வலிமையான கலைச் சாதனமாக சிறுவர் இலக்கியத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். பாதிப்புக்கு உள்ளான இனக்குழுமத்தினரே இத்துறையில் தீவிர அக்கறை காட்டுகின்றனர். புலச் சிதறல் நிலையில் இத்தேவை மேலும் அழுத்தம் பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார் கல்வியும் பின்கட்டமைப்பு இயலும்

சிறார் கல்வி தொடர்பான நியாயப்பாடு குன்றிய குல தொன்மங்கள் *(Myths)* நடைமுறையில் நிலவி வருவதாக பின்கட்டமைப்பியலாளர் *(Post Structuralists)* சுட்டிக்காட்டுகின்றனர். சமகாலத்திலே சிறார் கல்வியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள விருத்தி நிலைக்குப் பொருத்தப்பாடுடைய செயல் நிரல்கள் *(Developmentally Appropriate Practices)* என்ற கலைத்திட்டவடிவமைப்பையும் அவர்கள் திறனாய்வுக்கு உள்ளாக்குகின்றனர். நடைமுறையில் உள்ள சிறார் கல்வி தொடர்பான செயற்பாடுகளுக்கு பன்முகமான மாற்று அணுகுமுறைகளை முன்னெடுத்தல் வேண்டும் என்பதையும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

சிறார்கல்வி நடைமுறைகளிலே பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

- சிறாரை ஒன்றுமறியாதவர்களாகக் *(Innocence)* கருதியும் வளர்ந்தோரை மேலோங்கியோராக எண்ணியும் கல்வியை வழங்குதல்.
- உயரியல் சார்ந்த இயற்கை நெறிப்பாட்டுக்கு *(Naturalness)* அதிக முக்கியத்துவம் கொடுத்து, இயற்பண்புவாத அணுகுமுறைகளைக் கற்பித்தலில் மிகையாகப் பயன்படுத்துதல்.
- சிறார் மையக்கலைத்திட்டமும் கற்பித்தலியலும், அவர்களை ஒழுங்கமைக்கத் *(Regulates)* துணை போகின்றனவேயன்றி விடுவிக்க உதவி செய்யவில்லை.
- பால்நிலை வேறுபாடுகளை வலிதாக்கும் வகையிலான செயற்பாடுகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆண்நிலை ஓங்கல் மறைபொருட்கலைத்திட்ட *(hidden Curriculum)* செயற்பாடுகளில் ஊடுருவி நிற்கின்றது.
- பால்நிலையை ஓர் எழுபொருளாக *(Issue)* சிறாருக்குரிய கற்பித்தலில் முன்னெடுக்கப்படுதல் இல்லை.
- சிறார் கல்வியில் மரபுவழி, மற்றும் நவீன அணுகுமுறைகள் சமூகத்தில் அனுகூலம் மிக்கோருக்கே வாய்ப்பானதாக இருக்கும் நிலைக்குரிய மாற்று நடவடிக்கைகள் வறிதாக இருத்தல்.
- செயலூக்கமற்ற நிலையிலும் *(Passive)* தெறித்தல் *(Refletive)* அற்ற நிலையிலும் அறிவை உள்வாங்கும் நுகர்ச்சியாளராக சிறாரை மேலோங்கச் செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.
- சுயாதீனமாகத் தொழிற்படும் நிலையைக் காட்டிலும், சார்ந்திரும் நிலையே *(Dependent)* கலைத்திட்டத்தின் வழியாகப் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
- ஆசிரியர்களிடத்து கற்பித்தலியல் தொடர்பான அறிவு வளர்ந்த அளவுக்கு கருத்தியல்கள் *(Ideologies)* நிலைப்பட்ட திறனாய்வு சார்ந்த அறிவு மேம்பாடு கொள்ளவில்லை.
- கற்றல் இலக்குகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் செயல்முறைகளுக்கு *(Processes)* கொடுக்கப்படுதல் இல்லை.

சிறார் கல்வித் திட்டங்களை வடிவமைக்கும் பொழுது மேற்கூறிய குறைபாடுகளை உடனடியான கவனத்துவக்கு எடுக்க வேண்டியுள்ளது. உலகளாவிய முறையில் சிறுவருக்கான கலைத்திட்டம் காலத்துக்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு வந்தாலும் திறனாய்வுக்கு உட்படுத்த வேண்டிய குறைபாடுகள் அவற்றிலே காணப்படுதலையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

சிறாருக்குரிய நவீன கலைத்திட்ட வடிவங்களுள் ஒன்றாக விருத்தி நிலைக்குரிய பொருத்தப்பாடுகளை உள்ளடக்கிய செயற்பாடுகளைக் கொண்ட கலைத்திட்டம் *(DAP)* ஐ.அமெரிக்க கலைத்திட்டவியலாளரால் முன்வைக்கப்பட்டது. *(Seefeldt,L. (1987) 'Todays Kinderfarten. Pleasure or Preasure, The Principal, Vol:64:No5, pp12-16)* அக்கலைத்திட்டத்தில் பின்வரும் சிறப்பியல்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திறந்த முடிவுகளைக் *(Open Ended)* கொண்ட கற்றல் பொருள்களையும் அனுபவங்களையும் கையளித்தல்.
- கற்றல் வெளிப்பாடுகளைக் காட்டிலும் கற்கும் செயல் முறைகளைக் குவியப்படுத்துதல்.
- சிறாரின் தெரிவுக்கும், சுயநெறிப்பட்ட கற்றலுக்கும் தூண்டுதலளிக்கும் வகையில் கற்றற் பொருட்களையும் பௌதிக சூழலையும் ஒழுங்கமைத்தல்.
- கற்பதற்குரிய சுய ஊக்கல் கொண்டவர்களாக சிறார் விளங்குகின்றனர் என்ற எடுகோளைக் கொண்டிருத்தல்.
- பொருத்தமான கற்றல் சாதனங்களை சிறாரின் வயதுக்கும், படிநிலை வளர்ச்சிக்கும் ஏற்றவாறு பயன்படுத்தும் அறிவை ஆசிரியர் கொண்டிருத்தல்.
- தனியாள் தேவைகளையும் அனுபவங்களையும் குவியப்படுத்துதல்.
- மாணவரின் விருப்பங்களுக்குப் பொருத்தமான திடமானதும் காட்சி நிலைப்பட்டதுமான அனுபவங்களைத் தருதல்.
- சிறாரின் விருத்தி நிலைத் தேவைகளையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் அவதானித்தும் ஆழவிளங்கியும் எவற்றைக் கற்பித்தல் வேண்டுமென்ற தீர்மானங்களை எடுத்தல்.
- சிறாரின் கற்றலிலும் மேம்பாட்டிலும் உற்சாகத்தைத் தரவல்ல மத்திய ஊடகமாக விளையாட்டைப் பயன்படுத்துதல்.

ஆழ்ந்து நோக்கும்பொழுது மேற்குறித்த செயற்பாடுகள் ஜீன்பியாசே தந்த கருத்துக்களை அடியொற்றி ஆக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். விஞ்ஞானிகளாக தமக்குரிய அறிகைக் கட்டமைப்புக்களை சிறார் ஏற்படுத்திக் கொள்கின்றார்கள் என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டே மேற்குறித்த செயற்பாடுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால் இவற்றிலே பல உள்ளார்ந்த குறைபாடுகளும் காணப்படுகின்றன. கருத்தியலில் மரபுவழியாக மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகளும் அவற்றைத் தொடர்ந்து பியாசே முன்மொழிந்த கருத்துக்களின் மட்டுப்பாடுகளும் பின்கட்டமைப்பியலாளர் தமது கருத்துக்களை முன்மொழிவதற்குக் காரணிகளாக அமைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழிக் கருத்துக்களிலும் பியாசேயின் கருத்துக்களிலும் பின்வரும் பொதுவான குறைபாடுகள் காணப்படுகின்றன.

- உடல் உள ஆற்றல்களில் அறைகூவல் விடுக்கப்பட்ட சிறாரின் கல்விக்கான அத்தியாவசியமான கட்டமைப்புக்களையும், வழிகாட்டல்களையும் அவர்கள் போதுமான அளவில் வழங்கவில்லை.
- அவை மத்தியதர வகுப்பினரின் இலக்குகள், நம்பிக்கைகள், விழுமியங்கள் முதலியவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- சமூக ஏற்றத்தாழ்வுகளையும், அநீதிகளையும் தொடர்ந்து தக்கவைக்கும் செயற்பாடுகளை அவை கொண்டுள்ளன.
- பால்நிலை ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்குப் பதிலாக நீடித்து நிலைப்பதற்கான செயற்பாடுகளையே முன்னெடுத்துள்ளன.
- கற்றலில் நிகழும் சமூக முரண்பாட்டு விசைகளை அவை புறக்கணித்துள்ளன.
- வைக்கோட்சி குறிப்பிட்டுள்ள சிறார் விருத்தியின் பல்பரிமாண நோக்குகளைப் புறக்கணித்துவிட்டன.

தொகுத்து நோக்கும் பொழுது சிறாரின் கற்றல் தொடர்பான பாரம்பரியமான அணுகுமுறைகளும், பியாசேயின் முன்மொழிவுகளும், ஒரு தலைப்பட்சமானவையாக இருப்பதுடன், காலவதியான நிலையை அடைந்துவிட்டன என்றே குறிப்பிட வேண்டியுள்ளது. சமூக முரண்பாடுகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாத அவலமே அவற்றில் ஊடுருவியுள்ளன.

பின்கட்டமைப்பியலாளர் சிறார் கல்வி தொடர்பான மிகவும் தீவிரமானதும், மரபுவழி அடிப்படைகளையே வினாவுக்கு உள்ளாக்குவதுமான கருத்துக்களை முன்மொழிகின்றார்கள். முதலில் அவர்கள் குறிப்பிடும் கருத்துவினைப்பாடு *(Discourse)* என்ற எண்ணக்கருவை விளங்கிக்கொள்ளல் வேண்டும். மொழி, கருத்து, தனிமனித நிலை, சமூகம் ஆகியவற்றுக்கிடையே தொடர்புகளையும், இடைவினைகளையும் உள்ளடக்கி நிற்பதே கருத்து வினைப்பாடு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகளுக்கு இயலுமான வரையில் விளக்கங் கொடுத்தலும், நடப்பியலுக்கு இயலுமானவரையில் கருத்தமைத்தலும், கருத்து வினைப்பாட்டுடன் இணைந்த அறிகைச் செயல் முறைகளாகும். குறிப்பிட்ட வரலாற்று நிலையிலும், பண்பாட்டு நிலையிலும் அவற்றுக்கு மட்டுமே உரிய குறித்துரைப்புக் கொண்டதாக கருத்து வினைப்பாடு அமையும். பல்வேறு சிறப்பார்ந்த கற்பித்தற் செயற்பாடுகளில் குறிப்பிட்ட ஒரு செயற்பாடு பலவற்றுள் ஒன்றாக இருக்குமேயன்றி அதுமட்டுமே சிறப்பார்ந்த செயற்பாடாக இருக்கமாட்டாது என்பதை தமது கருத்து வினைப்பாட்டு எண்ணக்கருவால் பின்கட்டமைப்பு வாதிகள் வலியுறுத்துவர்.

மேற்கூறிய கருத்துக்களில் இருந்து பின்கட்டமைப்பியலாளர் மேலும் முன்னேறிச் செல்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் குறிப்பிட்ட நேரத்தில் பல கருத்து வினைப்பாடுகள் சுற்றோட்டத்தில் இருக்கும். அவற்றில் எவை ஆசிரியர் ஒருவருக்கு கிடைக்கின்றதோ, எவ்வாறு அவற்றை அவர்கள் விளக்கிக் கொள்ளுகின்றார்களோ அவற்றுக்கேற்றவாறு ஆசிரியரது கற்பித்தற் செயற்பாடுகள் விரிவடையும் அல்லது சுருக்கமடையும்.

கருத்து வினைப்பாட்டுக்கும் அதிகாரத்துக்குமுள்ள தொடர்புகளை பின்கட்டமைப்பியலாளராகிய மிசேல் பூக்கோ தெளிவாக விளக்கியுள்ளார். *(Focault, M (1982) The Subject and Power, Chicago, University of Chicago Press)* குறிப்பிட்ட கருத்து வினைப்பாடுகள் குறிப்பிட்ட குழுவினரின் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு ஏற்புடையதாக இருக்கும். ஏனெனில் அதிகாரத்தைப் பிரயோகிப்பவரது சமூகத்தில் அவை அங்கீகரிக்கப்பட்டவையாயும், சரியானவையாயும், பொருத்தப்பாடு கொண்டவையாயும் காணப்படும். இவை நிறுவனப்படுத்தலுக்குச் சார்பாக நின்று அதிகாரத்தை நிலைநிறுத்தவும் தொழிற்படுத்தவும் உதவுகின்றன.

ஆசிரியரைப் பொறுத்தவரை எது சரியென்றும் எது பிழையென்றும் வரையறுத்தல் கற்பித்தலைப் பொறுத்தவரை குறிப்பிட்ட சமூகத்தாற் கட்டமைப்புச் செய்யப்பட்ட கருத்து வினைப்பாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படும். இதற்கு ஏற்பவே சிறார் கல்வியும் கட்டமைப்புச் செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட சில கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைப்பாடுகள் குறித்த சமூகச் சூழலில் மேலோங்கியவையாயிருக்கும். இக்காரணத்தால் அவை உண்மையானவை என்றோ, சரியானவை என்றோ முடிவு கொள்ளக்கூடாது.

சமூக விளைவு கொண்ட எந்த நடத்தையும் அதிகார விளைவு கொண்டவையும், அதிகார நிறுவனப்பலப்படுத்தற் செயற்பாடு கொண்டவையாகவும் அமையும்.

சமகாலத்தில் எல்லா சமூக நிறுவனங்களும் தம்மை வலுப்படுத்திக் கொள்வதற்கும் நீடித்து நிலைத்துக் கொள்வதற்கும் உண்மை பற்றிய அதிகார அணிகளை *(Regimes of Truth)* உருவாக்கியும் பராமரித்தும் கொண்டு வருகின்றன. தம்மைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் எவ்வாறு சிந்திக்க வேண்டும் எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்பவற்றைப் பற்றியதாக அதிகார அணிகள் அமைந்திருக்கும். சிறார் கல்வி எவ்வாறு கட்டமைப்புச் செய்யப்படல் வேண்டும். எவ்வாறு கற்பித்தல் நிகழ்த்தப்படல் வேண்டும் என்பவற்றை முன்னெடுப்பதற் குரிய உண்மை பற்றிய அதிகார அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சிறார் கல்வி, சிறார் விருத்தி என்று பேசப்படுவது எல்லாம் சமூக உலகம் உண்மைக்காகப் போட்டியிட்டுக் கொடுக்கப்படும் பல்வேறு விளக்கங்களுள் அடங்கி நிற்கின்றன. அவை போட்டியின் வாயிலாக தமது அந்தஸ்தை நிலை நிறுத்திக் கொள்ளுகின்றன. சிறார் கல்வியில் பல்வேறு திட்டங்களும் எண்ணக்கருக்களும் மாற்றீடாகவுள்ளன. குறிப்பிட்ட கற்பித்தற் பொருட்களும், குறிப்பிட்ட வகையில் கற்பித்தற் சாதனங்களை ஒழுங்கமைப்பதும்தான் சரியானவை என்பதல்ல. உண்மைகள் பராமரிக்கப்படுவதற்கும், நிறுவப்படுவதற்கும் அவற்றுக்கு நிறுவன ஆதரவும் தனியாள் ஆதரவும் கிடைக்கப்பெறுகின்றன. அதிகார அணியின் உண்மை பற்றிய அரசியல் சாராம்சத்துடன் நிறுவன ஆதரவு தொடர்புடையது.

உண்மை பற்றிய அதிகார அணியின் அறச் சாராம்சத்துடன் தனியாள் ஆதரவு தொடர்புபட்டு நிற்கின்றது. தம்மைப் பற்றி ஒருவர் எவ்வாறு சிந்திக்க வேண்டும், தாம் எவ்வாறு தொழிற்படல் வேண்டும், மற்றவர்களை எவ்வாறு அணுகுதல் வேண்டும் என்பவை அனைத்தும் உண்மை பற்றிய அதிகார அணியின் வழிப்படுத்தலுக்கு உட்பட்டவையாக அமைகின்றன. இவற்றுக்கு அமைய ஒருவர் சிந்தித்துத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்படும் பொழுது அவருடைய நடத்தை ஏற்புடைய நடத்தையாக, அங்கீகரிக்கப்பட்ட நடத்தையாக, நியம நடத்தையாகக் கொள்ளப்படும். இவ்வாறு ஒருவர் நடந்துகொள்ளும் பொழுது அவருக்கு நிறுவன ஆதரவு கிடைக்கப்பெறும். இந்நிலையில் ஒருவருக்குரிய தனியாள் சாராம்சமும் அரசியல் மற்றும் சமூக சாராம்பமும் ஒன்றிணைந்து கொள்கின்றன.

மற்றவர்களைப் பற்றி ஒருவர் உருவாக்கிக் கொள்ளும் மனக்கருத்துருவாக்கம், அதிகாரமும் அறிவும் பற்றி அறிந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. உண்மைகள் நித்தியமானவை அன்று. போட்டியிடும் பல உண்மைகள் உலகிற் காணப்படுகின்றன. இந்நிலையில் உண்மை பற்றிய பின்வரும் வினாக்கள் அவர்களால் எழுப்பப்படுகின்றன.

- உண்மை என்பது யாது?
- உண்மையால் நன்மை பெறுகின்றவர் யார்?
- உண்மை யாருடைய நலனுக்காக உருவாக்கப்பட்டுள்ளது?
- உண்மையைப் பயன்படுத்தி யார் அதிகாரத்தை வலுப்படுத்துகின்றனர்?

அதிகாரத்திலுள்ளோர் தமது அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கும் தக்க வைத்துக்கொள்வதற்கும் சிறார் நிலையிலிருந்தே கல்வியை ஒழுங்கமைத்து வருகின்றனர் என்பது பின்கட்டமைப்புக் கருத்து.

பால்நிலையான ஒடுக்குமுறையானது அதிகாரத்தின் பிறிதொரு பரிமாணமாகும். ஆரம்பக் கல்வியில் பால்நிலை ஒடுக்குமுறையை முன்னெடுக்கும் பல செயற்பாடுகள் இடம்பெறுதல் பின்கட்டமைப்பியலாளரால் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவை:

- சிறார் கல்வியில் பால்நிலைப் பாத்திரங்களைப் பலநிலைகளிலே வலியுறுத்தி வேறுபடுத்துதல்.
- மொழி, ஆடை அணிகலன்கள் மற்றும் நடத்தைகளால் பால்நிலை வேறுபாடுகளை விசாரிக்கச் செய்தல்.
- பால்நிலைச் சமத்துவம் கல்வியால் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்ற மாயைத் தோற்றத்தை ஏற்படுத்திவிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடற்பலத்தை அதிக அளவு வெளிப்படுத்தும் விளையாட்டுக்களில் ஆண்களை மட்டும் ஈடுபடுத்துதல்.
- பெண்கள் தொடர்பான அணுகுமுறைகளில் சமூக, பொருளாதார முக்கியத்துவங்களைக் குறைத்து உயிரியல் பண்புகளுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தல்.

மேற்குறித்த எதிர்மறை நிலைகளின் பின்னணியில் பால்நிலை இனங்காணல் தொடர்பான பின்வரும் கருத்துக்களை பின்கட்டமைப்பியலாளர் குறிப்பிடுகின்றனர்.

- பால்நிலை இனங்காணல் உருவாக்கத்தில் சிறார் செயலூக்கம் மிக்க பங்கினை வகிக்கின்றார்கள்.
- பால்நிலை இனங்காணலில் அவர்கள் சுதந்திர முகவர்களாகத் தொழிற்படுவதில்லை.
- யாதாயினும் ஒருதனி முறையால் மட்டும் சிறார் அறிவைத்திரட்டிக் கொள்வதில்லை.
- அதிக அளவு கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய கருத்து அங்காடியிலேயே சிறார் அறிவைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுகின்றார்கள்.
- சிறார் தம்மைப் பற்றிய கருத்துருவாக்கம் செய்து கொள்வதில் பிறருடனான இடைவினைகள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன.
- எதிர் சனநாயக நடத்தைகளை மற்றும் அநீதிகளை அறிந்துகொள்ளக் கூடிய திறன் சிறார்களுக்கு உண்டு.

மேற்கூறிய அனைத்துப் பரிமாணங்களையும் தொகுத்து நோக்கி ஒடுக்கு முறைகளுக்கு எதிரான சிறார் கல்விச் செயற்பாடுகளில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

- தம்மை பற்றி நல்லுணர்வு கொள்ளும் செயற்பாடுகளை சிறார் கல்வியில் ஏற்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கலைத்திட்ட செயற்பாடுகளில் முழு ஆற்றலுடன் பங்குபற்றுவதற்குரிய கொள்ளளவு ஆற்றலை அவர்களிடத்து வளர்த்தல்.

- மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும் பொழுது எது ஏற்புடையது, எது ஏற்புடையது அன்று என்று தீர்மானம் எடுக்கக்கூடிய ஆற்றலை சிறாரிடத்து வளர்த்தல்.

- ஏறுக்குமாறான நடத்தைகளை எதிர்க்கும் ஆற்றல்களை மேம்படுத்தல். திறனாய்வுச் சிந்தனை மற்றும் தெறித்தற் சிந்தனைகளை வளர்த்தல்.

- பால்நிலை தொடர்பான ஆரோக்கியமான கருத்துப் பரிமாணங்களை ஏற்படுத்துதல்.

- எதிர் சனநாயக நடத்தைகளை அம்பலப்படுத்துதல்

- சிறார்நோக்கு தொடர்பான கருத்துக்களை பரிமாறிக் கொள்ளல்.

- ஒரே நோக்கான அணுகுமுறையினைப் புறந்தள்ளி பன்முக அணுகுமுறைகளை முன்னெடுத்தல்.

பின் கட்டமைப்பியலாளரின் முன்மொழிவுகளும் அவற்றை உள்வாங்கி மேற்கொள்ளப்பட்டுவரும் சிறார் கல்வி நடவடிக்கைகளும் திறனாய்வு நோக்கில் அணுகுதற்குரியவை. சமகால நிகழ்ச்சிகளை ஆய்வுக்குட்படுத்திய பின்கட்டமைப்பியல் தரிசனம் அறிகை நிலையில் பல புதிய புலக்காட்சிகளை ஏற்படுத்தியுள்ளது.

சமகால சமூக பொருளாதார வாழ்க்கைக் கோலங்களில் மேடும் பள்ளமுமான அதிக வீச்சு ஏற்படத் தொடங்கியுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ்வாழ்வோரின் எண்ணிக்கையும், கல்விச் செயல்முறையில் இருந்து வெளிவீசப்படுவோர் எண்ணிக்கையும், தரமான கல்வியைப் பெறமுடியாது நிராகரிப்புக்கு உள்ளானோர் எண்ணிக்கையும் பராமரிக்க முடியாத அளவுக்கு உயர்ந்து செல்கின்றன. இந்நிலையில் ஒடுக்கப்பட்டோருக்கு விடிவும் விசேமாசனமும் தரும் தெளிவான கருத்தியலை நோக்கி நகர வேண்டியுள்ளது.

சமகாலக் கல்வி வளர்ச்சி தொடர்பான பல பரிமாணங்கள் இங்கு நோக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களும், கல்வி நிர்வாகிகளும் கல்வியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடைய சமூகத்தினரும் புதிய வளர்ச்சி நிலைகளை அறிந்திருத்தல், அறிகை நிலையிலும் தொழிற்பாட்டு நிலையிலும் தவிர்க்கவியலாத தேவைகளாகவுள்ளன. பயனுள்ள கருத்து வினைப்பாடுகளுக்கு இவை நுழைவாயில்களாக அமையும். கற்பித்தலியல் காலங்கடந்த தடங்களில் இருந்து முன்னோக்கி நகர்த்தப்பட வேண்டியுள்ளது. அறிவினால் தமது சுயநலப்படிமத்தை *(EGO)* கட்டமைப்புச் செய்வோர் உள்ளனர். புதிய அறிவுப் பெருக்கைச் சமூகத்துக்கு சுவறவிடாது அணைபோடுவோர் ஒரு சாரார். தாம் படித்த காலத்திற் பெற்றுக்கொண்ட அறிவோடு திருப்தியுற்று மேலும் தேட முயலாதவர்கள் இன்னொரு சாரார். ஒடுக்கு முறைகளுக்குக் கருவியாக அறிவு பயன்படுத்தலை அறியாதிருப்போர் வேறொரு சாரார்.

இந்த முரண்பாடுகளினூடே சமகாலக் கல்வி முனைப்படைந்து வருகின்றது. ஆசிரியத்துவம் ஆவல் மிக்க எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால கல்வி வளர்ச்சி

உலகின் சமகாலக் கல்வி வளர்ச்சி பலபுதிய பரிமாணங்களையும் புதிய எண்ணக்கருக்களையும் தோற்றுவித்துள்ளது. கோள் நிலைப்பட்ட உணர்வுகள் *(Planetary Conscious)* என்ற மேலோங்கிய பரந்த தளத்திலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய கல்வி நடவடிக்கைகள் உலக சந்தையின் அழுத்தங்களுக்கு ஏற்றவாறு இயங்கத் தொடங்கிவிட்டது. மனிதவளம் உள்ளிட்ட இயற்கை வளங்கள் பராமரிக்க முடியாமல் சுரண்டலுக்கு *(Unsustainavle Explotation)* உள்ளாகும் நிலை கல்வியின் குறிக்கோள்களையும் தொழிற்பாடுகளையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

உலகம் தழுவிய நுகர்ச்சிப் பண்டமாகக் கல்வி மாற்றப்பட்டு வருகின்றது. உலக வர்த்தகத்தினதும் உற்பத்திக் கோலங்களதும் வளர்ச்சி நிலைகள் வாழ்வாதார எல்லைகளின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்துள்ள நிலையில் *(Mitter, 1986)* உற்பத்தி நிறுவனங்கள் மேற்கொள்ளும் சிக்கன நடவடிக்கைகளுக்கு கற்றவர்களும் கல்வி நிறுவனங்களும் இரையாகும் தோற்றப்பாடுகள் மேலெழத் தொடங்கியுள்ளன.

நவீன சமூக வளர்ச்சி பற்றி ஆராய்ந்த லற்ரோச் *(Latoiche,s 1993)* "பெருநிலைச் சமூகம்" *(Grand Society)* என்ற எண்ணக்கருவை முன்மொழிந்தார். இதன் விளக்கம் என்னவென்றால், மனித நாகரிக முன்னேற்றத்தின் உயர்ந்த கட்டமாக மேலைத்தேய சந்தை நிலைப்பட்ட மனோபாவங்களை உள்ளடக்கிய சமூகம் குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சமூகம் புதிதாக வறியவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. வீடற்றவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கமடையச் செய்கின்றது. எதிர் நிறுவனமாக்கற் செயற்பாடுகளை *(De Institutional Activities)* அதிகரிக்கச் செய்கின்றது. கல்வி நிறுவனங்களில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவீசப்படுவோரின் எண்ணிக்கையை உயர்த்திச் செல்கின்றது. தரமான கல்வியைக் கற்றவர்கள் கூட வேலையின்மை மற்றும் கீழ் உழைப்பில் ஈடுபடும் நிலையை ஏற்படுத்தி விடுகின்றது.

உலகச் சந்தை என்ற கண்ணோட்டத்தில் கல்வி இயக்கப்படும் பொழுது கற்றவர்கள் தமது நிலத்திலிருந்தும், தமது பண்பாட்டிலிருந்தும், பிடுங்கி எறியப்படுகிறார்கள். மேலைத்தேய அபிவிருத்திக் கோட்பாடுகள் இச்செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும், அனுகூலமாகவும் அரண்களாகவும் அமைகின்றன. தமது பண்பாட்டோடு இணக்கமுற்று வாழும் மாணவரை உருவாக்குவதற்குப் பதிலாக தமது பண்பாட்டுச் சுவடுகளை நிராகரிக்கச் செய்யும் உளப்பாங்குகளை நிரப்பக் கல்விச் செயற்பாடுகள் முனைகின்றன. தமது சுய ஆற்றல்கள், சுயவளங்கள் பற்றிய நம்பிக்கை வரட்சியைக் கல்வி வழங்கல் நடவடிக்கைகள் ஏற்படுத்தி விடுகின்றன.

உலக வங்கியின் அறிவுரைகளின்படி உருவாக்கப்பட்டுவரும் கட்டமைப்புச் சீராக்க நடவடிக்கைகள் *(Stuctural Adjustments)* கல்வி மற்றும் சமூக நலன்புரிச் செயற்பாடுகள் மீது வழங்கப்படும் நிதியைப் படிப்படியாக வெட்டிக் குறைக்கத் தொடங்கியுள்ளன. கல்வியின் விழுமிய உள்ளடக்கம் நடப்புவாழ்வை விட்டு விலகியும், நுகர்ச்சி விழுமியங்களை *(Consumption Values)* வலியுறுத்தியும் உருவாக்கப்படுவதற்குரிய மேலைப்புல நிபுணத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. உடைந்த தற்கோலத்தை *(Self Fragmentation)* உருவாக்குவதிலே கல்வி ஈடுபாடு கொள்ளுகின்றது. உலகு பற்றிய பார்வையை எதிர்நோக்குடன் *(Anti World View)* செயற்படுத்தலுக்குக் கல்வி முறை தூண்டுதலளிக்கின்றது.

உலக சந்தை வேண்டிநிற்கும் திறன்களையும் ஆற்றல்களையும் வளர்த்தல் ஆரம்ப நிலைக்கல்வியில் இருந்து உயர்மட்டங்கள் வரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் தேசிய மொழிகள் பலமிழந்தவையாகக் காட்டப்படுகின்றன. இயற்கை வளங்களின் அழிவு, கோள வெப்பம் அதிகரித்தல், மனித உரிமைகள் மீறப்படல், வறுமை முதலியவை நவீன முதலாளித்துவ நடவடிக்கைகளால் நிகழ்கின்றன என்பதை வெளிக்காட்டாது, தவறான கல்வி முறைமையின் விளைவுகளே என்றவாறு போலித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரையிட்டுக்காட்டும் கல்வி நடவடிக்கைகளும் கருத்தரங்குகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கல்வி ஒரு சிறு உயர்ந்த குழாத்தினருக்கு நன்மை பயக்க, பெரும்பாலானோர் பரிதவிப்பு நிலையில் விடப்படுகின்றனர் *(Manson, M 1997)* தொழில் பெற்றோருக்கும் பெறாதோருக்குமிடையேயுள்ள விகித இடைவெளி மேலும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

**உளவியல் அழுத்தங்கள்:**

கல்விச் செயல்முறை மற்றும் தொழில் வாழ்க்கை முதலியவை தொடர்பான நிராகரிப்பு *(Denial)* என்ற எண்ணக்கரு மனித உள்ளங்களிலே வளரத் தொடங்கியுள்ளது. கைவிடப்பட்ட நிலையிலே தூண்டப்படும் மனஉணர்வுகள் விகாரமான மனப்பெருக்கத்துக்கு இட்டுச் செல்கின்றது. ஆதரவற்ற நிலையில் இருப்போரை வர்க்க நிலையில் ஒன்று திரட்டுவதற்குரிய வலிதான நிறுவன அமைப்புகள் உருவாகாதிருத்தல் மேலும் அவலங்களை ஏற்படுத்தி விடுகின்றது. இலங்கையில் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கிய திட்டம் நிராகரிப்பை நீக்கும் தற்காலிக நடவடிக்கையாக இருந்தாலும், கல்வியையும் பொருளாதாரச் செயல்முறையையும் கருத்திற் கொள்ளாத நிலையில் கீழ் உழைப்புச் செயல்முறை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

நிராகரிப்பின் முக்கியமான ஓர் உளக்கோலம் பரிதவிப்பு *(Despair)* நிலையாகும். மக்கே *(Macy,J 1991)* இவ்வாறான தோற்றப்பாட்டை விளக்கும்பொழுது, இது சமகால வரலாற்றின் வெளிப்பாடு என சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளுடன் இந்த உளநிலை தொடர்புபட்டு நிற்றலைச் சுட்டிக்காட்டுதலே பொருத்தமான தரிசனமாகின்றது. தனித்துக் கல்வி நிலையங்களுடன் மட்டும் இணைந்த தொழிற்பாடாக இதனைக் கொள்ள முடியாது.

தரமேம்பாடு, பன்முகக்கல்வி அனுபவங்கள், தொழில்களோடு இணையவைக்கும் கல்வி என்பவை வலியுறுத்தப்பட்டு வரும்வேளை, கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதியை வெட்டிக் குறைக்கும் நடவடிக்கைகள் நிராகரிப்பு உணர்வையும் பரிதவிப்பு நிலையையும் கல்வி நிறுவனங்களை நடத்துபவர்களுக்கு ஏற்படுத்தி விடுகின்றன. கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் தனியார் கம்பனிகளின் வலியுறுத்தல்களுக்கு ஏற்றவாறு இயக்கப்பட வேண்டிய அவலநிலையும் உருவாக்கப்படுகின்றது. கல்வி நிறுவனங்கள் உற்பத்தி நிறுவனங்களிலும் தாழ்ந்தவை என்ற தாழ்வுச் சிக்கலையும் இந்நிலை ஏற்படுத்தி விடுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் நவீன கல்வியியலில் எடுத்தாளப்படும் ஓர் எண்ணக்கருவாக "நடையறிவு" *(Sagacity)* அமைதல் குறிப்பிடத்தக்கது. புத்திக்கூர்மை மற்றும் நுண்மதி ஆற்றல்களோடு நடைமுறைத் தந்திரோபாயங்களையும் நாகரிகமான ஏமாற்று முறைகளையும் கலந்து செயற்படுத்துதலை "நடையறிவு" என்ற எண்ணக்கரு புலப்படுத்தும். கல்வி நிறுவனங்களும், பெற்றோரும், தளமற்ற ஆய்வறிவாளரும், நடையறிவு நுட்பங்களைப் பயன்படுத்துவோராய் மாறுகின்றனர்.

தனியார் நிறுவனங்களின் கனவுகளுக்கு ஏற்றவாறு கல்வி நிறுவனங்கள் இயக்கப்படல் வேண்டும் என்ற வலியுறுத்தல் மேலோங்கி எழத் தொடங்கியுள்ளது. சுரண்டலும் நுகர்ச்சித் தூண்டலும் தனியார் நிறுவுனக் கனவுகளின் உள்ளடக்கங்களாகின்றன. மாறுபடும் வர்த்தக சகல ஒட்டங்களுக்கும் சவுக்கடிவாங்கும் "மனிதராக" கல்வி மாற்றம் பெற்றுள்ளது *(Quarter And Mattews 1987)* இந்நிலையில் கல்வி மீண்டும் அடிப்படைகளை நோக்கிச் செல்லல் வேண்டும் *(O.S.Ullivan, (1980) "Back to the Basis")* என்ற கருத்தை வலியுறுத்தும் குரல்களும் எழத் தொடங்கியுள்ளன.

**பொருளாதார விளைவுகளும் கல்வியும்:**

கைத்தொழில் நிறுவனங்களின் கைப்பொம்மைகளாக இயங்கும் விளம்பரங்கள் "மனித உணர்வுகளுக்கும் தலைமை தாங்குவோர்" *(Captains of Consciousness)* என்ற வகிபாகத்துக்கும் உயர்த்தப்பட்டுள்ளன. நிஜங்களை மூடுதல் இவற்றின் தலையாய தொழிற்பாடுகளுள் ஒன்றாக அமைகின்றது. கல்வி நிறுவனங்களும் விளம்பரங்களில் தங்கியிருக்க வேண்டிய (முன்பு காணப்படாத) நிலை இன்று தோன்றியுள்ளது.

இன்றைய கைத்தொழில் ஒழுங்கமைப்பும் அதன் வளர்ச்சியும் கல்வியிலே சமனற்ற வாய்ப்புகளை மட்டுமன்றி, பொருள்கள் மற்றும் சேவைகளின் நுகர்ச்சியிலும் சமனற்ற வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. *(Apple, 1979)* மூலவளங்களின் நுகர்ச்சியைத் தமக்குச் சாதகமாக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் நிறுவனங்களும் முடிவுப் பொருள்களின் விற்பனையும் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றன. இந்த நிலையை மீண்டும் மீண்டும் பிறப்பிப்பதற்கு ஏற்ற வகையிலே கல்விச் செயற்பாடுகள் வடிவமைக்கப்படுகின்றன.

கோள்நிலைப் பட்ட போட்டிச் சந்தைக்கு *(Global Conpetetive Maket)* வலுவூட்டும் வண்ணம் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பும் மரபு அணுப் பொறியியலும் *(Genetic Engineering)* வடிவமைப்பட்டு வருகின்றன.

நவீன நுகர்ச்சியைப் பொருளாதாரக் கோலங்களுடன் அனுசரித்துச் செல்லும் வகையிலே பின்வரும் எண்ணக்கருக்கள் முன்வைக்கப்பட்டன:

1. பொருளாதாரம் தொடர்பான சுதந்திரமானதும் கட்டற்றதுமான தொழிற்பாடுகள் *(Free Enterprise)*

2. அரசியல் தொடர்பான தாராண்மை சனநாயகம் *(Liberal Democracy)*

3. பண்பாடு தொடர்பான சுதந்திரச் சிந்தனை *(Free Thought)*

4. கல்வி தொடர்பான கோளமயச் சந்தை இடம் *(Global Market Place)*

மேற்கூறிய அனைத்து எண்ணக்கருக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இயக்கங் கொள்வதுடன் தனிமனித விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்ற மாயைத் தோற்ற ஆக்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. விநோத உலகமாக *(Wonder World)* என்பது நடைமுறையில் இழப்பு உலகமாக *(Waste World)* மாறும் நிலை தோன்றுகின்றது.

கல்வியில் பேசப்படும் பன்முகவியல் *(Pluralism)* என்பது பல அறிவுத்துறைகளையும், பல அனுபவங்களையும் தொகுத்து வழங்குதல் வாயிலாக எழும் முக்கியத்துவத்தை காலங்காலமாக வலியுறுத்தி வந்துள்ளது. இது ஒருமை இயலுக்கு மாறுபட்டது. பன்மை நோக்குநிலை அறிவுப் பெருக்கத்துக்கு ஆதாரமாகக் கருதப்பட்டது. நிறைவான ஆளுமை வளர்ச்சிக்கு பன்மைநோக்கு அடிப்படையானதாக வலியுறுத்தப்பட்டது. ஆனால் சமகால பொருளாதார வளர்ச்சியும், உலக சந்தையின் எழுச்சியும் பன்முகவியல் என்ற நோக்கை "பன்முக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுதலிப்பு" *(Pluriverse)* என்ற நிலைக்கு மாற்றிவிட்டது. தனித்தனியாக இயக்கமுறும் நிலையை இந்த எண்ணக்கரு புலப்படுத்துகின்றது.

ஒரே முகமான வார்ப்புச் சிந்தனைகளை நோக்கி பெற்றோரும் மாணவரும் நகர்ந்து செல்லுமாறு கற்பிதங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## அறிகை விஞ்ஞானம்

பியாசேக்கு பின்னர் கல்வி உளவியலில் நிகழ்ந்த ஆய்வுகளின் வழியாக "அறிகை விஞ்ஞானம்" *(Cognitive Science)* என்ற எண்ணக்கரு ஆக்கம் பெற்றது. அறிகை விருத்தி உளவியலையும் கணினித் தொகுதிகளின் அறிபாவனையையும் *(Computer systems simulation)* ஒன்றிணைத்து அறிகை விஞ்ஞானம் வளர்க்கப்பட்டு வருகின்றது. அறிகை விஞ்ஞானத்தை சமூக நடுவன் *(Sociocentric)* நிலையிலிருந்து மாற்றி தொழில்நுட்ப நடுவன் *(Technocentric)* நிலையை நோக்கி நகரவைப்பதற்கான நடவடிக்கைகளைச் சமகால சந்தைப் பொருளாதாரச் செயற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றன.

அதாவது சமூக நோக்கைக் கைவிட்டு இலாபமீட்டும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை நோக்கி அறிவைத் திசைதிருப்பும் செயற்பாடுகளைக் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கின்றன. வகுப்பறையைச் சூழ்ந்துள்ள பரந்த உலகு பற்றிய கண்ணோட்டத்தை தொழில்நுட்ப நடுவன்போக்கு நிலைகுலைந்து விடுதல் கல்வியியலாளரின் கவனத்தை ஈர்த்துள்ளமை சுட்டிக்காட்டப்படத்தக்கது *(Bowers, 1993:86-7)* உலகச் சந்தைக்குரிய கல்விச் செயல்முறைகளின் அழுத்தங்களில் இருந்து விடுபட வைப்பதற்கு மீண்டும் மரபு வழித்தாராண்மைக் கல்வியை அறிமுகப்படுத்தல் வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. அந்த அமைப்பிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. பாரம்பரியக் கல்வி முறையின் பண்புகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம் *(Wynne 1987:130-2)*

1. பாரம்பரியமான சமூக ஏறு நிரலமைப்பை ஏற்று அதற்கு ஏற்றவாறு ஒழுகுதல்.
2. சிறார் மீதும் கட்டிளைஞர் மீதும் வளர்ந்தோர் அதீத கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உடனடியான நல்ல நடத்தைகளுக்கு முன்னுரிமை வழங்கல்.

4. கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டுச் செயற்பாடுகள் ஆகியவற்றை வலியுறுத்துதல்.

5. பழைய கருத்துக்களுக்கும் அறிவுக்கும் மதிப்பளித்தல்.

6. நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளைக் காட்டிலும் சமய நம்பிக்கைகளுடன் கூடிய புனிதமான செயற்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

7. அனைத்து மக்களையும் இறைவனின் குழந்தைகளாகக் கருதி சமத்துவ மதிப்பளித்தல்.

பாரம்பரியமான கல்விச் செயற்பாடுகளிலே பல அனுகூலங்கள் இருந்தாலும் நவீன அறைகூவல்களுக்கு அவற்றால் ஈடுகொடுக்க முடியாதுள்ளன. விண்வெளி ஆய்வுகள் உலகு பற்றிய தரிசனத்திலும் அறிகையிலும் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்தப்புதிய அறிகைக் கோலத்தை ஜேம்ஸ் லவ்லொக் *(Jemes Lovelock, 1988)* "கயா கருதுகோள்" *(Gaia Hypothesis)* என்ற எண்ணக்கருவால் விளக்கினார். நிலமும், நீரும், வளியும் மனித வாழ்வுக்குரிய சூழலையும் கடந்த ஒரு புதிய தொனிப் பொருளை உண்டாக்குவதை மேற்கூறிய எண்ணக்கருவால் அவர் விளக்கினார். உலகை ஒரு புதிய கண்ணோட்டத்தில் நோக்கும் தரிசனத்தை அவர் முன்வைத்தார். அதனூடாக மனித தரிசனத்தில் புதிய அணுகுமுறைகளின் வலுவூட்டல்களையும் அவர் விளக்கினார்.

உலக செயற்பாடுகள் அனைத்தும் ஒன்றுடன் மற்றையது சார்ந்தும், இடையுறவு கொண்டும், இடைத்தாக்கம் கொண்டும் இயங்கிய வண்ணமுள்ளன. இந்நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்தல், எழுத்தறிவற்றவர்கள் மற்றும் கல்வி முறைமையிலிருந்து வெளிவீசப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்தல் முதலியவற்றை உலகின் சமகாலப் பொருளாதார வளர்ச்சிப் போக்கிலிருந்தும், சமகால உலக சந்தை நிலவரங்களிலிருந்தும் வேறுபடுத்தி நோக்க முடியாது. மேலைத்தேய அறிகை முறைமையில் உருவாக்கப்பட்டுள்ள "விருத்தி" அல்லது "மேம்பாடு" என்பது நவீன சந்தை முறைமைக்குச் சார்பான உற்பத்தி, நுகர்ச்சி என்ற தளங்களில் மீளாக்கப்பட்டுள்ளது. சுரண்டலின் உள்ளார்ந்த இயல்பை இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கரு விஞ்ஞான பூர்வமாகப் புலப்படுத்தவில்லை. இந்த எண்ணக்கருவை மறுதலித்து "வேறு மேம்பாடு" *(Another Development)* என்ற எண்ணக்கருவும் உருவாக்கப்பட்டது. *(Ekins, P-1992)* இது பாரம்பரியமாகக் குறிப்பிடப்பட்ட "மேம்பாடு" என்ற எண்ணக் கருவிலிருந்து விலகி ஐந்து மாற்றுப்பண்புகளை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. மனிதரது அடிப்படையான தேவைகளை நிறைவேற்றித் தருதல்.
2. மேலைத்தேய வற்கடச் சிந்தனைகளில் இருந்து விடுபட்டு குறித்த மக்களது அறிவு, அனுபவம், பண்பாடு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேம்பாட்டைக் கட்டியெழுப்பல்.
3. உள்ளூர் வளங்களையும் ஆற்றல்களையும் உரிய முறையிலே பயன்படுத்தி தன்னிறைவை மனிதர்களிடத்தும் பிரதேசங்களி டத்தும் ஏற்படுத்துதல்.
4. சூழலையும், சூழல் வளங்களையும் ஊறுபட வைக்காத நிலையைத் தக்க வைத்தல்.
5. உள்ளூர் அதிகாரத் தொடர்புகள், உலக வங்கி முதலாம் தொடர்புக் கட்டமைப்புகளில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும் உபாயங்களைக் கையாளுதல்.

சமகாலப் பொருளாதார முறைமையும் உலக சந்தையும் மரபு அணுப்பொறியியல் அறிவின் மீதும் உயிர்நுட்பவியல் *(Bio Technology)* அறிவின் மீதும் தாக்கங்களையும் அழுத்தங்களையும் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன. தீவிர இலாப நோக்கம் கருதி உயிரியல் பன்மைநிலை *(Bio Diversity)* செயற்கையாகக் கட்டுப்படுத்தப்பட்டு பயிர் விதைகளில் ஓரினப்பாங்கு *(Seed Monoculture)* உருவாக்கப்பட்டு வருகின்றது. பல்தேசிய நிறுவனங்கள் குறிப்பிட்ட பயிர்விதை உற்பத்திகளை தமக்குரிய தனியுரிமையாக்கி வருகின்றன *(Sullivan, 1999:144)*.

பலகோடி ஆண்டுகளாக நிகழ்ந்து வந்த மனிதரின் பரிணாம வளர்ச்சியோடும், பிற உயிர்களோடு ஒப்பிடும் பொழுது மேம்பாடு கொண்ட மனித நிலையோடும் மரபு அணுப் பொறியியல் தலையிடும் பொழுது மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டுமேயன்றி குறுகிய இலாபநோக்கை முதன்மையாக்குதல் தகாது என்பதைச் சுட்டிக்காட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. அறிவு என்பது உற்பத்தி இலாபம் நோக்கிய பண்டமாக மாற்றப்படுகின்றது. ஆனால் ஆய்வறிவாளர்கள் அறிவுக்கும் கருத்தியலுக்கும் *(Ideology)* உள்ள தொடர்புகளை அணுகத் தவறிவிடுகின்றனர்.

**அறிவுச் சுரண்டல்:**

புதிய உற்பத்திக் கோலங்களின் வெளிப்பாடுகளுள் ஒன்றாக "எலத்திரனியல் காலனித்துவம்" *(Electronic Colonialism)* விளங்குகின்றது. *(Chomsky, N.1997)* சமகாலக் கல்வியியல் புலத்தில் ஆட்சி செலுத்தும் எலத்திரனியல் தொடர்பாடற் சாதனங்கள் பொருளாதார சுரண்டலுடன் தீவிர அறிவுச் சுரண்டலையும் மேற்கொள்ளுகின்றன. நவீன உலகச் சந்தையின் கரங்களாகத் தொழிற்படும் தொலைக்காட்சி நிலையங்கள் எவ்வாறு சிந்திக்க வேண்டும், எவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்ளல் வேண்டும் என்பவை தொடர்பான கருத்தேற்றங்களை "சுதந்திர ஊடகம்" என்ற மகுடத்தில் மேற்கொள்ளுகின்றன. பொதுசன அபிப்பிராயத்தை "முகாமை" செய்யும் மேலாளராகவும் அவை தொழிற்படுகின்றன. இந்த நிலை புதிய தகவல் ஒழுங்கமைப்பு *(New Information Oder)* என்ற தொடராலும் அழைக்கப்படும். எலத்திரனியல் தொடர்பு சாதனங்களை விமர்சித்தல் சுதந்திர ஊடகத்தை விமர்சித்தல் என்ற மாயைத் தோற்றமும் உருவாக்கப்பட்டுள்ளமை ஓர் அபத்தமான நிலையாகும்.

உலக சந்தை நிலவரங்களின் வளர்ச்சி கல்வியிலே தீவிர போட்டி நிலைகளை உருவாக்கி வருகின்றது. போட்டி என்ற எண்ணக்கரு முதலாளித்துவத்தின் பலம்மிக்க ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதலாளித்துவ வளர்ச்சியை நியாயப்படுத்திய சிந்தனையாளர் அடம்சிமித் அனைத்து வர்த்தகத்தையும், கொடுக்கல் வாங்கல்களையும் "போட்டி" என்பது ஒழுங்கமைக்கவல்லது என வலியுறுத்தினார்.

ஆழ்ந்து நோக்கும் பொழுது தனிச் சொத்துரிமையை வலியுறுத்தவல்ல உன்னத சாதனமாக போட்டி செயற்பட்டு வருகின்றது. போட்டியின் இயல்புகள் சமூக இழிவுகளோடு இழுபட்டுச் செல்வதை "அழகுராணிப் போட்டி", "அழகுக் குழந்தைப் போட்டி", "சமய அறிவுப் போட்டி" முதலாம் செயற்பாடுகள் நன்கு வெளிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித அறிவு வளர்ச்சியிலும், சமூக மேம்பாட்டிலும் போட்டியைக் காட்டிலும் கூட்டுறவே பலம்மிக்க விசையாக இருந்து வருதல் ஆய்வுகளின் வழியாக வெளிப்படுத்தப்படுதல் குறிப்பிடத்தக்கது. *(Margulis, L: 1987)* ஆனால் போட்டி தொடர்பான நடவடிக்கைகளிலே பல்தேசிய நிறுவனங்கள் மேலும் ஒருபடி முன்னேறி சம்மதிப்பதற்கான போட்டிகளையும் உருவாக்கி வருகின்றன.

உலக வர்த்தகத்தின் வளர்ச்சி "பண்டப்பண்பாடு *(Commodity Culture)* என்ற சமூகக் கோலத்தையும் உருவாக்கியுள்ளது. நுகர்ச்சிப் பண்டங்களை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டின் வளர்ச்சியை உளவியல் நோக்கில் ஆராய்ந்தவர்களுள் பிலிப்கஸ்மன் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் *(Phillip Cushman, 1990)* இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட உலக வளர்ச்சிப் போக்குகள் சிறப்பாக அமெரிக்க நிலவரங்கள் மனிதரிடத்தே வெற்றிடமாக்கிய சுயவடிவத்தை *(Empty Self)* ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கூட்டுணர்வையும் ஒன்றிணைந்த கருத்தாக்கத்தையும் இந்த உளவியல் தோற்றப்பாடு அழித்து வருகின்றது. மன அமைதிக் குழப்பத்தையும், மனவெழுச்சிப் பசியையும் அது ஏற்படுத்தியுள்ளது. உற்பத்தி முறைமையால் விடுக்கப்படும் அறிவுவலு ஆளுமையில் அழுத்தங் கொடுத்தலை இந்தத் தோற்றப்பாடு விளக்கி நிற்கின்றது.

பொருள்கள், அனுபவங்கள், காதற் சகபாடிகள் முதலியவற்றை நுகர்ச்சி செய்வதால் வெற்றிடமாகிய சுயவடிவம் ஆறுதல் பெற முயற்சிக்கின்றது. அதாவது பொருட்களை நுகர்தல் மன அமைதியைக் கொடுக்கும் செயற்பாடாக மாற்றப்பட்டு வரும் அறிகைக்கு அழுத்தங் கொடுக்கப்படுகின்றது.

"கோளப்பண்பாடு" என்பது "வெகுசனப் பண்பாடு" என்ற எண்ணக்கருவாலும் அழைக்கப்படும். இந்தப் பண்பாடு நுகர்ச்சியாளரை முதன்மைப்படுத்தி சுரண்டலை மேற்கொள்ளுகின்றது. அமெரிக்காவின் மத்திய தரவகுப்பினர் வெகுசனப் பண்பாட்டினாலும், நுகர்ச்சிக் கோலங்களினாலும் அனுபவிக்கும் அவலங்களை ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளனர் *(Sullivan, 1999:122)*

வேலைக்களைப்புடன் வீட்டுக்குவரும் மத்தியதரத்தினர் தொலைக்காட்சியின் கருத்தேற்றங்களுக்கு *(Indoctrination)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகின்றனர். சக மனிதர்களின் தொடர்புகளை இழந்த நிலையில் தொலைக்காட்சியைப் பார்க்கும் பொழுது மனித உருவாக்கம் பற்றிய தொலைக்காட்சிப் படிமங்களே மனத்தில் ஊடுருவி நிற்பதுடன் அன்னியமாதலை மேலும் தீவிரப்படுத்தி விடுகின்றது.

சமூகப்பங்குபற்றல், அரசியல் பங்குபற்றல் முதலிய செயற்பாடுகளையும் தொலைக்காட்சிச் செயல்முறை பாதிப்படையச் செய்துவிடுகின்றது. தொடர்ச்சியான தொலைக்காட்சிச் செயல் முறையானது தன்னிலை இனங்காணலையும் பாதிப்படையச் செய்து விடுகின்றது. அரசியல் சமூக நிலைகளில் "பிரசை" என்ற எண்ணக்கரு இழக்கப்பட்டு "நுகர்ச்சியாளர்" என்ற அமைவு மேலோங்கி வருகின்றது.

நவீன ஆய்வுகளின் வழியாக மேலெழும் பிரதான எண்ணக் கருக்களாக ஆளுவோர் பண்பாடு *(Dominator Culture)* ஆளுவோர் சமூகம், ஆளுவோர் செயற்றொகுதி முதலியவை அமைகின்றன *(Eisler, 1988)*. அரசியல் நிறுவனங்கள் முதலியவற்றுடன் ஆள்வோர் அழுத்தங்கள் இணைந்து தொழிற்படுகின்றன. ஆள்வோர் ஆட்சி அதிகாரத்துக்குள் விஞ்ஞான அறிவு இயக்கப்படுகின்றது. இயற்கை, இராணுவவலு, பொருளாதாரம், போட்டிகளை உருவாக்குதல் முதலிய அனைத்தும் அதிகாரம் செலுத்தும் ஆளுவோரின் பிடிக்குள் வந்துள்ளன. ஆய்வறிவாளர்கள் தமது இருப்பைத் தீர்மானிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சி அதிகார பலம் நவீனமாக்கப்பட்ட வறுமையை *(Modernised Poverty)* கல்வியில் ஏற்படுத்தியுள்ளது. இந்த வறுமை ஆய்வாளர்களை குறுகிய சுய இலாபங்களை நோக்கிச் செயற்பட வைக்கின்றது. தம்மைச் சூழ்ந்துள்ள அநீதிகளைச் சுட்டிக் காட்டுவதற்கு அஞ்சி நிற்றல் நவீனமாக்கப்பட்ட கல்வி வறுமையாகும்.

சர்வதேச அழுத்தங்களுக்குச் சமாந்தரமாக மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் தேசிய இனங்களின் கல்வியில் அழுத்தங்களைப் பிரயோகித்தலும் சமகாலக் காட்சிகளாகவுள்ளன.

**மனித முகிழ்ப்பு:**

புதிய பொருளாதாரக் கோலங்கள் தொழில்நுட்பவளர்ச்சி முதலியவை பாரம்பரியமான தொழில்முறை நோக்கிய கல்வியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்குறியாக்கியுள்ளது. பாரம்பரியமான கல்வியானது செயலர்கள், நிர்வாகிகள், எழுதுவினைஞர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள், தொலைபேசி இயக்குநர்கள் முதலியவர்களை உருவாக்குவதற்கென கூர்மைப்பட்டிருந்தது. மேலும் பொறியியலாளர்கள், கணக்காளர்கள், வைத்தியர்கள் என்றவாறு வாண்மையினரையும் உருவாக்கும் வகையிலும் கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

பாரம்பரியமான கல்வித் தொழிற்பாடுகளை நவீனத்துவத்தை நோக்கி மாற்றியமைக்க வேண்டியுள்ளது. நவீனத்துவம் என்பது கணினி அறிவுடன் மட்டும் தொடர்புடையது அன்று. புதிய கணினி அறிவை மட்டும் பெற்றுவிடுவதால் அறிவாக்கம் முழுமையடையமாட்டாது. நவீன உற்பத்தி முறைமையின் அழுத்தங்களையும் சுரண்டற் கோலங்களையும் தெளிவாகப் புலக்காட்சி கொள்வதற்குரிய உள்ளடக்கங்கள் கலைத்திட்டத்திலே கட்டமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளன.

மிகுந்த சிக்கலாகிவரும் சமூக சுரண்டல் முறைமை மனித உணர்வுகளை அன்னியமாக்கி வருதல் தொடர்பாடலிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிணைந்த கூட்டுணர்வின் இனிமை இழக்கப்படுகின்றது. நவீன ஆய்வாளர்கள் அந்நியமாதல் *(Alienation)* என்ற பாரம்பரிய எண்ணக்கருவுக்குப் பதிலாக "அகநிலைத் தனிமை" *(Damnation)* என்ற எண்ணக்கருவினையும் பயன்படுத்துகின்றார்கள்.

சமகாலச் சூழலில் மனித அகவய உணர்வுகள் கீழ்நோக்கப்படு கின்ற அவலநிலை தோன்றுகின்றது. அகநிலைத் தனிமை சுயநிலைச் சுட்டலுடன் இணைந்தது. அந்நியமாதல் சுயமேலோங்கலுடன் *(Autism)* இணைந்தது. நவீன மனித இயல்புகள் சுயநிலைச் சுட்டல், சுயமேலோங்கல் என்ற இரண்டு நிலைகளிலும் பாதிப்புக்கு உட்பட்டுள்ளன. மனிதர் தனிமைப்படுவதிலிருந்து மீண்டெழுவதற்குரிய புலக்காட்சியை வலிதாக்கும் அறிவுக்கையளிப்பை முன்னெடுத்தலும், நுகரப்படும் அறிவு நடைமுறை அறிவாக மாறுவதற்குரிய செயல்நிலை வடிவங்களையும், ஒன்றுபடும் கூட்டுணர்வை வலுப்படுத்தும் பண்பாட்டு வேர்களையும் மீளவலியுறுத்த வேண்டியுள்ளது.

கோட்பாட்டு நிலையில் கல்வி மேம்பாடு பற்றி நோக்கும் பொழுது "கோடற்கட்டமைப்புகள்" *(Dissipative Structures)* கோட்பாடு முதற்கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெறுகின்றது (*Prigogine and Stengers, 1984*). அனைத்து இயங்கும் பொருள்களும் தொடர்ச்சியாக வலுவை உள்வாங்கி தமது கட்டமைப்பை நிலைநிறுத்திக் கொள்கின்றன. கோடற் கட்டமைப்புக்கள் சிதறி உதிரும் கட்டமைப்புக்களாகவுமுள்ளன. அவை தளம்பலுறும் பண்பைக் கொண்டுள்ளன. தளம்பலுறும் நிலையும் உதிரும் நிலையும் மேலும் மேம்பாட்டுக்கு இட்டுச் செல்லும். பெருங் கட்டமைப்பினுள் பொருத்தமான சிறு கட்டமைப்புக்களும் உட்பொதிந்து காணப்படும். சிறுசிறு கட்டமைப்பு இயக்கப்படும் பொழுது அதற்குக் கூடுதலான வலு வேண்டப்படும்.

எந்த ஒரு கட்டமைப்பும் சமநிலையில் இயங்கும் அல்லது சமநிலை பிறழ்ந்த நிலையில் இயங்கும். பெரும் கட்டமைப்பின் உள்ளமைந்த சிறுகட்டமைப்புக்கள் சமநிலைப் பிறழ்வைத் தாங்க முடியாத நிலை ஏற்படும் பொழுது, புதிய சவால்களைத் தாங்கக் கூடியவாறு அனைத்துக் கட்டமைப்புக்களும் தம்மை நிலை மாற்றம் செய்து, புதிய தொடர்புகளை ஏற்படுத்தி மேலும் மேம்பாடான நிலைக்கு உயர்ந்து செல்லும். இப்பொழுது முன்னரிலும் கூடுதலான வலுவை அது வேண்டி நிற்கும். கல்வியில் புதிய அபிவிருத்திகளை மேற்கொள்ளும் பொழுது இந்தக் கோட்பாடு பயனுள்ள புலக்காட்சியை ஏற்படுத்த வல்லது.

மாறும் சவால்களுக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் தொடர்ச்சியாக தம்மை மீள் ஒழுங்குபடுத்துமாறு கல்வியை ஒருங்கிணைத்து வழங்க வேண்டியுள்ளது. இந்த மீள் ஒழுங்குபடுத்தல் முன்னைய நிலையிலும் மேம்பாடு கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆக்க மலர்ச்சியுடன் மேற்கொள்ளப்படும் மீள் ஒழுங்குபடுத்தல் சமூக நிறுவனங்களை ஆக்கபூர்வமாக மீள் ஒழுங்குபடுத்துவதுடன் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

உயிரியல் உயிர்ப் பொருள்கள் தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் "தன்னாட்சிமை" (*Autopoiesis*) என்பர். உயிரியலிற் காணப்படும் இந்தச் செயற்பாட்டை சமூக மேம்பாட்டியலுக்கும் பிரயோகிக்க வேண்டியுள்ளது. கட்புலனாகும் நிலையிலும் கட்புலனாகா நிலையிலும் சுரண்டலுக்கு உள்ளாகும் மக்கள், சுரண்டல் இயல்புகளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குரிய கல்வியையும், அவர்கள் உதிரிகளாகப் பிரிந்து செல்லாது, ஒன்றிணைந்து தம்மை மீள் ஒழுங்குபடுத்துவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைக் கட்டமைப்புச் செய்வதிலே கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளே சமூக மாற்றத்துடன் கூடிய மனித முகிழ்ப்பை ஏற்படுத்தும்.

தனிமனித விருத்தி சமூகத்துடன் இணைந்த ஒரு சிக்கலான செயல்முறை, மேலைத்தேய உளவியல் ஆய்வாளர்கள் தனிமனித விருத்தியின் தளமாக அமையும் சமூக இருப்பின் மீதும், சமூக தொடர்புகள் மீதும் போதுமான கவனக்குவிப்பை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. மாறாக அதனைத் தனிமனிதனை நடுநாயகப்படும் செயற்பாடாகவே விதந்து நோக்குகின்றனர். மனித விருத்தியை ***பிரித்தறிதல்*** *(Difforentiation)* **அகவயப்பாங்கு** *(Subjectivity)* ***தொடர்பாடல்*** என்ற மூன்றுக்குமிடையே நிகழும் சிக்கலான செயல்முறையின் விளைவு என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது *(Sullivan, 1999:225).*

வேறுபிரித்தறிதல் என்பதில் ஒருவரிடத்து உள்ளடங்கிய தனித்துவம் கருத்திலே கொள்ளப்படுகின்றது. ஒருவரது செயற்பாடுகள் அனைத்திலும் அவருக்குரிய தனித்துவம் வெளிப்பாடு கொண்ட வண்ணமிருக்கும். தனித்துவம் தனிமனிதரைச் சார்ந்ததாகவும் இருக்கலாம். பிறரால் வழங்கப்பட முடியாத பொருளாகவே தனித்துவம் இருக்கும். ஒவ்வொரு தொடர்பிலும் இந்தத் தனித்துவம் பங்களிப்புச் செய்த வண்ணமிருக்கும்.

அகவயப்பாங்கு இரண்டு நிலைகளைக் கொண்டது. உயிரியல் நோக்கிலே பார்க்கையில், ஒருவர் நிறைவு கொள்வதில்லை. வாழ்க்கைச் சமூகத் தொடர்புகளால் ஒருவர் முழுமையை நோக்கி நகர்ந்து செல்கின்றார். சுயாதீனமாக வாழ்வதற்குரிய செயற்பாடுகள் விருத்தியில் முக்கியத்துவம் பெறுகின்றன. விருத்தியினூடே ஒருவர் சமூக இருப்பினுக்கு ஏற்றவாறு தனித்துவமாகத் தொழிற்படும் நிலை தோன்றுகின்றது.

தொடர்பாடல் முடிவிலியாக இருப்பதுடன் சமூக இருப்புடன் தொடர்புபட்டு நிற்கின்றது. தொடர்பாடலின் விரிவாக்கம் நாகரிகங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பூகோளத்தின் செயற்பாடுகள் ஒருவர் தம்மை ஒழுங்கமைப்பதற்கும் தம்மை நெறிப்படுத்திக் கொள்வதற்கும் வழிகாட்டிய வண்ணமுள்ளன. பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தாலும் பூகோளம் தனது வெப்பநிலைச் சராசரியைப் பராமரித்து தன்னை ஒழுங்கமைத்துக் கொள்ளுகின்றது. பல்வேறு தாக்கங்கள் நிகழ்ந்தாலும் பூகோளம் தனது ஒட்சிசன் மட்டத்தைப் பராமரித்து தன்னைதானே நெறிப்படுத்திக் கொள்ளுகின்றது. இவ்வாறே பூகோளம் தன்னைத்தானே ஒழுங்குபடுத்தியும், நெறிப்படுத்தியும் மேற்கொள்ளும் செயற்பாட்டினை லவ்லொக் வழங்கிய "கயா கருதுகோள்" விளக்கி நிற்கின்றது. பூகோளத்தின் ஓர் இணைபிரியாத உறுப்பாக இருக்கும் மனிதரும் இதனை அறிகை கொள்ளல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

புவிக்கோள் தன்னகத்தே அடக்கியுள்ள உயிரினங்களின் பன்முகமாகிய இயல்புகளும் சமூக உள்ளடக்கம் கொண்டுள்ள பன்முகமாகிய இயல்புகளும், கட்டில்லாத திறந்த செயற்பாட்டினராக மனிதரை உருவாக்கி வருதலுடன் புத்தாக்கம் செய்யும் தூண்டிகளையும் வழங்கி வருகின்றது. அதாவது புத்தாக்கம் செய்யும் இயல்பை இயற்கையும் சமூகமும் மனிதரிடத்தே தொடர்ச்சியாக ஊட்டி வருகின்றன.

கல்வியின் தலையாய இலக்குகளுள் ஒன்றாகக் கருதப்படுவது வாழ்க்கைப் பண்பு *(Quality of life)* மேம்பாடு ஆகும். மனிதரிடத்துக் காணப்படும் ஆக்க மலர்ச்சியும் வாழ்க்கைப் பண்பு மேம்பாட்டுக்கு உதவுகின்றது என்று கூறும்பொழுது கிடைக்கப்பெறும் அனுகூலங்களின் வர்க்க நிலைப்பட்ட வேறுபாடுகளும் கருத்திலே கொள்ளப்படல் வேண்டும். நிராகரிப்பின் பிறிதொரு வடிவமாக அமைவது புத்தாக்கத்தின் தூண்டுதல்களுக்கு உட்பட்ட விஞ்ஞான வளர்ச்சியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் சூழல் மீது ஏற்படுத்தும் தாக்கங்களும், மாசுற வைக்கும் நடவடிக்கைகளுமாகும். சூழல் மாசடைவதன் தாக்கங்களால் சுரண்டலுக்கு உள்ளாகும் மக்களே அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

வாழ்க்கைப் பண்பு வாழ்வின் தரமான அனுபவங்களுடன் இணைந்தது. தரத்துடனான அனுபவங்களைக் கல்விச் செயற்பாடுகள் மற்றும் கலை இலக்கியச் செயற்பாடுகள் முதலியவை சமூகச் செயற்பாடுகளுடன் இணைந்த வகையில் கையளிக்கின்றன. இத்தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப் பண்பில் வலியுறுத்தப்படுகின்றது. மேலைத்தேய ஆய்வாளர்கள் வாழ்க்கைப் பண்பை வாழ்க்கைத் தரத்துடன் இணைத்துப் பார்க்கின்றவேளை தரமான அனுபவங்களின் கையளிப்பிலே கவனம் செலுத்தத் தவறியுள்ளனர்.

மூன்றாம் உலக நாடுகளிலே ஆரம்பக்கல்வியின் விரிவாக்கம் பற்றிப் பேசும் பொழுது, தரமேம்பாடு பற்றிய நடவடிக்கைகள் போதுமான அளவில் இடம்பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இரண்டாம் நிலைக் கல்வியை விரிவாக்கியும் நவீனப்படுத்தியும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பிரதிகூலக்குழுவினர் நிராகரிப்புக்கு உள்ளாதலையும் குறிப்பிட்டுக் கூறவேண்டியுள்ளது. மனித முகிழ்ப்பு என்பது அனுகூலம் மிக்கவர்களை மட்டும் குவியப்படுத்துவதாய் அமைதல் ஏற்புடையது அன்று.

அண்மைக்காலத்தைய உளவியல் ஆய்வாளர்கள் தேவை பற்றிய ஆய்வுகளை விரிவுபடுத்தி வருகின்றனர். தேவைகள் இருப்புக்குரிய தேவைகள் *(Existential Needs)* மற்றும் நிரலமைப்பைக் கொண்ட தேவைகள் *(Axioligical Needs)* என இருவகைப்படும். இருத்தல், தொழிற்படல், இடைவினைகொள்ளல் முதலியவை இருப்புக்குரிய தேவைகளுடன் தொடர்புடையவை. நிரலமைப்புக் கொண்ட தேவைகளான வாழ்வாதாரம், பாதுகாப்பு, அன்பு, விளக்கம், பங்குபற்றல், ஆக்கல், இனங்காணலை வெளிப்படுத்தல், விடுதலை முதலாம் தேவைகளுடன் இருப்புக்குரிய தேவைகள் இணைந்தவை.

"தேவைகள்", "திருப்தி ஊடகங்கள்" *(Satisfiers)* என்ற இன்னொரு பாகுபாடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உணவும் இருப்பிடமும் மனித இருப்புக்குரிய அடிப்படை திருப்தி ஊடகங்களாக அமைகின்றன. உலகை விளங்கிக் கொள்வதற்குரிய திருப்தி ஊடகங்களாக கல்வியும், தரமான அனுபவங்களும் அமைகின்றன.

சமகாலக் கல்வியில் தரவற்புறுத்தல் இடம்பெறுதல் குறிப்பிடத்தக்கது. ஆனால் கலை இலக்கியத் தரவற்புறுத்தல்களுக்கு வர்த்தகத் தொடர்பு சாதனங்கள் தடையாக இருத்தலும் கணிப்புக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக பணத்தை உள்வாங்கி, குறைந்தளவு மக்களுக்கு நன்மை தருவதாகவே இன்றைய கல்விச் செயல்முறை அமைந்துள்ளது. பாடசாலைகளின் இன்றைய போக்குகள் மாற்றமடைந்து சென்றாலும் ஒரு சிலரே ஊன்றிய நன்மை பெறுவோராயிருக்கின்றனர்.

பயிர்ச்செய்கை முறைமையோடு இணைந்திருந்த பாரம்பரியமான பாடசாலைச் செயல்முறையிலும் மேற்கூறிய நிலமைகளே காணப்பட்டன. நிலமுடையோரின் அரவணைப்பிலே பாடசாலைகள் இயங்கியமையால் அவர்களுக்கு இயைபான அறிவூட்டும் அனுகூலங்களை அவை முன்னெடுத்தன. நிலவுடைமைச் சமூகத்தில் இயந்திரமயமாக்கல் இடம்பெறாமையால் தொழில்முறை சார்ந்த பாடங்களுக்குக் கலைத்திட்டத்திலே முக்கியத்துவம் வழங்கப்பட வில்லை. புலமை சார்ந்த பாடங்களுக்கே *(Academic Subjects)* முன்னுரிமை வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் வரன்முறைக் கல்வி கற்ற புலமைமிக்கவர்களுக்கும், சுயமாகக் கற்று மேம்பட்ட புலவர்களுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் பற்றிய சம்பவங்கள் நிலவுடமைச் சமூகத்தின் முரண்பாட்டை வெளிப்படுத்தின.

விஞ்ஞான எழுச்சியும், தொழிற்புரட்சியும் பாடசாலைகள் உற்பத்திநிலை *(Production Line)* செயற்பாடுகளுக்கு இட்டுச் சென்றன. கைத்தொழிற்சாலைகளுக்கும் நிர்வாகத் தேவைகளுக்குமுரியவர்களைத் தயாரிக்கும் பொறுப்பு பாடசாலைகளுக்கு விடப்பட்டன. பெரும் தொழிற்சாலைகளை மாதிரிகைகளாக *(Models)* கொண்டு பாடசாலைகள் உருவாக்கப்படலாயின. பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சிறிய தொழிற்சாலைகள் போன்று பெரிய பாடசாலைகள், சிறிய பாடசாலைகள் என்ற கட்டமைப்புக்களும் வளரலாயின.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகர்ச்சி செய்வதற்கு அடிப்படை அறிவு அனைவருக்கும் வேண்டப்பட்டமையால், இரண்டாம் நிலைக் கல்வியை விரிவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு கட்டாயப்படுத்தலும் முன்னெடுக்கப்பட லாயிற்று. ஆங்கில மரபிலே தொழிற்சாலைகளின் முடிவுப் பொருள்களுக்குப் பயன்படுத்தப்பட்ட உற்பத்தி *(Products)* என்ற எண்ணக்கரு கல்வி நிலையங்களிலே கற்றுத்தேறியவர்க்கும் பிரயோகிக்கப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் மட்டுமல்ல, மருத்துவ நிலையங்கள், அரச திணைக்களங்கள் என்ற அனைத்தும் தொழிற்சாலைகள் என்ற மாதிரிகையைப் பின்பற்றலாயின. தொழிற்சாலைகளிலே பயன்படுத்தப்படும் உற்பத்திச் சிக்கனம், உற்பத்தி வினைத்திறன், தரக்கட்டுப்பாடு, சிறப்புத்தேர்ச்சி, முகாமை, உச்சவிளைவு, தவறுகளைப் பூச்சியநிலையில் வைத்திருத்தல் முதலிய எண்ணக்கருக்கள் கல்வி நிறுவனங்களிலும் எடுத்தாளப்படுகின்றன. சந்தைப் பொருளாதாரத்தின் இன்றைய வளர்ச்சி சந்தையில் விலைபோகக்கூடிய படித்தவர்களை உருவாக்குதல் என்ற எண்ணக்கருவை ஏற்படுத்தி வருகின்றது. "சந்தைப்படுத்தப்படக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குதல்" *(Marketable Graduates)* என்ற சுலோகம் இலங்கையிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சமகாலக் கல்வியைப் பொறுத்தவரை அனைத்தையும் மீள்சிந்தனைக்கு உட்படுத்தல் *(Rethinking Everything)* என்ற கருத்து ஆய்வறிவாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. மீள்சிந்தனை, மீள்புலக்காட்சி முதலியவற்றை நவீன அறிவியல் ஆய்வுகளுடன் தொடர்புபடுத்த வேண்டியுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் கோட்பாட்டுப் பௌதிகவியலாளராகிய பிறீமன் டைசன் உருவாக்கிய கருத்துக்கள் இணைத்து நோக்குதற்குரியவை *(Dyson, F 1981)* ஒரு நிலைப்பாங்கு *(Clone)* பல நிலைப்பாங்கு *(Clade)* என்ற இரு எண்ணக்கருக்களை அவர் விவரிக்கின்றார். பாரம்பரியமான ஓர் எண்ணக்கருவைப் பயன்படுத்தி ஒரே விதத்தில் மட்டும் சிந்திப்பவர்கள் ஒரு நிலைப்பாங்கானவர்கள். பரிணாம வளர்ச்சியில் மேலும் முன்னேற முடியாத முடிவு நிலையில் இருப்பவர்களாக அவர்கள் விளங்குவர். ஒரு பெரும் நெருக்கடி வந்து அடிப்படைகள் சிதறும்பொழுது பலநிலைகள், பலதொழிற்பாடுகள் கொண்ட பல்லினப்பாங்கினை உடைய புதிய கிளைகள் வடிவெடுத்துத் தோன்றுவதுடன் அவை பரிணாம வளர்ச்சியின் முன்னேற்றகரமான இயல்புகளைக் கொண்டவையாகவும் அமையும்.

சமகாலப் பாடசாலைகள் ஒருநிலைப் பாங்கின் இயல்புகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இதனால் மேலும் முன்னேற்றத்தை நோக்கி நகர்த்திச் செல்ல முடியாத இடர் காணப்படுகின்றது. பாடசாலைகளால் மகிழ்ச்சி பெறுவோரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிலும் விரக்தியடைவோரின் எண்ணிக்கையே அதிகரித்துச் செல்கின்றது. கல்வி நிலையங்களின் தொழிற்பாட்டில் பொறிமுறைப் பண்புகள் மேலோங்கியும், மலர்ச்சிப் பண்புகள் ஒடுக்கப்பட்டும் காணப்படுகின்றன.

புதிய ஆய்வுகள், புதிய கருத்துக்கள், புதிய அணுகுமுறைகள் நடைமுறைகளுக்கு ஒத்துவராதவை என்று பாரம்பரியமான கல்வி நிறுவுனங்களின் முகாமையாளர்கள் கூறுதல் மலர்ச்சிப் பண்புகளை ஒடுக்குதலுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

நவீன மாறுதல்களுக்கு ஏற்ப கல்விச் செயற்பாட்டை மீள்வடிவமைக்கும் பொழுது அதன் சமூகப் பரிமாணம், உலகப் பரிமாணம் ஆகியவற்றைக் கவனத்திலே எடுக்க வேண்டியுள்ளது. சமூகப் பரிமாணங்களை நோக்காது முற்றிலும் தனிமனித நிலைப்பட்ட முன்னேற்றத்துக்குரிய ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தற்போதைய செயற்பாடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளன.

கல்வியை ஓர் அத்தியாவசிய சேவையாக *(Essential Service)* க் கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது எந்தப் பிரிவினரும் இச்சேவை கிடைக்கப் பெறாதவர்களாயிருத்தலாகாது. அத்தியாவசியமான சேவையாகவும் தரமான சேவையாகவும் கல்வியை உருவாக்கும் பொழுது சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்ற பல காரணிகளை ஒன்றிணைக்க வேண்டியுள்ளது.

சமூக நிரலமைப்பில் நிராகரிப்புக்கு உள்ளானோர் கல்வி என்ற அத்தியாவசிய சேவையை ஒழுக்குபடுத்துபவர்களாக மாற்றப்படல் வேண்டும். கல்விச் செயல்முறையில் யாரும் விடுபட்டவர்களாக இருத்தலாகாது. பாடசாலைச் செயற்பாடுகளில் காணப்படும் ஒரு முகமாகிய இறுகிய நடவடிக்கைகள் கைவிடப்பட்டு பன்முகமாகிய அரவணைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் அவசியமாகின்றது. அறிவை ஒரு சாராருக்கு மட்டும் கையளிக்கும் நிலையமாக பாடசாலை தொழிற்படலாகாது.

ஆசிரிய சேவையிலே காணப்படும் இறுகிய வார்ப்புவகையை *(Stereo Type)* மாற்றியமைக்க வேண்டியுள்ளது. குறிப்பிட்ட பாட அலகுகளைச் சிறப்புறக் கற்பிக்கக்கூடிய ஆசிரிய அணியினை ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்திலும் உருவாக்க வேண்டும். பாடசாலைகள் அவ்வப்போது அவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளை ஏற்படுத்துதல் பொருத்தமான நடவடிக்கையாகும். மருத்துவத் துறையில் புறமுள்ள சிறப்பு நிபுணர்களின் சேவையை மருத்துவ நிலையங்கள் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து வருதலை முன்மாதிரியாகக் கொள்ளலாம். இக்கருத்து கல்வி நிறுவன முகாமைத்துவத்துக்கும் பொருந்தும். குறித்த முகாமைத்துவ ஒழுங்கமைப்பை மேற்கொள்வதற்கு அதிபர்களுக்கோ, நிர்வாகிகளுக்கோ ஆற்றல் கொள்ளளவு போதாமலிருக்கும் பொழுது புறமிருக்கும் நிபுணர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

நவீன கலைத்திட்ட ஆக்கத்தில் மாணவர்கள் சுயமாகத் தொழிற்படக்கூடிய இதவடிவப் *(Modular)* பண்புகளும், ஆசிரியரின் துணையுடன் தொழிற்படக்கூடிய இறுவடிவப் *(Nodular)* பண்புகளும் ஒருங்கே இணைந்திருத்தல் வேண்டும்.

கற்றலை மாற்றீடில்லா ஒரு பாதையில் வைத்து நோக்கும் பொழுது எளிதிலிருந்து சிக்கலுக்குச் செல்லல் என்ற பழைய செயற்கையான முறை முன்வைக்கப்பட்டது. ஆனால் இன்றைய கற்றலும் கற்பித்தலும் பலநிலைகளினூடாக, பலவழிகளினூடாக, செல்லும்பொழுது எளிதானவற்றுக்கு முதல் சிக்கலானவற்றைக் கற்கும் செயற்பாடுகளும் இடம்பெறும். இங்கு மாணவர் கொண்டுள்ள நம்பிக்கை வீழ்ச்சிய டைவதுடன், கல்வி நிறுவனங்களில் ஒழுங்கு மற்றும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தலும் கடினமாகிவிடும்.

புதிய அறிவைத் தேடுதலும் வாசிப்புப் பழக்கமும் மாணவரிடத்து வீழ்ச்சியடைந்து வருதலும் இன்னொரு தோற்றப்பாடாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மாணவர் தொடர்பான காரணிகளுடன் ஆசிரியர், பரீட்சைமுறை, சமூகம், அரசு மற்றும் தொடர்பாடற் காரணிகளுடன் இணைத்து இப்பிரச்சினையை ஆராய்தல் வேண்டும். புதிய தேடலும், வாசிப்புப் பழக்கமும் மாணவர்களிடத்து வளர்க்கப்படாவிடில் அறிவு நிலையில் காலாவதியான மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரும், மாணவரும், பெற்றோரும் பாரம்பரியமான இறுகிய ஒரு வழிப்பாதையாகிய கல்வி முறைமையில் இருந்து விடுபட்டு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் "பன்முக மலர்ச்சி" *(Polymorphic Approach)* அணுகுமுறையை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இறுகிய ஒரு தலைப்பட்சமான கற்றலும், பரீட்சை முறைகளும் மாணவரிடத்துப் பராமரிக்க முடியாத மனமுறிவையும் மனக்கவலைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடையாதவிடத்தும், பல்கலைக்கழக நுழைவுக்குரிய இறுகிய தேர்வின் வழியாக நுழைவு பெறாதவிடத்தும் வாழ்க்கை இருண்டு விடுகின்றது என்ற நிலைக்குத் தள்ளப்படுதல் பாரம்பரியமான இறுகிய ஒருவழிமயப்பட்ட கல்வியின் வெளிப்பாடாகும்.

கற்றல் என்பதை "கற்றல் நகரம்" *(Learning City)* என்ற செயற்பாட்டுக்கு ஆய்வாளர் இட்டுச் செல்கின்றனர். அதாவது, வளர்ச்சியடைந்த ஒரு நகரின் இயக்கப்பாட்டுடன் கல்விச் செயல்முறை ஒப்புமைக்கு உள்ளாக்கப்படுகின்றது. வாழ்க்கை முழுவதும் கல்வி இயக்கப்படுதல் வாழ்க்கை முழுவதும் தொடர்ச்சியாக இயக்கப்படுதல். பல்வேறு மனிதர்களிடமும் சாதனங்களுடனும் இடைவினைகள் கொண்டு இயக்கப்படுதல், வயது வேறுபாடுகள் இன்றியும் வயதுக் கட்டுப்பாடுகள் இன்றியும் இயக்கப்படுதல் முதலியவற்றைத் தொகுத்துக்கூறும் எண்ணக்கருவாக "கற்றல் நகரம்" என்பது பயன்படுத்தப்படுகின்றது.

## ஆசிரிய வாண்மை

பாடசாலை நிர்வாக முறைமை மேலிருந்து கீழ் நோக்கிய செயற்பாடுகளைக் கொண்டதாக, கட்டுப்பாடுகளை உள்ளடக்கியதாக, மரபுவழி ஆசாரங்களை உள்ளடக்கியதாக,போதுமான வளங்களைக் கொடுக்காது பெறுபேறுகளை மட்டும் கருத்திலே கொள்ளும் அணுகுமுறைகளைக் கொண்டதாக சேவை மூப்பு மற்றும் நியமன ஆசாரங்களைக் கருத்திலே கொண்டு சிறப்பு ஆற்றல்களை நிராகரிப்புக்கு உள்ளாக்குவதாக இருக்கும் நிலைகளை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர். அதாவது கல்வி நிலையங்களுக்கு நிறைவலுவூட்டும் *(Empowerng)* செயற்பாடுகளிலே உரிய கவனம் செலுத்தப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் அதிபர்களும், ஆசிரியர்களும் தாழ்வுச் சிக்கல் என்ற உளவியல் தோற்றப்பாடுகளுக்கு உட்படும் நிலை ஏற்படுகின்றது. "கௌரவமான அடிமைத்தனம்" ஆசிரிய வாண்மையிலே மறைமுகமாக உட்படுத்தப்படுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஆசிரியரின் தொழில்சார்ந்த உளநிறைவில் *(Job Satis Faction)* வீழ்ச்சி ஏற்பட்டுச் செல்லல் கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தோற்றப்பாடு கல்வி வளர்ச்சியை உடனடியாகவும் நீண்டகாலத்திலும் பாதிப்புக்கு உள்ளாக்கவல்லது. ஆசிரியர்களால் ஆசிரியர்கள் தாழ்த்தப்படும் நிலையானது வாண்மைச் செயற்பாடுகளை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கி விடுகின்றது.

சுயநெறிப்பாடு, தற்புலக்காட்சியை மேம்படுத்தல், சுயபடிமத்தை உயர்த்துதல், வாண்மைநிலை நெகிழ்ச்சியை ஏற்படுத்துதல், சர்வதேச மட்ட இட மாற்றங்களுக்கும் நிலை மாற்றங்களுக்கும் ஏற்றவாறு வாண்மைத்திறன்களை உயர்த்துதல் முதலியவற்றை நோக்கிய ஒன்றிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தல் சமகாலக் கல்வி வளர்ச்சிக்குரிய தேவைகளாகின்றன. ஆசிரியர்கள் அறிவு வேலையாட்கள் *(Knowledge Workers)* என்ற எண்ணக்கருவாலும் அழைக்கப்படுகின்றனர். தமது வாண்மை முன்னேற்றத்துக்குத் தாமே பொறுப்பு என்ற ஒரு மனித வியாபாரத்துக்கு *(Oneperson Business)* அவர்கள் உட்படுத்தப்பட்டுள்ள இக்கட்டான நிலை காணப்படுகின்றது. இதன் தாக்கம் என்னவென்றால் கூட்டுமுயற்சிகள், கூட்டுமுயற்சிகள் வழியான முன்னேற்றம் முதலிய பண்புகள் ஆசிரிய வாண்மையிலே வலிதாக முன்னெடுக்கப்படவில்லை.

அறிவு வேலையாட்கள் இறுகிய கட்டுப்பாடுகளுக்குள் அடக்கப்பட்டு வேலை வாங்கப்படுவதில்லை. பாரம்பரியமான இறுகிய நிர்வாக முறையும், பொறிமுறையான மேற்பார்வைத் திட்டங்களும் அறிவு வேலையாட்களுக்குப் பொருத்தமற்றவை. இறுகிய உள்ளடக்கத்தை மாற்றாது "சகபாடி மேற்பார்வை" *(Peersupervision)* என்று அண்மைக்காலத்திலே மேற்கொள்ளப்படும் நடவடிக்கை பழைய பொருளைப் புதிய மேலுறையுடன் வழங்கும் நடவடிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வி, புலமைச் சுதந்திரம், மற்றும் சுயமுகாமைத்துவம் முதலியவற்றை வளர்ப்பதன் வாயிலாக ஆசிரிய வாண்மையை வளம்படுத்தலாம்.

**அழுத்தமும் மலர்ச்சியும்:**

அறிவின் ஆக்கமும் அதன் பங்கீடும் சமூக நிரலமைப்புடன் இணைந்தவை. விரைந்து பெருகிவரும் அறிவுப் பெருக்கினை சமூக நிரலின் உயர்நிலையில் உள்ளோரே கூடுதலாக அனுபவிக்கக்கூடிய கட்டணமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். பொருளாதார நிலையில் நிகழும் சுரண்டல் போன்று அறிவு நிலையிலும் சமாந்தரமாக நிகழ்ந்து வருகின்றது. இந்நிலையில் சமூக நிரலின் அடிநிலை மாந்தர்கள் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆக்கவடிவங்களைப் பிரயோகிக்கும் செயற்பாட்டினை "அழுத்த மலர்ச்சி" என்ற தோற்றப்பாட்டினால் விளக்கலாம். அதாவது சிறந்த கலைப்படைப்புக்கள், உன்னதமான இலக்கிய ஆக்கங்கள் முதலியவை சமூக நிரலமைப்பின் அடிநிலை மாந்தரினால் உருவாக்கப்படுகின்றன.

கல்வியியலிலும் கலை இலக்கியங்களிலும் இந்த "அழுத்தமலர்ச்சி" என்ற தோற்றப்பாடு விரிவான ஆய்வுகளை வேண்டி நிற்கின்றது. இந்த "அழுத்த மலர்ச்சியை" ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளையும் அறிவை ஆக்கிரமிக்கும் வகுப்பினர் பயன்படுத்துகின்றனர். இதன் ஒரு வெளிப்பாடுதான் வளர்ந்து வரும் தொழில்நுட்ப அறிவோடு ஒப்பிடும் பொழுது கலையாக்கங்களும், அவற்றோடு இணைந்த கல்வியும் தாழ்ந்தவை என்ற காட்சி உருவாக்கப்பட்டு வருதலாகும். எமது நாட்டின் கல்விச் செயற்பாடுளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இக்கருத்து மேலும் உறுதியாதலைக் காணக்கூடியதாகவுள்ளது. சமூக நிரலமைப்பின் உயர்நிலைகளில் வாழ்வோர் உயர்ந்த தொழில்நுட்பக்கல்வியையும் சிறப்புவாண்மைக்கல்வியையும் கற்று வருகின்றவேளை அடிநிலை மாந்தரின் வாரிசுகள் அழகியற் பாடங்களில் அழுத்த மலர்ச்சியைத் தீவிரப்படுத்தும் கோலங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக நாடுகள் மூன்றின் சமகாலக் கல்வி:**

**ஜப்பான்**

உலகின் சமகாலக் கல்வி முறைமையின் மேம்பாட்டை எடுத்துக் கூறத்தக்க வகை மாதிரியாக ஜப்பானியக் கல்விமுறை குறிப்பிடப்படுதல் உண்டு. ஜப்பானிய சமூகம் சமகாலத்தில் உருக நிலைக்கு *(Melting Society)* உட்பட்டுள்ளதாக ஆய்வாளர் குறிப்பிடுவர். *(Masako Kamijo, 1999)* தனி ஒருவரைப் பற்றிய தொன்மம், நேரத்தின் பெறுமானம், பால்நிலை வேறுபாடு, உண்மை, வாழ்க்கை, புதிய பண்பாடு முதலான பலநிலைகளில் உருகும் பண்பு ஏற்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஜப்பானியக் கல்விமுறை பெருமளவில் அமெரிக்க மாதிரிகையை பின்பற்றி அமைக்கப்பட்டது. ஆனால் ஜப்பானிய மொழியே அனைத்து மட்டங்களிலும் கல்வி மொழியாக இருத்தலை தொடர்ந்து வளம்படுத்தி வளர்த்து வருகின்றார்கள். புதிய அறிவு உலகின் எப்பகுதியிலே தோன்றினாலும், உடனடியாக அது ஜப்பானிய மொழியிலே தரப்படுகின்றது. ஆரம்பக்கல்வியில் மாணவர் இணைத்துக் கொள்ளப்படல் நூறு வீதமாகவுள்ளது. அதேவேளை இடைநிலைக் கல்வியில் தொண்ணூற்று எட்டு வீதமாகவும், உயர்கல்வியில் நாற்பது வீதமாகவுமுள்ளது. முன்பள்ளிக்கல்வி மூன்று வயது தொடக்கம் ஆறுவயது வரை வளச்சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வியும் ஆரம்ப இடைநிலைக்கல்வியும் ஆறுவயது தொடக்கம் பதினைந்து வயதுவரை செல்லும். செய்முறை அனுபவங்கள் ஆக்கத்திறன் மலர்ச்சி, விஞ்ஞான அனுபவங்கள் முதலியவை ஜப்பானிய மொழிவாயிலாக வளமாக வளர்க்கப்படுகின்றன.

சிரேட்ட இடைநிலைக்கல்வி மூன்றாண்டு முழுநேரக் கற்கையமைப்பைக் கொண்டது. அத்துடன் மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளைக் கொண்ட தொழில்சார் கற்கை நெறிக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிரேட்ட இடைநிலையில் எண்பதுக்கும் குறையாத ஈட்டல்களை *(Credits)* பெறுவோரே பட்டப்படிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

பல்கலைக்கழகக் கல்வி பொதுவாக நான்கு ஆண்டுகளை உள்ளடக்கியது. ஆனால் மருத்துவம், பல்மருத்துவம், விலங்கு மருத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் கற்கை நெறிகள் ஆறு ஆண்டுகளைக் கொண்டவை. முதுமாணிக்கற்கை நெறிகள் இரண்டு ஆண்டுகளை உள்ளடக்கிய தொழில் நுட்பக்கல்லூரிகளும் இயக்கப்படுகின்றன. இக்கல்வி நிலையங்களில் அறிமுறைகளுடன் செய்முறைப் பயிற்சிகளுக்குக் கூடிய அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. எந்த நிலைகளிலும் தர உறுதி வலியுறுத்தப்படுகின்றது.

பல்வேறு தொழில்களிலும் ஆற்றுகைத் திறன்களை வளர்ப்பதற்குரிய சிறப்புப் பயிற்சிக் கல்லூரிகள் இயக்கப்படுகின்றன. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியும் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியும் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்று மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்குரிய பயிற்சியும் வழங்கப்படுகின்றன. முறைசாரா *(Non Formal)* அமைப்பில் வழங்கப்படும் இப்பயிற்சிகள் தொழில்சார் வினைத்திறன்களைப் பெருக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை முழுவதும் கல்வி தொடரும் என்பது நடைமுறைகள் வாயிலாக வலியுறுத்தப்படுகின்றது. சுயஊக்கலும், படைப்பாக்கல் மலர்ச்சியும் கல்விச் செயற்பாடுகளிலே முன்னெடுக்கப்படுகின்றன.

ஜப்பானியப் பரீட்சை முறைமையில் இறுகிய மத்திய கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளன. பரீட்சை முறை பல நிலைகளிலும் பன்முகமாக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் தங்களுக்குரிய தேர்வு நியமங்களை வைத்து மாணவர் களைத் தெரிவு செய்யலாம். ஆனால் தேசிய பல்கலைக்கழகங்களிலே கற்பதற்கு மாத்திரம் "பல்கலைக்கழக அனுமதிக்கான தேசிய நிலையத்தின்" தேர்வுக்குத் தோன்றுதல் வேண்டும்.

ஜப்பானிய சமூகத்திலே காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் கல்வி முறைமையில் நேரடியாகப் பிரதிபலிக்கின்றன. சமூக பொருளாதார நிலமைகளில் மேம்பாடு கொண்டோர் புகழ்பெற்ற கல்வி நிலையங்களிலே கற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். பொருளாதாரத்திலே காணப்படும் தீவிர போட்டியும், அங்கலாய்ப்பும் கல்வியில் நேரடியாக வெளிப்பட்டு நிற்கின்றது. புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுப்பும் கல்லூரிகளே மேம்பட்ட கல்லூரிகளாகக் கருதப்படுகின்றன. போட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகளுக்கு முகம்கொடுக்கும் மாணவர்கள் ஓய்வு உறக்கமின்றிக் கற்றலும், உளவியல் நெருக்கீடுகளுக்கு உள்ளாதலும் தவிர்க்க முடியாதுள்ளன. பொருளாதாரக் கோலங்களினதும் அவற்றால் எழுந்த கல்வி முறைமையினதும் அழுத்தங்கள் உயர்ந்த இலட்சியங்களையும், சமூகம் தொடர்பான உயர்ந்த விழுமியங்களையும், மனித உரிமைகளையும் மழுங்கடித்து விடுகின்றன.

**சீனா**

சமவுடைமைத் தத்துவங்களின் அடிப்படையிலும் சமகாலச் சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்ட சீனாவின் கல்வியை அடுத்ததாக நோக்கலாம்.

சீனர்களுடன் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஐம்பத்து ஐந்து இனக் குழுமங்களை உள்ளடக்கிய பன்முக இனக்குழும நாடாக சீனா விளங்குகின்றது. குடித்தொகையில் எழுபது விழுக்காட்டினருக்கு மேல் கிராமங்களிலே வாழ்ந்து வருகின்றார்கள்.

பொருளாதார அடிப்படையிலும் அரசியல் அடிப்படையிலும் நாட்டைக் கட்டியெழுப்பல் கல்வியின் உன்னத நோக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன. ஐம்பெரும் பொருட்களிலே காதலையும் ஐம்பெருந்தத்துவங்களிலே ஈடுபாட்டினையும் கல்வி வளர்த்தெடுத்தல் வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. ஐம்பெரும் பொருட்கள் என்று கூறும் பொழுது தாய்நாடு, மக்கள், உழைப்பு, அறிவியல், சோசலிசம் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. ஐம்பெருந் தத்துவங்கள் என்று கூறும் பொழுது நாட்டுப்பற்று, கூட்டுறவு, சர்வதேசியம், கம்யூனிசம், இயங்கியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுடன் முதலாளித்துவம், நிலமானியம் ஆகியவற்றிலிருந்து தோன்றிய கருத்துக்களை நிராகரித்தலும் சுட்டிக் கூறப்பட்டுள்ளது. பட்டதாரிகள் தமது துறைகளில் ஆற்றலுடைய வர்களாயிருத்தலுடன் அரசியல் சார்பான நம்பகத்தன்மை கொண்டவர்களாயிருத்தல் வேண்டுமெனவும் வலியுறுத்தப்படுகின்றது *(Wing Wahlaw, 1999)*

கல்விக்கட்டமைப்பு ஆரம்பநிலை, கனிஷ்ட இடைநிலை அல்லது இளஇடைநிலை, சிரேஷ்ட இடைநிலை அல்லது முது இடைநிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நிலை என்ற அடுக்குகளைக் கொண்டது. ஆறுவயது தொடக்கம் பதினைந்து வயது வரையிலான ஆரம்பக் கல்வியும் கனிஷ்ட இடைநிலைக் கல்வியும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது மூன்று குழு அமைப்பினைக் கொண்டது. குழு ஒன்றில் சீனமொழி, பிறமொழி, கணிதம், இயற்கை, பௌதிகவியல், இரசாயனவியல், உடற்றொழிலியல், கருத்தியலும் அறக்கல்வியும், அரசியல், சமூகக் கல்வி முதலாம் பாடங்கள் இடம்பெறுகின்றன. இவற்றுள் பிறமொழி, பௌதிகவியல், இரசாயனவியல், உடற்றொழியல், வரலாறு, உழைப்பும் திறன்களும் கனிஷ்ட இடைநிலை மட்டக் கற்பித்தலுக்கு உரியவையாகும். குழு ஒன்றில் உள்ள பாடங்களுக்குக் கூடுதலான நேர ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் (அறுபது விழுக்காட்டுக்குமேல்) எண்ணறிவு, எழுத்தறிவு, அறிவியல் அறிவு ஆகியவற்றில் அடிப்படையான ஆற்றுகைத் திறன்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிறமொழி என்ற வகையில் முன்னர் ரூசிய மொழிக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இப்போது ஆங்கில மொழிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை முகாமைத்துவத்தில் பொதுவுடமை அரசியற் கட்டுமான இணைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்களில் முந்நூறுக்கும் குறைந்தளவு சொற்களை அறிந்தவர்கள் "எழுத்தறிவற்றவர்கள்" என அங்கு வரையறுக்கப்பட டுள்ளனர். இதனைவிட ஓரளவு எழுத்தறிவற்றவர்கள் *(Semi illiterates)* என்ற பாகுபாடும் வரையறை செய்யப்பட்டுள்ளது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்களில் 1500 சொற்களுக்கும் குறைவானவற்றை அறிந்த கிராமிய மக்களும் 2000 சொற்களுக்கும் குறைவாக அறிந்த நகர மக்களும் "ஓரளவு எழுத்தறிவற்றவர்கள்" என்று பாகுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட இடைநிலைக்கல்வியில் நான்கு ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றன. வரன்முறை *(Regular)* சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், சிறப்பு சிரேஷ்ட இடைநிலைப்பாடசாலைகள், சிரேஷ்ட தொழிற்பாடசாலைகள், சிறப்புத் தேர்ச்சித் தொழிலாளர் களுக்குரிய பாடசாலைகள் என்பவை நான்குவகை ஒழுங்கமைப்புக்க ளுமாகும். வரன்முறை சிரேஷ்ட பாடசாலைகளில் இருந்து உயர்கல்விக்கு மாணவர்கள் நேரடியாக அனுப்பப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை 1980 ஆண்டுக்குப் பின்னர் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியில் தொழில் மயப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன.

கருத்தியல் நிலையில் பலமுற்போக்கான நடவடிக்கைகள் சீனாவின் கல்விச் செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், பல எதிர்த்தாக்கங்களும் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமுள்ளன. நிலப்பிரபுத்துவம் மற்றும் முதலாளித்துவம் ஆகியவற்றின் எச்சநிலைகளின் தாக்கங்கள் கல்விச் செயற்பாடுகளில் ஆங்காங்கு ஊடுருவியுள்ளன. பாடசாலைகள் பொருளாதார நிலையில் தம்மைத் தாமே பராமரித்துக் கொள்ள வேண்டுமென மேற்கொள்ளப்பட்ட முடிவு முதலாளித்துவத்தின் தாக்கங்களுக்கு விட்டுக்கொடுக்கின்றது. பிரபல பாடசாலைகள் நலிவுற்ற பாடசாலைகள் என்ற பாகுபாடு தொடர்ந்த வண்ணமுள்ளது. வரையறுக்கப்பட்ட கல்விவளங்கள் முரண்பாடுகளுக்கும் தரமான கல்விக்குமிடையே முரண்பாடு தொடர்ந்து எழுந்த வண்ணமுள்ளது.

## பிரேசில்

போர்த்துக்கீச காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த வளர்முக நாடாகிய பிரேசில் நாட்டின் சமகாலக்கல்வியை அடுத்து நோக்கலாம். காலனித்துவ அழுத்தங்களால் பிரேசில் ஐந்து நூற்றாண்டுக்காலக் கீழ்க்கல்விக்கு *(Under Education)* உட்பட்டிருந்ததென ஆய்வாளர்கள் குறிப்பிடுவர் *(Candido Gomes, 1999)* .

அகன்று விரிந்த பெரும் நிலப்பரப்பு, (8512 மில்லியன் சதுர கிலோமீற்றர்) விரைந்த நகர மயமாக்கல், தாழ்ந்த நிலையில் உள்ள எழுத்தறிவு விழுக்காடு, ஒரே வகுப்பில் தங்கி நிற்கும் மாணவரின் எண்ணிக்கை அதிகரிப்பு, கல்விமீது வறுமை செலுத்தும் அழுத்தங்கள், பிரதேச ஏற்றத்தாழ்வுகள் முதலியவற்றுக்கு உட்பட்ட நாடாக பிரேசில் விளங்குகின்றது. 1988 இல் உருவாக்கப்பட்ட பிரேசிலின் அரசியல் யாப்பு கல்வி அனைவருக்குமுரிய அடிப்படை உரிமை என்பதனை வலியுறுத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டுக் கல்விச் சட்டத்தில் பின்வரும் அடிப்படைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பன்முகப்படுத்தி சுயாதீனமான இயக்கப்பாடுகளுக்கு இடமளித்தல்.

2. ஆசிரிய வாண்மையை வளப்படுத்துதல்.

3 பள்ளிக்கூடங்கள் தமது சூழலுக்குப் பொருத்தமான கலைத்திட்டத்தை முன்மொழிதல், முகாமைத்துவத்தை மேற்கொள்ளல், நிதியீட்டம் செய்தல், சுயாதின தொழிற்பாடுகளுக்கு இடமளித்தல்.

4. பல்கலைக்கழகங்களும் சுயாதின தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு இடமளித்தல்.

பிரேசிலின் கல்வி இருமட்டங்களைக் கொண்டது. அடிப்படை மட்டத்தில் முன்பள்ளிக்கல்வி, ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி ஆகியவை இடம்பெறுகின்றன. ஏழுவயது தொடக்கம் பதினான்கு வயது வரை கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அடுத்த மட்டம் உயர்கல்விச் செயற்பாடுகளை உள்ளடக்கியது.

அடிப்படைத்திறன்களை வளர்த்தல், பிரசை உருவாக்கம், தொழில் சந்தைக்கு முகம் கொடுத்தல், உயர்கல்விக்கு நகருதல் முதலியவை அடிப்படைக் கல்விமட்டத்தின் இலக்குகளாகும். கலைத்திட்டம் தேசிய அடிப்படைகளைக் கொண்டதாகவும் அதேவேளை பிரதேச வேறுபாட்டுப் பண்புகளை உள்ளடக்கியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

பிரேசிலின் வடகிழக்குப் பிரதேசம் பல்வேறு பின்னடைவுகளைக் கொண்ட நிலையில் இருப்பதனால் அதனைக் குவியப்படுத்தி முன்னேற்றுவதற்குரிய திட்டங்களும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்வியில் எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் "நிர்வாக நாட்டுக்கும்", "யதார்த்த நாட்டுக்கும்" இடையே முரண்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன என் ஆய்வாளர் குறிப்பிடுவர்.

இலங்கையின் கல்வி மீளமைப்புக்குரிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஜப்பான், சீனா, பிரேசில் ஆகிய நாடுகளின் கல்வி செயற்பாடுகள் பயன்மிக்க எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன. தாய்மொழிக் கல்வியை வளர்த்து வலுவூட்டிவரும் ஜப்பானிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்கள், கல்விச் செயற்பாட்டில் சீனா முன்வைத்துள்ள ஐந்து பெரும் தரிசனங்கள், பிரேசில் அண்மைக்காலமாக மேற்கொண்டுவரும் விரிவாக்கல் நடவடிக்கைகள் முதலியவை பற்றிச் சிந்தித்து ஆய்ந்து அறிதல் சமூகப் பயனுடையதாகும்.

இலங்கையின் தாய்மொழிக் கல்வி நடவடிக்கைகள் மீது விடுக்கப்படும் சவால்களும், கல்வி செயற்பாடுகளைத் தனியார் மயப்படுத்தும் உந்தல்களும், கல்விச் செயல்முறையின் நிராகரிப்புக்கு உள்ளாகும் மாணவரின் நிலையும், அனுகூலம் மிக்கோரை மேலும் வளம்படுத்தும் செயற்பாடுகளும் உடனடியான கவனத்தை ஏற்படுத்துகின்றன.

## கோளமயவியாபார எழுத்தறிவு

சமகால அறிவுப் போக்கிலும் கற்பித்தற் போக்கிலும் மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. வேறுவகையான அறிவு வேறுவகையான விசையுடனும் வேகத்துடனும் செயற்படத் தொடங்கியுள்ளது. உதாரணமாக தொழில்நுட்ப அறிவின்வேகம் இலக்கிய அறிவின் வேகத்தை விஞ்சும் வகையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அறிவின் செயற்பாடுகள் சார்பு நிலைக்கு உட்பட்டவை. ஆற்றுகையை *(Performativity)* அடிப்படையாகக் கொண்டே அறிவின் அடிப்படையினை மதிப்பீடு செய்ய முடியும் என்பது பின்னவீனத்துவ வாதிகளுள் ஒருவராகிய லியோராட்டின் கருத்து. *(Lyotard, (1984) The Post Modern Condition, Manchesteruniversitypress, Manchester)* இதனால் குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலும் நேரத்திலும் மட்டுமே அறிவு உண்மைத்தன்மை கொண்டதாக இருக்கும் என்பது அவரது வலியுறுத்தல்.

ஆனால் மார்க்சிய கண்ணோட்டத்தில் அறிவு சமூக இருப்பின் வெளிப்பாடாக மேலெழுதலும், அறிவுக்கும் கருத்தியலுக்குமுள்ள தொடர்புகளும் வலியுறுத்தப்படுகின்றன. உதாரணமாக சுரண்டுவோர் தமக்குச் சார்பான அறிவுப் பலத்தைக் கட்டியெழுப்புதலும், சுரண்டப்படுவோர் அவற்றுக்கு அறைகூவல் விடுக்கும் அறிவுப்பலத்தை உருவாக்குதலும் நடப்பியல் வெளிப்பாடுகளாகவுள்ளன. மார்க்சிய அறிகையில் அறிவை இனங்காணலில் கருத்து வினைப்பாடு *(Discoursre)* என்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக இருப்பால் மனித உணர்வுகள் உருவாக்கப்படுகின்றன. அறிவின் ஆக்கத்தில் உழைப்பின் முக்கியத்துவத்தை மார்க்சியம் வலியுறுத்தியுள்ளது. சுரண்டலுக்கு அறிவு கருவியாக்கப்படுதலை போலோ பிறேறி, மிசேல்பூக்கோ போன்றோர் விரிவாக விளக்க முயன்றனர். ஒடுக்குமுறைக்கு அறிவு எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை போலோ பிறேறி "ஒடுக்கப்பட்டவர்களுக்கான ஆசிரியம்" *(Pedagogy of the oppressed)* என்ற நூலிலே விளக்கினார். அறிவுக்கும் அதிகாரத்துக்குமுள்ள தொடர்புகளை மிசேல் பூக்கோ தாம் எழுதிய நூல்களிலும் கட்டுரைகளிலும் பலகோணங்களிலே விளக்கியுள்ளார்.

அண்மைக்காலத்து ஆய்வாளர் "சமூக மூலதனம்" *(Social Capital)* என்ற ஓர் எண்ணக்கருவை முன்வைத்துள்ளனர். *(Giddens, 1998 - The Third way, Politypress, Cambridge)* சமூக மூலதனம் என்பது சமூக அடிமட்டத்து மக்களை சமூக நிராகரிப்புக்கு உள்ளான மக்களை, குவியப்படுத்தும் ஓர் அறிகை முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. பெரும் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் நடத்தை உருவாக்கத்துடன் இணைந்ததாக இக்கருத்து வலியுறுத்தப்படுகின்றது. தொடர்பாடல் இணைப்பு, பொதுநியமங்கள், பொதுநோக்கங்களுக்குரிய இணக்கமுறும் தொழிற்பாடுகளை முன்னெடுக்கும் செயற்பாடுகள் சமூக நியமங்களின் அடிப்படையில் சமூக மூலதனம் விளக்கப்படும். இதன்பொழுது பொழுது நியமங்களைக் கல்விச் செயல்முறையால் உருவாக்கிவரும் உயர் மத்தியதர வகுப்பினரே அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதை மனங்கொள்ள வேண்டியுள்ளது.

அறிவுக் கைத்தொழில்கள் *(Knowledge in stries)* அறிவு முகாமைத்துவம் *(Knowledge Management)* முதலான எண்ணக்கருக்கள் சந்தைப்பொருளாதார வளர்ச்சியினதும், கோளமயமாக்கலினதும் வெளிப்பாடுகளாகவுள்ளன. பெரும் கம்பனிகள் தாமே பல்கலைக் கழகங்களை இயக்கத் தொடங்கியுள்ளன. கூட்டிணைப்புப் பல்கலைக்கழகங்கள் *(Coorporate Universities)* என்ற புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் வெற்றிகரமாகத் தொழிற் படவும், இலாபமீட்டவும் கம்பனிகளதும் பல்கலைக்கழகங்களினதும் கூட்டிணைப்பு வலிமையான கட்டமைப்பாக மாறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகக் கற்கை நெறிகளிலும், பாடத்திட்ட ஆக்கங்களிலும் கம்பனிகளினது நேரடியான தலையீடு வலுப்பெறத் தொடங்கியுள்ளது. தமக்குத் தேவைப்படும் தொழில்களுக்குரிய ஆற்றல் மிக்கோரை உருவாக்குவதற்குக் கம்பனிகள் பல்கலைக்கழகங்களைக் கருவிகளாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. அனைத்துப் பட்டதாரிகளுக்கும் கம்பனிகள் பற்றிய நேர்க்காட்சிகளை உருவாக்கும் வகையில் கலைத்திட்டம் நெறிப்படுத்தப்படுகின்றது. புதிய பண்டங்களை உருவாக்குவதற்குரிய ஆராய்ச்சிகள், புதிய பொறிகளை வடிவமைப்பதற்குரிய ஆராய்ச்சிகள், நுகர்ச்சியாளரைச் சென்றடை வதற்குரிய புதிய அணுகுமுறைகள் பற்றிய ஆராய்ச்சிகள் முதலியவற்றை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழகங்கள் முதலியவற்றை மேற்கொள்ளு மாறு பல்கலைக்கழகங்கள் தூண்டிவிடவும், உற்சாகமளிக்கவும் படுகின்றன.

உலக சந்தையின் விரிவாக்கத்தின் நேர்க்காட்சிகளை வளர்க்கும் நடவடிக்கைகளுள் ஒன்றாக "கோளமயம் எழுத்தறிவு" *(Global Business Literacy)* என்ற கல்விச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தகவல் சமூகத்தில் எவ்வாறு கற்றுக்கொள்ளல் என்ற விடயம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் தகவலும் தொடர்பாடலும் தொடர்பான தொழில்நுட்பவியல் *(ICT)* என்ற இயலை உருவாக்கியுள்ளனர். கற்கும் தொடர்பாடல் இயல்புகளை மாற்றுதல், கற்றலுக்கான பல புதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருதல் முதலியவை இந்த இயலில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. *(Peter Jarvis, (2001) The age of Learning, London, Kogan Page)* கல்விச் செயற்பாடுகளைத் தனியார் மயப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட புரட்சியாக தகவலும் தொடர்பாடலும் தொடர்பான நுட்பவியல் *(ICT)* கருதப்படுகின்றது. நன்கு வழிப்படுத்தப்பட்ட முறையிலே தனியாள் ஒருவர் கற்றல் அலகுகளைக் கொள்வனவு செய்யலாம் *(Purchasing Units of Learning)* என்று கூறப்படுகின்றது. (இந்தச் சொற்றொடரே கல்வியின் வர்த்தக மயமாக்கப்பட்ட பண்பை புலப்படுத்துகின்றது).

மேற்கூறிய கற்பித்தல் நடவடிக்கை கல்விக்கான செலவைக் கட்டுப்படுத்தும் உபாயமாகின்றது. கோளமயமாக்கலின் நேரடியான தாக்கம் கல்விக்கான ஆசிரியச் செலவுகளைக் குறைத்து கல்வி நிறுவனங்களின் இலாபமீட்டலை அதிகரித்தலுமாகும். தகவலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடலும் தொடர்பான நுட்பவியல் ஓர் ஆசிரியர் முன்னரிலும் கூடுதலான எண்ணிக்கை கொண்டவர்களான மாணவர்களுக்குக் கற்பிக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்கின்றது. இந்த அனுகூலம் ஆசிரியர்களுக்குச் சென்றடையவில்லை. ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவுகள் இந்நிலையில் சமாந்தரமாக அதிகரிக்கவில்லை. இந்த நுட்பவியல் *(ICT)* ஆள்புல எல்லைகளையும் கடந்தவகையில், உலகளாவிய முறையில் கல்வியை முன்னெடுத்துச் செல்கின்றது. ஆனால் இணையத்தளங்களுக்குக் கட்டணம் செலுத்தி அறிவை நுகர்ந்து கொள்ளும் முறை வளர்ச்சியடைந்து செல்லல் கல்வியை நுகர்வோருக்குரிய செலவுகளை அதிகரிக்கச் செய்கின்றது. அனுகூலம் மிக்கோருக்கே தரமான கல்வி என்ற நடைமுறை மேலும் வலிமையாக்கப்படுகின்றது. கடன் அட்டைகளைச் செலுத்தியே இணையத்தளங்களில் அறிவை நுகர வேண்டியுள்ளது.

இச்செயல்முறையின் உளவியல் மயப்பட்ட இன்னொரு விளைவு மாணவர் மத்தியில் *'Dot.com Hysteria"* என்ற உளத்தாக்கத்தை ஏற்படுதலாகும். விரைந்து வளரும் கல்விச் சந்தையிலே நின்று நிலைப்பதற்கு இணையத்தளங்கள் உடனடி உடனடியான புத்தாக்கங்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் புத்தாக்கங்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பித்து *(Mania)* என்ற நிலைக்கும் மாறி விடுகின்றது.

தரமேம்பாடுடைய ஓர் இதவடிவத்தை *(Modvle)* உருவாக்கிக் கணினிப் பதிவாக மாற்றும் பொழுது அதன் உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றது. இந்த அதிகரித்த செலவு இலாப எல்லைகளுடன் நுகர்ச்சியாளராகிய மாணவர் மீது சுமத்தி விடப்படுகின்றது. கல்வி நிறுவனங்கள் வர்த்தகமாக்கலின் தீவிர பிடிக்குள் அகப்பட்டு "அறிவுக்கம்பணிகள்" *(Knowledge Companies)* ஆக மாறிவிடுகின்றன.

கோளமயமாக்கற் செயற்பாடுகளும், நவீன சந்தைப் பொருளாதாரமும் ஆபத்து *(Risk)* என்ற பாரம்பரியமான எண்ணக் கருவில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. முதலாளிகளுக்குக் கிடைக்கும் இலாபம் ஆபத்தைத் தாங்குவதற்கான வெகுமதி என்பது பாரம்பரியமான பொருளாதார நிபுணர்களின் கருத்து, இன்று "ஆபத்து" என்பது இலகுவாக நுகர்ச்சியாளர் மீது சுமத்திவிடப்படும் செயற்பாடாக மாறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சிந்தனையாளர்கள் "எதையும் சந்தைக்கு விடுங்கள்" *(Leave it to the market)* என்ற ஒலிப்பை கல்வி, மருத்துவம் என்ற மானிட சேவைத் துறைகளிலும் தீவிரமாக வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் வறுமைக்குரிய சுரண்டற் காரணிகளை மூடிமறைக்கும் அறிகைச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒடுக்குமுறைக்கும் வறுமைக்கும் உட்பட்டவர்கள் சோம்பேறித்தனம் *(Lazy)* உடையவர்கள், வேலை செய்யக் கூச்சப்படுபவர்கள் *(Work Shy)* என்றவாறான பெயர்சூட்டலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகின்றது.

பாடசாலை பற்றிய பாரம்பரியமான எண்ணக்கருவில் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன. பாடசாலைகளையும் தொழில் துறைகளையும் நெருங்கிய இணக்கத்துக்குக் கொண்டுவருதல், வேலை உலகினுக்குப் பொருந்தக் கூடியதாகக் கல்வியைத் திறந்துவிடுதல், பாடசாலைகளுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்குமிடையேயுள்ள கூட்டிணைப்பை வளர்த்தெடுத்தல் என்றவாறு ஐரோப்பிய ஆணையம் முன்வைத்த கருத்துக்கள் *(European Commission (1995) Teaching and Learning, Brussels, European Commission)* கோளமயமாக்கலின் விசைகளால் உலகம் தழுவிய கருத்துக்களாக இவை மாற்றப்படுகின்றன.

"வீடும் பாடசாலையும்" *(Home School Links)* என்ற பாரம்பரியமான இணைப்பு இன்று கம்பனியும் பாடசாலையும் என்ற இணைப்பாக *(Company School Links)* மாற்றப்பட்டுள்ளது. கம்பனிகளோடு கூடுதலான தொடர்புகளை வைத்திருக்கும் பாடசாலைகளே மேம்பட்ட செயற்பாடுகளைக் கொண்டவை என்ற படிமம் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பெரும் பாடசாலைகள் ஏற்கனவே இந்நடவடிக்கைகளில் இறங்கிச் செயற்படத் தொடங்கிவிட்டன.

கோளமயமாக்கலின் அழுத்தங்கள் கல்வி என்ற நிலையிலிருந்து பயிற்சி என்பதை *(Training)* நோக்கித் திரும்பியுள்ளது. தொழில்களை மத்தியாகக் கொண்ட கற்கை நெறிகள் பட்டப்படிப்பு மட்டத்தில் மட்டுமன்றி பட்டப்பின்படிப்பு மட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. அறிவுச் சமூகம் *(Knowledge Society)* என்ற நவீன தொடர் குறித்த தொழிலுக்குரிய பயிற்சியைப் பெற்ற சமூகமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது. தொடர் கல்வி என்பது தொடர் தொழிலுக்குரிய கல்வியாக மாற்றப்பட்டு வருகின்றது. மாணவர் என்ற பழைய எண்ணக்கரு கைவிடப்பட்டு "துணை வேண்டுனர்" *(Clients)* என்ற புதிய எண்ணக்கரு முன்மொழியப்படுகின்றது. கற்றல் என்பது தனிநபர் ஒருவரின் நுகர்ச்சிச் செயற்பாடு என வலியுறுத்தப்படுகின்றது. கற்றல் சந்தை கற்கும் சமூகத்தின் குறியீடாக ஆக்கப்பட்டுள்ளது. சான்றிதழ் மயப்பட்ட கற்றலே யதார்த்தமான கற்றல் என்ற மாற்றத்துக்கு *(Certificated Learning Becomes Real Learning)* முன்னெடுக்கப்பட்டுள்ளது. அறிவதற்குக் கற்றல், அறிவுக்குக் கற்றல் மனநிறைவுக்குக் கற்றல் என்பவை புறந்தள்ளப்படுகின்றன. கற்கும் அறிவின் ஆழம் முக்கியமல்ல சான்றிதழே முக்கியம் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

வேலை வழங்கும் தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரை மானிடப்பண்பு பாடங்கள் மற்றும் கலைப்பாடங்களைக் கற்றுப் பட்டம் பெற்றவர்கள் வேண்டப்படாதவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். உயர்கல்விக்கான கொள்கைத் திட்டங்களை உருவாக்கும் பொழுது தனியார் உற்பத்தி நிறுவனங்களைச் சார்ந்தவர்களின் மதியுரைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

உயர்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, தொழில்சார்கல்வி, வாண்மைக்கல்வி முதலியவை வயது வேறுபாடின்றி, சமூக அந்தஸ்து வேறுபாடின்றி அனைவருக்கும் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் சமூகத்தின் தாழ்மட்டங்களில் உள்ளவர்கள் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி கற்று மேலுயர முடியும் என்று கூறப்படுவதிலே ஒரு பெரிய பொம்மை உட்பொதிந்துள்ளது. உயர் பட்டங்கள், சான்றிதழ்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொள்வதற்குக் கல்விச் சந்தையிலே அதிக பணத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்நிலையில் சான்றிதழ்களும் பட்டங்களும் பெறுதல் சாமானியர்களுக்கு நடைமுறையில் எட்டாதவையாகவே அமைகின்றன. பணவசதியுடையோரே இந்தப் பன்முகப்பட்ட அனுகூலங்களை அனுபவிக்கும் வளமான நிலையில் உள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

உற்பத்தி நிறுவனங்களின் வேகத்துக்குக் கல்வி நிறுவனங்கள் ஈடுகொடுக்க முடியாத நிலையில் உள்ளன என்ற குற்றச்சாட்டும் நிறுவனங்களால் முன்வைக்கப்படுகின்றது. இதன் பொருட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிப்போரின் வினைத்திறன்களை அதிகரிப்பதற்கான திட்டம், *(Staffdevelopment Programme)* பட்டப்பின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் முன்னேற்றுவதற்கான திட்டம் *(Irque)* தர உறுதிப்பாட்டுத் திட்டங்கள் முதலிய பல திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டின் கூட்டுமொத்தமான பௌதிக வளங்கள், மனிதவளம், வருமான பங்கீட்டில் சமத்துவம், சுரண்டல் அற்ற சமூகத்தின் உருவாக்கம், யதார்த்த நிலையில் தேசிய இனங்களின் முழுமையான பங்குபற்றல் முதலியவற்றைப் பரந்த நோக்கில் அணுகாது கம்பனிகளுக்கு உடனடியான அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய நோக்கங்களே உயர்கல்வியில் இலங்கையிலே அமுலாக்கம் செய்யப்படுகின்றன.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கலைத்திட்டங்களில் மேலைத்தேய கலாசாரத்தின் செல்வாக்கு படிப்படியாக ஊட்டப்பட்டு வருகின்றது. உதாரணமாக பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொடர்தொழில் ஆற்றுபடுத்தற் சேவையில் *(Career Guidance)* பெரிய கம்பனிகளில் நுழைவு உன்னதங்கள் பற்றி விளக்கப்படுகின்றதேயன்றி, இலங்கையின் மூலவளங்களின் பயன்பாட்டை முன்னெடுக்கும் தொழில்கள் பற்றியும், சமூக நன்மைகளை முன்னெடுக்கும் தொழில்கள் பற்றியும் விளக்குதல் அரிதாகவுள்ளது. ஆங்கில அறிவுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவுக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம், இலங்கையின் வளம்சார் தொழில்களுக்கும், சமூக நீதிக்குமுள்ள தொடர்புகளுக்கு வழங்கப்படுவதில்லை.

பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சீர்மியம் *(Counselling)* முற்றுமுழுதாக மேலைத்தேய புலக்காட்சியினூடாக வளர்க்கப்படும் நிலையே காணப்படுகின்றது. "தியானமும் ஆசனங்களும் கூட மேலைத்தேய நூல்களினூடான புலக்காட்சி வழியாகவே முன்னெடுக்கப்படுகின்றன. சீர்மியமேலைத்தேய அணுகுமுறைகளின் ஊடுருவல் ஏற்கனவே ஆய்வாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது *(Intervention, (2005) Vol:3 : No-2)*

புதிய சிந்தனைகளை, புத்தாக்கம் தரும் கருத்துக்களை, முன்வைக்கும் ஒருவர் பட்டதாரி மாணவர் சிறப்புச் சித்தியினை *(Class)* பெறாது வெளிவீசப்படுவதற்குரிய சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. அதேவேளை மேலதிக தேடல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளாது வழங்கிய பாடக் குறிப்புக்களை அப்படியே மீள ஒப்புவிக்கும் திறன் கொண்டவர்கள் சிறப்புச் சித்திகளை ஈட்டி அவர்களே அறிவு வழங்கலை முன்னெடுக்கும் வாரிசுகளாக நியமிக்கப்படுகின்றனர்.

இந்த இறுகிய கட்டமைப்பை பல்தேசிய கம்பனிகளும் உள்ளூர்க் கம்பனிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. பட்டதாரிகளுக்கு நியமங்கள் வழங்கும் பொழுது அவர்கள் பரீட்சைகளிலே உயர்ந்த புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் நிரந்தர நியமனங்களை வழங்காது ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே வேலையில் அமர்த்தப்படுகின்றனர். தொழிற்பாடுகளில் வினைத்திறன் காட்டப்படாதவிடத்து அவர்களின் சான்றிதழினைக் கருத்திற் கொள்ளாது வெளியேற்றப்படுகின்றனர். இது **"அமர்த்துதலும் துரத்துதலும்"** என்ற தொடரால் கோளமயப் பொருளாதாரத்திலே கூறப்படுகின்றது.

அறிவுக் கைத்தொழிலின் சமகால வளர்ச்சியை விளங்கிக் கொள்ளல் புதிய கல்வித்திட்டங்களையும், கலைத்திட்டங்களையும் உருவாக்கிக் கொள்வதற்குரிய தேவையாகவுள்ளது. இலங்கையின் பரந்துபட்ட மனிதவளம் மற்றும் இயற்கைவளம் பன்முகத்தன்மை கொண்ட பண்பாட்டுக் கோலங்கள், வளமான தேசிய மொழிகள் என்ற அனைத்தையும் சமகால உலக விசைகளையும் கருத்திலே கொண்டு செறிவும் செழுமையும் மிக்க கல்வித் திட்டத்தை உருவாக்குதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அறிகைப் பிரிகோடு" என்ற புதிய கோட்பாடு

அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படும் பொழுது, உடல் வளர்ச்சி இயல்பாகவே மேலோங்கிச் செல்லும். வளர்ச்சியை முன்னெடுக்க சிறப்பான தூண்டிகளை வழங்க வேண்டிய தேவை, சாதாரண நிலைகளில் வேண்டப்படுதல் இல்லை.

உடல் வளர்ச்சிக்கும் உளவளர்ச்சிக்குமிடையே தொடர்புகள் உண்டு. சிறுவர் சூழலுடன் இடைவினை கொள்ளும் பொழுது அறிவு இயல்பாகவே வளர்ச்சியடைந்து செல்லும்.

அறிவைத் திரட்டிக் கொள்ளல் இரண்டு விதமாக நிகழ்கின்றது. அவை:

1. சூழலுடன் நிகழ்த்தப்படும் இடைவினைகள் வாயிலாக இயல்பாகத் திரட்டிக் கொள்ளப்படும் அறிவு எதுவித அழுத்தங்களோ திட்டமிட்ட கற்பித்தற் செயற்பாடுகளோ இன்றி அறிவின் உருவாக்கம் நிகழ்த்தப்படும்.

2. வரன்முறைக் கற்பித்தல் வழியாகவும், பிற அழுத்தங்கள் வழியாகவும் திரட்டிக் கொள்ளப்படும் அறிவு.

மேற்கூறிய இரண்டுவிதமான அறிவையும் எல்லைப்படுத்தும் கோடு அல்லது பிரிக்கும் கோடு **"அறிகைப் பிரிகோடு"** *(Cognitive dividing Line)* என்று பெயரிடப்படுகின்றது.

வரன்முறைக் கற்பித்தலோ அறிவைத் திணிப்பதற்குரிய பிற அழுத்தங்களோ நிகழ்த்தப்படா விடிலும் தாமாக அறிவைத் திரட்டிக் கொள்ளும் ஆக்கம் இயல்பாக நிகழ்ந்த வண்ணமிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமாக அறிவைத் திரட்டிக் கொள்ளும் செயற்பாட்டில் சிறுவரின் விளையாட்டுக்கள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. உடல் வளர்ச்சி, சமூக வளர்ச்சி, மனவெழுச்சி முதலியவற்றை முன்னெடுப்ப தற்கு தாமாக அறிவைத் திரட்டிக் கொள்ளும் செயற்பாடே பொருத்தமானது.

அறிகைப் பிரிகோட்டுக்கு முன்னதான நிலை தாமாகக் கற்றுக் கொள்ளல், பின்னதான நிலை ஏதோ ஒரவகைத் திணிப்புடன் கற்றுக் கொடுத்தல். அந்நிலையில் அறிகைப் பிரிகோடு பற்றிய அறிவு ஆசிரியர்களுக்கு முக்கியமானது.

சமூகத்தின் இயல்பு, அறிவைத் தாமாகத் திரட்டிக் கொள்ளும் செயற்பாட்டிலே சிறப்பிடம் பெறுகின்றது. சமூக அனுபவங்கள் அறிவாக நிலைமாற்றம் செய்யப்படுகின்றன. தாமாக அறிவைத் திரட்டிக் கொள்ளும் செயற்பாட்டை சிறுவரிடத்து வளர்க்குமிடத்து, மனமுறிவு, மனவெழுச்சிப் பிரச்சினைகள், உளநெருக்குவாரங்கள் முதலியவை அவர்களிடத்து ஏற்படமாட்டா.

பாடசாலைக் கலைத்திட்டமும் பாட ஏற்பாடுகளும் வாய்ப்பு வசதி மிக்கோருக்குச் சாதகமான நிலையில் உருவாக்கப்பட்டுள்ளமையால் வறியமாணவரால் பாட அனுபவங்களை இயல்பாகத் திரட்டிக் கொள்ள முடியாதிருத்தல் குறிப்பிடத்தக்கது. அதாவது அறிகைப் பிரிகோட்டைக் கடந்து செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

கலைத்திட்டத்தின் மொழி, குறியீடுகள், எடுத்துக்காட்டுகள், பண்பாட்டு விழுமியங்கள் என்ற அனைத்தும் அன்னியமாகியிருக்கும் நிலையில் இயல்பாக அறிவைத் திரட்டிக் கொள்ளல் சமூக விளிம்பு நிலையினருக்குக் கடினமாகின்றது.

சூழலைப் புரிந்து கொள்ளலும் சூழலுடன் இசைந்து வாழலும், பௌதிகச் சூழல், சமூகச் சூழல் என்பவற்றின் விசைகளுக்கு ஏற்றவாறு துலங்குதலும் அறிவைத் திரட்டிக் கொள்ளலும், உயிரியற் கூர்ப்பின் வழியாக மனிதருக்குக் கிடைக்கப் பெற்ற தேட்டமாகும். இயல்பாக மொழியைத் திரட்டிக் கொள்ளும் ஆற்றல் கூர்ப்பின் வழியாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தாலும், சுற்றுப்புறச் சூழலாலும் வழங்கப்பட முடியாத அறிவையும் அனுபவங்களையும் கல்வி நிலையங்கள் வழங்குகின்றன. அந்நிலையில் இயல்பாக அறிவைத் திரட்டிக்கொள்ளல், அழுத்தங் களுடன் திரட்டிக் கொள்ளல் என்ற வேறுபாடு தோன்றுகின்றது. அறிகைப் பிரிகோட்டினைக் கடக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் கற்பித்தல் அழுத்தங்களுடன் வழங்கும் செயற்பாடு கல்விநிலையங் களிலே பெருமளவில் இடம்பெறுகின்றன.

அழுத்தங்களுடன் அறிவைத் திரட்டிக் கொள்ளும் நிலையில் வலிமை மிக்க வாழும் உந்தல் *(Powerful Survivalimpulse)* சிறுவரிடத்துத் தொழிற்படத் தொடங்கும். அந்நிலையில் மனவெழுச்சி மற்றும் உளவியல் பாதுகாப்புடன் இணைந்த அறைகூவல் கற்பித்தலை ஆசிரியர் முன்னெடுத்தல் முக்கியமானது.

சிறுவர் தாமாக அறிவைத் திரட்டிக் கொள்ளல் பிறரின் திணிப்புடன் அறிவைத் திரட்டிக் கொள்ளல் என்ற இரண்டுவிதமான செயற்பாடுகளையும் வேறுபடுத்தி நிற்பது அறிகைப் பிரிகோடு.

அறிவைத் திரட்டிக் கொள்ளல் இரண்டு முக்கியமான பரிமாணங்களுடன் இணைந்தது. அவை:

1. தொழிற்படும் ஞாபகத்தின் கொள்ளளவு *(Working Memory Capacity)*

2. தகவல்களை நிரற்படுத்தும் செயல்முறையின் வினைத்திறன் *(Processing Eficiency)*

அறிகைப் பிரிகோட்டை உருவாக்குதலில் மேற்குறித்த இரண்டு பரிமாணங்களும் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

அறிவை இயப்பாகத் திரட்டிக் கொள்ளும் செயற்பாட்டில் மனவெழுச்சியை ஒழுங்கமைத்தலும், முகாமை செய்தலும் இயல்பாகவும் நெகிழ்ச்சியாகவும் ஒருவரிடத்தே தொழிற்படுகின்றன. ஆனால் அழுத்தங்களுடன் அல்லது திணிப்புடன் அறிவைத் திரட்டிக் கொள்ளும் நிலையில் அவை சிக்கலடைகின்றன.

தன்னிலை பற்றிய எண்ணக்கரு உருவாக்கம், தற்படிம உருவாக்கம், தற்கணிப்பின் உருவாக்கம் ஆகியவை சூழலுடன் இடைவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதால் நிகழும் ஓர் அறிகைச் செயற்பாடு தமது மொழியை பண்பாட்டை, சமயத்தை. இனக்குழுமத்தை, பால்நிலையை, சமூக நிலையை அடையாளம் காண்பதுடன் தன்னிலை, தற்படிமம், தற்காட்சி ஆகியவற்றின் உருவாக்கத்துடன் தொடர்புடையது. இயல்பாக அறிந்துகொள்ளும் தன்னிலையையும், திணிப்புக்கு உள்ளாக்கிக் கற்றுக்கொள்ளும் தன்னிலையையும் வேறுபடுத்துவது அறிகைப் பிரிகோடு.

பெற்றோரியம் *(Parenting)* வாழ்நிலைச் சடங்குகள், பண்பாட்டுக் கோலங்களை உள்வாங்கல், இணை குழுக்களின் இயக்கம் முதலியவை தன்னிலை உருவாக்க அறிவை, திணிப்பின்றி மேற்கொள்கின்றன.

கலைத்திட்ட அழுத்தங்கள் பரீட்சை அழுத்தங்கள், போட்டிக்கல்வி முறையின் அழுத்தங்கள் இன்றி அறிவைத் திரட்டிக் கொள்ளல் சுயநெறிப்பட்ட கற்றல் *(Self Directed Learning)* எனப்படும்.

அந்நிலையில் அறிவைத் திரட்டும் செயற்பாடுகளைப் பிரிக்கும் அறிகைப் பிரிகோட்டுக்கு இடமில்லாமற் போய்விடும். நெருக்குவாரங்கள் அற்ற தன்னிலை ஒழுங்குபடுத்தலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அதன் நீட்சியாக இடம்பெறும். அங்கே அறிவுடன் இயல்பாகத் தழுவிச் செல்லல் *(Adaption)* நிகழும்.

அந்நிலையில் இயக்கபூர்வமான ஈடுபாடும் விருப்பு மிகலும் தொடர்ச்சியாக நிகழத் தொடங்கும். சுயவிருப்புடன் (அ) உற்றுநோக்கல் (ஆ) தீர்மானம் மேற்கொள்ளல் (இ) எதிர்வினைப்படல் முதலியவை முன்னெடுக்கப்படும்.

எதுவித அழுத்தங்களும் இன்றி கற்பதற்குரிய ஏற்பாடுகளை உருவாக்குதல் பற்றிய சிந்தனை நவீன கல்வியியலாளரிடத்து விரிவடைந்து வருகின்றது. அதன் நீட்சியாகத் தோற்றம் பெற்ற ஒரு வடிவமே "சட்பெரி மாதிரிகை" *(Sudbury Model)*

அதனை அடியொற்றிய கல்வி நிலையமே "சட்பெரிப் பள்ளத்தாக்குப் பள்ளிக்கூடம்" சட்பெரி என்ற இடத்தின் பெயரே அந்த மாதிரிகைக்குச் சூட்டப்பட்டுள்ளது. ஐ.அமெரிக்காவில் உள்ள மஸசூட்சில் அது அமைந்துள்ளத.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்பெரி மாதிரிகையை அடியொற்றி டென்மார்க், ஸ்ரேல், ஜப்பான், பெல்ஜியம், ஜேர்மனி முதலாம் நாடுகளில் அவ்வகைப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

வரையறுத்துக் கூறப்பட்ட கலைத்திட்ட செயற்பாடுகள் என்ற எதுவும் அங்கே இல்லை. மரபுவழி வகுப்பறைகளும் அங்கே இல்லை. தாம் விரும்பிய படி எந்த பாடத்தையும் மாணவர் தெரிவு செய்யலாம். எந்தவிடயத்தையும் பேசலாம். அந்தச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு ஆசிரியரும் இயங்குவர். பள்ளிக்கூட நேரத்தை மாணவர் தாம் விரும்பியவாறு செலவிடலாம். புலமை அடிப்படையான அடைவு இலக்குகள் எதனையும் எட்ட வேண்டும் என்று மாணவர் வலியுறுத்தப்படுதல் இல்லை.

திணிப்பின்றி ஒவ்வொருவரும் இயல்பாகக் கற்றுக் கொள்ளலுக்கு அது போன்ற வேறு ஏற்பாடுகள் பற்றிய நடவடிக்கைகளும் வளர்ச்சி பெற்று வருகின்றன.

மேலும், அறிகைப் பிரிகோடு பற்றிய விளக்கம், கனவுகளைப் புரிந்து கொள்வதற்கும் துணை செய்கின்றது. அழுத்தங்கள் இன்றி இயல்பாகக் கற்றுக் கொள்ளப்பட்டவை எளிதில் நீண்டகால நினைவுப் பதிவுக்குச் சென்றுவிடுகின்றன. அழுத்தங்களுடனும் திணிப்புடனும் ஈடுபாடு இன்றியும் கற்றுக் கொள்ளப்பட்டவை நீண்டகால நினைவில் வலிந்து திணிக்கப்பட்டவையாக இருக்கும்.

இயல்பாகக் கற்றுக்கொள்ளப்பட்டவை "மென்கனவுகளாக" அவ்வப்போது தோற்றம் பெறும் வலிந்து திணிப்புடனும், அழுத்தங்களுடனும் கற்றுக் கொள்ளப்பட்டவை "வன்கனவில்" இடம்பெறும்,

"வன்கனவு", "மென்கனவு" ஆகியவற்றை உருவாக்குவதில் அறிகைப் பிரிகோடு சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. வன் கனவு பயம், அதிர்ச்சி மற்றும் எதிர்மனவெழுச்சிகளைக் கொண்டதாக அமையும். வியர்வை நடுக்கம் போன்ற உடலியல் துலங்கலையும் உருவாக்கும்,

மென்கனவு சுகமான காட்சிகளுடன் தொடர்புடையது. நித்திரையின் போது மூளை தொழிற்பட்ட வண்ணமிருக்கும். மூளையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No:
Acc No:

நினைவுகளிலெ பதித்து வைக்கப்பட்டவை மோதி எழுகையில் கனவுகளை உருவாக்கும். மூளையில் இயல்பாகப் பதித்து வைக்கப்பட்டவற்றுக்கும் அழுத்தங்களுடன் பதித்து வைக்கப்பட்ட்டவற்றுக்குமிடையே நிகழும் முரண்பாடுகளும் மோதல்களுமே கனவுகளை உருவாக்குகின்றன.

உளப்பகுப்பு உளவியல் கனவுகளுக்கு விளக்கம் கொடுக்கும் பொழுது, நிஜவாழ்க்கையிலே நிறைவேற்றிக் கொள்ளப்படாது அழுத்தி வைக்கப்பட்ட பாலியல் அனுபவங்களே கனவுகளாக உருவாக்கம் பெறுவதாகக் குறிப்பிடுகின்றது. பாலியலோடு தொடர்புபட்ட ஒற்றைப் பரிமாணத்திலேதான் அக்கோட்பாடு கனவுகளை விளக்குகின்றது. அதேவேளை பாலியல் சாராத கனவுகளின் உருவாக்கம் பற்றி உளப்பகுப்புக் கோட்பாடு விளக்கத் தவறியுள்ளது.

அறிவைத் திரட்டிக் கொள்ளல், கற்றல், கற்பித்தல், கனவு முதலிய துறைகளில் பயன்படக் கூடிய ஒரு கருத்தாக்கமாக "அறிகைப் பிரிகைக் கோட்பாடு" இந்நூலாசிரியரால் முன்வைக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 421
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

## *References*

*Harwood, V. (2006) Diagnosing Disorderly Children, Londont New York: Routledge.*

*Ibanez, T & Iniguez Rueda, L. (1997), Critical Social Psychology; Suge Books.*

*Sloan, T. (2000) Critical Psychology: Voices for Change, London: Macmillan.*

*Apple, M. (1979 Ideology and Curriculum, London, Routeledge and Kegan Paul.*

*Beare, H (2000) Creating the Future School, London Routledge and Falner,*

*Bowers, C.A. (1993) Education, Cultural myths and ecological crisis, Newyork, state University of Newyork Press.*

*Cho.sky, N. (1993) The Spiritual Achi evement of Propaganda, Newyork, Several Stories Press.*

*Cushrman, P. (1990) Towardsa Historical Situted Psychology, American Psychologists 45.5:599-610*

*Dyson, F, (1981) Disturbing the Universe, London, Pan Books.*

*Ekins, P. (1992) The Gaia Atlas of Green Economics. Toronto, archor Books.*

*Latouche, S. (1993) an Exploration of Post Development, London zed Books.*

*Lovelock, J (1988) The Ages of Gaia, Boston, MA, Landis fame Prers.*

*Macy, J. (1983) Despair and Power in the nuclear Age, Philadelphia, New Society publishers.*

*Manson, M. (1997) Four Billion years of Evolution from our micro0bial arcestors, London, George, Allew and union.*

*Mitter, S. (1986) Women in Glovbal Economy, London, Pluto Press*

*14. Prigogine, I and Stengers, I (1984), Man's New Dialogue with Nature, New York, Bantam.*

*Quter, Jand Matthoqs (1987), Criticul Pedagogy and Cultural Power Marsachusetts, Blergin and Carvey.*

*Sulivan, O. (1999) Transformative Learning, London, Zed Books.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

421

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| | |
|---|---|
| Class No: | |
| Acc No | 421 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சபா.ஜெயராசா
தமிழில் "கல்வியியல்" துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர்.

கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது "புலமைமரபு" எத்தகையது என்பதைத் தனித்துக் துல்லியமாக வெளிப்படுத்தும்.

மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது. தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது.

இன்றுவரை கல்வி உலகில்
சபா. ஜெயராசா
உயிர்ப்புமிகு புலமையாளராகவே
திகழ்கின்றார்.

சேமமடு பதிப்பகம்

விலை: 540.00

EPAB/02/18604

PBD
476011541
Rs. 540.00
SAMAGALA KALVI
14.06.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org